வெளியீடு 21-3-2007 Issued 21-3-2007

14 மே 07
எழும்பூர்
759
03.07.07
6
3/7/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஆகஸ்ட் 12, 2006—தொகுதி 10–எண் 2

Saturday the 12th August, 2006 – Volume 10–No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V21, 31'2006.
P06.10.2
227425

**12-8-2006**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 379-397 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) குற்றவியல் நடைமுறைச் சட்டத் திருத்தங்களை நிறுத்திவைக்கக் கோரும் வழக்கறிஞர்கள் போராட்டம் | 398-399 |
| (ஆ) நொச்சிக்குப்பம் குடிசைமாற்று வாரிய வீட்டில் ஒரு மீனவர் கீழே விழுந்து இறந்துள்ளது | 400 |
| (இ) ஒரு இலங்கை தமிழ் அகதிக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காதது | 403-405 |
| (ஈ) திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தியைப் பேரவைப் பணிகளினின்றும் நீக்கி வைத்ததைப் பரிசீலிக்கக் கோருதல் | 519-527, 541 |
| **3. உரிமை மீறல் பிரச்சினை—** | |
| (அ) உணவு விடுதிகளுக்கு முன்னாள் பேரவைத் தலைவர் அனுமதி அளித்ததில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்த விவரங்களை வெளியிட்டது | 400-402 |
| (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக்கோரும் தீர்மானம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப் பெற்றது | 405-407 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 408-409 |


53-235—1

பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
(ஆ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் — 409-458, 466-518, 527-579

* மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் — 409,446-447, 552-563,565
* மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா — 429-430,447, 541-552,564

திரு. ஆர். சின்னசாமி — 447-450,452
திரு. ஆர். சிவானந்தம் — 467-473
திரு. கோவை தங்கம் — 473-486
திரு. இல. வேலுசாமி — 486-494
திரு. கே. மகேந்திரன் — 494-502
திரு. தி. இராமசாமி — 502-511
* திரு. வீர. இளவரசன் — 512-518
* திரு. இரா. இராஜேந்திரன் — 527-533
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் — 533-540

**6. அரசினர் தீர்மானம்**—

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தியை பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல் — 458-466

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 579-580

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஆடி 27, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037**
**2006 ஆகஸ்ட் 12, சனிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அவைஅறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்"

அவையின் தன்மை அறியாமல் சொற்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அந்தச் சொற்களின் வகையும் தெரியாது; பேசும் திறமையும் கிடையாது.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

**ஜவுளி தொழில்நுட்பக் கல்லூரி**

***788—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலையில் ஜவுளி தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது அரசுத் தரப்பில் காங்கேயம் தொகுதியில் புதியதாக அரசு ஜவுளி தொழில்நுட்பக் கல்லூரி துவக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலை நெசவாளர்களுடைய கேந்திரமாக இருக்கிறது. அதுவும் குறிப்பாக அண்ணாவாலே போற்றப்பெற்ற, தலைவர் கலைஞர் அவர்களாலே போற்றப்பெற்ற கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதி அது. ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்களும், நெசவுத் தொழிலும் அதைச் சார்ந்திருக்கிற தொழிலும், விசைத்தறியும் இருக்கிற பகுதி அது. இன்றைக்கு தொழில்நுட்பத் துறையிலே பல்வேறு வளர்ச்சிகள் இருக்கின்றன. உலகமயமாக்கல் கொள்கைமூலமாக உலகமெல்லாம் புதிய புதிய கண்டுபிடிப்புகள், புதிய இரகங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் சென்னிமலையும் அதைச் சுற்றியிருக்கிற பகுதிகளும் ஜவுளித் தொழிலிலே புகழ்பெற்று இருக்கிற பகுதிகளாகும். ஈரோடு, காங்கேயம், பவானி, திருப்பூர், கரூர், சேலம் ஆகிய பகுதிகளுக்கு மத்தியப் பகுதியாக எனது தொகுதி சென்னிமலைப் பகுதி இருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான கைத்தறிகளும், விசைத்தறிகளும் இருக்கின்றன. தரமான ஜவுளி உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற அளவுக்கு வரவேண்டுமென்று சொன்னால் அங்கே ஜவுளித் தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது அவசியம் எனக் கருதுகிறேன். எனவே, இதை அரசு மறுபரிசீலனை செய்து அந்தக் கல்லூரி உருவாவதற்கு இன்றைக்கு நடைபெற இருக்கிற கைத்தறி மானியத்திலே நல்ல அறிவிப்பு—எங்கள் மாவட்டத்தினுடைய முன்னாள் அமைச்சர் என்.கே.கே. பெரியசாமி அவர்கள் காலத்திலேயே இது கோரிக்கையாக விடுக்கப்பட்டு, இன்றைக்கு அவருடைய புதல்வர் என்கேகே.பெ. ராஜா அவர்கள், கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் இருக்கிறார்; எனவே, இந்த நல்ல வேளையிலே ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலையிலே ஜவுளி தொழில்நுட்பக் கல்லூரி அமைந்தால் நன்றாக இருக்கும். நான் நேற்றைக்கு சொன்னதைப்போல தலைவர் கலைஞர் அவர்களுடைய குருகுலமாக இருப்பது ஈரோடு மாவட்டம். எனவே, சென்னிமலையிலே அந்தக் கைத்தறி ஜவுளித் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படுமா [illegible] சங்கங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

227425
சென்னை-600 009





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, சென்னிமலை, இவற்றை உள்ளடக்கிய ஈரோடு மாவட்டத்தில் தற்பொழுது 9 தொழில்நுட்ப நிறுவனங்கள்—பாலிடெக்னிக் கல்லூரிகள்—இருக்கின்றன. அந்த 9 கல்லூரிகள், கவுந்தப்பாடியிலே ஒன்றும், ஆப்பக்கூடலிலே ஒன்றும், பெருந்துறையிலே ஒன்றும் போக 6 தொழில்நுட்பக் கல்லூரிகள் ஈரோட்டிலேயே இருக்கின்றன. அங்கேயிருக்கிற மொத்த இடங்கள், மாணவர்களுக்கான இடங்கள் 2,250. அதிலே சென்ற ஆண்டு 1,908 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, அதே மாவட்டத்திலே மேலும் மற்றொரு கல்லூரியைத் திறப்போம் என்று சொன்னால் அதற்கு மாணவர்களுடைய சேர்க்கையும் இருக்காது. அப்படிக் கல்லூரி வேண்டுமென்று நீங்கள் அந்தப் பகுதியிலே கருதினால் தனியார் யாரேனும் முன்வருவார்களேயானால் அதற்கு இந்த அரசு அனுமதி அளிக்க பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிய விரும்புவது, ஜவுளித் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி. ஜவுளித் தொழில் வளர்ச்சிக்காக நேரடி ஏற்றுமதிக்கு வழிவகை செய்கின்ற வகையிலே தரமான தயாரிப்புகள் உருவாக்குவதற்கு, தரமான பயிற்சிகள் அளிப்பதற்கு, பயிற்சி முக்கியம் என்பது கருத்து. எனவே, அதற்காக ஜவுளித் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படுமா அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அதனுடைய துணையோடு உயர்க் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதனை அமைக்க முன்வருவார்களா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளித் தொழில் சார்ந்த பாலிடெக்னிக் கல்லூரிகள்தான் தமிழகத்திலே 54 கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே ஈரோடு மாவட்டத்திலே மட்டும், கிட்டத்தட்ட இந்த 9 பாலிடெக்னிக் கல்லூரிகளிலுமே ஜவுளியைச் சார்ந்த தொழில் பாடப் பிரிவுகள் இருக்கின்றன. இன்னும் நீங்கள் ஜவுளித் தொழில் சார்ந்த பாடப் பிரிவுகள் இந்தக் கல்லூரிகளிலேயே வேண்டுமென்று

விண்ணப்பிப்பதற்கு, அந்தக் கல்லூரிகள் முன்வருமானால் அதையும் இநத அரசு பரிசீலிக்கும். தனியார் மூலமாக சென்னிமலை பகுதியிலே இதுபோன்ற ஜவுளி சார்ந்த தொழில்நுட்பக் கல்லூரியை துவக்குவதற்கு யாரேனும் முன்வருவார்கள் என்று சொன்னால் அதற்கு அனுமதி அளிக்கவும் இந்த அரசு பரிசீலிக்கும்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.*

**திரு. க. சுந்தர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் புதிதாக அரசினர் கல்லூரி துவங்க வேண்டும் என்று சொன்னால், 5 ஏக்கர் நிலமும் ஒரு கோடி ரூபாயும் வழங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலே 1 கோடியே 20 இலட்சம் ரூபாயை அறிவித்திருக்கிறார்கள். அதிலே, அந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, ஒரு கோடி வழங்கினால் கல்லூரி வழங்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் திரட்டுகிற நிதியிலே இருந்துதான் அந்த ஒரு கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டுமே தவிர, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுத்தால் அதை இந்த அரசு ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிமூலம் வேறு பல முக்கியப் பணிகள் எல்லாம் இருக்கிற காரணத்தினால் இதை ஒதுக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்த பெரிய தொழில் நெசவுத் தொழில். இந்த நெசவுத் தொழில் ஒரு சில மாவட்டங்களில்தான் இருக்கிறது. இன்று படித்துவிட்டு வேலையில்லாமல் இளைஞர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அதிகம் உழன்றுகொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையில் வேலையில்லாதவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை நெசவுத் தொழிலிலே ஈடுபடுத்தலாம். ஒரு சில மாவட்டங்களில் அந்தத் தொழில்நுட்பக் கல்லூரி இருந்தாலும், எல்லா மாவட்டங்களிலும், வேலையில்லாத இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக ஒன்றோ, இரண்டோ அந்த நெசவுத் தொழில்நுட்பக் கல்லூரி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா? அதை ஏழைகளின், வேலையில்லாதோரின், நலன் கருதி கொண்டுவருவது நல்லது என்ற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே, இதை அவசியம் கொண்டுவர வேண்டுமென்று வற்புறுத்துவதோடு, அதை இந்த ஆண்டிலே அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியின் அடிப்படையிலேதான் இந்த அரசு பரிசீலித்து,* Community Colleges, – *சமுதாயக் கல்லூரிகள் – என்ற அடிப்படையில் அந்தந்தப் பகுதிகளில் வளர்ந்திருக்கிற தொழில்களிலே பயிற்சி அளிப்பதற்கு ஏற்ற வகையில் அந்தந்தப் பகுதிகளிலே கல்லூரிகளை, இதுபோன்ற தொழில்நுட்பக் கல்லூரிகளை துவக்குவதற்கு அரசு அனுமதி வழங்கிக்கொண்டிருக்கிறது. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் எல்லாம்கூட இந்த* Community Colleges, *சமுதாயக் கல்லூரிகள் – குறிப்பாக நீங்கள் சொல்வதைப்போல நெசவுத் தொழில் அந்தப் பகுதியிலே அதிகம் இருக்குமானால் செய்யலாம். நெசவு சார்ந்த கல்லூரி வசதிகளைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து சமீபத்திலேகூடிய துணை வேந்தர்கள் கருத்தரங்கிலேகூட இந்தக் கருத்துகள் எல்லாம் பரிமாறப்பட்டிருக்கின்றன. வெகு விரைவிலே இதுபோன்ற* Community Colleges, *அந்தப் பகுதிகளிலே இருக்கிற தொழில் சார்ந்த தொழில்நுட்பக் கல்லூரிகளை அந்தப் பகுதிகளிலே துவக்குவதற்கு அரசோ அல்லது தனியார்களோ முன்வருவார்களானால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, பொறியியல் கல்லூரிகளிலேகூட, தொழிற்சாலைகளோடு அவர்களுடைய படிப்பும் இணைந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, வேலைவாய்ப்புகளை மனதில் கொண்டு இந்த அரசு வருங்காலங்களிலே திட்டங்களைத் தீட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

[2006 ஆகஸ்ட் 12

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியிலே அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் துவங்கப்பட்டபோது, அதை முதன் முதலாக வந்து துவக்கிவைத்தவர் இன்று உயர் கல்வித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு பொன்முடி அவர்கள். என் தொகுதியைப் பற்றி நன்றாக அறிவார்கள். நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற தொகுதி பள்ளிப்பட்டு தொகுதி. திருவள்ளூர் மாவட்டத்திலே உள்ள 8 தொகுதிகளிலே மிக அதிகமாக நெசவாளர் பெருமக்கள் வாழுகிற தொகுதி பள்ளிப்பட்டு தொகுதி. ஆகவே, பள்ளிப்பட்டு தொகுதியிலே ஜவுளித் தொழில்நுட்பக் கல்லூரியை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாலிடெக்னிக், கல்லூரி துவக்க வேண்டுமென்று சொன்னால், நிலம் இல்லாமல் ஆகின்ற செலவு மட்டும் 10 கோடி ரூபாய் என்று அரசு மதிப்பீடு செய்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அங்கே மருத்துவராகவும் இருக்கிறார். அவருக்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. நீங்களே அங்கே இதுபோன்ற ஒரு கல்லூரியைத் துவக்க முன்வந்தால் அரசு நிச்சயமாக அதற்கு அனுமதி அளிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**27—**

## தொழில்நுட்பக் கல்லூரி

**•812—திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தற்போது அரசுத் தரப்பில் அரவக்குறிச்சி தொகுதியில் புதியதாக அரசு தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.



2006 ஆகஸ்ட் 12]

(ஆ) எழவில்லை.

**திரு. ம.அ. கலீலூர் ரஹ்மான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி தமிழகத்திலேயே பரப்பளவில் மிகப் பெரிய தொகுதி. மழை மிகக் குறைந்த அளவிலேயே பெய்வதால் விவசாய வளம் இல்லாத வறட்சியான பகுதி. கிராமங்கள் அதிக அளவில் உள்ள பகுதியாகும். அரவக்குறிச்சி என்பது ஒரு வருவாய் வட்டம். மக்கள்தொகை சுமார் 2 இலட்சம் என்ற அளவில் உள்ளது. ஏழையெளிய மற்றும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களின் நலன் கருதி அரவக்குறிச்சி தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வர வேண்டுமென்றும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதை பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் பணிவுடன் வேண்டி, அதற்கு அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி இருந்தாலும், பக்கத்திலே இருக்கிற திருச்சி மாவட்டத்தில் 8 பாலிடெக்னிக் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. பாலிடெக்னிக் கல்லூரிகளிலே இப்போது சேருகிற எண்ணிக்கையே குறைந்துகொண்டு இருப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். குறிப்பாக, பொறியியல் கல்லூரிகள், 200–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுவிட்ட காரணத்தினால், பாலிடெக்னிக் கல்லூரிகளிலே இடங்கள் இன்னும் காலியாகத்தான் இருந்துகொண்டிருக்கின்றன. கரூர் பாலிடெக்னிக் கல்லூரியிலேகூட கடந்த ஆண்டு 360 இடங்கள் இருந்த இடத்திலே 350 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். 10 இடங்கள் இன்னும் காலியாகவே இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்திலே மேலும் ஒரு கல்லூரி தொடங்க இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி, கரூர் ஆகிய இடங்களிலே அதிக கல்லூரிகள் இருக்கிற காரணத்தினால், அவற்றையே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நான் முன்பே சொன்னதைப்போல, சென்ற கேள்விக்குச் சொன்னதைப்போலவே, தனியார்கள் யாரேனும் அந்தப் பகுதி

மக்களுடைய தேவைகளை உணர்ந்து முன்வருவார்கள் என்று சொன்னால், இந்த அரசு மிக தாராளமாகப் பரிசீலித்து, அவர்களுக்கு பாலிடெக்னிக் கல்லூரிகளை ஆங்காங்கே தொடங்குவதற்கு தேவையின் அடிப்படையிலே பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தொழில்நுட்பக் கல்லூரி தொடங்காவிட்டாலும், அந்தப் பகுதியில் மாணவர்கள் சேருகிறபோது இடம் இல்லை என்கிற நிலை ஏற்படுகிற இடங்களில் மாத்திரம் கூடுதலாக இந்த ஆண்டு இடம் ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற இடங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் அரசால் பெறப்பட்டு, இந்த ஆண்டு அதற்கான ஆய்வும் நடைபெற்று, பல்வேறு கல்லூரிகளுக்கு அந்த இடங்களை அதிகரித்து இந்த அரசு வழங்கியிருக்கிறது. நீங்கள் கேட்கிற அந்த அதிக இடங்களுக்கு ஏற்ப உரிய இட வசதி அங்கே இருக்கும் என்று சொன்னால், வகுப்பறை வசதிகள் இருக்கும் என்று சொன்னால், ஆசிரியர்களுடைய வசதியும் இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக கேட்டிருக்கிற இடங்களை அதிகரித்துக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரிநாராயணன்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது நான் உரையாற்றியபோதே, என்னுடைய அச்சரப்பாக்கம் தொகுதிக்கு அரசுக் கல்லூரி ஒன்று அமைத்துத் தரப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்திருந்தேன். அச்சரப்பாக்கம் தொகுதி, பெருவாரியாக தாழ்த்தப்பட்ட மக்கள் காலனிகளை உள்ளடக்கிய, விவசாயப் பெருங்குடி மக்களைக் கொண்ட தொகுதியாகும். அங்கே அரசின் எந்த முற்போக்குத் திட்டங்களும் இதுவரை அமைந்திடப்படவில்லை. கல்லூரி வசதி இல்லை என்ற காரணத்தால், மாணவர்களும், மாணவிகளும் தங்களுடைய கல்வியை பள்ளி இறுதி ஆண்டோடு





அல்லது அதற்கு முன்பே நிறுத்தி விடுகிறார்கள். ஆகவே, என்னுடைய அச்சரப்பாக்கம் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபோதுகூட, ஒரு கோடி ரூபாயும், 5 ஏக்கர் நிலமும் வழங்கினால் கல்லூரி அமைத்துத் தரப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், ஏழைகள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற என்னுடைய அச்சரப்பாக்கம் தொகுதியில் இந்த நிலையைத் தளர்த்தி – நான் விவசாயப் பெருங்குடி மக்களிடம் வேண்டிக்கொண்டிருக்கிறேன். நிலம் வேண்டுமானால் அவர்கள் ஒதுக்கித் தரமுடியும். ஆனால் பணம் அவர்களால் தர இயலாது – இதைக் கருணை உள்ளம் கொண்ட நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், ஏழை, விவசாயப் பெருங்குடி மக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் முன்னேற்றம் அடையாத மிகவும் பின்தங்கிய பகுதியாகிய அச்சரப்பாக்கம் தொகுதியை மனதில்கொண்டு கருணை உள்ளத்தோடு அங்கேயொரு அரசுக் கல்லூரி அமைத்துத் தர முன்வருவார்களா என்று உங்கள்மூலம் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயிருக்கிற 234 சட்டமன்ற உறுப்பினர்களுமே அவர்களுடைய தொகுதியிலே, அரசுக் கலைக் கல்லூரி வேண்டும் என்று விரும்புகிறார்கள். வெட்டுத் தீர்மானங்களிலே கொடுத்திருக்கிறார்கள். ஆகவேதான், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அனைவரும் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிற காரணத்தினால், ஒரு பொதுவான விதியை உருவாக்கியிருக்கிறார்கள். அச்சரப்பாக்கம் தொகுதியிலே மட்டும் தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள் இல்லை. 234 தொகுதிகளிலேயும் ஏழைகளும், தாழ்த்தப்பட்டவர்களும் இருக்கிறார்கள். என் தொகுதியிலேகூட ஒரு அரசு மகளிர் கல்லூரி வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. எந்தக் கோரிக்கையாக இருந்தாலும்கூட, இந்த விதிகளுக்கு உட்பட்டு, ஒரு கோடி ரூபாயும், 5 ஏக்கர் நிலமும் கொடுத்தால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம் மிக மிகப் பின்தங்கிய மாவட்டம் என்று நேற்றைக்கு முன்தினம் மத்திய அரசுகூட

[2006 ஆகஸ்ட் 12

அறிவித்துள்ளது. மிக மிகப் பின்தங்கிய மாவட்டமான திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசின் சார்பிலே தொழில்நுட்பக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லை. எனவே, அரசின் சார்பில் திருவண்ணாமலை மாவட்டத்தில், தொழில்நுட்பக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட எல்லா உறுப்பினர்களுமே அவர்களுடைய மாவட்டத்திலேயும், அவர்களுடைய ஊரிலேயும் அரசுக் கல்லூரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான். திருவண்ணாமலையைப் பொறுத்தவரை, தனியார் கல்லூரிகள் நகரத்திலேயே இரண்டு பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அதேபோல, பாலிடெக்னிக் கல்லூரிகளும் நகரத்திலே அதிகம் இருக்கிற மாவட்டமாகத் திருவண்ணாமலை இருக்கிறது. தனியார் நடத்துகிற காரணத்தினால், தனியார் கல்லூரிகளிலேயே, பொறியியல் கல்லூரிகளில்—இன்றைக்குக்கூட பத்திரிகையிலே படித்திருப்பீர்கள்—கிட்டத்தட்ட 200-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன—இன்னும் 20,000, 25,000 இடங்கள் காலியாகவே இருக்கின்ற இந்தச் சூழலில், மேலும் கல்லூரிகளைத் துவக்குவது என்பதற்கு பொறியியல் கல்லூரிகளைத் துவக்குவது என்பதற்கான சாத்தியகூறு இல்லை.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம்பிரபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**28—**

## புதிய கட்டடம்

***282—திரு. இரா. இராம்பிரபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பரமக்குடி நகரில் அரசு பெண்கள் மருத்துவமனை பழுதடைந்துள்ளதால், இம்மருத்துவமனையைப் புதியதாகக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



2006 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்லியுள்ள அந்த மருத்துவமனை சிறப்பாகத் தரம் உயர்த்தித் தரப்படும். புதியதாக 46 படுக்கைகள் கொண்ட மகப்பேறு சிகிச்சைப் பிரிவும், அதிலேயே குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கமும், அதேபோல அதிலேயிருக்கிற பழுதுகளை நீக்கி, சிமெண்ட், வர்ணம் பூசப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம்பிரபு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி அரசு மருத்துவமனையினுடைய கட்டடங்கள் பழுதடைந்து மோசமான ஒரு சூழ்நிலை அந்த மருத்துவமனையிலே நிலவுகிறது. மழைக்காலங்களிலே, மழை பெய்கின்றபோது, மழை நீர் உள்ளே வந்து உள் நோயாளிகளைப் பாதிக்கின்ற நிலை இருக்கின்றது. அந்த மருத்துவமனையினுடைய பழையக் கட்டடத்திற்குப் பதில் புதியக் கட்டடம் கட்டித் தர வேண்டும். திருத்தணி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதனால் திருத்தணி அரசு மருத்துவமனையாகட்டும், அங்கே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களாகட்டும், அங்கே இருக்கின்ற சமூக விரோதிகளுடைய பயன்பாட்டிற்கு உகந்ததாக அமைந்து விடுகின்றன. எனவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. கோ. அரி:** எனவே, திருத்தணி அரசு மருத்துவமனைக்குப் பழைய கட்டடத்திற்குப் பதிலாகப் புதிய கட்டடமும், அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுப்புறச் சுவர் இல்லாமல் இருக்கின்றது; அதற்குச் சுற்றுச்சுவர் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லா மருத்துவமனைகளும் இன்றைக்கு நாம் எதிர்பார்க்கிற அளவுக்குத் தரமாக இல்லை. அதை நாங்களே ஒத்துக்கொள்கிறோம். இங்கே எங்களுக்கு முன்னாலே இருந்த, ஆளுங்கட்சியாக இருந்த,

அவர்களும் ஒத்துக்கொள்வார்கள். அதையெல்லாம் எப்படித் தரம் உயர்த்துவது என்பதற்கு இன்றைக்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. சட்டமன்றக் கூட்ட நிகழ்வுகள் முடிந்த பிறகு, எங்கள் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தந்தப் பகுதிக்கு வந்து, அந்த மருத்துவமனைகளை ஆய்வு செய்து, அந்தந்த மருத்துவமனைக்கு எது எது தேவையோ, கட்டடமோ அல்லது வேறு எந்தவிதமான வசதி வேண்டுமோ அந்த வசதியையெல்லாம் செய்து கொடுப்பதற்கு வேண்டிய வேலைகளை நாங்கள் செய்யவிருக்கிறோம். என்னுடைய மானியக் கோரிக்கையிலே அதுபற்றி முழு விவரத்தையும் நான் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரில் தினசரி 2,000–க்கு மேற்பட்ட நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். படுக்கை வசதி இல்லாததால், அவர்கள் எல்லாம் பாண்டிச்சேரிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அங்கு 2 கோடி ரூபாய் செலவில் ஒரு மிகப் பெரிய கட்டடம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்ட நிகழ்வுகள் முடிந்த பிறகு, என்னுடைய துறை அதிகாரிகள் திருவண்ணாமலைக்கு வருவார்கள். சட்டமன்ற உறுப்பினர் அவர்களைக் கலந்துகொண்டு, அவர்கள் எந்தெந்த வசதி வேண்டுமென்று சொல்கிறார்களோ, புதிய கட்டடமாக இருந்தாலும் சரி அல்லது வேறு மருத்துவச் சாதனங்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு படுக்கைகள் அங்கே வேண்டுமென்று அதிகாரிகளும், நீங்களும் முடிவு செய்கிறீர்களோ, அந்தப் படுக்கைகளும், அந்தக் கட்டட வசதிகளும் அங்கே செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சராக இருக்கிற காரணத்தினால், ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. நம்முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் அதிகாரிகளை அனுப்பி, அந்தந்தத் தொகுதி





உறுப்பினர்கள் சொல்கின்ற குறைகளையெல்லாம் போக்குவதற்கு, துறை சார்பாக என்ன செய்யலாம் என்று ஆய்வு நடத்தவிருப்பதாக தெரிவிக்கிறார்கள். அப்படி ஒரு ஆய்வு நடத்தினால், அதை நிறைவேற்ற 150 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய்க்கு வேண்டுகோள்கள் இருக்கும். ஆகவே, நான் மாண்புமிகு உறுப்பினர்களை, அமைச்சர் சொல்ல வேண்டிய விளக்கம் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். அவரவருடைய தொகுதி நிதியிலேயிருந்து எது மிக முக்கியமான பணியோ, அந்தத் தொகுதியிலே எது உடனடியாக செய்யப்பட வேண்டிய பணியோ, அதற்கு அந்தத் தொகுதிக்கென தரும் நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

முற்பகல் 9–50

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கிற செவிலியர்கள் தங்குகிற விடுதிகள் பழுதடைந்துள்ளன. ஒரு சில இடங்களிலே அந்த விடுதிகள் சரிசெய்யப்பட்டு உள்ளன. அந்தச் செவிலியர்கள் கிராமப்புறங்களில் தங்குவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. குறிப்பாகப் பெண்களுக்குப் பேறு காலத்திலே அவர்களுக்கு அது ஒரு சரியான இடமாக, அவர்களது மகப்பேறுகளுக்குச் சரியான இடமாக இருக்கிறது. எனவே, நம்முடைய அரசாங்கம் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிற செவிலியர்கள் அந்த ஊரிலேயே தங்குவதற்கு உடனடியாக ஆணையிடுமா, இதுபோன்று பழுதுபட்டிருக்கிற அந்தக் கட்டடங்களை உடனடியாக பழுது பார்த்துக் கொடுக்குமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகள் நிறைய எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றன. அதுவும் அந்தக் கட்டடங்களையெல்லாம் பார்த்தால் ஊருக்கு வெளியே போய் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் போய் தங்கமுடியாத இடங்களில்கூட கட்டியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசு ஆய்வு செய்து சரியான முடிவெடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. மு. அப்பாவு. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

29—

## இலவச பாடப் புத்தகம்

***1159—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாநில அரசு பாடத்திட்டப்படி, சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மையினரல்லாதோரால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசமாக பாடப் புத்தகம் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு பாடத்திட்டத்தின்படி சிறுபான்மையினர் மற்றும் சிறுபான்மையினரல்லாதோரால் நடத்தப்படும் உதவி பெறும் பள்ளிகள் மற்றும் முழு சுயநிதி அடிப்படையில் மாநிலப் பாடத்திட்டத்தின்படி தமிழ்வழியில் கற்பிக்கும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இலவசமாக பாடநூல் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழ்வழிக் கல்விமூலம் படிக்கின்ற ஏழையெளிய மாணவர்களுக்கு 1991 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆரம்பிக்கப்பட்ட தனியார், சிறுபான்மையினரால் நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு இலவச பாடப் புத்தகம் கடந்த கால ஆட்சியில் வழங்கப்படாததால் — பல முறை நான் முயன்றும் முடியவில்லை — இந்த அரசு பொறுப்பேற்றதும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதும், தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் 1 முதல் 12 ஆம் வகுப்புவரை உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் உடனடியாக பள்ளி திறந்தவுடனேயே இலவசமாகப் பாடப் புத்தகம் வழங்க ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1991—க்குப் பிறகு அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சுமார் 347 பள்ளிகளில் அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு ஒரு குறை இருக்கின்றது. இந்த அரசு பொறுப்பேற்ற 90 நாட்களில், 50 ஆயிரம் ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில் இருந்தவர்கள், அதேபோன்று



சென்னை மாநகராட்சியில் இருந்த 102 பகுதி நேர ஆசிரியர்கள், 102 ஆயாக்கள், 234 உதவிப் பணியாளர்கள், அதேபோன்று ஊராட்சி மன்றத்தில் பணிபுரிந்த 12,618 பகுதி நேர ஊழியர்கள், அதேபோன்று பேரூராட்சிப் பகுதியிலே பணியாற்றிய 2,923 பணியாளர்கள், குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றிய 881 பகுதி நேரப் பணியாளர்கள், சென்னை மாநகராட்சியில் மலேரியா பிரிவில் பணியாற்றிய 60 பணியாளர்கள், இன்னும் 1—6—2006—ல் அரசுப் பள்ளிகளில் காலி இடங்களாக இருந்த 8,468 Secondary Grade Teachers, அதேபோன்று 2,435 B.T. Teachers, அதேபோன்று ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நான் வந்து விடுகிறேன். அதேபோல கல்லூரியிலே காலியாக இருந்த 1,600 பணியிடங்கள், இத்தனைப் பணியிடங்கள் மட்டுமல்ல, மக்கள் நலப் பணியாளர்கள் 12 ஆயிரம் பேர், சாலைப் பணியாளர்கள் 10 ஆயிரம் பேர்களுக்கெல்லாம் கருணை உள்ளத்தோடு வாரி, வாரி வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 1991—க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் கடந்த 15 ஆண்டு காலமாக ஊதியமின்றி வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் 347 பள்ளிகள்தான் இருக்கின்றன. ஆகவே, அவர்களை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தயவுசெய்து கருணையோடு கவனத்தில் எடுத்து, அவர்களுக்கும் ஊதியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9—55

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் குறிப்பிட்டதைப்போல 1991 ஆம் வருடத்திற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்டிருக்கக்கூடிய இத்தகைய பள்ளிகளிலே புதிய ஆசிரியர் பணியிட நியமனங்களுக்கு, அவ்வாறு அவர்கள் கோரமாட்டார்கள் என்று ஓர் உறுதிமொழி பெறப்பட்டு, அது இப்போது நடைமுறையிலே இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் குறிப்பிட்ட அந்த 347 பள்ளிகளையும் உள்ளடக்கி, தமிழகத்திலே

இருக்கக்கூடிய பல்வேறு சுய நிதிப் பள்ளிகள், பகுதி சுய நிதிப் பள்ளிகள், அதைப்போல, அரசுப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய சில சுய நிதிப் பிரிவுகள் என்று பல பிரிவுகளையும் உள்ளடக்கிப் பார்ப்போம் என்று சொன்னால், தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலே மாத்திரம் ஏறத்தாழ 299 பள்ளிகளும் அவற்றுக்குத் தேவையான பணியிடங்கள் 1,254 இருக்கின்றன. அதைப்போல, நம்முடைய உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், 1993 பள்ளிகளும் அவற்றுக்குத் தேவையான பணியிடங்கள் 12645 ஆக இருக்கின்றன. எனவே, இவற்றுக்கான உடனடிச் செலவினத்தை மாத்திரம் கணக்கிட்டுக் கொண்டோம் என்று சொன்னால், ஏறத்தாழ 200 கோடி ரூபாய் இதற்கு மாத்திரம் செலவாகும். இது தவிர, ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் எல்லாம்கூட இருக்கின்றன. எனவே, வரக்கூடிய காலங்களிலே அரசுக்கு இருக்கக்கூடிய நிதியாதாரங்களையும், நிதிச் சுமையையும் கருத்திலேகொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இவற்றையெல்லாம்கூட கலந்துபேசி—ஏனென்றால் பல்வேறு அமைப்புகளிடமிருந்துகூட அரசுக்கு இதுகுறித்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன—வருங்காலங்களிலே நிதியாதாரங்களைப் பொறுத்து, இதுகுறித்து அரசு ஆலோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இயங்கி வருகின்ற பல்வேறு தனியார் துறை பள்ளிகளும், அரசுப் பள்ளிகளும், ஏனைய பள்ளிகளும், ஆரம்பக் கல்வி முதல் அதாவது, L.K.G.-யிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு, அதிகமான பாடப் பிரிவுகளை உருவாக்கி, அவர்கள் பள்ளிகளுக்குச் செல்கின்றபோது, அவர்கள் எடையைவிட அதிகமாக இருக்கக்கூடிய புத்தகங்களைச் சுமக்கக்கூடிய ஒரு கல்வி முறை தமிழ்நாட்டில் இருந்துவருகிறது. மேலை நாடுகளில் ஐந்தாம் வகுப்பு வரை புத்தகங்களே இல்லாமல், அந்த நாட்டினுடைய பண்பாடு, கலாச்சாரம், இதுபோன்ற வகையிலும், விளையாட்டின்மூலமாகவும் கல்வி முறையைப் போதிக்கின்ற ஒரு முறை இருக்கிறது. ஆனால், இங்கு தனியார் துறையினரால் நடத்தப்படுகின்ற அந்தக் கல்விக்கூடங்களில், அந்தக் குழந்தைகளுக்கு மனச் சுமையை உண்டாக்குகின்ற வகையிலும், இளம் வயதிலேயே அவர்களுக்கு மூளையில் அழுத்தம் கொடுக்கின்ற ஒரு கல்வி முறை தமிழ்நாட்டில் பரவலாக, ஆங்காங்கே உருவாக்கி வரப்படுகிறது. அதனால்,



தமிழக அரசு விளையாட்டுடன் கூடிய ஒரு கல்வி முறையையும், அவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படாத ஒரு கல்வி முறையையும் அறிமுகப்படுத்த இந்தக் கல்வி முறையில் மாற்றம் கொண்டு வந்து, நம்முடைய, தமிழகத்தினுடைய சூழலுக்கேற்றவாறு ஒரு கல்வி முறையை அறிமுகப்படுத்துவதற்கும், அதிகப் புத்தகங்களைச் சுமந்துகொண்டு, சாலையோரங்களில் செல்கின்ற அந்த இளஞ்சிறார்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்கும் கல்வி முறையில் அரசு மாற்றம் கொண்டுவருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, தமிழகத்தில் இருக்கக்கூடிய பள்ளிச் சிறுவர்கள், குறிப்பாக, தொடக்கப் பள்ளிகளிலே பயிலக்கூடிய சிறுவர்களுக்கு இப்போது இருக்கக்கூடிய பாட முறை கடினமாக இருக்கிறது; அவர்கள் அதிகமான பாடச் சுமையினை ஏற்றிருக்கிறார்கள்; மனப் பாடம் மட்டும் செய்து, அவற்றை அப்படியே ஒப்பிக்கக்கூடிய நிலையெல்லாம் இருக்கிறது. அந்தப் பாடச் சுமையை அரசு கருத்திலேகொண்டு, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் வாயிலாக இப்போது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, விளையாட்டுடன்கூடிய அந்தக் கல்வி முறை, Activity based learning என்று சொல்லக்கூடிய அந்த முறை இப்போது சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலே வெற்றிகரமாக, சில பள்ளிகளிலே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து மற்றப் பள்ளிகளுக்கும் இந்தக் கல்வியாண்டிலிருந்து இந்த முறையைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதைப்போல self-learning materials என்று சொல்லக்கூடிய, தானாகக் கற்கக்கூடிய அந்த ஒரு திட்டத்தையும் அரசு இப்போது அறிமுகம் செய்திருக்கிறது. பாடச் சுமையைப் பொறுத்தமட்டிலே பிள்ளைகளுக்கு இருக்கக்கூடிய அந்தப் பாடச் சுமை அதிகமாக இருக்கிறது என்கிற கருத்து ஏற்கெனவே அரசுக்கு வந்து, அதுகுறித்து ஒரு குழுவும் அமைக்கப்பட்டு, அந்தப் பாடப் பகுதிகளில், கடினமாக இருக்கக்கூடிய பாடப் பகுதிகளை நீக்குவதற்கும், எளிமையான வகையிலே அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கும் அரசு தேவையான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

[2006 ஆகஸ்ட் 12

30—

## சிற்றுண்டி

***362—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை மலைப்பகுதி ஆதி திராவிட மாணவ, மாணவிகள் தங்கும் விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு காலையும், மாலையும் சிற்றுண்டி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் நலம்/பழங்குடியினர் நலப் பள்ளி, கல்லூரி, முதுகலைப் பட்டதாரி, தொழிற்கல்வி, விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டியும், மதியமும், இரவும் சாப்பாடும் வழங்கப்பட்டு வருகிறது. மாலையில் சிற்றுண்டி ஏதும் வழங்கப்படவில்லை.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறைச் சட்டமன்றத் தொகுதி மலைப் பகுதி. காலையிலும் சாப்பாடு சில இடங்களில் போட்டுவிடுகிறார்கள், மதியமும் சாப்பாடு, இரவு நேரத்திலும் சாப்பாடு, ஆக மூன்று நேரங்களிலும் சாப்பாடு போடுவதால் சாப்பாட்டை மதியம் மட்டும் வழங்கிவிட்டு, காலையும், மாலையும் சிற்றுண்டிகள் வேண்டுமென்று அங்கிருக்கின்ற மாணவ, மாணவிகள் விரும்புவதால், காலையிலும் மாலையிலும் சிற்றுண்டி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு திருமதி. ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளரும் குழந்தைகள் வயிறார உண்ண வேண்டும். எனவே, இரவில் சிற்றுண்டி போதாது. சாதம் என்றால் வயிறார உண்ண இயலும். மேலும், சாதத்துடன் காய்கறி வழங்குவதால், ஊட்டச் சத்து உள்ளது. எனவே, இரவு சாதம் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடு) எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், திரு. ஞானசேகரன் சொல்லுங்கள். (குறுக்கீடு)



2006 ஆகஸ்ட் 12]

**திரு. கோவை தங்கம்:** நான் கேள்வியை முடிக்கவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) என்னுடைய கேள்வியே முடியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 400 ரூபாயும், பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு 300 ரூபாயும்தான் அரசு உதவித் தொகை வழங்குகிறது. அப்படிப் பார்த்தால், ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 ரூபாய்தான். இந்த 10 ரூபாயை வைத்துக்கொண்டு, காலையிலும், மாலையிலும், இரவு நேரத்திலும் சாப்பிட முடியாது. கேட்டதையும், கேட்காததையும் கொடுக்கின்ற தமிழனத் தலைவர் மாண்புமிகு கலைஞர் ஐயா அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன், தமிழகத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மாணவ மாணவியருக்காக தாங்கள் தயவுகூர்ந்து, தாழ்த்தப்பட்ட மக்கள்மீது கருணை வைத்து, மாணவ மாணவிகளுக்கு தங்கும் விடுதிகளில் கொடுக்கின்ற உணவுத் தொகையை, அதிகமாக வழங்குவதற்கு மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, கலைஞர் ஐயா அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்த வகையிலே நிலைமை இருக்குமேயானால், அதுபற்றி அதிகாரிகளோடு கலந்துபேசி, ஆவன செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு :ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) குற்றவியல் நடைமுறைச் சட்டத் திருத்தங்களை நிறுத்திவைக்கக் கோரும் வழக்கறிஞர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) எல்லோருக்கும் வாய்ப்புத் தர மாட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய, அனைத்து நீதிமன்றங்களில் இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் இப்போது அவர்களெல்லாம் நீதிமன்றத்தைப் புறக்கணித்து போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு Criminal Procedure Code – குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குக் கொண்டுவந்திருக்கிற 44 திருத்தங்களில், இன்று சில திருத்தங்கள் நம்முடைய நடைமுறைக்கு ஒத்துவராமலும், ஏற்கத் தக்கவையாக இல்லாமலும், அதேபோல, பொது மக்களைப் பாதிக்கக் கூடியவையாகவும் இருக்கின்ற காரணத்தினாலே, அவற்றை தமிழகத்திலே அமல்படுத்தக் கூடாது என்கிற கோரிக்கையை வைத்து, அவர்கள் இப்போது போராடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டிருக்கக் கூடிய வழக்கறிஞர்கள், அதேபோல, Bar Council Chairman, Bar Council Members, அதேபோல வழக்கறிஞர் சங்கத்தினுடைய தலைவர்கள் எல்லாம் ஒன்றாகக்கூடி, நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும் சந்தித்து, இந்த குற்றவியல் நடைமுறைச் சட்டத்தினுடைய அந்த 44 திருத்தங்களை, நீங்கள் நிறுத்தி வைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதிலே 292 (a) பிரிவு திருத்தத்தைக் கொண்டுவருகிறபோது, யாராவது நீதிமன்றத்திற்கு ஆஜராகத் தவறினாலேயே, அதுவே ஒரு substantial offence – அதுவே பெருங்குற்றம் என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதேபோல custodial death. யாராவது Police Station–ல் இறந்துவிட்டால், அந்த custodial death–க்கு அங்கிருக்கக்கூடிய, அந்த area–வைப் பார்க்கக்கூடிய Judicial Magistrate–தான் நீதி விசாரணை செய்ய வேண்டும் என்கிற திருத்தம் சரியல்ல. காரணம், அங்கிருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகளுக்கும், அதேபோல நீதித் துறையினருக்கும் தொடர்பு இருக்கிற காரணத்தினாலே Chief Judicial Magistrate, அதேபோல சென்னையிலே Metropolitan Magistrate இவர்கள்தான் அந்த custodial death–ஐ விசாரிக்க வேண்டும் என்றும், அதேபோல காவல் துறையைச் சார்ந்தவர்கள் wrongful arrest ஏதாவது செய்துவிட்டால் ஆயிரம் ரூபாய் அபராதம் என்று இருப்பது ரொம்பக்



குறைவாக இருக்கிறது; பத்தாயிரம் ரூபாயாவது இருக்க வேண்டும் என்றும்; அதேபோல, 353, அதாவது assaulting Government servant என்று இருக்கக்கூடிய I.P.C. பிரிவு இப்போது bailable–ஆக இருக்கிறது. அதை non-bailable–ஆக மாற்றியிருக்கிறார்கள். இவையெல்லாம் கூடாது என்று பல வாதங்களை வைத்து, இன்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்றத்தை இன்று புறக்கணித்துவிட்டு போராடிக் கொண்டிருக்கிற வழக்கறிஞர்களுடைய நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிந்து, இங்கே மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற Criminal Procedure Code–க்கான அந்த 44 திருத்தங்களை நிறுத்தி வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா, நீதிமன்றத்திற்கு மீண்டும் வழக்கறிஞர்கள் போவதற்கான வழிவகைகளைச் செய்வாரா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள், அமர்ந்தே சொல்லலாம்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் இதன் தொடர்பாக என்னைச் சந்தித்துப் பேசியிருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கையை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு மத்திய அரசு முன்வரக்கூடிய சூழ்நிலை இதுவரையிலே அமையாவிட்டாலும்கூட, அவர்கள் என்னிடத்திலே உறுதி கேட்டிருக்கின்றார்கள். மாநில அரசு சில பிரிவுகளை ஒத்திவைத்து, அந்தச் சட்டத்தை இங்கே அமல்படுத்தாமல் இருக்கவேண்டும். சில பிரிவுகளை விலக்கி வைக்கவேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். நானும் அவர்களுக்கு உறுதி அளித்து இருக்கின்றேன். அவர்கள் அதை ஏற்று, நாங்கள் மாநில அரசுமீது நம்பிக்கை வைக்கிறோம், எனவே, நாங்கள் நீதிமன்றத்தைப் புறக்கணிக்கின்ற அந்த நிலையை உருவாக்கமாட்டோம் என்று உறுதியளித்து இருக்கின்றார்கள். நானும் அளித்த உறுதியை நிறைவேற்றுவேன். அவர்களும் அளித்த உறுதியை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. எஸ்.வி. சேகர். (குறுக்கீடு) திரு. பரஞ்சோதி உட்காருங்கள். திரு. சேகர் கொடுத்து இருக்கிறார், இல்லையா? உட்காருங்கள் (குறுக்கீடு) நான் கூப்பிடுகிறேன், உட்காருங்கள்.

[2006 ஆகஸ்ட் 12

## (ஆ) நொச்சிக்குப்பம் குடிசைமாற்று வாரிய வீட்டில் ஒரு மீனவர் கீழே விழுந்து இறந்துள்ளது

**திரு. எஸ்.வி. சேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன மாதம் 29 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு நொச்சிக்குப்பத்திலே, சரியாக பராமரிக்கப்படாமல் உள்ள ஒரு Building–ல், second floor–ல், கைப்பிடிச் சுவர் இல்லாத ஒரு காரணத்தாலே, ஒரு மீனவர் தவறி விழுந்து இறந்துவிட்டார். அன்றையதினம் காலையிலே இறந்துவிட்டார். அதேபோல, பல கட்டடங்கள் அங்கே பராமரிக்கப்படாமல இருக்கின்றன. ஒரு நாளைக்கு சுமார் 500 ரூபாய் வரைக்கும் சம்பாதிக்கக்கூடிய கடல் விவசாயி, இன்றைக்கு அவரின் குடும்பம் ரொம்பவும் கஷ்டத்தில் இருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம், குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமைதான். இன்னும் பல கட்டடங்கள் அப்படித்தான் இருக்கின்றன. ஆகவே, அந்தக் குடும்பத்திற்கு நீங்கள் குறைந்தபட்சம் இரண்டு இலட்சம் ரூபாயாவது நிதியுதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியக் கட்டடத்திலிருந்து ஒரு மீனவர் தவறி விழுந்து இறந்துவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வீட்டைப் பழுது நீக்கம் செய்வதற்காக, 12–5–2005 ஆம் தேதி அன்றே வீட்டைக் காலி செய்யும்படி அவருக்கு நோட்டீஸ் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அவர் இடறி விழுந்தது 29–7–2006 ஆம் தேதி என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த வீடுகளையெல்லாம் புதுப்பிக்கின்ற பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.*

## 3. உரிமை மீறல் பிரச்சினை

### (அ) உணவு விடுதிகளுக்கு முன்னாள் பேரவைத்தலைவர் அனுமதி அளித்ததில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்த விவரங்களை வெளியிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சையீத். (குறுக்கீடு)*



2006 ஆகஸ்ட் 12]

**Tmt. BADER SAYEED:** Hon. Speaker Sir, this morning I have given a notice, moving a motion of Breach of Privilege against the Hon. Chief Minister. I need permission to raise that now.

**HON. SPEAKER:** Tell, tell.

**Tmt. BADER SAYEED:** Yes. On 6-8-2006 when the Hon. Chief Minister addressed a public meeting at Chepauk, he disclosed several important Government secrets relating to the administration of the State Government by exhibiting them to the audience. In the same manner, he had disclosed secrets of file handled by the then Hon. Speaker of the Assembly and only to malign him in a matter relating to leasing out a Non-vegetarian Restaurant inside the Government Estate. This act of the Hon. Chief Minister in disclosing the matters contained in Government files, is against the oath of secrecy administered to him by the Hon. Governor of Tamil Nadu when he was sworn in as Chief Minister of the State. The oath of secrecy which is administered to him by the Governor is found in the III Schedule of the Constitution which reads as follows: "I solemnly affirm that I will not directly or indirectly communicate or reveal to any person...

**HON. SPEAKER:** These things have not been divulged in your notice. You should not go out of the notice.

**Tmt. BADER SAYEED:** This is my notice, I have given this morning, Hon. Speaker. I have given it this morning. I have given it at 8-30 a.m. to the Secretary.

**HON. SPEAKER:** Yes, read it.

**Tmt. BADER SAYEED:** Please ...

**HON. SPEAKER:** No, No you read.

**Tmt. BADER SAYEED:** May I say this...

**HON. SPEAKER:** I will give findings, you read.

**Tmt. BADER SAYEED:** I am not speaking on the findings. May I request the Hon. Speaker to be a little polite.

*(முற்பகல் 10–10*

The Chief Minister cannot claim that he is under any obligation or duty to disclose the official secrets with an ulterior motive of taking revenge upon the

former Speaker of the Assembly or the former Chief Minister of the State, who is presently the recognized Hon. Leader of the Opposition, on political grounds. It is against the oath of secrecy taken by him before the Constitutional Head of the State.

Under Rule 92, sub-rule (v) of the Rules, "a Member while speaking must not reflect upon the conduct of the Speaker, except on a substantive motion for his removal." This is in utter disregard to the rule provided in the Rules of the Assembly and the provisions of the Constitution of India that the Hon. Chief Minister has indulged in character assassination of the constitutional functionaries of that time, as Chief Minister and the Speaker of the Assembly, who have acted only in good faith, that too, with the clear cut mandate of the people of this State to rule the State. I, therefore, move that this Hon. House should proceed against the Hon. Chief Minister for breach of privilege.

**HON. SPEAKER:** I am giving you the finding.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. மு. பரஞ்ஜோதி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நான் findings சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இன்று, 12–8–2006 ஆம் தேதி, பேரவை விதி 220–ன்கீழ், அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்.

6–8–2006 அன்று, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள சைவ, அசைவ ஓட்டல்களை நடத்த அனுமதி அளித்ததில், முறைகேடாக அரசுக்குப் பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்ட விவரங்கள் பேரவைக்கும், பத்திரிகைகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. மேலும், முன்னாள் பேரவைத் தலைவர் திரு. காளிமுத்து அவர்கள், சம்பந்தப்பட்ட கோப்புகள் திருத்தப்படுவதாக பத்திரிகைகளில் பேட்டியளித்ததன் காரணமாக, உண்மை நிலையை விளக்கவே, சம்பந்தப்பட்ட கோப்புகளின் நகல்கள் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இப்பிரச்சினை குறித்து நான் பரிசீலனை செய்ததில், மேலெழுந்தவாரியாக இதில் உரிமை மீறல் எழவில்லை என்பதால், இந்த முன்னறிவிப்புக்கு நான் அனுமதி மறுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன், சொல்லுங்கள்.





## 2. தகவல் கோரல்–தொடர்ச்சி

### (இ) ஒரு இலங்கை தமிழ் அகதிக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காதது

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், சர்வதேச சட்ட விதிகளுக்குட்பட்டு, அகதிகளாக தமிழ்நாட்டில் வாழ்கின்ற அந்த மக்களுக்கான அனைத்துச் சலுகைகளையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வழங்கியது. சமீப காலமாக, இலங்கை போன்ற பல்வேறு நாடுகளிலேயிருந்து புலம் பெயர்ந்து, முப்படைகளும் குண்டு மாரி பொழிகின்ற அந்தச் சூழ்நிலையில், தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, வீடு, மனை, கோயில், குளங்கள் அத்தனையும் இழந்துவிட்டு, உடுத்திய உடையோடு இங்கு அகதிகளாக வருகின்ற அந்த மக்கள், இங்கே பல்வேறு துறைகளில், கூலி வேலைக்கும், கொத்தனார் வேலைக்கும் சென்று தங்கள் வாழ்க்கையை அனுபவிக்கின்ற அந்தச் சூழ்நிலையில், அவர்களுக்கான பல சலுகைகளை வழங்கியிருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், அவர்களுடைய குழந்தைகள் பல்வேறு கல்லூரிகளில் படிப்பதற்கு, அகதிகளுக்கான இட ஒதுக்கீட்டு முறையைக் கடந்த கால ஆட்சியில் வழங்கினார்கள். ஆனால், நேற்றைய 'தினமணி'–யில் செய்தி; 'உதயராஜ் என்கிற ஒரு இலங்கைத் தமிழன், அகதி, 1173 மார்க்குகள் எடுத்தும், அவனுடைய எழுத்துத் தேர்விலே தேர்ச்சி பெற்றும்கூட, அகதிகளுக்கான இட ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால், அவனுக்குக் கிடைக்க வேண்டிய அந்த M.B.B.S. seat, இன்றைக்குத் தரப்படவில்லை என்கிற தலையங்கம், இன்றைக்கு 'தினமணி'–யில் செய்தியாக வந்திருக்கிறது. உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுடைய வரிகள்

*"மாங்கொத்திகளும், மரக்கிளிகளும் கூடு திரும்ப தடையே இல்லை;*
*தமிழர்களான நாங்கள் மட்டும் நாடு திரும்ப முடியவில்லை"*

என்கிற வரிகளுக்கு ஏற்றவாறு, மிகப் பெரிய துயரத்தில் துவண்டு கொண்டிருக்கின்ற அந்தக் குடும்பங்களுடைய எதிர்காலத் தலைமுறையை வாழ வைப்பதற்கு, அந்தக் கல்வித் துறைகளில் இட ஒதுக்கீட்டை மீண்டும் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞருடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 12

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை உருக்கமானது என்பதை நான் உணர்கின்றேன். ஆனால், ஒரு விளக்கத்தை அவருக்கு நான் தர விரும்புகின்றேன். புலம் பெயர்ந்து, வேறு வழியில்லாமல், இலங்கையிலேயிருந்து வருகின்ற தமிழர்கள், இந்தியாவிலே தமிழகத்திலே தங்க வைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இப்போது 'இலங்கைத் தமிழர்கள்' என்ற பெயர்கூட இல்லை; 'அகதிகள்' என்ற பெயர் தமிழர்களுக்கு இன்றைக்கு; நினைத்துப் பார்க்கமுடியாத கொடுமைதான். இருந்தாலும், பல்லாயிரக்கணக்கிலே, இந்திய நாட்டினுடைய எல்லையோரங்களில், குறிப்பாகத் தமிழகத்திற்கு வந்து குடியமர்ந்திருக்கின்ற அவர்களுக்கு, தமிழக அரசு அன்று முதல், இன்று வரை ஏற்ற உதவிகளைச் செய்து வருகிறது.*

*(முற்பகல் 10–15*

*பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் அகதிகளாக இங்கு வந்தபோது, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இலங்கை அகதிகளுக்கு ஏற்ற உதவிகள் பலவற்றைச் செய்திருக்கின்றார். அதற்கு அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, கடந்த காலத்திலே இருந்த அ.தி.மு.க. ஆட்சியானாலும் சரி, இலங்கைத் தமிழர்களை இங்கு அநாதைகளாக விட்டுவிடவில்லை. முடிந்தவரையிலே அவர்களுக்கு உதவிகளை வழங்கியே வந்திருக்கின்றோம். இப்பொழுதுகூட, இலங்கையிலேயிருந்து வந்துள்ள அகதிகள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களுடைய நலன்கள் முறையாகக் காக்கப்படுகிறதா, சுகாதார வசதிகள் அமைந்துள்ள இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதையெல்லாம் அறிந்து ஆவன செய்ய அரசுக்கு, குறிப்பாக எனக்குத் தகவல் தர நம்முடைய அமைச்சர்கள் இருவரை அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று, நிலைமைகளை எடுத்துரைத்து மத்திய அரசின் சார்பாக அந்த அகதிகளுக்கு, மன்னிக்க வேண்டும், அந்தத் தோழர்களுக்கு மாதம் 200 ரூபாய் வழங்கப்படுகிறது, அது போதுமானதாக இல்லை என்று என்னிடத்திலே சொன்னார்கள். மத்திய அரசுக்கு எழுதி கேட்டு அவர்கள் அந்தத் தொகையை அதிகப்படுத்தித் தருவதற்குமுன்பு, நாமே அந்த முயற்சியிலே ஈடுபடுவோம் என்று மாநில அரசின் சார்பாக மேலும் ஒரு 200 ரூபாய் அவர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறே வழங்கப்படுகிறது.*



2006 ஆகஸ்ட் 12] *[கலைஞர் மு. கருணாநிதி]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 9074, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட நெடுங்குளம் கிராமத்தில் நெசவாளர்களின் துயர்



துடைக்க தொடங்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் முடங்கிக் கிடக்கிறது. அதனை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 2789, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 8686, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் எண் 3868, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5485, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெசவாளர்கள் அதிகம் வாழ்கின்ற வானூர் தொகுதி நெசவாளர்களுக்கு கூட்டுறவுத் துறையின்மூலம் கடன் வசதி கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5466, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள சில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்த நிலையில் உள்ளன. அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4424, திரு. ஓ.கே. சின்னராஜ்.



**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறி நெசவாளர்களுக்கு பரவலாக்கும் வீடு கட்டும் திட்டம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் நெசவாளர்களின் நலன் கருதி மீண்டும் அத்திட்டத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5552, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சூலி, காடம்பாடி, காடுவெட்டிப்பாளையம் ஆகிய இடங்களிலுள்ள கதர் வாரியத்திற்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்தப்படாமல் இருப்பதை செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5345, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறித் தொழில் மேம்பாட்டு நிதியில் போளூர் தொகுதி நெசவாளர்களுக்கு கடனுதவி வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6888, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கும்பகோணம் சரகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி / விற்பனைச் சங்கங்கள் அனைத்தும் மிகவும் நலிந்த நிலையில் உள்ளன. அதற்கு அரசு நிதி உதவி செய்து கூட்டுறவு நெசவாளர் சங்கங்களைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7710, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கரூர் சட்டமன்ற தொகுதி, கரூரில் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய டெக்ஸ்டைல் டிரைனிங் சென்டர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9234, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் ஒரு ஜவுளிச் சந்தை



ஈரோடு மாவட்டத்தில் உள்ளதுபோல உருவாக்கி சேலம் மக்களின் நீண்டகால கோரிக்கையினை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8311, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி, பழையூரில் அமைக்கப்பட்டுள்ள கைத்தறிக் கூடத்தை செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1286, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஓமலூர் தொகுதி, செம்மாண்டப்பட்டியில் நெசவாளர் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3935, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ–ஆப்டெக்ஸ்மூலம் நூல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5883, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவிடைமருதூர் தொகுதியில், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். நூல், கோறா, ஜரிகை போன்ற கச்சாப் பொருட்கள் விலை உயர்ந்தும், வங்கிக் கடன் கிடைக்காமலும் உள்ளது. கச்சாப் பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் . ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2114, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் உள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை அரசு மானியம் தந்து, புதிய நவீன இயந்திரங்களைப் பொருத்தி, இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5758, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி மற்றும் துணி நூல் ஆடைகளை நெசவாளர்கள் நலன் கருதி தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கல்லூரியிலும் Retail outlet திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2588, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறித் தொழில் ஒருங்கிணைப்பகம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8701, திரு. சி. கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8156, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2731, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறித் தொழிலாளர்கள் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் பெற்ற அனைத்து கூட்டுறவு வங்கிக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5241, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உடுமலைப்பேட்டை தொகுதி, சின்னபொம்மன் சாலை, வாளவாடி, மலையாண்டிப்பட்டிணம், பாப்பான்குளம், கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்கள் பயன்படுத்தி வந்த கூட்டுறவு நெசவாளர் சங்கம் தற்போது நடைபெறாமல் உள்ளது. அதைப் புதுப்பித்து அனைத்து வசதிகளையும் மீண்டும் ஏற்படுத்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3156, திரு. இரா. இராம்பிரபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2375, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5162, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சங்கரன்கோவில் தொகுதியில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு அரசுமூலம் நூல் விநியோகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4462, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இராசபாளையம் தொகுதியில் மகளிர் பணியாற்றும் இராஜபாளையம் அழகை நகர் க்யூ 917 இராசபாளையம் இண்டஸ்டிரியல் கைத்தறி சொசைட்டி 25 இலட்சம் ரூபாய்க் கடனை தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6775, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறி நூலுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4919, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறி தொழிலாளர்களுக்கு அரசு மருத்துவ வசதி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2918, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி விசைத்தறிகள் நிறைந்த பகுதி. ஆகவே, ஏற்கெனவே, குமாரபாளையத்தில் உள்ளது போல் இன்னும் ஒரு விசைத்தறிப் பூங்கா, பள்ளிப்பாளையம், திருச்செங்கோடு பகுதியில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3586, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொசவன்பேட்டை, மாதர்பாக்கம், பாதிரிவேடு ஊராட்சிகளை விசைத்தறி மூலம் துணி தயாரிப்பவர்களுக்கு சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6919, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தேனி மாவட்டத்தில் கைத்தறி துணி தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6173, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கு காஞ்சிப்பட்டு என முத்திரை பதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6279, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தஞ்சை மாவட்டத்தில் திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர மற்ற சங்கங்கள் நஷ்டத்தில் இயங்குவதால் அவற்றை மூடக்கூடிய நிலை உள்ளது. இந்தச் சங்கங்களில் உள்ள நெசவாளர்கள் வேலை இழந்துள்ளார்கள். இதற்கு மானியம் அளித்து நெசவாளர் சங்கங்களைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,16,16,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.'

*முற்பகல் 10–35*

**திரு. ஆர். சாமி:** நான் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். என் பெயரிலே ஒன்றுமே வரவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம்போய் file-ஐப் பாருங்கள். File அனுப்பப்படும். (குறுக்கீடு) அப்புறம்போய் file–ஐப் பாருங்கள்.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.



அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கமளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகேபெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 17—கைத்தறி மற்றும் துணி நூல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அதற்கான விளக்கத்தை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது. பேசுகின்ற உறுப்பினர்கள் 10 நிமிடங்களுக்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் பேசுவதற்கு முழு முதல் காரணமாக இருந்த, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் என்னுடைய பொது வாழ்க்கையில் 45 ஆண்டுக் காலம்

---

@ 581 முதல் 626 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 627 முதல் 667 வரையிலான பக்கங்களில் இணைப்பு—II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

எனக்கு உரிய மரியாதையை அளிக்கவில்லை. (குறுக்கீடுகள்) ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடுகள்) நீங்கள் இருங்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி, (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன் Sir. எல்லோரும் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) திரு. து. செல்வராஜ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சின்னசாமி, நீங்கள் கட்சி மாறிய விஷயமெல்லாம் இங்கே வேண்டாம். இங்கே பேசும்போது மானியத்தின்மீதுதான் பேசவேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சின்னசாமி அவர்கள் தனக்கு காங்கிரஸ் இயக்கம் உரிய மரியாதையை அளிக்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார். அப்பொழுது எல்லோரும் எழுந்து, உண்மைதான் அது என்பதைப்போல எல்லோரும் கூச்சலிடுவது அவருக்கு மரியாதை அளிப்பதாக ஆகாது. யாராவது ஒருவர் அவருக்கு உரிய பதிலைச் சொல்லவேண்டுமே தவிர, அனைவரும் எழுந்து கோரஸ் பாடுவது நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவருக்குப் பதில் சொல்லிவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் எதற்கு எழுந்திருந்தார் என்பதைச் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்தான் தேவையில்லாத பிரச்சினையை எழுப்பிவிட்டார். உட்காருங்கள். அவர் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே காங்கிரஸ் பேரியககத்திலே சீட் கிடைக்கவில்லை என்பதற்காக



இந்தக் கட்சியைக் காட்டிக் கொடுத்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) கட்சிமாறி, துரோகிகளாக மாறியவர்களுக்கு மரியாதை என்றுமே கிடைக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக இந்தக் கட்சியிலே சேர்ந்துவிட்டு இன்று அம்மையாருக்குத் துதிபாடுகிற இந்தத் துதிபாடிகளை காங்கிரஸ் இயக்கம் ஒருகாலத்திலும் மதிக்காது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி, பேசுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.

(முற்பகல் 10–40)

**திரு. ஆர். சின்னசாமி:** காட்டிக் கொடுப்பதும், மாறுவதும் எனக்குப் பழக்கம் இல்லை. எப்பொழுதும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, பொது மேடையிலே, பொதுக் கூட்டத்திலே பேசுவதுபோல பேசக் கூடாது, தெரிகிறதா? (குறுக்கீடுகள்) நீங்கள் மானியக் கோரிக்கைமீது பேசுகிறீர்கள். மக்கள் உங்களை நம்பி வாக்களித்திருக்கிறார்கள். நீங்கள் சொல்லவேண்டிய கருத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். சின்னசாமி:** தொழிலாளர் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த சிங்காநல்லூர் வாக்காளப் பெருமக்களுக்கும், ஜனநாயக மக்கள் கூட்டணியினுடைய தோழர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழிலாளர் நல மானியக் கோரிக்கையில் நான் பேசுகிறபோது, இங்கே மாநிலத்திலுள்ள தனியார் தொழில்களிலே பணியாற்றுகிற தொழிலாளர்கள், இன்றைக்கு அதுவும் குறிப்பாக, பஞ்சாலைத் தொழிலில் பணியாற்றுகிற தோழர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத நிலைமை இன்றைக்கு தமிழகத்திலே உருவாகி இருக்கிறது. பஞ்சாலையில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் பல ஆண்டு காலமாக பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்கப்படவில்லை. பல ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. பல ஆலைகள் மூடியதன் விளைவாக, அந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய பணிக்கொடை பல தொழிலாளர்களுக்கு கிடைக்காமல் இறந்தே போய் இருக்கிறார்கள்.

அதேபோல. பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்தவரை இன்றைக்கு கோவை மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், சேலம் மாவட்டம் போன்ற மாவட்டங்கள் அதிக பஞ்சாலைகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் permanent தொழிலாளர்களே இன்றைக்கு இல்லாத ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது. அதற்கு மாறாக இன்றைக்கு அந்தத் தொழிலில் தினக் கூலி தொழிலாளர்களை தினக் கூலிகளாக, நிரந்தரம் இல்லாத தொழிலாளர்களாக உள்ளே வைத்து, அதிலும் பெண் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்டு, ஆலைகளுக்கு உள்ளேயே அடைத்து வைத்து 10 மணி நேரம், 12 மணி நேரம் என்று வேலை வாங்குகிறார்கள். ஏதாவது Quarry–யிலே பணியாற்றுகின்றவர்களோ அல்லது பண்ணையிலே பணியாற்றுகின்றவர்களோ 10, 12 பேர் இருந்தால் கொத்தடிமை என்று சொல்கிறோம். இன்றைக்குத் தொழிலாளர் நலச் சட்டங்கள் எவ்வளவோ இருந்தும்கூட, பகிரங்கமாக பஞ்சாலைகளில் தொழிற்சாலைகளிலேயே தொழிலாளர்களை, அதுவும் பெண் தொழிலாளர்களை அடைத்து வைத்து கொடுமையாக நடத்துகிற நிலைமை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் நடந்துகொண்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழ்நாட்டிலே பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அங்கே பணியாற்றக்கூடிய பெண் தொழிலாளர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். அது இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமையா அல்லது கடந்த கால ஆட்சியிலே இருந்தே அது தொடர்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகுறித்து பஞ்சாலைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களை 20 தினங்களுக்கு முன்னாலே சந்தித்து, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தக் குறைபாடுகளையெல்லாம் எடுத்துச் சொன்ன பிறகு, தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இதெல்லாம் கடந்த ஆட்சிக்காலத்திலே நடந்தது, இப்பொழுது நாங்கள் நிவர்த்தி செய்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள், அவர் என்ன சொல்கிறார் என்று கேட்போம். (குறுக்கீடு) ஏன்? (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். ஒரு பெண் உறுப்பினர் Point of Order கேட்கிறார். அதைக் கொடுப்பதற்கு நீங்கள் மறுக்கிறீர்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள் எல்லோரும். உட்காருங்கள். அவர் பேசட்டும். (குறுக்கீடு) ஒரு பெண் உறுப்பினர் பேசுவதற்கு உரிமை இல்லையா ? உட்காருங்கள். (குறுக்கீடு) உரிமை இருக்கிறது. உட்காருங்கள். நான் கொடுக்கிறேன். (குறுக்கீடு) அப்புறம் பேசச் சொல்கிறேன். உட்காருங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அ.தி.மு.க. ஆட்சியின்பொழுது திண்டுக்கல் உட்பட 300 பஞ்சாலைகளில் இளம்பெண்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்; அதற்கு நடவடிக்கை என்ன என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டபொழுது சென்ற ஆட்சியினுடைய முதலமைச்சர் அவர்கள், இப்பொழுது பேசிக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு சிங்காநல்லூர் தொகுதியினுடைய உறுப்பினருடைய அரசியல் இயக்கத்தைச் சார்ந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள், என்ன பதில் சொன்னார்கள் என்றால், அப்படி பஞ்சாலைகளில் இளம்பெண்கள் அடைத்து வைக்கப்படவில்லை அவர்களது பெற்றோர்களும், அந்தப் பெண்களும் விரும்பிதான் அங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற பதிலை இந்த மாமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். பதிவாகி இருக்கிறது. அந்த விஷயத்தையும் தெரிந்துகொண்டு. மாண்புமிகு அ.தி.மு.க.–வினுடைய உறுப்பினர் பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று நான கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மேலும். கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்திருக்கும்போதெல்லாம் அ.தி.மு.க. உறுப்பினர் யாரும்...

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். உட்காருங்கள் அம்மா. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக்காரர்கள், ஒரு பெண் பேசினால் பேச விட மாட்டீர்களா? ஒரு பெண் பேச உரிமை

கிடையாதா? எதிர்க்கட்சிக்காரர்கள் அப்படி இருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், நாங்கள் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்கிற தகுதி இந்த அமைச்சர்களுக்கு இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். உங்களுக்குத் தைரியம் இருந்தால், உண்மையைச் சொல்லுங்கள். அதைவிட்டு, ** (குறுக்கீடுகள்) மைக் கொடுங்கள். ** ஒவ்வொருமுறையும் நாங்கள் பேசுவதற்கெல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கலைராஜன், உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்வரிசையில் இருக்கிற கட்சித் தலைவர்கள் கேட்கிறபோது, அவர்களுக்கு அனுமதி அளிப்பது என்பது கடந்த காலங்களிலே இருந்த மரபுதான். இங்கே (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள், அங்கே பேசுங்கள். நான் பேசும்போது இந்தமாதிரி பேசுவது, இதே வழக்கமாக அ.தி.மு.க. உறுப்பினர்கள் இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுவதை கேட்டுக்கொள்ளுங்கள். பாருங்கள், பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் என்றாலும், தனிப்பட்ட முறையில் எழுந்து நின்று கருத்தைச் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று கத்திப் பிரயோஜனம் இல்லை. தெரிகிறதா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) என்னவென்று பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்கிற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கட்சியிலேகூட முன்வரிசையிலே இருக்கிற தலைவர்கள் கேள்வி கேட்டால் நீங்கள் அனுமதிக்கிறீர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** எல்லா உறுப்பினர்களுக்கும் அனுமதி என்பது மரபே கிடையாது, எப்போதும் அனுமதிக்கப்படுவதில்லை. முன்வரிசையில் இருக்கிற ஒரு தலைவர் பேசுகிறார், அனுமதிக்கிறீர்கள். அதுமட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அக்ரி கிருஷ்ணமூர்த்தி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். தம்பிதுரை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். சின்னசாமி, பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அமைச்சருக்கு பதில் சொல்ல அருகதை இல்லை என்று சொல்கிறார். நாங்கள் அடிக்கடி இந்தமாதிரி கட்சிமாறிப் போய் பேசுகிறவர்களும் கிடையாது. அமைச்சருக்கு பதில் சொல்லத் தெரியும். ஆனால், இங்கே ஒரு சாதாரண உறுப்பினரே சொல்கிறார், அதுவே உங்களுக்குத் தெரியவில்லை. பதில் சொல்ல முடியவில்லை என்ற வார்த்தைகள் எல்லாம் தேவையில்லாத வார்த்தைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சின்னசாமி, நீங்கள் பேசுகிறீர்களா, அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லவா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) விசுவநாதன், வைத்திலிங்கம், இரண்டு பேரும், எழுந்து நிற்காமல் அப்படியே உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள், இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சுமத்துகிறார். ஏதோ இங்கேயிருக்கின்ற அமைச்சர்களுக்கெல்லாம் பதில் சொல்லத் தெரியாததைப்போல ** வேடிக்கைப் பார்ப்பதாகச் சொன்னார். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், அமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்போது, don't disturb.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், நாங்கள் எந்த சந்தானங்களையும் உருவாக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் திரு. வேலு. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே ஐந்தாண்டு காலம் முன்வரிசையில் இருக்கிற எதிர்க்கட்சியினுடைய தலைவர்களைக்கூட பேசவிடாமல், பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த சந்தானம் அவர்களை தினமும் லாலி பாடச் சொல்லி, தினமும் கேட்டுக்கொண்டிருந்தவர்கள். நாங்கள் எல்லாம் குரல் கொடுக்க, ஜனநாயக ரீதியாகக் குரல் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டது இங்கே இருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்களுக்கெல்லாம் தெரியும். அவர்கள்தான் இப்போதும் இந்தச் சட்டமன்றத்தை நடத்தவிடாமல் பிரச்சினையை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்கள் ஒன்றுபோல் எழுந்திருக்கிறார்கள், நன்றாக இல்லை. இதோ பாருங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவரை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன், எல்லோரிடமும் கொஞ்சம் சொல்லி வையுங்கள். *(குறுக்கீடுகள்)* ஒன்றுபோல் எழுந்திருந்து, ஒன்றுபோல் கத்தினால் என்ன அர்த்தம்? *(குறுக்கீடுகள்)* சொல்லுங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் கூட்டத் தொடர் ஆரம்ப கட்டத்திலிருந்தே, இது ஆரம்பித்த நாளிலிருந்தே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் குழப்பம் பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். *(குறுக்கீடுகள்)* சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்றைக்கு... *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்று சொல்வதற்கு முன்பாகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்தமாதிரிப் பேசுவது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சபை மரபுக்கு உகந்ததுதானா என்பதை நான் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. எதிர்க்கட்சியிலிருந்து அவர்கள் கருத்துகளைச் சொல்லுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு எழுந்து பேசுகின்றார்கள். அதை நாங்கள் யாரும் மறுக்கவில்லை. ஆனால், இங்கிருந்து சைகை காட்டிவிட்டு, எழுந்துநின்று பேசுங்கள் என்று சொன்னதற்குப்பின்னால், இங்கிருந்து வரிசையாக அனைவரும் எழுந்து உங்களுக்கு ஆதரவாகப் பேசுவது எந்தவிதத்தில் நியாயம்? இன்றைக்கு இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து... *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்த்தீர்களா? நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே உங்கள் உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்கிறார்கள் பாருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சொல்வதைக் கேளுங்கள். இந்த விவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள்,... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான், அருமை நண்பர் திரு. பன்னீர்செல்வம் அவர்களைக் கொஞ்சம் கபடு, சூது இல்லாதவர் என்று கருதி இருந்தேன். *(சிரிப்பு)* சாதாரணமான வார்த்தையில் சொல்வது என்றால் அப்பாவி என்று சொல்வார்கள்; அப்படிச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், அவர் முதலமைச்சர் பொறுப்பையும் ஏற்று இருந்தவர். அவர் எவ்வளவு சாமர்த்தியசாலி என்பதை... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் எல்லோரும் உட்காருங்கள். திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, எச்சரிக்கிறேன், கையை நீட்டிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். *(கூச்சல்–குழப்பம்)* உட்காருங்கள். அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தேவையில்லாமல் தலையிடுகிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)* சரி, முதலில் உட்காருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவர், சில மாதங்கள் முதலமைச்சர் பொறுப்பையும் ஏற்று இருந்தவர். *(குறுக்கீடுகள்)* அவர்... *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தியை அவையிலிருந்து வெளியேற்றுகின்றேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) அக்ரி கிருஷ்ணமூர்த்தியை அவையைவிட்டு வெளியேற்றுகின்றேன். அக்ரி கிருஷ்ணமூர்த்தியை அவையைவிட்டு வெளியேற்றுகின்றேன். அக்ரி கிருஷ்ணமூர்த்தியை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எல்லோரையும் வெளியேற்றுங்கள். அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். கொண்டு போய் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். காவலர்கள் போங்கள்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. ஆர். வைத்திலிங்கம் மற்றும் பொள்ளாச்சி திரு. வி. ஜெயராமன் ஆகியோர் இருக்கையைவிட்டு முன்னாலே வந்து திரு. ஜி.கே. மணி அவர்களிடம் வாதம் செய்தனர். மற்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் இருக்கைகளிலிருந்து முன்னால் வந்து கோஷமிட்டனர்.)*

அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கைக்கு முன்னால் வந்து கோஷமிட்டனர்) (கூச்சல்—குழப்பம்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். இருக்கையிலேயிருந்து முன்னாலே வந்து பிரச்சினை செய்துகொண்டிருக்கிறார்கள். அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள் ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்? அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்). அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) அவ்வளவு பேரும் இருக்கையில் உட்காருங்கள். அவைக் காவலர்கள் என்ன, பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? அவைக் காவலர்கள் என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? வெளியேற்றச் சொன்னால், உடனே வெளியேற்றுங்கள். (கூச்சல்—குழப்பம்) வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள் என்ன வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? சீக்கிரம் வெளியேற்றுங்கள். இருக்கையைவிட்டு பேரவைத் தலைவர் இருக்கைக்கு முன்னாலே வந்து பிரச்சினை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்) மற்றவர்கள் அமைதியாக உட்காருங்கள்; எல்லா உறுப்பினர்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் எல்லோரையும் வெளியேற்றுங்கள்.



*(குறுக்கீடு) சரி, போங்கள். அவைக் காவலர்கள், வெளியேற்றச் சொன்னால், உடனே வெளியேற்ற வேண்டும். அவைக் காவலர்கள் அவைக்குள் வந்து அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றிக் கொண்டிருந்தனர்.)*

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய நண்பர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். எதிர்க்கட்சியினுடைய முன்னாள் அமைச்சர்கள், அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். யாரும் தயவுசெய்து வெளியேறத் தேவையில்லை. வந்து, அமர்ந்து, நிகழ்ச்சிகளைத் தொடர வேண்டும் என்று பொறுப்புணர்வோடு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சருடைய வேண்டுகோளை ஏற்று உறுப்பினர்கள் அமைதி காத்து வந்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வந்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக வந்து உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** காவலர்கள் வெளியே போய்விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக வந்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருக்கையிலே அமைதியாக உட்கார வேண்டும். முதலமைச்சருடைய வேண்டுகோளை ஏற்று, உங்கள் அவ்வளவு பேரையும் அவைக்குத் திரும்ப அழைக்கிறேன். வாருங்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் அவர்களுக்கு வழிவிடுங்கள். உள்ளே வரட்டும். உள்ளே வருகிற உறுப்பினர்கள் வரட்டும். விடுவிடுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்பட அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் சபையிலே வந்து அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம். வாருங்கள்.

*(அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மட்டும் வந்து அமர்ந்தார்.)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, பேசுங்கள், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் வரட்டும். எல்லோரும் வரட்டும். வந்து உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, அனுமதி இல்லை, அது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

## 6. அரசினர் தீர்மானம்

### திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தியை பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கிவைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரு சுமூகமான சூழ்நிலையிலே இந்தச் சபை நடைபெற வேண்டுமென்பதற்காக, அவருக்கு இருக்கிற ஒரு நீண்ட பாரம்பரியமிக்க அனுபவத்தை வெளிப்படுத்தி, இங்கே நம்முடைய சபை உறுப்பினர்களைச் சிறப்பாகச் செயல்படச் செய்ய வேண்டுமென்பதற்காக முயற்சிகளை எடுத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறபொழுது, அவர் முன்னாள் முதலமைச்சர், துணைத் தலைவர் அவர்களைப் பற்றி மிக நன்றாகவே குறிப்பிட்டார். அதையும் அவர் ஏற்றுக்கொண்டு, அவர் சிரித்துக் கொண்டுதான் அமர்ந்திருந்தார். அப்படி அவருடைய இயல்பான குணங்களை நம்முடைய முதல்வருக்கே உரித்தான பாணியிலே, அந்தச் செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறபொழுது, இடையிடையே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் அதைக் கிண்டலும், கேலியுமாகச் செய்து பேசுகிறபொழுதுதான் ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பெரும்பாலும் இதைப் பற்றி பேசுகிறபொழுது, முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறபொழுது, அக்ரி கிருஷ்ணமூர்த்தி என்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஒருமையிலே 'போடா' 'வாடா' என்றும், (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மேலும் சொன்ன அந்த வார்த்தையை இங்கே சொல்ல முடியாது; வேறு யாரும் சொல்ல முடிந்தால் சொல்லுங்கள். ஆனால், இந்த அவையில் சொல்லக் கூடாத வார்த்தைகளைச் சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்களை தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தி – இது இன்றைக்கு மட்டுமல்ல, தொடர்ந்து அவர் சட்டமன்ற நிகழ்ச்சிக்கு வந்த தினத்திலிருந்தே அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேசிக்கொண்டே இருக்கிறார்.

*முற்பகல் 11–00*

அருகிலே பெண்கள் அமர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பேசச் சொல்லி கேட்டுப் பாருங்கள். சகிக்க முடியாத வார்த்தைகளை அவர் பயன்படுத்திப் பேசுகிறார். ஆகவே, தெருவோரத்திலே நின்றுகொண்டு, சந்தைக் கடையிலே நின்றுகொண்டு மோசமான வார்த்தைகளைப் பேசுகிற, தரம் தாழ்ந்த வார்த்தைகளைப் பேசுகிற நபர்களைப்போல ஒரு சட்டமன்ற உறுப்பினர் இங்கே நடந்துகொள்கிறார் என்று சொன்னால், இந்தச் சட்டமன்றத்தினுடைய மாண்பு, மரியாதை, இதனுடைய பாரம்பரியம், இதனுடைய வரலாறு எல்லாவற்றையுமே குழி தோண்டி புதைத்துவிடுவதா? விவாதம், விவாதம் என்று பேசுகிறபோது அவர்கள் தைரியமாக விவாதிக்க வேண்டும். விவாதத்திற்குரிய பதிலை அமைச்சர்கள் சொல்ல காத்திருக்கிறார்கள். விவாதத்தின்மீது தவறான கருத்துகள் வருகிறபோது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் அதன்மீது கருத்துகளை சொல்லவே கூடாதா? சொல்ல முடியாத நிலை இருக்கிறதா? இந்தச் சட்டமன்றம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரையிலும் அப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளை பதிவு செய்வதற்குரிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டதா இல்லையா என்பதைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளைப் படித்துப் பார்க்காமலேயே அ.தி.மு.க. உறுப்பினர்கள் இங்கே வந்து பேசினால் என்ன செயய முடியும்? ஆகவே, அவர்கள் ஒரேயடியாக எழுந்து கூச்சல் போடுவதும், அது என்னவோ காட்டில் இருக்கிற நரிகள் ஊளையிடுவது போல இங்கே இந்தச் சட்டமன்றத்தைப் பயன்படுத்தினால், என்ன சட்டமன்றம் இது? (மேசையைத் தட்டும் ஒலி) ரொம்ப மோசமான நிலைமைக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறது. இது வன்மையாகக் கண்டிக்கக்கூடியது. இதே போக்கு தொடருமானால், தமிழக சட்டமன்றத்தினுடைய மரபு, இதனுடைய மானம், அண்ணா தி.மு.க. உறுப்பினர்களாலேயே காற்றில் பறக்கவிடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றே குறிப்பிட்டுச் சொன்னது போலவே திரும்பவும் இதைப் பற்றி

அவர்களைக் கூப்பிட்டு கலந்து பேசி, முறையாக, சரியாக விவாதித்து, அவர்கள் இந்த அவையிலே கலந்துகொள்கிறார்களா இல்லையா என்பதை அறிய நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி எங்களையும் அழைத்து வைத்துப் பேச வேண்டும். எப்படி இங்கே நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். ஒருவர் கருத்தை தெரிவிக்கின்றபோது அனைவருமே எழுந்து பேசினால் என்ன சொல்ல முடியும்? நாங்கள் யாராவது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் பேசினால் எங்களை கிண்டல் கேலி, பேசுகிறார்கள் என்று சொன்னால், அப்படி எல்லோரும் பேச ஆரம்பித்தால் என்ன செய்வது? இப்படியே நடந்துகொண்டு இருக்கலாமா இது? எதிர்க்கட்சி, ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாக நடந்துகொள்ள வேண்டாமா? எதிர்க்கட்சியாக தேர்வு செய்த மக்களையே, இந்தத் தமிழக மக்களையே இவர்கள் கிண்டல் செய்கிறார்களா? கேலி செய்கிறார்களா? தமிழக மக்களே இப்போது தவறு செய்துவிட்டோமே, இவர்களை எதிர்க்கட்சியாக உட்கார வைத்துவிட்டோமே என்று வெட்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மேலும் உறுதி செய்வதற்கு அ.தி.மு.க. உறுப்பினர்கள் இங்கே நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். அவர்களை முறைப்படுத்த வேண்டும், சரிபடுத்த வேண்டும். இல்லையென்று சொன்னால், இதே போக்கில் அவர்கள் செயல்படுவார்களானால் எங்களையும் கொஞ்சம் விடுங்கள், நாங்களும் அதன்படி நடந்துகொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நன்மாறன் உட்காருங்கள். திருமதி ராணி வெங்கடேசன் பேசுங்கள். (குறுக்கீடு) நன்மாறன், உட்காருங்கள் ராணி வெங்கடேசன் பேசட்டும். (குறுக்கீடு) அடுத்து பேசலாம். நன்மாறன், உட்காருங்கள்.

**•திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு சட்டசபை நடந்துகொண்டிருக்கும் ஆரம்ப நாளிலிருந்து எந்தப் பிரச்சினை என்றாலும் மாண்புமிகு அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான் தகாத வார்த்தைகள் சொல்வார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பும் மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களை திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் singular வார்த்தையில் பேசினார். பெண்களால் காது கொடுத்துக் கேட்க முடியாத வார்த்தைகளையும் திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். நாங்கள் ஏற்கெனவே எங்களுடைய கொறடா, எங்களுடைய CLP Leader அவர்களிடம் complaint



செய்திருக்கிறோம். பெண்கள், எங்களால் இங்கே உட்கார முடியவில்லை. எங்களுக்கு இடம் மாற்றித் தரும்படி கேட்டோம். அதற்கு எங்கள் தலைவர் சொன்னார், 'நாம் காந்தி வழி வந்தவர்கள், நாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், நாம் கண்டிப்பாக பொறுமையாக இருக்க வேண்டும்' என்று எங்களுக்கு அறிவுரை கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதை, நான் ஒரு நாள் மாண்புமிகு அவைத் தலைவரிடமும் கூறியிருக்கிறேன். நீங்கள், என்ன வார்த்தை என்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள். நான் அதை ஒன்றும் பெரிதுபடுத்த வேண்டாம் என்று நினைத்தேன். தினம் தினம் எங்களால் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. பெண்களின் சார்பாக நான் உங்களிடம் கோரிக்கை வைக்கிறேன். நாங்கள் இந்தச் சபையில் உட்கார வேண்டுமா, வேண்டாமா என்பதைத் தாங்கள்தான் முடிவு செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நாங்கள் எல்லாம் புதியவர்களாக இருந்தாலும், சட்டமன்ற அவை என்பது மிகவும் கட்டுப்பாட்டுக்குட்பட்ட அவை. தமிழக மக்களைப் பாதுகாக்கக்கூடிய, ஜனநாயக மரபுகளை ஏற்றுள்ள அவை. அப்படிப்பட்ட இந்த அவையில், ஒரு சிறிய பிரச்சினையாக இருந்தாலும்கூட, பின்பக்கம் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள், அவர்கள் ஒட்டுமொத்தமாக கூச்சலிடுகின்றபோது பல்வேறு மோசமான, காதுகளில் வாங்க முடியாத வார்த்தைகளை அடிக்கடி உச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் இருவரும் திரும்பிப் பார்த்து திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்களை எச்சரிக்கை செய்துகொண்டிருக்கின்றோம். பலமுறை எச்சரிக்கை செய்திருக்கின்றோம். ஆனால், அவர் கேட்பதில்லை. அவர், நம்முடைய ராணி அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, எதிர் வரிசையில் இருக்கின்ற நம்முடைய தலைவர்கள் பேசுகின்றபோது ** அமைச்சர்கள் பேசினாலும், நான் அதைச் சொல்லக்கூடாது, 'டாய், டேய்' என்று சொல்லிப் பேசுவது. இப்படிப்பட்ட ஒரு மோசமான இழிநிலையாக நடந்துகொள்வதை உண்மையிலேயே நாங்கள் வன்மையாக இந்த நேரத்திலே கண்டிக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*முற்பகல் 11–05*

அதேபோன்று, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் பலமுறை சொல்லி இருக்கின்றோம். அன்றையதினம்கூட அம்மா என்று ஒரு வார்த்தையை உச்சரிக்கின்றபோது, எதிர்வரிசையில் எந்த அம்மா என்று சொல்லி அவர்கள் கேட்டார்கள். அம்மா, அம்மா என்று அடிக்கடி சொல்கின்றார்கள். அதற்காக அவர்கள் திருப்பிக் கேட்டதற்கு, ஒரு மோசமான வார்த்தையை அவர் உச்சரித்துச் சொன்னார். நான் சொன்னேன் உங்களுக்கும் அம்மா இருக்கின்றார்கள், இருக்கின்றவர்கள் அத்தனை பேருக்கும் அம்மா இருக்கிறார்கள். அம்மா என்பதை நீங்கள் உயர்வாகக் கருதித்தான் சொல்கின்றீர்கள். அதே எதிர்தரப்பில் பார்க்கின்றபோது, அவர்களை வேறுவிதமாக நீங்கள் பயன்படுத்திச் சொல்வது தப்பு என்று அவரிடம் நான் சொன்னேன். இப்படி மோசமான முறையில், அவையில் நடந்துகொள்கிறார்கள். ராணி அவர்கள் சொல்வது போன்று, இதற்கு ஒரு சரியான நிலை எடுக்க வேண்டும். என்ன இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலை? தினசரி நாங்கள் பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்று அவர்கள்தான் சொன்னார்கள். ஆனால், பெண்கள் இங்கே முறையாக உட்கார்வதற்கான வழிமுறையே இல்லையென்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் ஒரு பழமொழி உண்டு. 'இருந்தும் கெடுத்தான், இல்லாமலும் கெடுத்தான்' என்று சொல்வார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஆட்சியில் இருக்கிற காலத்திலும், எதிர்க்கட்சிகளை அவதூறாக, உதாசீனமாக ஒரு தோழமை என்கிற முறைகூட இல்லாமல் கருதினார்கள். இப்போது ஆட்சியில் இல்லை. எதிர்க்கட்சியாக வந்து விட்டார்கள். எதிர்க்கட்சியாக வந்த பிறகும் ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் பேசினார் என்றால் அதற்கு ஓர் உள்நோக்கம் கற்பிக்கிற முறையில் நடந்துகொள்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் கூறிய கருத்து ஏற்கெனவே இந்த அவையில் பதிவானது. கோவை போன்ற இடங்களில், பஞ்சாலைகளில் பெண்கள் அடைத்து வைக்கப்படுகிறார்கள் என்று பேசியபோது இல்லையென்று அன்றைக்கு மறுக்கப்பட்டது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களே பேசி, இந்த அவையில் பதிவானதை எடுத்துச் சொல்கிறபோது, அதற்கு வேறு குணம் கற்பிக்கிறார்கள் என்றால், எந்த நினைப்போடு அவைக்கு வருகிறார்கள் என்பதே தெரியவில்லை. இந்தப் போக்கைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





பேரவைத் தலைவர் அவர்களும் உரிய முறையில் அவர்களுக்கு அறிவுறுத்தி, முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு அவர்களை வரச் சொன்ன பிறகும், வம்பாக வெளியில் போகிறார்கள் என்றால், இந்த அவைக்கு வருவதே வெளியில் போவதற்காக, வருவது மாதிரி வந்துவிட்டு, அவையை உதாசீனப்படுத்திவிட்டு செல்கிற இந்த முறையை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாராளுமன்றத்தின் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி ஒன்றைச் சொன்னார். அவையிலே எதிர்க்கட்சியாக இருக்கிற பி.ஜே.பி. ஆளும் கட்சியாகத் தகுதியில்லை என்று எதிர்க்கட்சியாக இருக்கிறது. இப்போதும் அதே முறையில் மோசமாக நடந்தால் எதிர்க்கட்சிக்குரிய தகுதியையும் இழந்துவிடும் என்று அங்கே சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் இப்போதும் அவர்கள், பிரதான எதிர்க்கட்சி என்கிற பெருமையையாவது தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்றால், அதற்குரிய முறையில் நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற அதிமுக. உறுப்பினர்கள், தினந்தோறும் திட்டமிட்டு வருகிறார்கள். இந்த அவையிலே கூச்சல் குழப்பத்தை உண்டாக்க வேண்டும்; ஜனநாயக ரீதியாக ஆக்கபூர்வமாக ஆலோசிக்கிற இந்த மாமன்றத்தில் ஏதாவது இரகளை செய்யவேண்டுமென்று திட்டமிட்டு வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அவர்கள் பேசுகின்ற நேரத்திலேகூட இங்கே கலவரத்தை உண்டாக்குவதற்கு திட்டமிடுவது எங்கள் காதிலேகூட விழுகிறது. இன்று அமைதியான சூழ்நிலையில் ஆரோக்கியமான விவாதம் நல்ல முறையில் நடந்துகொண்டு இருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவரைப் பார்த்து உயர்வாகப் பேசினார். அதற்கு மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம் என்னைப் பார்த்துக்கூட நகைத்துக்கொண்டு, மரியாதையாக–அவர் அதை தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. மரியாதையோடு அது இருப்பதாகவே கருதினார். இப்படி ஆக்கபூர்வமாக மரியாதைக் கொடுத்து பேசுகின்ற நேரத்தில்,

திட்டமிட்டு கலவரத்தை உண்டாக்குவதற்காக, ஒரு சிலரைத் தூண்டி விடுகிறார்கள். குறிப்பாக பெண் உறுப்பினர்கள் சொன்ன மாதிரி, திரு. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி. தினந்தோறும் பார்க்கிறோம். எங்கள் காதுகளில் அவர்களே சொல்கிறார்கள். இந்தக் கலவரத்தைத் தூண்டிய அக்ரி கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களைப் பார்த்து ஒருமையிலே பேசுவது. —வாடா, அதுமட்டுமல்ல ரொம்ப அவமானமாக. **இதை நான் பதிவு செய்யக் கூடாது என்று விரும்பினாலும்கூட சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அவரை ஒருமையிலே பேசி டேய் உன்னை ** இன்னும் நிறைய பேசினார். பக்கத்திலே அங்கே இருந்து பேசியவுடனே—முன்னாள் அமைச்சர்கள், தினந்தோறும் பார்க்கிறோம். சில முன்னாள் அமைச்சர்கள், பொள்ளாச்சி ஜெயராமன், வைத்திலிங்கம் போன்றவர்கள் எல்லாம் திட்டமிட்டு பேசுகிறார்கள். இன்றைக்கு நடவடிக்கையைப் பார்த்தீர்கள் என்றால், அங்கே இருந்து ஓடி வருகிறார்கள். ஓடி இந்த மேஜையைத் தாண்டுவார்கள் போலத் தெரிகிறது. காவலர்கள் இல்லையென்று சொன்னால், மேஜையைத் தாண்டிக் குதித்து கலவரத்தில் ஈடுபடுவார்கள். இவர்கள் எல்லாம் எப்படி முன்னாள் அமைச்சர்களாக இருந்தார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே, இப்படிக் கூச்சலிடுவது தொடர் நடவடிக்கையாகிவிட்டது.

இன்னொன்றையும் சொன்னார்கள் இங்கே. முன்னாள் அமைச்சர் நின்று கொண்டு பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்துச் சொன்னார். இரண்டு மூன்று பேர் சொன்னார்கள். பேரவைத் தலைவர் அவர்களுக்கு மாடு மேய்ப்பதற்குக்கூட தகுதியில்லை; ரொம்ப வருத்தமாக இருக்கிறது. எவ்வளவு கொச்சைப்படுத்துவது?

*முற்பகல் 11–10*

இந்தப் பேரவையை வழி நடத்தக்கூடிய மாண்பு நிறைந்த ஒரு தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதில்கூட நீங்கள் கண்ணியத்தோடு வெளியேறினீர்கள். தீர்மானம் நிறைவேற்றுகிற வரையில் நீங்கள் வரவில்லை. தீர்மானம் வெற்றி பெற்ற பிறகு, நமக்கு ஆதரவாக, உங்களுக்கு ஆதரவாக வெற்றி பெற்ற பிறகு வந்தீர்கள். இவ்வளவு கண்ணியமிக்க தலைவர், ஆர்வத்தோடு நீங்கள் இந்த மாமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். பேசுவதற்கு அவர்களுக்கு அதிகமாக வாய்ப்பினையும் கொடுக்கிறீர்கள். அப்படிக் கொடுக்கின்ற நேரத்தில், எல்லோரும் சத்தம் போடுவது, இங்கே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





இருக்கிற தோழமைக் கட்சித் தலைவர்களைப் பார்த்து. பேச எழுந்தால் போதும் ** என்று சொல்கிறார்கள். நாங்கள் ** என்பது பற்றி வருத்தப்படவில்லை. **. அதுகூட இல்லை. ஆனால், இங்கே அ.தி.மு.க.–விலே வரக்கூடியவர்கள், நீங்கள் பார்த்தால் சில நேரங்களில் **. எல்லோரும் எழுந்து ** இந்த மாமன்றத்தை சிந்தரித்துக் கொண்டிருக்கிறார்கள். இது வேதனையாக இருக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் கடுமையாக நடவடிக்கை எடுங்கள். இங்கே அலுவல் ஆய்வுக் குழுவிலே அவர்களை அழைத்துப் பேசி, நீங்கள் முறையாக நடந்துகொள்ள வேண்டும் என்று ஆலோசனை சொல்லுங்கள். முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு வேண்டுகோளும் விடுத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வேண்டுகோள் விடுத்தும், வெளியேறி இருப்பது வருத்தம் அளிக்கிறது என்பதைச் சொல்லி, அவர்களாலே கட்டுப்படுத்த முடியவில்லை; துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுபோன்று நடக்கக் கூடாது. தொடர் நடவடிக்கையாக இருக்கக் கூடாது என்பதை இங்கே எடுத்துச் சொல்லி, இந்த மாமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றம், இனியாவது அமைதியாக நடைபெறுவதற்கு எல்லா வகையிலும் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்து, பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கட்டுப்படுத்துங்கள் என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோ.கா. மணி அவர்கள் கூறிய ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பா.ம.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் கோ.க. மணி அவர்களும், அதைப்போலவே இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் சிவபுண்ணியம் அவர்களும், C.P.M. கட்சித் தலைவர் நன்மாறன் அவர்களும், மகளிராக இருந்து கொண்டு இந்த அவையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ராணி வெங்கடேசன் அவர்களும், அதைப்போல சகோதரி பத்மாவதி அவர்களும் இந்த சபையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் எப்படி எல்லாம் நடந்துகொள்கிறார்கள், அவர்கள் பேசுகின்ற பேச்சுகள் எல்லாம் எங்கள் காதுகளிலே விழும்போது நாங்கள் எவ்வளவு வேதனைப் படுகிறோம் என்பதையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இங்கே 61 பேர் அ.தி.மு.க.—வைச் சேர்ந்தவர்கள் இருந்தாலும்கூட, இந்தக் கலவரத்தைத் தூண்டிவிடுவதும், தினந்தோறும் தோழமைக் கட்சிகளையும், ஆளுங்கட்சியையும் பார்த்து தவறான வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் மாண்புமிகு உறுப்பினர் அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான். இதை அனைவரும் இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனவே,

"இன்றையதினம் பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்தும், பேரவையின் விதிகளைத் தொடர்ந்து முறையற்று பயன்படுத்துவதாலும், ஆபாச மொழியில் பேசுவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உள் விதி (2)—ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திருவாளர் அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தொடர்ந்து இக்கூட்டம் முழுவதும் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும்" என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரத் துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்தக் கூட்டத்தொடர் முடிகிற வரை எஞ்சிய நாட்களுக்கு அவையை விட்டு நீக்கி வைக்கப்படுகிறார்.*

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

### (அ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல் —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.*



முற்பகல் 11–15

**திரு. ஆர். சிவானந்தம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்குத் தேர்தலில் போட்டியிட மூன்று முறை வாய்ப்பளித்து இரண்டாம் முறையாக வெற்றி பெறச் செய்து பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த எங்கள் அன்புத் தலைவர், தமிழகத்தின் பட்டினிச் சாவுகளை ஒழித்து, இரண்டு ரூபாய்க்கு 1 கிலோ அரிசி திட்டத்தை வழங்கி, மக்கள் அனைவராலும் போற்றப்படும் விவசாயிகளின் பாதுகாவலர், நெசவாளர்களின் குல விளக்கு, தொழிலாளர்களின் தோழன், தமிழினப் பாதுகாவலர், எங்கள் குடும்பத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களே, நடைபெற்ற தேர்தலில் சுட்டெரிக்கும் வெய்யிலின் கொடுமையையும் பொருட்படுத்தாமல், பசியும் பாராமல், பகல் 2–00 மணிக்கு கடைசி நாள் பொதுக் கூட்டத்தில் பேசி, என் வெற்றியை உறுதி செய்த தமிழகத்தின் விடிவெள்ளி, இளைஞர்களின் எழுச்சி ஞாயிறே, வருங்கால தமிழக வரலாறு படைக்கும் எங்கள் தளபதி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) என் வெற்றிக்காக என்னை அறிமுகப்படுத்தி முதல் கூட்டத்தில் பேசி என்னை வெற்றிபெறச் செய்த பேராசிரியர் பெருந்தகை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே, என்னை அரசியலில் ஆளாக்கி, அரசியலில் என்னைப் பாதுகாத்து வரும் கழகப் பொருளாளர், மாண்புமிகு மின் துறை அமைச்சர், அண்ணன் ஆற்காட்டார் அவர்களே, தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, தன் தொகுதி பற்றிக் கவலைப்படாமல் மாவட்டத்தினுடைய கூட்டணிக் கட்சிகள் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்றும், குறிப்பாக ஆரணி தொகுதியின் வெற்றியை தன் வெற்றியாகக் கருதி, தேர்தல் காலத்தில் துரோகிகள் இந்தக் கட்சியைக் காட்டிக் கொடுத்துவிட்டு அ.தி.மு.க. சென்றாலும், 'நான் இருக்கிறேன், உன்னை வெற்றிபெறச் செய்வேன்' என்று சவால்விட்டு, துரோகிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, என்னை வெற்றிபெறச் செய்து, என் தொகுதி மக்களுடைய தேவைகளையும், மாவட்ட வளர்ச்சியிலும், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற, எங்கள் ஆற்றல்மிகு மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களே, என் வெற்றிக்காக ஆரணி தொகுதியின் வாக்குகளைச் சேகரித்த மத்திய அமைச்சர், தயாநிதி மாறன் அவர்களே, அனைத்துக் கட்சித் தலைவர்களே, தோழர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, என்னை வெற்றிபெறச் செய்த என் தொகுதி*

வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, கைத்தறித் துறை ஆகிய துறைகளின் மானியத்தில் பேசுவதில் பெருமை அடைகிறேன். 'செய்யும் தொழிலை சீர்தூக்கி நோக்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' என்பர். ஒரு மனிதன் வாழ்வுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தேவையாகும். இம்மூன்றையும், இல்லாதவர்களுக்குக் கொடுப்பதுதான் அரசு. இந்த மூன்றையும் உள்ளடக்கி, அனைவருக்கும் கிடைத்திட கலைஞர் முதல்வர் படைத்திட்ட படைப்புதான் திருத்திய நிதிநிலை அறிக்கை.

இதிலே மானம் காப்பது உடை. இதை உற்பத்தி செய்கின்ற தொழில் நெசவுத் தொழில். விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியத் தொழிலாக விளங்குவது நெசவுத் தொழில். கைத்தறி நெசவு பாரம்பரிய கலையாக விளங்குகிறது. விசைத்தறியில் இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழகம் விளங்குகிறது.

இந்த நெசவுத் தொழிலை செய்கின்ற நெசவாளர் பெருமக்களின் வாழ்வில் சோதனைகள் வருகின்ற போதெல்லாம் கைக்கொடுத்து தூக்கி விடக்கூடியவர்தான் கலைஞர். ஒரு காலகட்டத்தில், நெசவாளர் பெருமக்கள் உற்பத்தி செய்த துணிகள் விற்பனையின்றி தேங்கிக் கிடந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும், கழக முன்னணித் தலைவர்கள் எல்லாம் கைத்தறித் துணிகளைத் தோளில் சுமந்து விற்பனையைத் தொடங்கினார்கள். அனைவரும் கைத்தறித் துணிகளை உடுத்துகின்ற நிலையை ஏற்படுத்தி, நெசவாளர் பெருமக்களின் வாழ்வில் ஒளியேற்றியவர்கள் அண்ணாவும், கலைஞர் அவர்களும்.

முன்னாள் முதல்வர்கூட, 10,000 பட்டுச் சேலைகளை வாங்கி, அந்த வழக்கிலே அது கண்டுபிடிக்கப்பட்டு, அந்த விதத்தில் உதவி இருக்கிறார் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நெசவாளர் பெருமக்களின் துயர்களை நிரந்தரமாகப் போக்க கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற காலங்களில்தான் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம், கூட்டுறவு விற்பனை சங்கம், கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றை வளர்ச்சி பெறச் செய்தார். அதேபோன்று, தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம், தறிக்கூடம் அமைக்கும் திட்டம், ஆயுள் காப்பீட்டுத் திட்டம், நெசவாளர்களின் குழந்தைகள் – கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவித் திட்டம்,



மருத்துவ உதவித் திட்டம், தறிகள வாங்க மாநில, மத்திய அரசுகளுடைய உதவித் திட்டம், நெசவாளர் சேமிப்புத் திட்டம் ஆகிய திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதை நான் வரவேற்கிறேன்.

உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள், குமாரபாளையம், ஆண்டிபட்டி மற்றும் பல்லடம் ஆகிய 3 இடங்களில் பூங்காக்கள் அமைப்பதை வரவேற்கிறேன். இதேபோல் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலே தொழில்நுட்ப நெசவுப் பூங்காவினை அமைக்க வேண்டுகிறேன்.

மூடப்பட்ட நூற்பாலைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுகிறேன். ஆரணி பகுதியிலே பட்டு உற்பத்தியாளர் சங்கங்கள் அதிகம் உள்ளதால், ஆரணியில் உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுகிறேன். நெசவாளர்களுக்கு உதவும் வகையில் கச்சாப் பட்டு உற்பத்தி மையம், கச்சாப் பட்டு விற்பனை மையம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அ.தி.மு.க.வை சேர்ந்தவர்கள் தாங்கள்தான் நெசவாளர்களுக்கு மிகவும் வேண்டியவர்கள் என்று இங்கே தம்பட்டம் அடிக்கிறார்கள். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் 1991–96 வரை நடைபெற்ற ஆட்சியில் அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள, நெசவாளர்கள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, நெசவாளர்கள் பங்குத் தொகை வசூலித்து, அரசின் உதவி, கடன் ஆகியவற்றைப் பெற்று அனைத்தையும் அவர்களே கொள்ளையடித்து, அவர்கள் நடத்திய அனைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு மூடுவிழா செய்து, நெசவாளர்களை ஏமாற்றியவர்கள் அவர்கள். உதாரணத்திற்கு, ஆரணி பகுதியில் 22 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் கொள்ளையடித்துவிட்டுதான் மூடியிருக்கிறார்கள். இன்று நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை, காணாமல் போய்விட்டன. அவர்கள் ஆரம்பித்த சங்கங்களை அவர்களே மூடிவிட்டார்கள்.

முற்பகல் 11-20

இப்பொழுது இருப்பது, தி.மு.கழக கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்கள் மட்டுமே. அ.தி.மு.க.வினர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தலை நடத்தாமல், அவர்கள் கட்சிக்காரர்களின் ஆதிக்கத்தில் வைத்து அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலும் பட்டு கொள்முதல் செய்வதிலே கிலோவுக்கு ரூ.100/– கமிஷன், ஜரிகைக் கொள்முதல் செய்வதிலே

[திரு. ஆர். சிவானந்தம்] [2006 ஆகஸ்ட் 12

கமிஷன் பெற்று, தரமில்லாத பட்டு ஜரிகை ஆகியவற்றை கொள்முதல் செய்து சீரழித்துள்ளார்கள்.

காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தலில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள், 'நான் ஆணையிடுகிறேன், நெசவாளர்களுக்கு, தனியார் உற்பத்தியாளர்களுக்கு 30 சதவிகிதம் கூலி உயர்வு தரப்படும்' என்று கூறி, நெசவாள மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றவர், அவர்கள் ஆட்சியில் இருந்தவரை அந்தக் கூலி உயர்த்தித் தரப்படவேயில்லை.

2001–2006 வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில், நெசவுத் தொழில் சீரழிந்து உரிய கூலி கிடைக்கவில்லை. தொழில் உத்தரவாதம் இல்லை. எங்கள் பகுதியில் தரமான பட்டு கொள்முதல் இல்லை. உற்பத்தி செய்த சேலைகள் தரமில்லை. இன்னமும் தேங்கிக் கிடக்கின்றன. நெசவாளர்களுக்குத் தொழில் கிடைக்கவில்லை. நெசவாளர்களின் நிலையை அரசுக்கு உணர்த்த தி.மு.கழகத்தின் சார்பில் கஞ்சித் தொட்டிகள் ஆங்காங்கே தொடங்கியபொழுது, கஞ்சித் தொட்டிமூலம் வறுமையில் உள்ள நெசவாளர்கள் கஞ்சி பெற்று சாப்பிடுகின்ற நேரத்தில், அதன் எதிரே பிரியாணியை சாப்பிட்டு, நெசவாளர்களைக் கொச்சைப்படுத்தி, அவர்களை அவமானப்படுத்தியது அந்த அ.தி.மு.க. அரசு.

கலைஞர் அவர்கள், இந்தத் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி, கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம், இரண்டு மாதத்திற்கு ஒருமுறை 100 யூனிட்டுகள், விசைத்தறிகளுக்கு இரணடு மாதத்திற்கு ஒருமுறை 500 யூனிட்டுகள் இலவசமாக மின்சாரம் வழங்கி, அவர்களின் வீடுகளிலும், வாழ்விலும் ஒளியேற்றியுள்ளார். என் தொகுதி நெசவாளப் பெருமக்களின் சார்பில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் பகுதியில் விவசாயத்திற்கு அடுத்தாற்போல, பட்டு நெசவுத் தொழில் முக்கியம் வாய்ந்தது. இந்தப் பட்டு, தமிழகம், கர்நாடகா, சைனா ஆகிய இடங்களிலிருந்து கச்சாப்பட்டு கொண்டுவந்து, அவை முறுக்கேற்றப்பட்டு, தறிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இந்தத் தொழிலில் சுமார் 200–க்கும் மேற்பட்ட தொழிலகங்கள் உள்ளன. இதில் சுமார் 10,000 பேர் பணியாற்றுகிறார்கள். இப்பொழுது இந்தத் தொழிலாளர்கள், பட்டு விலை ஏற்றத்தாலும், தொழில் முடக்கத்தாலும் வேலை இல்லாமல், வாழ்வுககு வழியில்லாமல் தவிக்கிறார்கள். எனவே,



2006 ஆகஸ்ட் 12] [திரு. ஆர். சிவானந்தம்]

கைத்தறியின் ஓர் அங்கமான பட்டு முறுக்குத் தொழிலுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வேண்டுகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லில், கல், குறுணை, கருப்பு அரிசி ஆகியவற்றை நீக்கித் தரமான அரிசியாக தயார் செய்யும் அரிசி ஆலைகள் சுமார் நூறுக்கும் மேற்பட்ட நவீன அரிசி ஆலைகள் ஆரணி தொகுதியில் உள்ளன. இவற்றிற்கு இலவச மின்சாரம் கேட்கவில்லை. ஆனால், இவர்கள் பயன்படுத்தும் மின்சாரக் கட்டணம், tariff–ன் விலையைக் குறைத்து கொடுக்க வேண்டும் என்று அரிசி ஆலை உரிமையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. தமிழக முதல்வர் அவர்கள் கருணை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி தொகுதியிலும், அந்தத் தொகுதியைச் சுற்றியுள்ள ஆற்காடு, பெரணமல்லூர், போளூர், செய்யாறு, வந்தவாசி ஆகிய தொகுதிகளில், சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நெசவுத் தொழிலை செய்து வருகின்றனர். இவர்களின் வாழ்வுக்குத் தொடர்ந்து தொழில் உறுதி வழங்கும் வகையில், ஆரணியில் பட்டு விற்பனை மையமும், அதேபோல் தனியார் உற்பத்தி செய்யும் சேலைகளையும் கோ–ஆப்டெக்ஸ் மூலம் தரம்பார்த்து கொள்முதல் செய்யவும் ஆணையிட வேண்டுகிறேன். பட்டுச் சேலையின் ஜரிகைத் தரத்தை கணினி மூலம் உடனே அறிய காஞ்சிபுரத்தில் உள்ளது போன்று, ஜரிகை பரிசோதனை நிலையம் ஒன்றை ஆரணி தொகுதியில் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

பட்டுச் சேலைகள் கொள்முதல் செய்யும் Co-optex Warehouse ஆரணியில் இருந்தது. அதை கடந்த கால ஆட்சியில், 2005 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்திற்கு மாற்றியுள்ளார்கள். இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னலுக்கு ஆளாகியிருக்கின்றன. எனவே, Co-optex Warehouse முன்பு போலவே ஆரணியில் அமைக்க வேண்டுகிறேன்.

கடந்த கால ஆட்சியில் TANSILK, அண்ணா பட்டு பரிமாற்றம் போன்ற நிறுவனங்களை அதில் உள்ள அதிகாரிகள் சீரழித்துள்ளனர். அவற்றை ஆய்வு செய்து, சரி செய்ய வேண்டுகிறேன். சுய உதவிக் குழுக்கள்மூலம் உற்பத்தி செய்யும் பட்டுச் சேலைகளை கோ–ஆப்டெக்ஸ்மூலம் கொள்முதல் செய்ய உத்தரவிட வேண்டுகிறேன்.

என் தொகுதியின் மிக முக்கியத் தேவைகள், ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்திற்கு முன்பிருந்த, ஜாகிர் காலத்தில் கட்டப்பட்ட, குதிரை இலாயங்களிலே இயங்கி வரும், நீதிமன்றங்களின் கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து பல பகுதிகள் இடிந்து

விழுந்துள்ளன. பொதுப் பணித் துறையினரால் அவ்வப்பொழுது repair செய்யப்பட்டு வந்துள்ளது. 8 ஆண்டுகளுக்கு முன்பே P.W.D. மூலமாக இந்தக் கட்டடங்களை இடித்தாக வேண்டும் என்று சான்றிதழ் வழங்கியுள்ளார்கள். நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் உயிருக்குப் பயந்துகொண்டே, எப்போது இடிந்து விழுந்து விடுமோ என்ற அச்சத்துடன் கடமையாற்றுகிறார்கள். இந்த நிலையிலே உள்ள கட்டடத்தையும், குதிரை இலாயத்திலேயே இயங்கிவரும் பத்திரப் பதிவு அலுவலகம், கருவூலம், பொதுப் பணித் துறை அலுவலகங்கள், கல்வித் துறை A.E.O. அலுவலகங்கள், வருவாய்த் துறை ஆய்வாளர் அலுவலகம், இந்த அனைத்து அலுவலகக் கட்டடங்களுக்குப் பதிலாக உடனடியாக தமிழக முதல்வர் அவர்கள் அருள்கூர்ந்து நிதி ஒதுக்கீடு செய்து, புதியக் கட்டடங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

நெடுஞ்சாலைத் துறையின்மூலம் ஆரணி தொகுதியை மழைக்காலங்களில் இரண்டாகப் பிரிக்கும் கமண்டல நாகநதியின் குறுக்கே, ஒண்ணுபுரம் அத்திமலைப்பட்டு அருகேயும், காமக்கூர் குன்னத்தூர் அருகேயும், கல்பூண்டி, இலாடம்பாடி அருகேயும் பாலங்கள் அமைத்து போக்குவரத்துக்கு வழி செய்துதர வேண்டுகிறேன்.

பொதுப் பணித் துறையின் மூலமாய் கட்டப்பட்டுள்ள செண்பகத் தோப்பு அணையின், ஆரணி தொகுதி ஆயக்கட்டு பாய்ச்சல் நில ஏரிகள நிரம்பி, 3 போக விளைச்சல்கள் ஏற்படுத்தும் வகையில், கமண்டல நாகநதியின் குறுக்கே குண்ணத்தூர், காமக்கூர் அருகேயும், இரும்பேடு, பையூர் ஆகிய இடங்களில் தடுப்பணைகளைக் கட்டி, 3 போகம் விளைய, முப்பதுக்கும் மேற்பட்ட அந்த ஏரிகள் நிரம்ப வழிசெய்யுமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலன். தொழிலாளர் நலத் துறையின்மூலம் எடுக்கப்படும் திட்டங்களான குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டம், தொழிற் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு உருவாக்குதல், தொழிலாளர்களின் மருத்துவத் திட்டம், தொழிலாளர் குழந்தைகளின் கல்வி உதவித் திட்டம், தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், விபத்து காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்குவதை வரவேற்று, முதல்வர் கலைஞர் அவர்கள் தொழிற் துறையில் தமிழகத்திற்கு முதலிடத்தைப் பெற்றுத் தருவார் என்று நான் பாராட்டுகிறேன்.



சென்னை தியாகராய நகர் பகுதிகளும், புரசைவாக்கம் பகுதிகளும், பெரிய வியாபார ஸ்தலங்களாக உள்ளன. இங்குள்ள கடைகளிலும், நிறுவனங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, வாரம் ஒருநாள் விடுமுறை விடுவதில்லை. மாதம் பூராவும் உழைக்கின்றார்கள். அதிகாரிகளும் கண்டுகொள்வதே இல்லை. இந்த நிலையை மாற்றி, ஞாயிற்றுக்கிழமை விடுமுறைகளில் கடை திறக்க வேண்டுமானால், வாரத்தில் ஏதாவது ஒரு நாள் விடுமுறை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி, அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களையெல்லாம் உருவாக்கி, வளர்த்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களை நினைவுகூர்ந்து, இப்பொழுது எங்களையெல்லாம் வழி நடத்திச் செல்கின்ற, எங்களுக்கு எல்லாமும் எல்லாமாய் இருக்கின்ற எங்களுடைய மத்திய அமைச்சர் மாண்புமிகு அன்புத் தலைவர், மக்கள் தலைவர் ஜி.கே. வாசன் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) நான் இரண்டாவது முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு எல்லா வகையிலும் உதவிபுரிந்த தமிழினத்தினுடைய தலைவர், தமிழக மக்களுடைய தலைவர், தாழ்த்தப்பட்ட மக்களுடைய தலைவர், பாதுகாவலர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

முதலில், நேற்று சிறப்பாக பாராட்டுகின்ற வகையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள், இங்கே பல நல்ல அறிவிப்புகளைத் தந்து தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்தினார்கள். அவர்களுக்கும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் ஆட்சியிலிருந்தபோது, தேயிலைத் தோட்டத்

தொழிலாளர்களுக்கு ஒரு நாள் கூலி 26 ரூபாய் 85 பைசாவாக இருந்தது. இடையிலே 2001–லே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை நசுக்குகின்ற வகையில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடம் ஒரு நாளைக்கு 5 ரூபாய் என்று நிர்வாகம் பிடித்தம் செய்தது. நிர்வாகம் 5 ரூபாய் பிடித்தம் செய்தபோது, வால்பாறையிலே மிகப் பெரிய போராட்டங்களும், மறியலும் நடைபெற்று, நூற்றுக்கணக்கிலே சிறைக்குச் சென்றார்கள். அந்த நேரத்தில், நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களிடத்திலே கூறினேன். வால்பாறைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, நியாயமாகக் கிடைக்க வேண்டிய சம்பளம் 86 ரூபாய் 20 பைசா. சம்பள உயர்வுகூட கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால், கொடுத்து வந்த சம்பளத்தையே பிடித்துக்கொண்டார்கள். இது நியாயமல்ல, தர்மமல்ல, ஆகவே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீங்கள் நியாயமான சம்பளம் தாருங்கள் என்று இந்தச் சட்டமன்றத்திலே நான் பலமுறை வலியுறுத்தியபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-30

நான் சட்டமன்றத்திலே பேசி, பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறியபோது, பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார்கள். ஆனால், பேச்சுவார்த்தை தோல்வியடைந்துவிட்டது என்று சொல்லி, அப்பொழுதிருந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. வது. நடராஜன் அவர்கள், யாருக்கும் தெரியாமல், எந்தவிதமான எச்சரிக்கையும் செய்யாமல், நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டார்கள். மீண்டும் நான் இந்த அவையிலே சொல்லி, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது தவறு, நீதிமன்றத்திலே எப்பொழுது வழக்கு முடியும்? தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எப்பொழுது நியாயமான சம்பளம் கிடைக்கும்? ஆகவே, இது நியாயம் அல்ல. சிறப்பு நீதிமன்றத்தைத் தாருங்கள், ஆறு மாதத்திலே தீர்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று கூறினேன். ஆனால், சிறப்பு நீதிமன்றத்தை நியமித்து, அந்தச் சிறப்பு நீதிமன்றம் கடந்த 4 வருடமாக செயலிழந்து கிடக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வருத்தத்துடன சொல்லிக்கொள்கிறேன். 4 வருடத்தில், ஒரேயொரு சாட்சியை மட்டும் நிர்வாகத் தரப்பிலே விசாரிப்பதற்கு, 3½ ஆண்டுகள் எடுத்துக்கொண்டார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்கு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்க வேண்டும் என்று சொல்லி, மீண்டும் இந்த அவையிலே நான் போராடியபோது, வாதாடியபோது, மாண்புமிகு முன்னாள் முதல்வர் அதை காதிலே வாங்கிக்கொள்ளவில்லை. அதனால், வால்பாறையிலே நான் மிகப் பெரிய ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினேன், வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்க வேண்டும் என்று சொல்லி, என்னுடைய தலைமையில் கொட்டுகிற மழையில், 5,000 பேர்கள் அங்கே உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களும் அதைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. காதில் வாங்கவில்லை. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்குப் பிறகு, வேறு வழியின்றி வால்பாறையில் மிகப் பெரிய ஒரு மறியல் போராட்டத்தை நடத்தினேன். சுமார் 7,000 பேர்கள் அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய எம்.எல்.ஏ., அன்று இருந்த எம்எல்ஏ. திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் வால்பாறைக்கு வந்தார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களும், குன்னூர் எம்.எல்.ஏ. திரு. கந்தசாமி அவர்களும் அங்கே வந்து கலந்துகொண்டார்கள்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய கூலி 90 ரூபாய். அந்த 90 ரூபாயையும் கொடுக்க மறுத்துவிட்டு, 10 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்பொழுது அதே 76 ரூபாய் 85 பைசா அதே சம்பளம், அதே கூலி. ஆனால், 16 கிலோ பறிப்பதற்குப் பதிலாக, 28 கிலோ தேயிலை பறிக்க வைக்கின்ற ஒரு நிலையை நிர்வாகமும், தொழிற்சங்கத் தலைவர்களும் அங்கே ஏற்படுத்தினார்கள். அந்த ஒப்பந்தத்தை எதிர்த்துதான் அங்கே நான் மிகப் பெரிய ஒரு மறியல் போராட்டத்தை நடத்தினேன். அந்த மறியல் போராட்டத்தில், 7,000 பேர்களிலே பெண்கள் மட்டும் 4,000 பேர்கள் அங்கே கலந்து கொண்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

7,000 பேர்கள் கலந்து கொண்டதற்குப் பிறகு, அந்த மாபெரும் மறியல் போராட்டம் மிகப் பெரிய வெற்றியடைந்ததற்குப் பிறகு, அரசு இயந்திரங்கள் எல்லாம் முடுக்கிவிடப்பட்டன, வேன்கள், பஸ்கள், லாரிகள், கார்கள் அத்தனையும் அந்த மறியல் போராட்டத்தின்போது தடை செய்யப்பட்டன. ஆனாலும், பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 12 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் என்று சொல்லி, அங்கே நடந்தே வந்து, அந்த மறியல் போராட்டத்திலே கலந்து கொண்டு, அந்த மறியல் போராட்டத்தை வெற்றிபெறச் செய்தார்கள். அதற்குப் பிறகுதான், நிர்வாகம் நியாயமான ஒரு பேச்சுவார்த்தைக்கு வர ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். நான் நிர்வாகத்தையும் அழைத்தேன், தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்தேன். ஏற்கெனவே ஒப்பந்தத்திலே கையெழுத்துப்போட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் பிறகு பின்வாங்கிக் கொண்டார்கள். நாங்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கேட்கின்றோம். ஆகவே, நீங்கள் நிர்வாகத்திடம் சம்பளத்தைப் பெற்றுத் தரவோ, கேட்டு வாங்கவோ எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லி, அந்தத் தொழிற்சங்கத் தலைவர்களும் அந்தக் கூட்டத்திலே வந்து கலந்து கொண்டார்கள். ஆனாலும், நிர்வாகம் பேச்சுவார்த்தை நடத்தி சம்பளத்தை உயர்வு செய்கின்ற நேரத்தில் தேர்தல் வந்துவிட்டது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய வாழ்வுக்காக, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள்தான் நல்ல முடிவினை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அய்யா அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள்தான் இந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்ற மேதகு ஆளுநர் உரையிலே பேசும்போது நான் குறிப்பிட்டேன்.



*முற்பகல் 11-35*

மேதகு ஆளுநர் உரை மீதான விவாதத்திலே குறிப்பிட்டவுடன், அதை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் ஏற்றுக்கொண்டு, தமிழகத்தினுடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை கோவைக்கு அனுப்பினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 5 ஆண்டுக் காலத்தில் ஒரேயொரு முறைகூட கோவையிலே இப்படி ஒரு பேச்சுவார்த்தை நடந்ததில்லை; தமிழ்நாட்டிலும் இப்படி ஒரு பேச்சுவார்த்தை நடைபெற்றதில்லை என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய தலைவர், தமிழினத்தினுடைய தலைவர், தொழிலாளர்களுடைய தலைவர், மாண்புமிகு கலைஞர் ஐயா அவர்கள்தான், தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடம் அந்தத் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களினுடைய பிரச்சினையை முடித்துத் தாருங்கள் என்று சொல்லி, கோவைக்கு அனுப்பி வைத்தார்கள். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் கோவைக்கு வந்து, மிகப் பெரிய ஓர் ஆய்வை நடத்தினார்கள். அதிகாரிகள் எல்லாம் கலந்துகொண்டார்கள். அந்தக் கூட்டத்திலே நடந்த ஒரு சம்பவத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் நேர்மையாகவும், நியாயமாகவும் அந்த ஆய்வை நடத்தினார்கள். அந்த ஆய்வுக் கூட்டத்திலே தொழிற் சங்கத் தலைவர்களிடத்திலும், நிர்வாகத்திடமும் நேரடியாகக் கேட்டார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லாம், ஏற்கெனவே தொழிலாளர்களுக்கு எதிராக கையொப்பம் போட்ட அந்தத் தொழிற் சங்கத் தலைவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாக வந்து, அந்தக் கூட்டத்திலே நாங்கள் கையெழுத்துப் போட்டது தவறுதான்; தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீங்கள் நியாயமான சம்பளத்தைப் பெற்றுத் தாருங்கள்; ஒரு நாள் கூலியாக 100 ரூபாயைப் பெற்றுத் தருவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லி, இப்போது இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத் தொழிற் சங்கத் தலைவரும், அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் அன்று வாக்குறுதி தந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக்

கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, அங்கே தேயிலைத் தோட்டத் தொழிற் சங்கத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்; நிர்வாகமும் சம்பளத்தை உயர்த்தித் தருவதற்கு இப்போது தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

சென்ற 5 ஆண்டுக் காலத்தில், 5 ஆண்டுகளும் இந்தச் சட்டமன்றத்திலே நான் கூக்குரலிட்டேன், கதறினேன், கெஞ்சினேன், போராடினேன். மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வரிடத்திலே, 5 நிமிடங்கள் அந்த நிர்வாகத்தையும், தொழிற் சங்கத் தலைவர்களையும் நீங்கள் அழைத்துப் பேசுங்கள்; நியாயமான சம்பளத்தைப் பெற்றுத் தாருங்கள் என்று இந்த அவையிலே பல முறை கத்தினேன். அது அவர்களுடைய காதிலே கேட்கவில்லை. அவர்கள் அதைக் காதிலே வாங்கிக்கொள்ளவில்லை. நேரடியாக இதே அவையிலே, முன்னாள் முதல்வர் உட்கார்ந்திருந்த இடத்திலே, 10 முறை நான் மனுவைக் கொண்டுபோய் கொடுத்தேன். அப்படி 10 முறை மனுவைக் கொடுத்தும், அதன்மீது அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. கடைசியாகச் சொன்னேன், மாண்புமிகு முன்னாள் முதல்வரிடத்திலே, நேரடியாக இந்த அவையிலே அவர் இருக்கின்றபோது சொன்னேன். 'மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டீர்கள்; தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு துரோகம் விளைவித்துவிட்டீர்கள்; தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வருத்தப்படும்படி செய்துவிட்டீர்கள்; அவர்கள் வருத்தம் சும்மா விடாது' என்று இந்த அவையிலேயே பகிரங்கமாக, நேருக்கு நேர் அவர் முன்னிலையிலே, அவரிடத்திலே நான் பேசியபோது, அந்த நேரத்தில் மட்டும் சரியாக 6 அமைச்சர்கள் எனக்கு எழுந்து பதில் கூறினார்கள். என் ஒருவருக்கு — அவைக் குறிப்பைக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய ஒரேயொருவருடைய கேள்விக்கு 6 அமைச்சர்கள், at a time, ஒரே நேரத்தில் குறுக்கீடு செய்து, பதில்களைக் கூறினார்கள். கடைசியாக முதலமைச்சர் எழுந்தார். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எழுந்தார்கள். அவர், 'தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குகிறேன், குறைந்தபட்சக் கூலியை அறிவிக்கிறேன்' என்று சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அவர்கள் அதைப் பற்றிச் சொல்லவில்லை. அவர் சொன்னது இந்த அவைக் குறிப்பிலே இருக்கிறது. அவர் சொன்னார். 'சிறப்பு நீதிமன்றத்தைக் கேட்டீர்கள். சிறப்பு நீதிமன்றம் இன்னும் முடிவிற்கு வரவில்லை, சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு சொல்லவிருக்கிறது; ஆகவே, அதிலே நான் தலையிட



வேண்டிய சூழ்நிலையில்லை; ஆகவே, தேயிலைத் தோட்டத் தொழிற் சங்கத் தலைவர்களும், நிர்வாகமும், நீங்களும் சேர்ந்து பேசி முடிவு செய்துகொள்ளலாம்' என்பதைச் சொன்னார்கள். நான் மீண்டும் விடவில்லை. மீண்டும் எழுந்தேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பார்த்துச் சொன்னேன். மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் எல்லோருக்கும் குறைந்தபட்ச கூலியை நிர்ணயம் செய்திருக்கின்றீர்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் ஏன் நீங்கள் கூலியை நிர்ணயம் செய்யவில்லை? ஏன் நீங்கள் நினைத்தால், ஒரு அரை மணி நேரம் அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக நேரத்தை ஒதுக்கிவிட முடியாதா? அவர்களை அழைத்துப் பேசினால் இந்தப் பிரச்சினை முடியாதா? ஏன் காலதாமதம் செய்கிறீர்கள்? இதனால் நான் மிகுந்த வருத்தம் அடைகிறேன். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் வருத்தமடைகிறார்கள். ஆகவே, நான் மீண்டும் வற்புறுத்துகிறேன், வலியுறுத்துகிறேன். நீங்கள் ஒரு பத்து நிமிடம் நிர்வாகத்தையும் தொழிற் சங்கத் தலைவரையும் அழைத்துப் பேசி, பேச்சுவார்த்தையை முடிவிற்குக் கொண்டு வருவீர்களா என்பதை மீண்டும் வற்புறுத்துகிறேன், வலியுறுத்துகிறேன் என்று கேட்டேன். அப்போதும் அவர் எழுந்திருக்கவில்லை. அவர் காதிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய அந்தத் துயரமான வார்த்தைகளையெல்லாம் நான் சொல்லி, அவர் காதிலே கேட்கவில்லை.

*(முற்பகல் 11-40)*

பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு—இந்த அவையிலே நான் குறிப்பிட்டேன்— கட்டிக்கொள்வதற்கு சேலையே கிடையாது, நல்ல வேட்டிகள் கிடையாது, நல்ல உணவு கிடையாது, உடுத்துவதற்கு உடை கிடையாது. வயது வந்த பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு வழியில்லை, வசதியில்லை. பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதற்கு வழியில்லை. கல்லூரிகளுக்கு அனுப்புவதற்கு வழியில்லை. அப்படிப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை மீண்டும் மீண்டும் சொல்கிறேன். வலியுறுத்திச் சொல்கிறேன். நீங்கள் செய்து தாருங்கள் என்று கேட்டேன். அப்போதும் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் அதைக் காதிலே வாங்கிக் கொள்ளவில்லை. ஆகவே, நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். தமிழினத்தினுடைய தலைவரைப் பார்த்து கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கு

வேறு வழியில்லை, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உங்களை விட்டால் வழியும் இல்லை, கதியும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்து, உங்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு 10 நிமிடம் ஒதுக்கித் தாருங்கள். தேயிலைத் தோட்ட நிர்வாகத்தையும், தொழிற் சங்கத் தலைவரையும் அழைத்துப் பேசி அல்லது நீங்களே நிர்வாகத்தை அழைத்துப் பேசினாலும், உங்களைப் பார்த்தாலே உங்கள் முன்னாலே உட்கார்ந்து அவர்கள் பேசினாலே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நல்ல சம்பளம் கிடைத்துவிடும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயா அவர்களே, தமிழகத்தினுடைய தலைவர் அவர்களே, கலைஞர் ஐயா அவர்களே, உடனடியாக இந்தக் கூட்டத் தொடரிலே நீங்கள் ஒரு தேதியை அறிவித்து, அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களையும், தொழிற் சங்கத் தலைவர்களையும், நிர்வாகத்தினரையும் வரவழைத்துப் பேசி, நியாயமான சம்பளத்தைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, உங்களைப் பாதம் பணிந்து நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எல்லாத் தொழிலாளர்களுடைய பிரிவிற்கும் நீங்கள் வாரியத்தை அமைத்திருக்கிறீர்கள். அதைப் பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன். உங்களுடைய காலம்தான் தொழிலாளர்களுடைய பொற்காலமாக இருந்தது. அதனால் உங்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு நல வாரியத்தை நீங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் இலட்சக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குடும்பம் வளரும். அவர்களுடைய குடும்பத்திற்கு நீங்கள் ஒளியேற்றி வைக்கின்ற ஒரு நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே வேறெந்த மாநிலத்திலும் நடைபெறாத செயல் தமிழகத்திலே என்னுடைய வால்பாறை தொகுதியிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த 25 ஆண்டு காலமாக அங்கே தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கப்படவில்லை. நிர்வாகம் சில தொழிற் சங்கத் தலைவர்களைக் கையிலே வைத்துக்கொண்டு, அந்தத் தொழிலாளர்களை



நிரந்தரம் செய்ய மறுக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அந்தத் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, வால்பாறையிலே இருக்கிற நிர்வாகங்கள், சில நிர்வாகங்கள் 8.33 சதவிகிதம் போனஸ் வழங்கும், சில நிர்வாகங்கள் 20 சதவிகிதம் போனசை வழங்கும், சில நிர்வாகங்கள் போனசே வழங்காது. இப்படிப்பட்ட நிலையில் போனசை வாங்கி தீபாவளி கொண்டாடுகின்ற அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குடும்பம் மகிழ்ச்சியிலே இருக்கும். போனசே கிடைக்காத அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குடும்பம் எந்த அளவிற்கு வருத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து, நீங்கள் அனைவருக்கும் 20 சதவிகித போனஸ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வால்பாறையில் இருக்கின்ற தேயிலைத் தோட்ட நிர்வாகம், தொழிலாளர்களுடைய வருங்கால வைப்பு நிதியை–(மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.–வருங்கால வைப்பு நிதியை–அவர்கள் வருங்கால வைப்பு நிதியை அலுவலகத்திலே கட்டுவதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நிர்வாகத்தின்மீது இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய வருங்கால வைப்பு நிதி நியாயமாக அவர்களுக்குக் கிடைப்பதற்கு, வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திலே கட்டச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையிலே அரசு நிலங்கள், வனத் துறைக்குச் சொந்தமான நிலங்கள், ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் வால்பாறை தேயிலைத் தோட்ட நிர்வாகத்தினுடைய custody–யிலே இருக்கிறது. அவர்கள் அதை ஆக்கிரமிப்பு செய்துகொண்டார்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள். அரசு தலையிட்டு, அந்த நிலங்களை எடுத்து தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துதரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களை, நான் கேட்டேன்; அது இந்த அவைக் குறிப்பில் இருக்கிறது. நேருக்கு நேராகக் கேட்டேன். 'மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஒரு குடும்பத்திற்கு ஒரு இலவச வீடு' என்று இந்த அவையிலே அறிவித்தீர்கள். 'அந்தக் குடும்பத்திற்கு ஒரு இலவச வீடு தருவதற்குத் திட்டம் இருக்கிறதா? எப்போது தருவீர்கள்' என்று கேட்டேன். அது, அவைக் குறிப்பிலே இருக்கிறது. 'சாலைப் பணியாளர்களுக்கு வேலை கொடுங்கள், அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுங்கள்' என்று சொன்னேன். அப்போது இருந்த சபாநாயகர் உடனே bell அடித்துவிட்டார், 'அரசு ஊழியர்களுக்கு மீண்டும், அவர்களுக்கு பறிக்கப்பட்ட சலுகைகளை வழங்குங்கள்' என்று சொன்னேன், மீண்டும் bell அடித்துவிட்டார். உங்களிடத்திலே கேட்டதைப்போல் இரண்டு நிமிடம் கேட்டு வாங்கினேன். 'அரசு ஊழியர்களுக்கு பறிக்கப்பட்ட சலுகைகளைத் தாருங்கள்' என்று கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்மீது கருணை கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்கள்மீது அன்பு கொண்டு,, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இன்று வால்பாறையிலே ஒரு கலைக் கல்லூரியைத் தந்திருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் நினைத்துப் பார்க்கின்றேன். இந்த ஐந்து ஆண்டுக்காலமாக, இந்த அவையிலே தொடர்ந்து போராடினேன், தொடர்ந்து கெஞ்சினேன், கதறினேன், ஒரு கலைக் கல்லூரியைத் தாருங்கள் என்று. ஆனால், நம்முடைய தலைவர், மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள், தமிழ்நாட்டினுடைய மூத்த தலைவர், முத்தமிழ் அறிஞர், ஐந்தே ஐந்து நிமிடத்தில், நான் கேட்டதற்குக் கலைக் கல்லூரியைத் தந்தார்கள், தந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று மகிழ்ச்சியடைகிறார்கள்.

ஐயா அவர்களைப் பார்த்து, நான் ஒன்றே ஒன்று கேட்கின்றேன். இங்கேயிருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய 31 சட்டமன்ற



உறுப்பினர்களும், ஐயா அவர்களிடத்திலே கையொப்பமிட்டு கொடுத்திருக்கின்றோம். எங்களுடைய ஆசை, தமிழ்நாட்டில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்களுடைய ஆசை. இலட்சக்கணக்கான தொண்டர்களுடைய ஆசை. ஐயாவுக்கு மிகவும் வேண்டியவர், நம்முடைய மறைந்த மக்கள் தலைவர், ஐயா மூப்பனார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பேட்டியிலே பார்த்தேன்; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அண்ணன் ஸ்டாலின் அவர்கள் பேட்டி கொடுக்கிறார்கள். உங்களுக்குப் பிடித்தமான தலைவர் யார் என்று கேட்கின்றார்கள்? அவர் சொன்னார், 'எனக்குப் பிடித்தமானத் தலைவர், மக்கள் தலைவர் மூப்பனார்' என்று சொன்னார்கள். அந்தப் பேட்டியைப் பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்கள் தலைவர் மூப்பனார், — மக்கள் தலைவர் மூப்பனார்' என்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் ஐயா அவர்கள் அன்போடு அழைப்பார்கள். எந்த அரசாங்கப் பணியிலும் அவர் இல்லை. எந்த அரசாங்கப் பணியையும் அவர் வகிக்கவில்லை. தமிழ்நாட்டிலே எங்கே ஜாதிக் கலவரங்கள் நடந்தாலும், அங்கே அமைதி ஏற்படுத்துகின்ற ஓர் அமைதியான, ஒப்பற்றத் தலைவர்; எங்களையெல்லாம் வாழ வைத்தவர். நான தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதி. ஆனால், கோவை மாவட்டத்தினுடைய காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கின்றேன். மாவட்டத் தலைவராக இருக்கின்றேன். தொடர்ந்து இருக்கின்றேன். அதற்குக் காரணமே மக்கள் தலைவர் மூப்பனார்தான். ஆகவே, இந்த நேரத்திலே ஐயா கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். எங்களுடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு உங்களுடைய காலத்தில், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுடைய திருவுருவச் சிலையை அண்ணா சாலையில் அல்லது கடற்கரைச் சாலையில் நீங்கள் ஏற்படுத்தித் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய கையாலே அந்தத் திருவுருவச் சிலையைச் திறந்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. திரு. கோவை தங்கம். ஒரு விஷயத்தை நேரடியாகச் சொல்லமாட்டீர்களா?

**திரு. கோவை தங்கம்:** முடித்து விடுகிறேன், முடித்து விடுகிறேன்.

அதேபோல, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோவைக்கு வந்தார்கள். சென்ற ஐந்து ஆண்டுக்காலத்தில் ஒரு மாவட்ட

Collector கூட ஓர் ஆய்வு நடத்தியது இல்லை. ஆனால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோவைக்கு வந்து, இரண்டாயிரம் அதிகாரிகள் மத்தியிலே எங்களையெல்லாம் அழைத்து, ஒவ்வொருவருடைய குறைகளையும் நேரடியாகக் கேட்டார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்கூட நான் பாராட்டியதைப்போல, அந்த உறுப்பினர்களும் பாராட்டினார்கள். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அந்த ஆய்வை மேற்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) கோவை மாவட்டத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலுசாமி *(குறுக்கீடு)* திரு. வேலுசாமி *(குறுக்கீடு)* அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி. *(குறுக்கீடு)* நீங்கள் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள்? *(குறுக்கீடு)* இருங்கள், இருங்கள். *(குறுக்கீடு)* இங்கு வந்துவிட்டால் எல்லோரும் ஒன்றுதான். 23 நிமிடம் நீங்கள் பேசி இருக்கிறீர்கள். *(குறுக்கீடு)* இல்லை, முடியாது. உங்களால் இரண்டு நிமிடத்தில் முடிக்க முடியாது என்று தெரிந்துதான், நான் கூப்பிடுகிறேன். ஏதாவது நேரடியாக வருகிறீர்களா? வால்பாறை ரோடு மாதிரி வளைந்து நெளிந்து போய்க்கொண்டே இருக்கிறீர்கள். *(குறுக்கீடு)* சரி, சீக்கிரம் முடியுங்கள்.

*முற்பகல் 11-50*

**திரு. கோவை தங்கம்:** 40 வளைவுகள் வால்பாறையிலே. கோயம்புத்தூருக்குப் போய்விட்டு, *(குறுக்கீடுகள்)* — இருங்கள், இருங்கள், ஒரு நிமிடம். — வால்பாறைக்குப் போக வேண்டுமென்றால், 5 மணி நேரமாகும். ஒரேயொரு முறை வந்தால், நீங்கள் அங்கே திரும்ப வருவது பற்றி யோசிப்பீர்கள். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன்; படித்துவிட்டு, வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற திட்டத்தை அவர்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்து நீண்ட காலம் ஆனவர்களுக்கு வேலை கிடைக்காது என்பதோடு, அவர்கள் பல்வேறு காரணங்களால் பதிவு செய்வதற்கு விருப்பமில்லாமல் பதிவு செய்ய முடியவில்லை. ஆகவே, நான் அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். அந்த ஏழையெளியவர்கள்மீது கருணை வைத்து,



அந்தப் பதிவு செய்த தேதியை முன்னிறுத்தி, மீண்டும் அவர்களுக்கு மறுபதிவு செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, நெசவாளர்களின் குடும்பத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, வால்பாறையில் இருக்கின்ற நிருபர்களுக்கு, கோவை மாவட்டம் முழுவதும் சென்று வருவதற்கு Bus pass தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரேயொரு வார்த்தை; வால்பாறை நகராட்சியிலே, 3 வருடங்களாக விதவைகள், உடல் ஊனமுற்றவர்கள் எல்லாம் சத்துணவு அமைப்பாளர்களாக இருந்தார்கள். தேர்தலுக்கு முன்பு அவசர அவசரமாக அவர்களையெல்லாம் நீக்கிவிட்டு, அந்த நகராட்சியில் புதிய சத்துணவு அமைப்பாளர்களை நியமித்து, மிகப் பெரிய முறைகேட்டைச் செய்துவிட்டார்கள். தமிழகத்தினுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் தலையிட்டு, உடனடியாக அந்த விதவைகளுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து வேலைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரேயொரு வார்த்தை; என்னுடைய வால்பாறை தொகுதியின் கீழ்ப்பகுதி. விவசாயிகளுடைய குழந்தைகளுக்கு கல்வித் துறையிலே, உயர் கல்வியிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது விவசாயத்திற்கு வேண்டிய நீராதாரம் இருப்பதால், அங்கே உடனடியாகப் பயிர்க் கடன் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இலவச வீட்டுமனைப் பட்டா, விவசாயக் கூலி மக்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு, இந்த அவையிலே சம்பளம் நிர்ணயித்ததைப்போல, இந்தக் கூட்டத் தொடரிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பளம் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல, பொதுப் பணித் துறை..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கன்னிப் பேச்சு பேசுவது மாதிரி பேசுகிறீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை, இல்லை. இதோ முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா subject—ஐயும் பேசுகிறீர்கள். இது ஐந்தாவது முறை, இந்தக் கூட்டத் தொடரிலே பேசுவது.

**திரு. கோவை தங்கம்:** இல்லை, ஒரேயொரு நிமிடம், முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே பாருங்கள்; நீங்கள் Senior Member. நீங்கள் கன்னிப் பேச்சு பேசுவதுமாதிரி எல்லா subject—ஐயும் பேசுகிறீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** அதேபோல, நெல்லித்துறை–மண்ணம் பாலம் அமைக்க ரூ.25 இலட்சம் தேவை. அதேமாதிரி, அர்த்தநாரி பாலாற்றுப் பாலம், ஜல்லிப்பட்டியிலே ரூ.2 இலட்சம், 3 இலட்சத்திலே சிறிய பாலங்கள்; விவசாயிகளுக்குத் தேவையான அவற்றைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் வைத்ததை, மாண்புமிகு தமிழினத்தினுடைய தலைவர், நம்முடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள் இந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்மீது கருணை வைத்து, அவர்களுக்கு நியாயமான சம்பளம் நிலுவைத் தொகையோடு கிடைப்பதற்கு, ஒரு நாளைக்கு 100 ரூபாய் வழங்குவதற்கு, அவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தைப் பெரியாரின் சமூக நீதி, அண்ணல் அம்பேத்கரின் ஜனநாயகம், கார்ல் மார்க்ஸ் அவர்களின் சமத்துவம் ஆகிய இலட்சியப் பாதையில், உழைக்கின்ற பாட்டாளி மக்களினுடைய வாழ்க்கை மேம்படச் செய்ய, பாட்டாளி மக்கள் கட்சி என்னும் மாபெரும் அரசியல் பேரியக்கத்தை உருவாக்கி, என்னைப் போன்ற இலட்சக்கணக்கான இளைஞர்களை ஒன்று திரட்டி, உழைக்கின்ற மக்களின் உரிமைகளை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் பாட்டாளியின் குரலாய் ஒலிக்க, சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய, சமூக



நீதிக் காவலர், தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்தியாவின் சுற்றுசூழலைப் பாதுகாக்கவும். இளைஞர்களின் நல்ல எதிர்காலத்தை ஒளிமயமாக்கவும், அல்லும் பகலும் அயராது உழைத்து, பல திட்டங்களைத் தீட்டிப் பாடுபட்டு வரும, எங்களையெல்லாம் வழி நடத்திச் செல்லும், இளைஞர்களின் எழுச்சி நாயகன், பசுமை நாயகர் மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் சின்ன அய்யா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பாட்டாளி மக்கள் கட்சியின் வளர்ச்சிக்காக இரவும் பகலும் அயராது உழைக்கும், சட்டமன்ற உறுப்பினர்களை மிகவும் கண்ணியத்தோடு வழி நடத்தி வருகின்ற எங்களது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

என்னைப் பெற்றெடுத்து வளர்த்து, மருத்துவர் அய்யா அவர்களுடைய சீரிய வழியில் செயலாற்றிட எனக்கு உறுதுணையாய் உழைத்துவரும் என்னைப் பெற்றெடுத்த தாய் சென்னம்மாள் அவாகளுக்கும், என்னுடைய தந்தையார் இலட்சுமணக் கவுண்டர் அவர்களுக்கும் இந்த இனிய நேரத்திலே எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உழைக்கின்ற ஏழையெளிய பாமர மக்களுடைய தொழிலாளர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், அரசு ஊழியர்கள், வணிகர்கள் என்று எல்லோரும் பாராட்டும் மகத்தான திட்டங்களை அமலாக்கி ஜனநாயகம் பூத்துக் குலுங்குகின்ற மகத்தான மக்களாட்சியை நடத்தி வரும் முத்தமிழ் வித்தகர் முதுபெரும் ஆசான் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உள்ளாட்சித் துறையிலே இனிமேல் அறிவிப்பதற்கு ஏதும் இல்லை என்கின்ற அளவில், இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு, நல்ல பல திட்டங்களை வாரி வழங்கிவிட்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், தேர்தலிலே எனது வெற்றிக்குப் பாடுபட்ட, ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர்

இரா. செந்தில் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், எனது வெற்றிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குமேலாக இன்றைக்கு 30,207 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த, தருமபுரி சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, இந்த மாமன்றத்திலே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, கைத்தறி போன்ற துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பினைத் தந்த இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் ஆகிய முப்பெரும் தொழிலாளர்கள்மீது சிறப்புக் கவனம் செலுத்தி தனியாக நல வாரியங்களை ஏற்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுக்கு, திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம், மத்திய அரசு உதவித் திட்டம், தமிழகத்திலே செயல்பட்டுவருவதைப்போல தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தினால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு என்று நல வாரியத்தை அமைத்து, இன்றைக்கு நமது முதல்வர் கலைஞர் அவர்கள் பல நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். பெண்களுக்கு என்று தையற் பயிற்சி மையங்கள், குழந்தைகள் காப்பகம், படிப்பகம், கல்வி உதவித் தொகை, கல்வி ஊக்கத் தொகை, மூக்குக் கண்ணாடி உதவித் தொகை, ஈமச்சடங்கு செலவுத் தொகை, ஓய்வு இல்லங்கள் போன்ற தொழிலாளர்களுக்குரிய நலத் திட்டங்களை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே, தமிழ்நாடு கட்டுமானத்



தொழிலாளர் நல வாரியத்தை அமைத்து மேற்கண்ட நலத் திட்டங்களைப்போல அவர்களுக்கும், இந்த நலத் திட்டத்தை செய்து கொடுத்திருக்கின்ற நமது முதல்வர் அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எனது மனமார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவில், தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்குவோம் என்று கடந்த காலத்திலே அறைகூவல்விட்ட அ.தி.மு.க. அரசு தொழிலாளர்களுடைய உரிமை மறுப்பு, வாழ்வு ஆதாரம் மறுப்பு, சமூக நீதி ஏய்ப்பு போன்ற பழிவாங்கு நடவடிக்கைகளை கடந்தகால அரசு கையாண்டதால், தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக, நூற்பாலைத் தொழிலாளர்கள் மிகவும் பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பது கடந்தகால ஆட்சியிலே நடைபெற்ற உண்மை. கடந்த 1994 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜவுளித் தொழிலுக்கு ஏற்பட்ட நெருக்கடியைக் காரணம்காட்டி விருப்ப ஓய்வுத் திட்டம் என்று சொல்லி சொற்பத் தொகையைக் கொடுத்து, கட்டாய ஓய்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, வருகிற நூற்பாலைகளுக்கு எல்லாம் ஊக்கம் கொடுத்து, கடந்தகால அ.தி.மு.க. அரசு நூற்பாலைத் தொழிலாளர்களை மிகவும் அதிகமாக பழிவாங்கியதோடு, பல இலட்சம் தொழிலாளர்களை வேலையைவிட்டு வெளியேற்றி இருப்பதற்கு அ.தி.மு.க. அரசுதான் காரணம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, தொழிலாளர்கள்மீது அக்கறை கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்கள், இன்றைக்கு இந்த ஒட்டுமொத்த மக்களை, இரவு பகலென்று பாராமல், எந்நேரத்திலும் இயக்கிக் கொண்டிருக்கின்ற அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களை, அரசு ஊழியர்களாக நிரந்தரம் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*நண்பகல் 12-00*

அதைப்போலவே, சர்க்கரை ஆலைகளிலே பணிபுரியக்கூடிய, தினக்கூலி அடிப்படையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களையும், அவர்களுக்கு நிரந்தரப் பணி அளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, இன்றைக்கு குழந்தைத் தொழிலாளர்களை, பல நிறுவனங்கள் தொழிலில் அமர்த்தி, அவர்களை வேலை வாங்கி வருகின்ற நிலைமையை நாம் தமிழகத்திலே பார்த்து வருகின்றோம். வறுமை காரணமாக கொத்தடிமைகளாக வேலை செய்யும் பெண் தொழிலாளர்களை நிரந்தரம் செய்து, சட்டப்படியான குறைந்தபட்ச சம்பளம் வழங்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனைக்கு அனுமதிக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். தொழிற்சாலைகள் சட்டப்படி, அனைத்துப் பஞ்சாலைகளையும் ஆய்வு செய்து, குழந்தைத் தொழிலாளர்கள், கொத்தடிமை பெண்கள் இல்லை என்கின்ற சான்று வழங்கிய பின்பு செயல்பட அனுமதிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்து, சேம நல நிதி அலுவலகத்திலே செலுத்தாமல், கோடிக்கணக்கான தொழிலாளர்களை ஏமாற்றியுள்ள முதலாளிகள்மீது விரைந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு செயல்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். இரவுநேரங்களில் பல தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்கள் வேலை வாங்கப்படுகிறார்கள். இந்த நிகழ்வுகளை உடனடியாக நம்முடைய முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், உலகத் தொழிலாளர் மையம், I.L.O. கொள்கைப்படி, தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவும், தொழிற் தகராறு தீர்வுப் பிரிவும் ஒரே துறையின்கீழ் இருக்கக்கூடாது; தனித்தனியாக அதற்குத் துறை அமைக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், கைத்தறி நெசவாளர்களுக்கு நல வாரியம் மற்றும் அரசு சலுகைகள் உள்ளதைப்போல, பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் புதிதாக நல வாரியம் அமைத்திட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பனை மரத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைத்ததைப் போலவே, தென்னை மரத் தொழிலாளர்களுக்கும் நல வாரியம்



அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

படித்த எண்ணற்ற இளைஞர்கள் வெளிநாடுகளிலே வேலை செய்யவேண்டும் என்கின்ற கனவோடு, வெளிநாடுகளிலே வேலை பெற்றுத் தருவதாக பல தனியார் ஏஜெண்ட்களிடம் இலட்சக்கணக்கான பணத்தைக் கட்டி, வேலை கிடைக்காமல் ஏமாந்து போவது, தொடர் கதையாகி வருகிறது. எனவே, அயல்நாட்டு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னையில் இயங்கி வருவதைப்போல, மாவட்டந்தோறும் அரசு சார்பில் அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தை அரசு தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த கால ஆட்சியிலே, வேலை நியமனத் தடைச் சட்டம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதனால், இலட்சக்கணக்கான படித்த இளைஞர்களின் கனவுகளெல்லாம் கேள்விக்குறியாகி, இனிமேல் வேலைக்குச் செல்ல முடியாது என்கின்ற ஒரு விரக்தியான நிலையிலே அவர்களெல்லாம் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்று, புதுப்பிக்காமல் இருந்துவிட்டார்கள். ஆகவே, அந்த புதுப்பிக்காத இளைஞர்களுக்கு, மீண்டும் புதுப்பிப்பதற்குண்டான ஒரு வாய்ப்பை முதல்வர் அவர்கள் அளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலுசாமி, தொகுதிப் பிரச்சினைக்குப் போகவில்லையா?

**திரு. இல. வேலுசாமி:** எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் ஜி.கே.எம். அவர்களது கோரிக்கையையும், எனது கோரிக்கையையும் ஏற்று, தருமபுரியில் ஒரு தொழிற்பேட்டையை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், சிறுதொழில் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களுக்கும், மாவட்டத்திற்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களுக்கும் எனது சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-05*

தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டநாள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரே ஒரு வழி, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்தான்.

கடந்த 50 ஆண்டு காலமாக, பல அரசியல் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், பொதுமக்கள், தொடர்ந்து போராடி வருகின்ற வேளையிலே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் அறிக்கையிலே கூறியவாறு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் விரைவில் தொடங்குவதென, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் நேற்று இந்த மாமன்றத்திலே கூறியதும், சென்ற மாதம் 17 ஆம் தேதி ஜப்பான் நாட்டு அதிகாரிகளுடன், இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த ஆலோசித்ததும், மாண்புமிகு பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் இந்தத் திட்டத்திற்குப் பரிந்துரை செய்திருப்பதும், தருமபுரி மாவட்ட மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும். இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்முறைக்குக் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் சீரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமாய், நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கல்வியைப் பொறுத்தவரை, சென்ற கல்வியாண்டிலே தருமபுரி மாவட்டத்திலே 61 சதவிகிதம் தேர்ச்சி விகிதம் உள்ளது. தமிழகத்திலே 25-வது இடத்திற்கு தருமபுரி மாவட்டம் சென்ற ஆண்டு தள்ளப்பட்டுள்ளது. கடந்தகால அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஆசிரியர்களை நியமனம் செய்யாமல், பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்காத நிலையில், இன்றைக்குத் தருமபுரி மாவட்டத்திலே கல்வியின் நிலை மிகப் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. ஆகவே, வருங்காலத்திலே தமிழக முதல்வர் அவர்கள், அங்கே ஆசிரியர் நியமனங்களை முழுமையாகச் செய்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஏற்கெனவே நன்றி சொல்லவும், முடிக்கத்தான் போகிறீர்களோ என்று நினைத்தேன். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** கட்டடங்கள், தேவைப்படுகின்ற பள்ளிகளுக்கு இந்த கட்டடங்களைத் தந்தும், பள்ளிகளைத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய் நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், பிரிக்கப்பட்ட தருமபுரி மாவட்டத்தில் தற்பொழுது அரசு கலைக் கல்லூரி மட்டும் உள்ளது. புதியதாக அரசு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மகளிர் கலைக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மற்றும் Polytechnic போன்ற அரசு கல்லூரிகளைத் தொடங்கவேண்டும்.



எனது சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஏரிகளுக்கு, சின்னாறு நீர்த் தேக்கத்திலிருந்து வரும் கால்வாய்களை அகலப்படுத்தி, தூர் வாருவதன்மூலம் 15-க்கும் மேற்பட்ட ஏரிகளில் நீர் நிறையும். ஆகவே, இதற்குத் தனியாக நிதியை ஒதுக்கி இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் அரசை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பாளையம்புதூர் ஊராட்சி, மாரியம்மன் ஆற்றின் குறுக்கே ஒரு சிறிய நீர்த் தேக்கத்தைக் கட்டினால் சுமார் 15-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடையும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்களது தருமபுரி நகரிலே அமைந்துள்ள தருமபுரி அரசு மருத்துவமனையில் 530 படுக்கை வசதி கொண்ட பெரிய மருத்துவமனை இருக்கின்றது. மாவட்டத்திலுள்ள வட்டார அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இது ஒன்றே தலைமை மருத்துவமனையாக இருக்கிறது. இந்த மருத்துவமனையில் எந்தப் பெரிய மருத்துவ வசதியும் ... (மணியடிக்கப்பெற்றது) சிறப்பு மிக்க...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் bell அடிக்கிறேன். நீங்கள் என்னைப் பார்க்கவேண்டும். நீங்கள் குனிந்துகொண்டே பேசிக்கொண்டிருந்தீர்களானால், நான் எதற்கு bell அடிக்கிறேன் என்று தெரியாமல் போய்விடும். முடித்துவிடுங்கள். நன்றி சொல்லி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இன்னும் அரை கொயர் இருக்கிறதா? நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** இந்த மருத்துவமனையில் சரியான மருத்துவ வசதிகள் இல்லை. அருகிலுள்ள சேலம் அல்லது பெங்களூருக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது. அதேபோல இருதய நோய், சிறுநீரக நோய், புற்று நோய், மூளை நரம்பியல், பால்வினை நோய், தோல் நோய் போன்ற இந்த நோய்களுக்கு சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவர்கள் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டத்திலுள்ள சாலைகளும் என் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சாலைகள் அனைத்தும் மிக மோசமாகப் பழுதடைந்து, மண் சாலைகளாக உள்ளன. இந்தச் சாலைகளெல்லாம்

தார்ச் சாலைகளாக மாற்றப்படவேண்டும். மேலும், பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன், மகேந்திரன், நீங்கள் பெரம்பூரில் இருப்பதினாலே, 7 நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. இல. வேலுசாமி:** கிருஷ்ணகிரியிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுங்கள், திரு. மகேந்திரன்,

**திரு. இல. வேலுசாமி:** இப்படி strict–ஆக இருந்தீர்களானால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மகேந்திரன், பேசுங்கள் (குறுக்கீடுகள்) வேலுசாமி, நிறைய வைத்திருக்கிறீர்கள். அப்படியே அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

பிற்பகல் 12–10

•**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கலந்துகொண்டு பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, வேலுசாமி, நன்றி சொல்லுங்கள்.

**திரு. இல. வேலுசாமி:** இவ்வளவு நேரம் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினைக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** 1991 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவிலே உலகமயம், தனியார்மயம்; தாராளமயம் என்ற கொள்கைகள் அமலாக்கப்பட்டதற்கு பின்பு, இந்தியாவிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் சட்டங்கள், தேசிய பண்டிகை விடுப்புச் சட்டம், கடைகள் நிறுவன சட்டங்கள், மோட்டார் தொழிலாளர் சட்டம் போன்ற



சட்டங்கள் எல்லாம் இன்றைக்கு முதலாளிகளால் காற்றில் விடப்படக்கூடிய நிலைமை என்பது இருக்கிறது.

சட்டப்படி பணி நேரம் அமலாக்கப்படுவதில்லை. வார விடுமுறை மறுக்கப்படுகிறது. சென்னையில், மறைமலை நகர், ஸ்ரீபெரும்புதூர் பகுதியிலே பன்னாட்டு நிறுவனங்களும், இந்திய முதலாளிகளும் தொழில் தொடங்குகின்றனர். இங்கு பணி நேரம் என்பது அமலாக்கப்படுவதில்லை. சட்டப்படியான பாதுகாப்பு என்பது தொழிலாளர்களுக்குக் கிடைக்கவில்லை. அடிக்கடி விபத்துகள் நடைபெறுகின்றன. இதுபற்றிய தகவல்கூட வெளியில் தெரிவதில்லை.

நிரந்தரத் தன்மையிலுள்ள தொடர்ந்து நீடிக்கும் பணிகளில் ஒப்பந்தமுறையில் தொழிலாளர்கள் வைக்கப்படுகின்றனர். மிகக் குறைவான சம்பளத்தில் எந்தவித உரிமையும் இல்லாமல் இந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பணியாற்றுகிறார்கள். அங்கு தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கு உரிமையில்லை. சங்கம் அமைத்தால் நிர்வாகம் ஐவர் குழு, எழுவர் குழு என அமைத்து, அக்குழுக்களிடம் கையெழுத்தைப் பெற்று, ஒப்பந்தம் என்கிறார்கள். இவை தண்டனைக்குரிய தொழிலாளர் விரோத நடவடிக்கை என சட்டம் கூறுகிறது. ஆனால், சட்டத்தை மீறும் எந்த முதலாளியும் இதுவரை தண்டிக்கப்பட்டதாக, தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் வரலாறு என்பது இல்லை. தொழிலாளர் உரிமைகளை மறுக்கும் நிர்வாகத்தில் ஆலை முன்பாக வாயிற்கூட்டம் உட்பட ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கான உரிமை என்பது மறுக்கப்படுகிறது. மறைமலை நகரில் எம்.எம்.டி. தொழிற்பேட்டையில் கூட்டம் நடத்துவதற்குக்கூட சென்னை மாநகர காவல் துறை அனுமதிப்பது இல்லை. குறைந்தபட்ச ஜனநாயக உரிமை மறுக்கப்படுகிறது. தொழிற்சாலை ஆய்வாளர்களோ புகார் கொடுத்தாலும் நடவடிக்கை எடுப்பதில்லை.

அரசுத் துறை நிறுவனமான டாஸ்மாக்கில், தினமும் 16 மணி நேரம் வேலை செய்ய வேண்டிய நிலைமை என்பது இருக்கிறது. இங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு வார விடுப்பு இல்லை. எந்தவித விடுப்பும் இல்லை. இங்கே தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோதுதான் மே தினத்திற்கான விடுப்பு என்பது வழங்கப்பட்டது. அந்த விடுப்புகூட டாஸ்மாக்கில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அது வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பெயரளவில் இருக்கிறது. அதன் அமலாக்கம் என்பது இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிறதா என்றால் கிடையாது. மின்சார வாரியம், குடிநீர் வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் அரசுப் போக்குவரத்து ஆகிய இடங்களில்கூட நிரந்தரப் பணிகளில் ஒப்பந்தமுறை உள்ளது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் சட்டப்படி, நிரந்தரப் பணியிடங்களில் ஒப்பந்தமுறை நீடிக்கப்படக் கூடாது.

இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில், அரசுக்குச் சொந்தமான உப்பளம் என்பது இருக்கிறது. இது சீசனல் தொழில் என்று கடந்தகால ஆட்சியாளர்களால் கருதப்பட்டது. அங்கேயிருக்கக்கூடிய தொழிற்சாலை ஆய்வாளர்கூட இந்தத் தொழில் என்பது நிரந்தரத் தொழில் என்று அரசுக்கு பரிந்துரை செய்ததற்கு பிறகும்கூட, கடந்த அ.தி.மு.க. அரசு ஆணைகள் வழங்கவில்லை. இந்தத் தொழில் நிரந்தரத் தொழில் என்ற அரசாணையை தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தொழிலாளர் துறையின் அமலாக்கப் பிரிவு, கடந்த 5 ஆண்டுகாலமாக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. வெளிபாகம் என்பது வெளிக்கூடு மட்டும் நன்றாக உள்ளது. உள்பாகங்கள் என்பது இன்றைக்கு துருப்பிடித்து செல்லரித்துப் போய் உள்ளது. ஊழல் கறை படிந்துள்ளது. இந்தக் கறை நீக்கப்படவேண்டும். தேவையான ஆய்வாளர்கள் தமிழகத்திலே நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சிறுதொழில்களுக்கான தனித்தனி வாரியம் கடந்த தி.மு.க. ஆட்சியில் இருந்ததை அ.தி.மு.க. ஒரே வாரியமாக மாற்றியது. இன்றைக்கு 11 வாரியங்கள் தனித்தனியாகச் செயல்படும் என்று அறிவித்திருக்கக்கூடிய தமிழக அரசினுடைய அறிவிப்பை வரவேற்பதோடு, இன்றைக்கு 3 இலட்சம் தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய சுமைப் பணி, அதேபோன்று பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய மீன்பிடித் தொழிலுக்கு தனித்தனி நல வாரியம் என்பதை அமைத்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த நல வாரியங்களுக்கு தகுந்த நிதியாதாரத்தை அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.



பிற்பகல் 12–15

அதேபோல கடந்த காலத்திலிருந்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பென்ஷனாக மாதம் 200 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, தலைவர் கலைஞர் அவர்கள் முறைசாரா தொழிலாளர்களுக்கு ரூபாய் 300/–ம், விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூபாய் 400/–ம் பென்ஷன் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இவை ஒரே சீராக வழங்கப்பட வேண்டும். தமிழகத்திலே இருக்கக்கூடிய இந்த முறைசாராத் தொழிலாளர்களுக்கு 1,000/– ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நல வாரியங்களில், நலத் திட்டங்களின் பணப் பயன்கள் என்பது தாமதமின்றிக் கிடைக்கவேண்டும். மத்திய அரசினுடைய கட்டுமானப் பணிகளுக்கும் நல வரி என்பது வசூலிக்கப்பட வேண்டும் நல வரி என்பது 1 சதவீதமாக உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுடைய சம்பளம் மற்றும் அவர்களுக்கு வழங்க வேண்டிய பலன்கள் குறித்து சட்டப்படி ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்கள் முடிந்தவுடன் புதிய ஒப்பந்தங்கள் காணப்பட வேண்டும். கடந்த அரசு, அரசுத் துறைகளில் மின்வாரியமாக இருந்தாலும் சரி, அல்லது போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, 3 ஆண்டுகள் ஒப்பந்தம் என்பதை மாற்றி 5 ஆண்டுகள் ஒப்பந்தமாக ஆக்கியுள்ளார்கள். இதனால், அத்துறையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலே உருவாகி இருக்கக்கூடிய இந்தத் தொழிலாளர் நல அரசு என்பது ஏற்கெனவே நடைமுறையில் இருந்த கால அளவிலான ஒப்பந்தங்களாக அந்த ஒப்பந்தங்களை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொத்தடிமை முறை இருந்த தொழில்களில், அதை ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. செங்கல் சூளை, கல் குவாரி போன்ற இடங்களில் கொத்தடிமை முறையிலான தொழிலாளர்களை மீட்கிறோம். ஆனால், தமிழகத்தினுடைய பஞ்சாலைகளிலும், I.T. தொழில்களிலும் இன்றைக்குக் கொத்தடிமை முறையில் தொழிலாளர்கள் வைக்கப்படுகின்றனர் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் பேசும்போது gang கூலி பற்றிச் சொன்னார்கள். கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பஞ்சாலைத் தொழில்களில் ஈடுபடக்கூடிய தொழிற்சங்கங்கள் எல்லாம் 1988 ஆம் ஆண்டு போட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை 5 ஆண்டு காலம் வைத்து, A.T.P. உள்பட பல்வேறு தொழிற்சங்கங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய Joint Action Council முன்னாள் முதல்வரைச் சந்திப்பதற்கு 5 ஆண்டுக் காலம் காத்திருந்தார்கள். ஆனால், முன்னாள் முதல்வர் அவர்களை அந்தக் கூட்டுப் போராட்டக் குழுவால் சந்திக்க முடிந்ததா என்றால் சந்திக்க முடியவில்லை. தமிழகத்தினுடைய முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் பஞ்சாலைத் தொழிலாளர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, Joint Action Council-லே இருக்கக்கூடிய அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களையும் சந்தித்து, பல்வேறு நலத் திட்டங்களைச் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அவை நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Gang கூலி என்ற பெயரிலே திருமணமாகாத பெண்கள் ஆலை வளாகத்திற்குள் சிறை வைக்கப்படுகின்றனர். பாலியல் கொடுமைகளும் நடக்கின்றன. அவை ஒழிக்கப்பட உருப்படியான நடவடிக்கைகளை திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைத் தொழிலாளர்கள் முறை ஒழிப்பு என்பது இன்றைக்கு இந்தியாவில் அவசியமாகத் தேவைப்படுகிறது. இதற்கு இன்றைக்கு குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் இருப்பதற்கு குடும்ப வருமானத்தை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்ததுபோல், நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது தமிழகத்தில் முழுமையாக அமலாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, வேலையில்லாத இளைஞர்களுக்கான நிவாரணம் என்பது தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோன்று அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்பது, இருக்கும் வேலையைப் பாதுகாப்பதில் தொடங்குகிறது. தீப்பெட்டி, கைத்தறி,



தோட்டம், பீடி போன்ற பாரம்பரியத் தொழில்களும், சிறு மற்றும் குறுந்தொழில்களும் பாதுகாக்கப்பட வேண்டும். பீடிக்கட்டுகளில் மண்டையோடு படம் அச்சிட வேண்டுமென்ற மத்திய அரசின் முடிவைக் கைவிட தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு மாதம் 250/– ரூபாய் முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 250/– ரூபாய் நிவாரணத்தை நிறுத்திவிட்டார்கள். அந்த நிவாரணம் என்பது மீண்டும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில், தொழிலாளர் நீதிமன்றங்களில் 3 மாதங்களில் வழக்கை முடித்து தீர்ப்பு வழங்க வேண்டுமென்று சட்டம் கூறினாலும், இன்றைக்கு 10 ஆண்டுகள், 12 ஆண்டுகள் ஒரே நீதிமன்றத்தில் வழக்குகள் கிடப்பில் போடப்படுகின்றன. தொழில் நீதிமன்றங்கள் போதுமானதாக இல்லை. அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான சம்பள நிர்ணயம் என்பது (மணியடிக்கப்பெற்றது) சிறப்புத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு 8 ஆண்டுகள் ஆகியும் சம்பள நிர்ணயம் செய்து தீர்ப்பு வழங்கவில்லை. இதுபோன்ற காலதாமதங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும்.

அரசின் முத்தரப்புக் குழுக்கள் செயல்படுத்தப்படாமல் கடந்த ஆட்சியில் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. தற்போது இக்குழுக்களை மறு நியமனம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்டத்தின்கீழ் அமைக்கப்பட வேண்டிய அனைத்துக் குழுக்களும் துரிதமாக அமைக்கப்படுவதுடன், உரிய கால இடைவெளியில் முறையாகக் கூட்டப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பெண் தொழிலாளர்கள் ஊதியம் மற்றும் சம உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். சம ஊதியச் சட்டத்தின்கீழ் ஆலோசனைக் குழுக்கள் அமைத்து, பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, தகுந்த நிறுவனங்களைக் கண்டறிந்து, அங்கு பெண்களுக்கு வேலை கிடைக்கவும், (மணியடிக்கப்பெற்றது) சம ஊதியம் கிடைக்கவும், ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். இரவு நேரப் பணிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** முறையான ஓய்வறை வசதிகள் வேண்டும். பெண்களுக்கு உள்ள குறிப்பான பிரச்சினைகளை மனதில் கொண்டு, தனியான கழிப்பறை வசதி உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி பாலியல் வன்முறைகள் தொடர்பான புகார் Committee–கள் அனைத்து நிறுவனங்களிலும் அமைக்கப்பட வேண்டும். நெரிசல் நேரங்களில் பெண்கள் தனியாகப் பேருந்துகளில் செல்வதற்கு வசதியாக, தனிப் பேருந்துகள் விடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக தொழிற்சங்க ஊழியர்கள்மீது புனையப்பட்ட criminal வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழகத்திலே இருக்கக்கூடிய 1,232 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களிலே வாங்கியிருக்கக்கூடிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தினால், கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக்கூடிய 2,64,000 கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறி ஆக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கியிருக்கக்கூடிய கடனை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* நெசவாளர்களுக்கு இன்றைக்கு இலவச மின்சாரம் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் மனதார வரவேற்பதோடு, சொந்த வீடு இல்லாமல் தறிக்கூடங்களை வைத்து நடத்தக்கூடிய நெசவாளர்களுக்கும் அதேபோன்று இலவச மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, துணி விற்பனையில் மானியம் இன்றைக்குத் தமிழகத்திலே 90 கோடி ரூபாய் முதல் 100 கோடி ரூபாய் வரை வழங்கப்படுகிறது. அதனால், பலவேறு கூட்டுறவுச் சங்கங்களில் துணி உற்பத்தி என்பது செய்யப்படாமல் இந்த மானியம் கொள்ளையடிக்கப்படுவதாக தகவல்கள் இருக்கின்றன. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு Insurance, வீடு மற்றும் ஓய்வூதியம் உட்பட பல்வேறு சலுகைகள் கிடைப்பதற்கும், அதேபோன்று, பீடித் தொழிலாளர்களுக்கு தமிழகம் முழுவதும் வீடு கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும்... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி.

**திரு. கே. மகேந்திரன்:** ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, முடியாது. இன்னும் இரண்டு அமைச்சர்கள் பேசவேண்டும். திரு. இராமசாமி, நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. கே. மகேந்திரன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உங்களுக்கு finishing trouble இருக்கிறது. பேசி முடிக்கமாட்டீர்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** ஒரு நிமிடம், ஒரு நிமிடம் அண்ணா. இந்த debate–லே ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில், மார்த்தாண்டத்தில் ஒரு வேலைவாய்ப்பு இணை அலுவலகத்தையும், அதேபோன்று, அரூரிலே ஒரு இணை அலுவலகத்தையும், அமைப்பதோடு மதுரை, Aavin–லே பணியாற்றக்கூடிய தினக்கூலித் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்றும், அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய முந்திரித் தொழில்களைப் பாதுகாப்பதற்கு அரசே கச்சா முந்திரிகளை வாங்க வேண்டுமென்றும், கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட குறைந்தபட்ச ஊதியச் சட்டம், முந்திரித் தொழிலாளர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தைவிடக் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால், அவர்களுக்குக் கூடுதலான குறைந்தபட்ச ஊதியத்தை உருவாக்க [illegible]ம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 227425

நாகர்கோவிலில் E.S.I. மருத்துவமனையை உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னால், நேற்று நடைபெற்ற உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் எந்தவிதமான பாரபட்சமும் பாராமல் பல்வேறுவிதமான சலுகைகளை அள்ளி வழங்கியிருக்கிறார்கள். எனக்கு இப்பொழுது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்த காரணத்தால், எங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, மூன்று இலட்சம் மக்கள் நல்ல குடிதண்ணீரைக் குடிக்கின்ற முறையில், தாமிரபரணி தண்ணீரை ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு வழங்குவதற்கான ஒரு அறிவிப்பை நேற்று அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே, என்னுடைய மனமார்ந்த நன்றியை என் சார்பாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி மக்களின் சார்பாகவும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் என்பவர்கள் கடந்தகால ஆட்சியில் ஜனநாயக ரீதியாகவே அடக்கி ஒடுக்கப்பட்டுவிட்டார்கள். நல வாரியங்கள் என்பது முழுமையாக முடக்கப்பட்டன. இன்றைக்கு நமது தலைவர் கலைஞர் ஆட்சி வந்ததற்குப் பின்னால், நல வாரியங்களெல்லாம் மீண்டும் செயல்படுவதற்கான முயற்சியைத் தொடங்கியிருக்கின்றார்கள். அதேபோல, இன்றைக்கு தொழிலாளர்களுடைய ஜனநாயக உரிமைகள், கடந்த ஆட்சியில் பறிக்கப்பட்டவை, — ஊர்வலம் நடத்துவது, கூட்டம் நடத்துவது, போராட்டம் நடத்துவது போன்ற உரிமைகளெல்லாம் மீண்டும் வழங்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12–25

அதோடு, தொழிலாளர் நல வாரியத்தோடு சேர்ந்து தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர் நல வாரியம், அடுத்து ஆலைப் பிரதிநிதிகள் உள்ளிட்ட முத்தரப்புக் குழு, ஏற்படுகின்ற தொழிலாளர்



பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இருக்கும். இப்போது அந்த முத்தரப்புக் குழு என்பதே மறந்துவிட்டது. அடுத்த வாரிசுகளுக்குத் தெரியாமல் போய்விடும் போல இருக்கிறது. தொழிற்சங்கச் சட்டத்தில் இருக்கின்ற முத்தரப்புக் குழுவை மீண்டும் புதுப்பித்து, அந்த முத்தரப்புக் குழுவை அமைப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

இன்றைய நிலையில் பல்வேறு சலுகைகள். அரசு நிர்வாகத்தை முறைப்படுத்த வேண்டும், சீரமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் தடைச் சட்டத்தை நீக்கி, காலியாக இருக்கின்ற அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கான நிலையைத் தொடங்கி, அவர்களுக்கு வழங்க வேண்டிய 6–வது ஊதியக் குழுவினுடைய சம்பளத்தையும் வழங்குவோம் என்று அறிவித்திருக்கிற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நிர்வாக இயந்திரம், அரசு இயந்திரத்தைச் சீரமைத்து, முறைப்படுத்தி, அதைச் செயல்படுத்த வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு இப்படிப்பட்ட செயல்களில் இறங்கியிருப்பதாக நான் கருதுகிறேன். ஆனால், அதேசமயத்தில் வெளியிலே பஞ்சாலைகள், இன்னும் தீப்பெட்டி, பட்டாசு பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற அந்தத் தொழிலாளர்களெல்லாம் இன்றைக்கு எந்தவிதமான ஒரு சலுகை இல்லாமல் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு தொழிலாளர் நலச் சட்டங்கள் 480 நாள் வேலை செய்தால், ஒருவரை நிரந்தரப்படுத்த வேண்டுமென்ற சட்டம் பஞ்சாலைகளிலும், மற்ற துறைகளிலும், எங்கேயும் அமல்படுத்துவதில்லை.

இன்றைக்குக் குறைந்தபட்சக் கூலிச் சட்டம், அதைக் கண்காணிப்பதற்கும் ஆள் இல்லை. தொழிலாளர் துறையையும், பேக்டரி ஆய்வகத் துறையையும் தனித்தனியாக போன ஆட்சி பிரித்துவிட்டது. இன்றைக்கு ஆய்வகத் துறைக்கு, Factory Inspector-க்கு வேலையே இல்லை. எந்த மனு கொடுத்தாலும், Factory Inspector அதைக் கண்டுகொள்வதில்லை. இன்றைக்கு Labour Department என்பது, அது ஏதோ அதிகாரம் இல்லாத ஒரு துறையாக, யாரையும் எதையும் கேட்க முடியாத ஒரு துறையாக இன்றைக்கு மாறியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு தொழிற்சங்கங்களின் சார்பில் மனு ஏதாவது கொடுத்தால் அந்த மனுதாரர், எதிர்மனுதாரரைக் கூப்பிட்டு, நேரடியாக வைத்துப் பேசுவதற்குக்கூட தயங்குகின்றது Labour Department. அதற்குப் பதிலாக, நாங்கள் அவர்களைக் கூப்பிட்டுப் பேசியதாக நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள், நாங்கள் அவர்களைக் கூப்பிட்டு எழுதி வாங்கியதாக நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள், உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள் என்று சொல்லி, மாநில உயர் அதிகார,

Labour Department அப்படிச் சொல்லுகின்ற ஒரு நிலை என்பது கடந்தகால ஆட்சியினுடைய தொடர்ச்சி. அப்படிப்பட்ட தொடர்ச்சிகள் என்பது நமது தலைவர் கலைஞர் ஆட்சியில் போக்கப்படுமென்ற ஒரு வலுவான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதேபோலத்தான்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *என்ன கலைராஜன்? கேளுங்கள்.*

**•திரு. வி.பி. கலைராஜன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பேசுகிறபோது, கடந்தகால ஆட்சிதான் ஏதோ தொழிலாளர்களையெல்லாம் ஒடுக்கி, நசுக்கியதாக அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிறார். இன்றைய முதலமைச்சர் (குறுக்கீடு) பேசாமல் இருங்கள், கொஞ்சம். இன்றைய முதலமைச்சர் அவர்கள், கடந்த காலத்திலே முதலமைச்சராக இருந்தபோதுதான், இதே கம்யூனிஸ்ட் கட்சியிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்த சுப்பையன் அவர்கள், இனிமேல் போராடமாட்டோம் என்று உத்தரவாதமாக கையெழுத்திட்டுவிட்டபிறகுதான், ஒரு இலட்சம் விவசாயத் தொழிலாளர்களெல்லாம், சிறையிலே இருக்கிறவர்களெல்லாம் விடுதலை செய்யப்படுவார்கள் என்று கையெழுத்து வாங்கிக்கொண்டுதான் அன்றைக்கு விடுதலை செய்தார்கள். அப்படித் தொழிலாளர்களை ஒடுக்கியவர்கள் அவர்கள்தான். அதேபோல, போராடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, அவர்தம் பிள்ளைகளுக்கு, அந்த மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு 32 இலட்சம் ரூபாய் மனித உரிமைக் கமிஷன், நஷ்டயீடாகக் கொடுக்க வேண்டுமென்பதை கடந்தகால ஆட்சியிலே கொடுக்கவில்லை. எங்கள் அம்மா முதலமைச்சராக வந்ததற்குப் பின்னால்தான் அந்த 32 இலட்சம் ரூபாயையும் கொடுத்தார்கள். எனவே, தொழிலாளர்களை ஒடுக்குகிற ஆட்சி எங்கள் ஆட்சி அல்ல என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. தி. இராமசாமி. (குறுக்கீடு)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கலைராஜன் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார். சென்ற அண்ணா தி.மு.க. ஆட்சி, தொழிலாளர்களுக்கு எவ்வாறு அவர்கள் சலுகைகளை வழங்கினார்கள்,*



*உரிமைகளை வழங்கினார்கள் என்பதை இந்த அவையும் அறியும். இந்த நாடும் அறியும். தொழிலாளர்கள் போராடினார்கள் என்ற காரணத்தினாலேயே, அவர்கள் அனைவருமே பழிதீர்க்கப்பட்டது மட்டுமல்லாமல், எஸ்மா, டெஸ்மா சட்டமே போடப்பட்டது. புதிய சட்டத்தையே உருவாக்கியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே உத்தரவின் மூலமாக 1¼ இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைப் பணியிலிருந்து நீக்கிய வரலாறு உலகத்திலேயே இல்லாத சாதனை அ.தி.மு.க. ஆட்சி காலத்திலேதான் நடைபெற்றது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, உறுப்பினர் கலைராஜன் அவர்கள் அதையும் மனதிலே வைத்துக்கொண்டு பேசுவது நல்லது. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *கலைராஜன், இதோடு முடித்துவிடலாம். அடுத்து, இராமசாமி அவர்கள் தொடரலாம். (குறுக்கீடு) இல்லை, முடித்துவிட்டீர்கள். நீங்கள் இரண்டு விஷயத்தைச் சொல்லிவிட்டீர்கள்.*

*பிற்பகல் 12-30*

**திரு. தி. இராமசாமி:** தொழிலாளர்கள்மீது கடந்த ஆட்சிக்கு இருந்த அக்கறைக்கு ஒரே உதாரணம், அமைக்கப்பட்ட பஞ்சாலை டிரிபியூனல் ஐந்தாண்டு காலமாக முடக்கப்பட்டு, அந்தத் தலைவர்கள் சந்திக்க வந்தபோதுகூட ஒருதடவைகூட சந்திப்பதற்கு மறுத்து, இன்றைக்கு நமது தலைவர் கலைஞர் வந்ததற்குப் பின்னால், அந்த டிரிபியூனலைச் சந்தித்து, உங்களுடைய கோரிக்கை பரிவோடு பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற செய்தி, அதுவே கடந்த ஆட்சி தொழிலாளர்கள்மீது எப்படி முறையாக இருந்தது என்பதற்கு ஓர் உதாரணம். எனவே, தொழிலாளர் நலத் துறை என்பதே கடந்தகால ஆட்சியில் முடக்கப்பட்டது. நல வாரியம் முடக்கப்பட்டது. அதனுடைய செயல்பாடுகள் என்பதே இல்லை. Factory-ஐயும், Labour Inspector-ஐயும் இரண்டையும் தனித்தனியாகப் பிரித்துவிட்டு, யாருமே எந்தப் பணியும் செய்யவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்கு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்திற்கு ஒதுக்கப்படுகின்ற அந்த நிதி அதிகப்படுத்தப்படவேண்டும். புதிதாக இப்பொழுது நமது ஆட்சி வந்ததற்குப் பின்னால், ஒரு சட்டம் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் கலைஞர் அவர்கள் ஆட்சி இருக்கும்போதுதான், கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திலிருந்து

அனைத்து நல வாரியங்களும் கொண்டுவரப்பட்டன. கடந்த 10 ஆண்டுக் காலத்தில் அந்த நல வாரியத்தில் கிட்டத்தட்ட 10 இலட்சம் உறுப்பினர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால், 80 இலட்சம் கட்டட தொழிலாளர்கள் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்துகொண்டிருக்கிறார்கள். 10 ஆண்டுக் காலத்திலே 10 இலட்சம் பேர்கள்தான். இதில் மீதியுள்ள பேர்களைப் பதிவு செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பது தெரியவில்லை. ஆனால், இன்றைக்கு எச்ஐவி. சர்டிபிகேட், உடல் தகுதி சர்டிபிகேட் ஆகிய இந்த இரண்டு சர்டிபிகேட்டுகளை வாங்கினால்தான் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் என்று ஒரு புதிய உத்தரவு இன்றைக்கு நமது தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த உத்தரவு என்பது...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற உத்தரவு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் பிறப்பிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** இல்லை என்றால் நன்றி. எனவே, இன்றைக்கு அனைத்துப் பகுதி தொழிலாளர்களுக்கும், தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தி, தொழிலாளர் நல வாரியங்களைச் செயல்படுத்தி, இன்றைக்கு நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் முறைப்படுத்தப்படும் என்ற ஒரு வலுவான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அதுபோலத்தான் இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு எங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில்தான் முதன்முதலில் கஞ்சித் தொட்டியே திறக்கப்பட்டது. 1996—லிருந்து 2001 வரை நடைபெற்ற ஆட்சியில் நமது கலைஞர் அவர்கள் ஆட்சியில, கைத்தறி நெசவாளர்களெல்லாம் செழிப்போடு வாழ்ந்தார்கள். எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அவர்களுக்குப் பாவு வழங்குவதிலும் சரி, மற்ற துணிகளைக் கொள்முதல் செய்வதிலும் சரி, கொள்முதல் செய்யப்பட்ட



துணிகளுக்கு உடனடியாக பணப் பட்டுவாடா செய்வதிலும் சரி, எதிலுமே காலதாமதம் இல்லாமல் நடந்தது. ஆண்டுக்காண்டு 10 சதவிகிதம் கூலியை உயர்த்துவதிலும் சரி, நடந்தது. ஆனால், அண்ணா தி.மு.க. ஆட்சி வந்ததற்குப் பிறகு, கூலி உயர்வு என்பதே இல்லை. கலைஞர் அவர்கள் ஆட்சியில் கொடுக்கப்பட்ட அந்த 10 சதவிகிதம் கூலி உயர்வு என்பது, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நிறுத்தப்பட்டது.

அதுமட்டுமல்ல, ஒதுக்கப்பட்ட இலவச வேட்டி சேலை இரகங்களில் குறிப்பாக விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டதை, இங்கேயிருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்குக் காலத்தில் வேலையும் கொடுத்து, அந்த ஒதுக்கீடு செய்த இலவச வேட்டி சேலை இரகங்களை உற்பத்தி செய்து கொடுப்பதற்குப் பதிலாக, ஆந்திராவுக்குப் போய் நாங்கள் இலவச வேட்டி சேலைகளை வாங்குகிறோம் என்று சொல்லி, இங்கிருக்கின்ற கைத்தறி நெசவாளர்களைப் பட்டினி போட்டு, ஆந்திராவிலே போய் கொள்முதல் செய்தார்கள். இன்னும் பல்வேறு மாநிலங்களுக்குப் போய் கொள்முதல் செய்தார்கள். அதனுடைய விளைவு பட்டினிச் சாவுகள். அதன் தொடர்ச்சியாக கஞ்சித் தொட்டி திறப்பு. அப்படி கஞ்சித் தொட்டி திறந்து, நெசவாளர்கள் தங்களுடைய எதிர்ப்பை ஆட்சியாளர்களுக்குக் காட்டிக் கொண்டிருந்த நேரத்தில், எதிரிலேயே பிரியாணி கடை வைத்து சாப்பிட்டு, அந்த நெசவாளர்களை, கேவலப்படுத்திய கூட்டம்தான் கடந்த ஆட்சி என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், 1996—லிருந்து 2001 வரை நடைபெற்ற கலைஞருடைய ஆட்சியில் நெசவாளர்களுக்காக பல்வேறு வகையான நலத் திட்டங்கள்—முதியோர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம், அதேபோல, புங்கர் பீமா திட்டம், மாணவர் கல்வி உதவித் திட்டம், (மணியடிக்கப்பெற்றது) இப்படிப் பல்வேறுவகையான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அந்தத் திட்டங்களெல்லாம் கடந்த ஆட்சியில் முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. இப்பொழுது இலவச வேட்டி சேலை என்பது முறையாக நெசவாளர்களுக்கு இந்த ஆட்சியில் தொடர்ந்து வழங்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்பொழுது அடிக்கடி ஊடுநூல் கிடைப்பதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. கடந்த ஆட்சியில் ஒரு சட்டத்தைப் போட்டு வைத்துவிட்டார்கள். அதாவது ஊடுநூல் கொள்முதல் செய்வது என்பதை தனியாரிடத்தில் போய் கொள்முதல் செய்வது.

தனியாரிடத்தில் கொள்முதல் செய்வது என்று சொன்னால் டெண்டர் வாங்கவேண்டும். அந்த டெண்டர் யார் குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று அரசு சரிபார்க்க வேண்டும். அதற்குப் பிறகு நூல் வரவேண்டும். இங்கே மாதக்கணக்கில் நெசவாளர்கள் வேலையில்லாமல் சும்மா இருக்கின்ற நிலையை கடந்த ஆட்சியில் ஏற்படுத்திவிட்டார்கள். இப்பொழுது நமது தலைவர் கலைஞருடைய ஆட்சியில் இது மாற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் கேள்விப்பட்டேன். இருந்தாலும் இன்னும் ஊடுநூல் கிடைப்பதில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, மீண்டும் நெசவாளர்கள் கூலி உயர்வாக 1996-லிருந்த நமது தலைவர் கலைஞர் ஆட்சியில் கொடுத்தது போன்று, அந்த 10 சதவிகிதக் கூலி உயர்வு என்பது அண்ணா தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்டது. இப்போது மீண்டும் தொடர்ச்சியாக அதை வழங்க வேண்டும்.

*பிற்பகல் 12–35*

அதேபோல, கல்வி உதவித் திட்டங்கள், அவற்றை அதிகரித்து வழங்க வேண்டும். நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் கட்டுவதற்காக மத்திய அரசினுடைய மானியம் 5 ஆயிரம், மாநில அரசினுடைய மானியம் 5 ஆயிரம் சேர்த்து 10 ஆயிரத்திற்கு அந்தத் தறிக்கூடம் கட்டுவதற்காக வழங்கப்பட்டது. மத்திய அரசு மானியம் 5 ஆயிரம் கிடைத்துவிட்டது. மாநில அரசு எங்கேயும் கொடுக்கவில்லை. அந்தக் கட்டப்பட்ட கட்டடங்கள் எல்லாம் அரைகுறையாக நிற்கின்றன. 5 ஆயிரம் ரூபாய் என்பது போன ஆட்சியில் வழங்கப்படவில்லை. அந்த நிதியையும் சேர்த்து நமது கலைஞருடைய ஆட்சியில்தான் வழங்க வேண்டியிருக்கிறது. நெசவாளர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 10 ஆயிரத்தில் மத்திய அரசின் 5 ஆயிரம் வந்துவிட்டது, மாநில அரசினுடைய நிதி எங்கே என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை நான் இங்கு கோரிக்கையாக வைக்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அந்த 5 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்பதை கோரிக்கையாக வைப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, நெசவாளர்களுக்காக நூல் உற்பத்தி செய்து கொடுப்பதற்காகத் தொடங்கப்பட்டது கூட்டுறவு மில். இந்தக் கூட்டுறவு மில்லில் உற்பத்தியாகின்ற நூல், அந்த நூலை வைத்து நெசவாளர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம், அதையொட்டி அந்த நெசவாளர்களுடைய நெசவு வாழ்க்கை. இதையெல்லாம் பற்றி யோசித்து கற்பனை செய்து பார்த்தால் ஒரு வளமிக்க தமிழகம் இருந்ததாக ஒரு கனவு இருக்கிறது. ஆனால், போன ஆட்சியில் கூட்டுறவு நூற்பாலைகளை மூடிவிட்டார்கள். அதிலும் குறிப்பாக எங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டிருக்கின்றது. போன ஆட்சியில் அதிகமாக இப்படி மூடியதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், SIMA-வோடு இரகசிய ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி எங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல், தொழிற்சங்கங்களுக்கு. அந்த அடிப்படையில் தனியாகக் கூப்பிட்டுப் பேசி அந்த மில்லை மூடியிருக்கின்றார்கள். இன்றைக்கு நெசவாளர் சங்கங்களுக்கு நூல் கிடைப்பதில் பல்வேறு வகையான சிரமங்கள் இருக்கின்றன. எனவே, இன்றைக்கு அந்தக் கூட்டுறவு மில்லைத் திறப்பதற்கான முயற்சியையும் நமது அரசு செய்ய வேண்டும்.



அதேபோல, இன்றைக்கு மாறி வருகின்ற சூழ்நிலையில் வெளிநாடுகளுக்குக் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்கின்ற முறையிலும் (மணியடிக்கப்பெற்றது) வடிவமைப்பை மாற்றுகின்ற முறையிலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** புதிய டிசைன்கள் தயார் பண்ணுவதற்காகவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. தி. இராமசாமி:** ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள கூட்டுறவு நூற்பாலைக்குச் சொந்தமான இடங்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடிக்கட்டும்.

**திரு. தி. இராமசாமி:** 200-க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, கொஞ்சம் உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அந்த டிசைன், வடிவமைப்பு மற்றும் ஏற்றுமதிக்கான தயாரிப்பு, அந்தப் பயிற்சி கொடுப்பதற்கான ஒரு

தொழிற்சாலையை அங்கே தொடங்க வேண்டும். அதேபோல, Asthma, T.B.—யினால் பாதிக்கக்கூடிய அந்த நெசவாளர்களுக்கு இதற்கு முந்தைய அரசு வழங்கியதுபோன்ற அந்தச் செறிவுத் திட்டத்தின் அடிப்படையில் வழங்க வேண்டும். அந்தச் செறிவுத் திட்டத்தை மாற்றி, இப்போது நேரடியாக ICICI வங்கி மூலமாக அதைப் பெறுவது என்று கொண்டுவந்துவிட்டார்கள். அதன் காரணமாக நோய்களால் பாதிக்கப்பட்ட அந்த நெசவாளர்கள் அந்தத் திட்டத்தின்மூலம் முறையாகப் பலன் பெற முடியவில்லை. எனவே, இந்த ICICI வங்கியின்மூலம் பெறுகின்ற அந்த முறையை மாற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *15 நிமிடம் ஆகிவிட்டது, உட்காருங்கள். திரு. இராமசாமி, உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு)*

**திரு. டி. ஜெயக்குமார்:** Sir, Speaker sir. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லப் போகிறேன். நீங்கள் முடியுங்கள் இராமசாமி. நன்றி சொல்லி முடியுங்கள்.*

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. ஆர். சாமி, திரு. பொ. சின்னப்பன், திரு. டி. ஜெயக்குமார் ஆகியோர் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மூன்று பேரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்றீர்கள் என்றால் என்ன அர்த்தம்? முதலிலே உட்காருங்கள். திரு. சாமி, உட்காருங்கள். உட்காருங்கள். திரு. சின்னப்பன், உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்ன சொல்லுங்கள், திரு. டி. ஜெயக்குமார் என்ன? (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) முடிக்கட்டும். முடிக்கட்டும்.*

**திரு. தி. இராமசாமி:** *கடந்த ஆட்சியில் வேலை நியமனத் தடைச் சட்டம் போடப்பட்ட காரணத்தால் வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மீது இளைஞர்களுக்கு நம்பிக்கையின்மை ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாக முறையாக இளைஞர்கள் தங்களுடைய பதிவை முறைப்படுத்திக்கொள்ளவில்லை. இப்போது நமது ஆட்சி அந்த வேலை நியமனத் தடைச் சட்டத்தை இரத்து செய்தவுடன், இளைஞர்கள் எல்லாம் மீண்டும் பழைய பதிவைத்*



*தொடர்ச்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார்கள். அவர்களுக்கு உதவியாக நமது அரசு பழைய பதிவின் தொடர்ச்சியாக அதாவது அந்தப் பதிவு மூப்பை அடிப்படையாகக் கொண்டு புதுப்பித்துக்கொள்வதற்கான அனுமதியை வழங்க வேண்டும்.*

*இன்றைக்குப் பட்டதாரி ஆசிரியர்கள் பதிவு மூப்பின் அடிப்படையில் பணி நியமனம் செய்வதாக அரசு அறிவிப்பு கொடுத்திருப்பது, பட்டதாரி ஆசிரியர்களுக்கு பால் வார்த்தது போன்று, அவர்களுடைய எதிர்காலம் நிச்சயிக்கப்பட்ட ஒன்றாக நினைத்து, மகிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதேபோல, முதுகலைப் பட்டதாரிகளும் குறைந்த எண்ணிக்கையில் இருப்பவர்கள்.*

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இராமசாமி, முடியுங்கள்.*

**திரு. தி. இராமசாமி:** *அவர்களுக்கும் அந்தப் பதிவு மூப்பு அடிப்படையில் பணி வழங்குவதற்கான வாய்ப்பை நமது அரசு உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் வீர. இளவரசன். (குறுக்கீடு) சொல்லுங்கள், ஜெயக்குமார் என்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

**திரு. டி. ஜெயக்குமார்:** *எங்கே சார், மைக் கிடைக்கவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மைக் உங்கள் முன்னாலேதான் இருக்கிறது. சொல்லுங்கள்.*

**திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) – சொல்கிறேன் சார் –* TESMA, ESMA *பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவரிடத்திலே கேட்பது, 1981 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே அன்றைக்குப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்* ESMA *சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு எல்லா எதிர்க்கட்சிகளும் எதிர்த்தன. அப்போது தி.மு.க. மட்டும் அன்றைக்கு ஆதரித்ததன் விளக்கத்தை இங்கே சொல்வாரா? (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே, தமிழகத்தில் இருக்கிற போக்குவரத்துத் துறையில் தனியாருக்கு பாதி பஸ்களை விற்பதற்கு ஆணை பிறப்பித்த அ.தி.மு.க.விற்குப் பேசத் தகுதியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விடுங்கள், விடுங்கள். (குறுக்கீடு) அடுத்தது வீர. இளவரசன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் வீர. இளவரசன். (குறுக்கீடு) விசுவநாதன் உட்காருங்கள். Not allowed, not permitted. நீங்கள் பேசுங்கள், வீர. இளவரசன். (குறுக்கீடு) சாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) Not permitted. விசுவநாதன், அனுமதி இல்லாமல் பேசக் கூடாது.

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆண்டவனை கோவில்களில் தேடாதே, அவன் கல் உடைக்கும் தொழிலாளியின் கண்ணீரிலும் வியர்வையிலும்தான் இருக்கிறான்' என்றார் தாகூர். தொழிற்சாலைகள்தான் என்னுடைய கோவில்கள், தொழிலாளிகள்தான் என்னுடைய வணக்கத்திற்குரிய தெய்வங்கள் என்றார் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். உலகம் உழைப்பாளிகளுக்கே, உலுத்தர்களுக்கல்ல. பிறர் உழைப்பை உண்டு கொழுப்பவர்களுக்கல்ல, சுரண்டி வாழ்வோருக்கல்ல என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அந்த உழைப்பாளிகள், தொழிலாளிகள், நெசவாளர்கள் பாதுகாக்கப்பட்டால்தான் நாட்டின் பொருளாதாரம் வளரும். ஏனென்றால், தொழிலும் பொருளாதார முன்னேற்றமும் ஒன்றையொன்று சார்ந்திருப்பவை. மனிதன் மனிதனைச் சுரண்டுகிற கொடுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் காரல் மார்க்ஸ், 'வேலை நேரத்தைக் குறை, கூலியை அதிகமாக்கு' என்றார். சொல்லிவிட்டு 'தொழிலாளி, அவனுடைய எதிரிக்காகவே உழைக்கிறான், அவனுடைய உழைப்பு அவன் எதிரியை உருவாக்குவதோடு, மேலும் அந்த எதிரியை பலப்படுத்துகிறது' என்றும் சொன்னார். சொல்லிவிட்டு, 'Labour is man loss to himself' என்றார். ஆனாலும், அன்றைய நிலைமை இன்றைக்கும் அப்படியே இருக்கிறது என்று சொல்ல முடியாது. பொருளாதார ரீதியில் தொழிலாளர்கள் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டதாகவும் நம்மால் சொல்ல முடியாது.



ஆண்டான் அடிமை என்ற நிலைமை வலுப்பெற்றபோதுதான், உரிமைகள் மறுக்கப்பட்டபோதுதான், புரட்சிகள் ஏற்பட்டன. இரஷ்யாவிலே ஏற்பட்ட புரட்சி, தொழிலாளர்களுக்கு உரிமைகள் பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அந்தப் புரட்சிதான் சர்வாதிகார ஜார் மன்னனுடைய யதேச்சதிகாரத்திலே இடியை விழச் செய்தது. அரச வம்சம், நிலப் பிரபுக்கள், மத நிலையங்கள் ஆகியவற்றின் பெருத்த சொத்துக்களை பொதுச் சொத்துக்களாக்கியது அந்தப் புரட்சிதான். இயந்திரத் தொழிலை அது தேசியமயமாக்கியது. ஏறத்தாழ ஒரு கோடி தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக ஒழுங்கமைத்தது அந்தப் புரட்சிதான். முதலாளித்துவம் தனக்கு சவக்குழி தோண்டுபவர்களையும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது என்றார் காரல் மார்க்ஸ். அந்தத் தத்துவத்திற்கு விடையாக அமைந்ததுதான் இரஷ்ய புரட்சி. பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவதே ஜனநாயக போர்க்களத்தில் பெறுகின்ற வெற்றி என்பதை நிரூபித்து, காரல் மார்க்ஸின் அறிவாற்றலைச் செயலாக்கிக் காட்டியவர் மாவீரன் லெனின்.

அத்தகைய புரட்சிதான் பாரதி சொன்னானே 'ஆகாவென்று எழுந்தது யுகப் புரட்சி' என்று; அந்த இரஷ்யப் புரட்சிதான் தொழிலாளர்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலாளர்களின் நிலைமை இன்றைக்கு எப்படியிருக்கிறது? தொழிற்சாலைகளின் நிலைமை எப்படியிருக்கிறது? குறிப்பாக, பொதுத் துறை நிறுவனங்கள், அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கூட்டுறவு நூற்பாலைகள் எந்த அளவிற்கு இன்றைக்கு இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏறத்தாழ 40 ஆண்டு காலத்திற்கு முன்னால் இரஷ்யாவிலிருந்து வந்த ஆய்வுக் குழுவினர் அன்றைக்கே நமது பொதுத் துறை நிறுவனங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அப்போது குறிப்பிடுகின்றபோது 'inexperienced management and lack of discipline among the labourers are the two major contributory factors for the poor performance of the Indian Public Sector Undertakings' என்றார்கள். எனவே, நிர்வாகத் திறமையும், அனுபவமும், ஆற்றலும் பெற்றவர்கள் தொழிற்சாலை நிர்வாகத்தில் அமர்த்தப்பட்டால்தான் தொழில்கள் வளரும், தொழிலாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள், நாடு பொருளாதார சமூக முன்னேற்றத்தை அடைய முடியும்.

தொழில் முன்னேற்றம் இருந்தால்தான் பிற நாட்டோடு நாம் போட்டியிட முடியும். தொழிலாளர் சக்தியின் மிகப் பெரிய அங்கம்,

அமைப்பு சாரா தொழிலாளர்கள் என்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பல இலட்சக்கணக்கில் இருக்கின்ற அப்படிப்பட்ட அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட்டாகவேண்டும். அப்படிப்பட்ட தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துகின்ற வகையில் தக்க பயிற்சிகளைக் கொடுக்க வேண்டியது நம்முடைய அரசாங்கத்தின் தலையாய கடமை.

*பிற்பகல் 12–45*

அதேபோல, விவசாயத் தொழிலாளர்கள், குறிப்பிட்ட காலம் தவிர மற்ற நாட்களில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு பல்வேறு திட்டங்கள்மூலம் சிறு, குறு தொழில்களின் மூலமாக வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, இந்நாட்டில் பரந்து விரிந்திருக்கிற தொழிலாளர்கள், பாரம் தூக்குகின்ற தொழிலாளர்கள், அவர்களுக்குத் தனியாக ஓர் அமைப்பை அமைத்து அவர்களின் முன்னேற்றத்திற்கு இந்த அரசு வழி காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிறு தொழில் மூலமாக இந்த நாட்டிலே 40 சதவிகிதம் ஏற்றுமதி வாய்ப்பு இருக்கிறது. அதேபோல ஏறத்தாழ 60 சதவிகிதம் வேலைவாய்ப்பு இருக்கிற காரணத்தினால் சிறு தொழிலை ஊக்குவிக்கின்ற வகையிலும், அந்தத் தொழில் நலிவடையாமல் பாதுகாப்பதற்காகவும், இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு கிடைத்திடவும், குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்வதிலேயும் முழுமையாக வெற்றி பெறுகின்ற வகையிலும் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்ற இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர்கள் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஜூன் 12 ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனாலும், முழுமையாக, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, ஒழிக்கப்பட்டுவிட்டதா என்பதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும். பல இடங்களில், ஓட்டல்களில், பல நிறுவனங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் இன்றைக்கும் அங்கே அடிமைகளைப்போல் நடத்தப்படுவதை நாம் பார்க்க முடியும். எனவே, அத்தகைய நிலவரங்களையெல்லாம் கண்காணித்து, இந்த அரசு தக்க நடவடிக்கை



எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற பெரிய விபத்துகளைத் தடுப்பது ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழகத்தில் 43,000 குழந்தைத் தொழிலாளர்கள்பற்றி ஆய்வு செய்யப்பட்டு, 120 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 113 குழந்தைத் தொழிலாளர்கள் என்று அறியப்பட்டு, இன்றைக்கு வழக்குகள் போடப்பட்டு, கிட்டத்தட்ட ரூ.3,32,000/– அபராதம் வசூல் செய்து, இந்த அரசிற்கு வரப்பட்டிருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. வீர. இளவரசன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற பெரும் விபத்துகளைத் தடுக்கின்ற முகமாக 1988-ல் பெரும்விபத்து மற்றும் பேரபாய தடுப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. ஆனால், இன்னும் அதுபோன்ற சில விபத்துகள், பல இடங்களில் ஆங்காங்கு நடந்துகொண்டுதான் இருக்கின்றன. எனவே, அபாயம் நிகழாமல் தடுப்பதற்குத் தேவையான முன் நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டின் மிக முக்கியப் பிரச்சினையாக இருப்பது வேலையில்லாத் திண்டாட்டம். இதனைப் போக்குவது மிக இன்றியமையாத கடமையாக நமக்கு இருக்கிறது. எல்லோருக்கும் அரசாங்கத்தில் வேலை கொடுத்துவிட முடியாது. முதலில் 10, 15 ஆண்டுகளாகப் பதிவு செய்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு நாம் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும். அரசாங்கத்தில் காலியாக உள்ள இடங்களில் தகுதியானவர்களை நிரப்புவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டால் ஒரு குறிப்பிட்ட அளவு வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க முடியும்.

வேலை தேடுகின்ற நமது இளைஞர்கள் அயல் நாடுகளுக்குச் செல்ல விரும்புகிறார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகளை, உதவிகளைச் செய்து கொடுத்து அதன்மூலம் ஒரு குறிப்பிட்ட அளவை நாம் குறைத்திட முடியும். அதற்காக 1978 ஆம் ஆண்டு, அயல் நாட்டு வேலைவாய்ப்பு

நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. அதன்மூலமாக பல்வேறு உதவிகளைச் செய்தால், அயல் நாடுகளுக்குச் சென்று இளைஞர்கள் வேலைகளைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

அதேபோல கைத்தறி. நாட்டின் மரபு மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாப்பதிலும் பொருளாதார வளர்ச்சியிலும். கைத்தறித் தொழில் மிக முக்கியமான பங்கினை வகிக்கிறது. அதற்காக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல்வேறு சங்கங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. மத்திய அரசால் அறிமுகப்படுத்திய ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டம். 2003–2004 ஆம் ஆண்டு தமிழகத்தில் துவங்கப்பட்டது. கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம் 1979–80 முதல் தமிழக அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக இந்த ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகை மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, நமது அரசாங்கம் இதற்காகக் கூடுதல் நிதி ஒதுக்கிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

துணி உற்பத்தியைப் பொறுத்தமட்டிலும் தமிழகத்திற்கு தனித்த பெருமை இருக்கிறது. 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் 16 நூற்பாலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆக, இந்தியாவின் மொத்த துணி உற்பத்தியில் நம்முடைய தமிழகத்தின் பங்கு 27 சதவிகிதமாக இருக்கிறது. ஏறத்தாழ 3–ல் 1 பங்கு துணி தமிழகத்தில்தான் உற்பத்தியாகிறது. ஆயத்த ஆடைத் தொழிலில் சுமார் ரூ.2,500 கோடியும், பின்னலாடைத் தொழிலில் ரூ.8,000 கோடியும் அன்னியச் செலாவணியாகக் கிடைக்கிறது. மொத்தமுள்ள 8,000 பின்னலாடை உற்பத்தி ஆலைகளில் தமிழகத்தில் மட்டும் 4,000 ஆலைகள் இருக்கின்றன. நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தில் மட்டும் 44 சதவிகிதம் கிடைக்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமைப்படத்தக்க விஷயமாக இருக்கிறது.

நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் சுமார் 3–ல் 1 பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு மொத்த நூல் உற்பத்தி 3,223.52 மில்லியன் கிலோவில் 1,261.98 மில்லியன் கிலோ அளவிற்கு தமிழகத்தில்தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் ஏறத்தாழ மொத்த உற்பத்தியில் 40 சதவிகிதத்திற்கும் அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட நம்முடைய கைத்தறி நெசவுத் தொழிலையும் தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் நமக்கெல்லாம் இருக்கிறது. உலக தாராளமயமாக்கல் கொள்கையினால் இந்திய



ஜவுளிகளின் தேவை பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. சர்வதேச தரத்திற்கு உற்பத்தியை இன்னும் அதிகரிக்கவும், தனித்திறன் வாய்ந்த வேலையாட்களின் தேவை அதிகமாக இருப்பதாலும் அதற்காக இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து, அதன்மூலம் வேலைவாய்ப்புகளையும் நாம் உருவாக்க வேண்டும்.

தொழிலாளர் நீதிமன்றங்களுக்குத் தமிழக அரசால் அனுப்பி வைக்கப்படும் தொழில் வழக்குகளை 3 மாதங்களுக்குள் தீர்வு செய்து கொடுக்க வேண்டுமென்று தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால், 3, 4 ஆண்டுகளாகியும் வழக்குகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. குறித்த காலத்திற்குள் தீர்வு செய்து கொடுப்பதற்கு தமிழக அரசு நிர்வாகத்தின்கீழ் இயங்குகின்ற துறைகள் மூலம் உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தமிழக அரசு நிர்வாகத்தின்கீழ் இருக்கின்ற கரூர் மாவட்டம் T.N.P.L புகளூர் காகித ஆலை தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் நிகர இலாபம் ஈட்டி வருகிறது. இந்த ஆலையில் அதிகாரிகள், ஊழியர்கள், தொழிலாளர்கள் சுமார் 1,750 பேர் பணி நிரந்தரம் பெற்றவர்கள். இந்த ஆலையில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையில் வேலை செய்வோர் 2,000 பேர் இருக்கிறார்கள். இவர்கள் ரோலில் உள்ளவர்கள் என்று 1,600 பேரை பிரித்து வைத்து, மாதம் சுமார் 3,200 ரூபாயும், ரோலில் இல்லாதவர்கள் எனக் கூறி, தினசரி 60 ரூபாயும் கொடுக்கிறார்கள். ஆனால், இவர்கள் அனைவரும் ஒரே பணியில்தான் வேலை செய்கிறார்கள். பல்லாண்டு காலமாக ஆலையின். மேம்பாட்டுக்கு உழைத்து வரும் இவர்களைப் பணி நிரந்தரம் செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்களின் பொது ஊதிய ஒப்பந்தமானது 31–12–1999 ஆம் தேதியுடன் முடிவுபெற்றது. புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென்று பஞ்சாலை நிர்வாகங்களுக்கு 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகளை அனுப்பி வைத்து, நேரடிப் பேச்சு வார்த்தைக்கு தேதி கேட்கப்பட்டது. ஆனால், நிர்வாகம் முன்வரவில்லை. பிறகு, 20–3–2001 தேதியில் G.O.No. 688 மூலம் தமிழக அரசு சிறப்பு தனித் தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்பி வைத்தது. ஆனால், 5 ஆண்டுகள் ஆகியும் தீர்வு எதுவும் ஏற்படவில்லை. இது அந்த நிலையில் இருந்து வருகிறது. எனவே, சிறப்பு தனித் தொழில் தீர்ப்பாய நடவடிக்கைகளை விரைவுபடுத்தி தீர்வு

ஏற்படவும், மேலும் தாமதமானால் இருசாராரையும் அழைத்துப்பேசி அரசு ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவும் வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளில் தொடர்ந்து உற்பத்திப் பிரிவுகளில் நிரந்தரமற்ற தொழிலாளர்களை gang coolie என்ற பெயரில் மிகக் குறைந்த ஊதியம் கொடுத்து நேரம் காலமின்றி, வேலை வாங்கி, நவீன கொத்தடிமையைப் போல் தொழிற்சாலை அதிபர்கள் சில இடங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, திருமணம் ஆகாத பெண்களின் பொருளாதாரக் கஷ்டத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு, அவர்களுக்கு சட்டப்பாதுகாப்பு இல்லாமல் இருக்கும் நிலை மிகவும் கொடுமையானது. அப்படிப்பட்ட தொழிலாளர்களின் உழைப்பு மற்றும் ஊதியத்தையும் சுரண்டுவதைத் தடுத்திட இரு தரப்பையும் அழைத்துப் பேசி, அவர்களுக்கு ஒரு நல்ல பாதுகாப்பான நிலைமையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தவித சட்டப்படியான வழிமுறைகளையும் பின்பற்றாமல் உற்பத்தி நிறுத்தம் என்ற பெயரில் தொழிற்சாலைகளை மூடிவிடுகின்றனர். தொழிலாளர்கள் வேலையிழந்து, ஊதியம் இழந்து சொல்ல முடியாத துன்பத்திற்கு ஆளாகிறார்கள். மூடப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தையும் தொழிலாளர்களையும் அழைத்துப் பேசி தீர்வு காண வேண்டும்; அல்லது அவர்கள் பணிபுரிந்த காலத்திற்கு உரிய பணிக்கொடைத் தொகை, நஷ்ட ஈட்டுத் தொகையாவது உடனடியாகக் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய திருமங்கலம் தொகுதியில் ஒரேயொரு கோரிக்கையைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

திருமங்கலம் தொகுதியில் எண்ணற்றவர்கள், பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடக்கூடிய ஒரு நிலைமை இருந்து வருகிறது. மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற திருமங்கலம் தொகுதியில் குறிப்பாக கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியில் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று நான் நீண்டநாட்களாக, சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்ற நாளிலிருந்து நம்முடைய அரசாங்கத்தை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைக் கேட்டு வருகிறேன். கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கும், அந்தப் பகுதி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டு, வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 12–55

## 2. தகவல் கோரல்

### திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தியைப் பேரவைப் பணிகளினின்றும் நீக்கி வைத்ததைப் பரிசீலிக்கக் கோருதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராஜேந்திரன். (குறுக்கீடு) என்ன, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம் நடந்து கொண்டிருந்தபோது பேரவைத் தலைவர் அவர்கள் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தீர்கள். இடையில் குறுக்கிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது இருதரப்பிலும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. வாக்குவாதம் நடந்துகொண்டிருந்த நிலையில், பேரவைத் தலைவர் அவர்கள் அத்தனை உறுப்பினர்களையும் வெளியேற்றும்படி உத்தரவு அளித்தீர்கள். ஆனால், அதற்கு முன்னால், அமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கின்ற உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பக்கம் பார்த்து, எங்களைப் பார்த்து ** என்று சொன்னார்கள். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் பாதுகாக்கின்ற பொறுப்பும், கடமையும் பேரவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கின்றது. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தவறிழைத்தார் என்று நாங்கள் வெளியே சென்றவுடன் சொல்லி, அவரை இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடியும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கின்றீர்கள். ஆனால், அத்தனை பேர் முன்னிலையிலும் ஓர் உயர்ந்த பொறுப்பில் இருக்கின்ற, அமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கின்ற ஓர் அமைச்சர் ** என்று சொன்ன வார்த்தைக்கு—மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற பொறுப்பும், கடமையும் சட்டப் பேரவைத் தலைவருக்கு இருக்கின்றது—இதற்குப் பேரவைத் தலைவர் அவர்கள் என்ன தீர்ப்பு வழங்க இருக்கின்றீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் விளக்கம் சொல்ல இருக்கிறார். இருந்தாலும் அருகிலே இருந்தவன் நான். அவர் என்ன சொன்னார் என்பது எனக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், நாள்தோறும் அந்த அக்ரி கிருஷ்ணமூர்த்தி என்ன பேசுகிறார் என்பதை நீங்கள் கேட்டாவது தெரிந்துகொள்ள வேண்டும். அதைத் தெரிந்துகொண்டே வேண்டுமென்றே இங்கே மறைப்பது நன்றாக இருக்காது. அருகில் இருக்கிற பெண்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்பதைக் கேளுங்கள். ஓர் உயர்ந்த பொறுப்பில் இருக்கின்ற அமைச்சர் இப்படி பேசலாமா என்று கேட்கிறீர்கள். ஆனால், தினந்தோறும், அந்த உயர்ந்த பொறுப்பில் இருக்கின்ற அமைச்சரை நோக்கி என்ன வார்த்தையைச் சொல்வது, என்ன வார்த்தையைச் சொல்வதில்லை என்று இல்லையா ? அவர் மிகவும் கொச்சையான வார்த்தையில் பேசுகிறார். அதை முதலில் கேளுங்கள், அதற்குப் பிறகு பேசலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தகாத வார்த்தை கூறினார் என்று இதற்கு முன்னால் சட்டப் பேரவைத் தலைவரிடம் ஏதாவது முறையீடு வந்திருக்கின்றதா? அந்த முறையீட்டை இந்தச் சட்டமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் தெரிவித்திருக்கின்றாரா? எதுவுமே இல்லை. ஒரு வாதத்திற்காக இன்றைக்கு அந்த வார்த்தையை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவையிலே ஒருமுகமாக எடுத்துச்சொல்லப்பட்ட கருத்தின் அடிப்படையில், வேதனையோடு, வருத்தத்தோடு தங்களுடைய துயரத்தைத் தெரிவித்துக் கொண்டதன் அடிப்படையில், பேரவைத் தலைவர் அவர்கள் ஓர் ஆணை பிறப்பித்து, அவர் தீர்ப்பு அளித்து, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்த அந்த உறுப்பினர் அவையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். ஆக, அது இந்த அவையினுடைய மொத்த முடிவு. அந்த முடிவுக்கு என்னென்ன காரணம் என்பதை இங்கே பேசப்பட்ட விவரங்களிலே இருந்து யாரும் தெரிந்துகொள்ளலாம். அதை வைத்து தீர்ப்புச் சொன்னவர் பேரவைத் தலைவர் அவர்கள். ஆக, இப்போது அதை கேள்வி கேட்பதுபோல பிரச்சினை எழுப்புவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

இரண்டாவது, இங்கே அமைச்சராக இருப்பவர் தவறான வார்த்தையைப் பேசினார் அல்லது கடுமையான வார்த்தையைப் பேசினார் என்பதற்கு ஒரு தொடரை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். அப்படி அவர் சொல்லியிருக்க நியாயம் இல்லை, காரணம் இல்லை. ஒருவேளை சொல்லியிருந்தால், அது தங்கள் காதிலே விழுந்திருந்தாலும் அல்லது முன்னவர் காதிலே விழுந்திருந்தாலும், நாங்கள் அதை இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொண்டிருப்போம். அதுவே தங்களுடைய தீர்ப்பாக அமையும். (குறுக்கீடு)



பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர்தான் விளக்கமாக எல்லாம் சொல்லிவிட்டார் இல்லையா? அவை முன்னவர் விளக்கமாகச் சொல்லிவிட்டார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** **இருக்கக் கூடாது என்பதுதான் என் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவருடைய தீர்ப்பை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. நீங்கள் ஏற்கெனவே கொஞ்ச காலம் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள். அவைத் தலைவருடைய தீர்ப்பை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. அதனால் உட்காருங்கள். (குறுக்கீடு) அறைக்கு வாருங்கள். அவர் என்னென்ன பேசினார் என்பதை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், தினந்தோறும் அவர் கவனித்துக்கொண்டிருக்கிறார். முன் வரிசையில் அவர் அமர்ந்துகொண்டிருக்கும்போதே, பின்னாலே இருப்பவர்கள் சில பேர் எப்படிப் பேசுகிறார்கள் என்பதை நீங்களும் அறிந்திருக்கிறீர்கள். இங்கே கலைஞர் முதல்வர் அவர்கள் பேசுகிறபோது, கலைஞர் முதல்வர் அவர்கள் உங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போதே அவர்கள் எல்லாம் என்னென்ன வார்த்தைகள் பேசினார்கள் என்பதை பக்கத்தில் இருக்கிற உறுப்பினர்கள், உங்கள் கட்சிக்காரர்கள் இருந்தால்கூட தயவுசெய்து கேட்டுப் பாருங்கள். அந்த அளவிற்கு முதல்வர் பேசுகிறபோதே குறுக்கிட்டு, குறுக்கிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார். குறுக்கிட்டுப் பேசுகிறபொழுது, ** என்ற வார்த்தையை உபயோகித்தார் அவர். ** என்று கேட்டதற்காக என்மீதே நீங்கள் அந்தப் பழியைப் போட்டீர்கள். அதுதான் நடந்தது. ஆக, உங்கள் உறுப்பினர் பேசியவார்த்தை, கொஞ்ச நஞ்சமாகப் பேசவில்லை. அதையும் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) நீங்களும்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அதன்மீது நான் தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது, விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2006 ஆகஸ்ட் 12

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு விளக்கம் கேட்டார்கள். அது அவர்களுடைய உரிமை. தீர்ப்பு சொல்ல வேண்டியது உங்களுடைய கடமை. இந்த அவையிலே பொதுவாக எந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டாலும், அது யார்மீது எழுப்பப்பட்டாலும் சம்பந்தப்பட்ட உறுப்பினர், நான் அப்படிச் சொல்லவில்லை என்ற ஒரு மறுப்பு தெரிவிப்பாரேயானால் அது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த அவையினுடைய மரபு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டார் இல்லையா? அமைச்சரே சொல்லிவிட்டார் இல்லையா? அந்த வார்த்தையைச் சொல்லவில்லை என்று. விளக்க உரை சொன்னதற்கு அப்புறம் அதற்குமேல் என்ன விவாதம்? உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் பேசுகின்றபொழுது, அவை உறுப்பினர்களின் ஒட்டுமொத்தக் கருத்தாக மாண்புமிகு உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னார். அதிகப் பெரும்பான்மை இருந்தால், இந்தச் சபையை ** தீர்ப்பு வழங்குவீர்களா என்பதனை இன்றைக்கு நாங்கள் கேட்க விரும்புகிறோம். குறைந்தபட்சமாகவாவது, இந்த அவையில் அனைவரும் போற்றப்படுகின்ற, பாராட்டப்படுகின்ற இந்த அவையில், சக உறுப்பினர்களைப் பார்த்து ** என்று சொன்ன அமைச்சர் பொன்முடி அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர், நான் சொல்லவில்லை என்று சொன்னதற்கு அப்புறம் திரும்ப அந்த issue-ஐக் கிளப்புவது முறையில்லை. அடுத்து, என்னுடைய தீர்ப்பை question பண்ணுவதற்கு absolutely you have no right. Sit down. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. இராஜேந்திரன், பேசுங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் சாதாரணத் தொண்டனான என்னை, இந்த மாமன்றத்தில் ... (குறுக்கீடு)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 ஆகஸ்ட் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லியாகிவிட்டது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதைக் கேளுங்கள். You have no right to question my rulings. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. இரா. இராஜேந்திரன்:** இடம்பெறச் செய்த தமிழினத்தின் ஒப்பற்றத் தலைவர், முத்தமிழ் அறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நிதியமைச்சர் மாண்புமிகு இனமான பேராசிரியர் அவர்களுக்கும், மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், இளைய சமுதாயத்தின் வழிகாட்டி ... (மணியடிக்கப்பெற்றது) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராஜேந்திரன், கொஞ்சம் இருங்கள். அதாவது, அவர், அமைச்சர், தான் சொல்லவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, திரும்ப ஏன் அதை rake up பண்ணுகிறீர்கள்? நான் சொன்ன தீர்ப்பை நீங்கள் question பண்ணுகிறீர்கள். இப்படி எல்லாரும் எழுந்து நின்று கத்தினால் இதைச் செய்துவிடுவார்களா என்ன? ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்னுடைய தீர்ப்பை, நீங்கள் ** என்று அவையிலேயே சொல்கிறீர்கள். மின் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) இதுதான் அவைக் கட்டுப்பாடா? உங்கள் துணைத் தலைவர் நின்றுகொண்டிருக்கிறார். நீங்கள் எல்லாம் பின்னால் நின்றுகொண்டு கத்துகிறீர்கள். இதுதான் முறையா? அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளை இந்த ஆட்சியினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எவ்வளவு மதிக்கிறார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக, தாங்கள் ஓர் உத்தரவைப் பிறப்பித்து, காவலர்கள் எல்லாம் எதிர்க்கட்சியினரை வெளியேற்றிய நேரத்தில், இந்த அவையினுடைய நடவடிக்கைகளிலே அவர்கள் பங்கேற்க வேண்டும், அவர்கள் திரும்ப வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்கள். இது கலைஞருடைய நாகரீகம், பண்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆனால், கடந்த காலத்திலே நாங்கள் வெளியேறியபோது, அப்படி ஓர் அழைப்பு முதலமைச்சர் விட வேண்டாம். எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர்கூட விட்டிருக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட மரபுகளையெல்லாம் மாற்றி, இன்று அவை சுமுகமாக நடக்க வேண்டும் என்று ஒரு நல்ல எண்ணத்தோடு முதலமைச்சரும் ஒரு வேண்டுகோள் விடுத்த பிறகு, உங்கள்மீது நல்ல மரியாதையும், மாண்பும் வைத்துக் கொண்டிருக்கும்போது, ஓர் அமைச்சரைப்பற்றி நீங்கள் குறிப்பிட்டுக் கேட்டு, அவரே நான் அப்படி பேசவில்லை என்று தெரிவித்ததற்குப் பிறகு, (குறுக்கீடுகள்) நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு (குறுக்கீடுகள்)...

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொருவரும் என்னென்ன பேசினார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். ஆனால், அதையெல்லாம் குறிப்பிட்டு நாங்கள் யாரையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அதிலும் குறிப்பாக, ஒரு சிலர், எல்லோரும் என்று சொல்லமாட்டேன். இந்த 61 பேரிலே ஒரு ஐந்தே ஐந்து பேர்தான். அந்த ஐந்து பேர் யார் என்பது அவர்களுடைய மனச்சாட்சிக்கே தெரியும். பெயர்கூட நான் குறிப்பிட விரும்பவில்லை. அதனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயரை எல்லாம் நாங்கள் குறித்துத்தான் வைத்திருக்கிறோம், யார், யார் என்ன பண்ணுகிறார்கள் என்று.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆனாலும்கூட, அதையெல்லாம் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டிருக்கின்ற ஒரு முதலமைச்சரைப் பார்த்தே, தகாத வார்த்தைகள் சொன்ன நேரத்தில், அமைச்சர்கள் என்னதான் மனிதாபிமானம் படைத்தவர்களாக இருந்தாலும்கூட, சில நேரத்திலே உணர்ச்சிவயப்படுவது இயற்கை. இருந்தாலும்கூட, பொன்முடி நான் அப்படிப்பட்ட வார்த்தை பயன்படுத்தவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, ஏற்றுக்கொள்வதுதான் இந்த அவையினுடைய மரபு. அது நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது அல்ல. (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் நிறைய ஆகிக் கொண்டிருக்கிறது. திருப்பித் திருப்பி பாடிக் கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? அமைச்சர் தெளிவான விளக்கம் சொல்லியாகி விட்டது. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்த சம்பவத்தில் எதிர்க்கட்சியில் இருக்கின்ற ஓர் உறுப்பினருக்கு தண்டனை; அதே வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஓர் அமைச்சருக்குத் தண்டனை இல்லை என்றால், எந்தவிதத்தில் இந்தத் தீர்ப்பு நியாயமாகும் என்பதனை நான் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதே போக்கு நீடித்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பை, அப்போதே சொல்லிவிட்டேன் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னுடைய தீர்ப்பை நீங்கள் question பண்ண முடியாது. தீர்ப்பு சொன்னது, சொன்னதுதான். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் நியாயம் கேட்கிறார். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. கடந்த காலத்திலே, பரிதி இளம்வழுதியையும், சட்டமன்ற உறுப்பினராக இருந்த அன்பழகன் அவர்களையும், எந்த அளவிற்கு இந்த அவையிலே, அப்போது ஆட்சியிலே இருந்தவர்கள் நடத்தினார்கள் என்பதும், அப்போது பேரவைத் தலைவராக இருந்த மாண்புமிகு காளிமுத்து அவர்கள் எப்படிப்பட்ட தீர்ப்புகள் வழங்கினார் என்பதும் நம்முடைய அவையினுடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியும். இப்பொழுது நாங்கள் அப்படி நடத்த விரும்பவில்லை. உங்களை மதிக்கிறோம், வரவேற்கிறோம். உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய நேரம் கொடுக்கிறோம். நேற்றையதினம்கூட, எதிர்க்கட்சி சார்பிலே அரை மணி நேரம் பேசப்பட்டது. நீங்கள் எடுத்துப்பாருங்கள் கடந்தகால வரலாற்றை. ஒரு மானியத்தின்மீது, எதிர்க்கட்சி அரை மணி நேரம் பேசியிருக்கிறார்களா என்று எடுத்துப்பாருங்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே சுமுகமாக இந்த அவையை நடத்த வேண்டும் என்று இந்த அரசு விரும்புகின்ற நேரத்திலே நீங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னங்க. (குறுக்கீடுகள்) அவர் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்ப எழுந்திருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். தாங்கள் இந்த இருக்கையில் இருந்து உதிர்க்கின்ற ஒவ்வொரு வார்த்தைகளும் தீர்ப்புகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பது மரபு மட்டுமல்ல, விதியும்கூட. இருந்தும்கூட, உங்களையே ** என்று சொல்வது உங்களுடைய உரிமையை மீறுகின்ற செயலாக நான் கருதுகின்றேன். இது குறித்து தெளிவான தீர்ப்பு நீங்கள் வழங்க வேண்டும். அடுத்து, நீங்கள் வெளியேற்றினீர்கள். அடுத்து, முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்ததையடுத்து, நீங்கள் அழைப்பு விடுத்தீர்கள். அதன் பிறகு, சிறிது நேரம் கழித்து வெளியே எங்கோ ஆலோசனை நடத்தி விட்டு, அந்தச் சதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மீண்டும் வந்து, சபையை நடத்தவிடாமல் குந்தகம் விளைவிப்பதற்கு–நீங்கள் சரியான நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர்செல்வம், நீங்கள் ஏற்கெனவே விளக்கம் எத்தனை முறை சொல்லிவிட்டீர்கள் ? எது என்றாலும், ஒரே வார்த்தையாகச் சொல்லி முடியுங்கள். திரும்பத் திரும்ப எழுந்து, எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) யோசித்து, யோசித்துச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள் என்றால் எப்படி?

பிற்பகல் 1–10

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நாங்கள் கடந்த காலத்தில் யாரையும் மதியாத நிலை கொண்டிருந்தோம் என்று இங்கே சொன்னார்கள். இன்றைக்கு அவை முன்னவராக இருக்கின்ற நிதி அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருந்தார்கள். நாங்கள் அமைச்சர்கள் பேசிக் கொண்டிருந்தாலும், அவர் எழுந்து குறுக்கிட்டால், அவருக்கு வாய்ப்பு அளித்து நாங்கள் உட்கார்ந்திருக்கின்றோம். அந்த அளவிற்கு நாங்கள் அவர்களை மரியாதையாகத்தான் நடத்தினோமேயொழிய, யாருக்கும் எந்த மரியாதை குறைவும் நாங்கள் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். நீங்கள் சரியான தீர்ப்பு வழங்குங்கள்; திரு. கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு தீர்ப்பு, அமைச்சருக்கு ஒரு தீர்ப்பு என்றால், இது எந்தவிதத்தில் நியாயம் என்றுதான் நான் கேட்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பேர் செய்ததும் ஒரே வகையான குற்றம் அல்ல. ஒருவர் செய்த குற்றம், அவையை அவமதிப்பது – தொடர்ந்து அவமதிப்பது. இன்னொருவர்மீது சொல்லப்படுகிற குற்றம் அவர் ஒத்துக்கொள்ளாதது. ஒத்துக்கொண்டதாக நீங்கள் கருதினாலும் அல்லது நீங்கள் சொல்வதுதான் உண்மை என்றாலும், அப்படிச் சொன்ன நேரத்தில், அந்த வார்த்தை அவைத் தலைவருடைய காதிலே விழுந்திருக்குமானால், அது நிச்சயமாக அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படும். அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுவதேகூட அமைச்சருடைய பேச்சில் தலைவர் விதிக்கிற ஒரு விதமான தண்டனைதான். ஆக, அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதைத் தவிர அதற்குமேல் எந்தவிதமான நடவடிக்கை எடுப்பதற்கும் இதிலே இடமில்லை என்பதை என்னுடைய நீண்ட அனுபவம் காரணமாக நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன். (கூச்சல்–குழப்பம்)

***திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் சாதாரணத் தொண்டனான என்னை இந்த மாபெரும் மன்றத்திலே இடம்பெறச் செய்த தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர், தமிழக முதல்வர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் இனமான பேராசிரியர் அவர்களுக்கும், மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், இளைய சமுதாயத்தின் வழிகாட்டி, இன்முகத்தோடு எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் வீரபாண்டியார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

*(அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

பனமரத்துப்பட்டி சட்டப் பேரவைத் தொகுதியிலே உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கேட்டு, என்னை வெற்றிபெறச் செய்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கும், செயல்வீரர்களுக்கும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளம் வயது முதல் தலைவர் கலைஞர் அவர்களை, ஓர் உழைப்பாளியாக, போராளியாக, செயலாக்கத்திறன் மிக்கவராக, தமிழ் சமுதாயத்தின் பாதுகாவலராக, தொழிலாளர்களின் உற்ற தோழனாக விளங்குவதை இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. இதனை இதயம் உள்ள எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். 'நாடு பாதி, நங்கவரம் பாதி' என்று சொல்லுவார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் குளித்தலைப் பகுதியிலே உள்ள நங்கவரம் பண்ணையில் விவசாயத் தொழிலாளர்களின் கையேறுவாரம், மாட்டேறுவாரம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போராடி அறப்போர் நடத்தி வெற்றி கண்டவர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

திருச்சி, பீடித் தொழிலாளர்களின் கூலி உயர்வுக்குப் போராடி, கூலி உயர்வைப் பெற்றுத் தந்தவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். தஞ்சை Swamy Motors Transport தொழிலாளர்களின் துயர் போக்கிட கழக முன்னோடிகளுக்கு ஆலோசனை வழங்கி, மறியல் செய்து, தொழிலாளர்களுக்குப் பணிப் பாதுகாப்புடன்கூடிய வாழ்வுரிமை கிடைக்க வழி செய்தவரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள். தஞ்சை மாவட்டம், ஆரூரான் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்த்திட முன்னாள் அமைச்சர் மறைந்த அண்ணன் திரு. மன்னை அவர்கள் ஒரு யுக்தியைக் கையாண்டார்கள். தலைவர் கலைஞர் அவர்கள், நாளை முதல் உண்ணாவிரதம் இருக்கபபோகிறார் என்று அறிவித்தவுடன், அப்போதைய அமைச்சர் மாண்புமிகு ஆர்.வி. அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களோடு ஆலை முதலாளி வி.எஸ்.டி. முதலியார் அவர்களைப் பேச வைத்தவுடன் பிரச்சினைக்கு முடிவு ஏற்பட்டது.

பொதுப் பணித் துறை ஊழியர்களின் பணி நிரந்தரம் பற்றிய பிரச்சினையில்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவலர்கள், Lobby–யில் இருந்து சத்தம் போடுகிறார்கள். அவர்களை வெளியே அனுப்புங்கள்; சும்மா கத்திக்கொண்டே இருப்பார்கள், அவர்களை வெளியே அனுப்பிவிட்டு வாருங்கள், போங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** பொதுப் பணித் துறை ஊழியர்களின் பிரச்சினையில் நிதித் தொழிலாளிகளாக Work-charged Establishment Labourers எனப் பணிபுரிந்த 35 ஆயிரம் பேர் தற்காலிகப் பணியாளர்களாக இருந்தவர்களுக்குப் பணி நிரந்தரம் வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள், உடனே போய் அவர்களை வெளியேற்றுங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** நிரந்தரம் இல்லாத தொழிலாளர்களாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Lobby–யில் இருந்து கத்திக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களை வளாகத்திற்கு வெளியே அனுப்பிவிட்டு வாருங்கள். காவலர்கள், உடனே போய் அவர்களை வெளியேற்றிவிட்டு வாருங்கள்.

*பிற்பகல் 1–15*

**திரு. இரா. இராஜேந்திரன்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிரந்தரமில்லாத தொழிலாளர்களாக உயிரைப் பணயம் வைத்து, மரம் ஏறி, கம்பி இழுப்பதிலும், மின் விநியோகம் மற்றும் கட்டுமானப் பிரிவுகளிலும் பணியாற்றிய 40,000 தொழிலாளர்களைப் பணி நிரந்தரப்படுத்தியவரும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 12,000 பேரை பணி நிரந்தரம் செய்தவரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

மதுரை பால்பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகப் போராடிய மாதவரம் பால்பண்ணைத் தொழிலாளர்களை அ.தி.மு.க. அரசு பணி நீக்கம் செய்தது. அவர்களுக்கு மீண்டும் பணி வழங்கியவர் நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் கேட்டுப் போராடினார்கள். நிர்வாகம் தர மறுத்தது. கோவை சென்ற தலைவர் கலைஞர் அவர்கள் நிர்வாகத் தரப்புப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசினார்கள். ஆலை முதலாளிகள் ஒத்துவரவில்லை. தொழிற் சங்கம கேட்டுள்ள போனஸ்

வழங்கப்பட வேண்டும், இல்லையேல் சென்னை சென்றவுடன் அனைத்துப் பஞ்சாலைகளும் அரசுடைமை ஆக்கப்படும் என்றார்கள். உடனே தீர்வு ஏற்பட்டது. இதைப்பற்றிக் குறிப்பிட்ட பொதுவுடைமை இயக்கத் தலைவர்களில் ஒருவரான ரமணி அவர்கள், 'என் வாழ்நாளில் முதலாளிகள் அழுததை முதன்முறையாக இன்றுதான் பார்த்தேன்' என்றார்கள்.

அதைப்போல, பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் கோரிக்கையை கடந்தகால அ.தி.மு.க. அரசு ஏற்க மறுத்து, தொடர்ந்து போராடி வந்த நிலையிலே, அரசு செவிசாய்க்காத நிலையில், தலைவர் கலைஞர் அவர்களும், காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய தலைவர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும், பொதுவுடைமை இயக்கங்களின் தலைவர்கள் எல்லாம், அதைப்போல, தொழிற் சங்கத் தலைவர்கள், அந்தோணிப் பிள்ளை போன்றவர்கள் எல்லாம், போராட்ட தேதி குறித்து, தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுமென்று வைத்தக் கோரிக்கையயடுத்து அரசு செவிசாய்த்து, தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றியது.

இன்றைக்குப் பொற்கொல்லர்களுக்கும் சேர்த்து பத்து நல வாரியங்களை அமைத்துத் தந்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். பத்து நல வாரியங்களிலும் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மாதந்தோறும் 300 ரூபாய் ஓய்வூதியம் வழங்க அறிவித்துள்ளதை நன்றியுணர்வோடு இன்றைக்குத் தொழிலாளர்கள் பாராட்டுகிறார்கள். இது நாட்டு மக்களுக்குத் தெரியும், நல்லவர்களுக்குப் புரியும், மற்றவர்களுக்குப் புரிய வாய்ப்பில்லை.

இன்னொன்றையும் இந்த நேரத்திலே ஒரு கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். அமைப்பு சாரா தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது, பாம்பு போன்ற விஷ ஜந்துக்களினால் பாதிப்போ, மரணமோ ஏற்பட்டால், விபத்து எனக் கருதி இழப்பீடு வழங்க இந்த அரசு, நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பொது விநியோக முறையைக் கூட்டுறவுக்கு மாற்றும்போது ஆயிரக்கணக்கான பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். கூட்டுறவு அதிகாரிகள் கல்வித் தகுதி, கூட்டுறவுப் பயிற்சி, வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு, cadre strength ஆகியவற்றை ஆய்வு செய்து பரிசீலிக்கத் தவறியதால், அவர்கள்



அனைவரும் பணியிழக்கும் அபாயம் இருந்தது. அவர்களைக் காப்பாற்றி அனைவரையும் பணி நிரந்தரப்படுத்தியவரும் நம்முடைய ஒப்பற்ற முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

தொழிலாளர்க்ளின் உரிமையைப் பாதுகாக்க போராடிய நீங்கள் அரசுப் பொறுப்பில் இருந்தபோதெல்லாம், தொழிலாளர்களின் உரிமைகளை, சலுகைகளை நிறைவேற்றித் தந்தீர்கள். தொடர்ந்து நிறைவேற்றி வருகிறீர்கள். இதன்மூலம் தொழிலாளர்களின் தோழன் என்று மெய்ப்பித்துக்காட்டிய தலைவர் நீங்கள். தொழிலாளர்கள் என்றைக்கும் உங்களை நன்றியுணர்வோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். 1969–லே முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தொழிலாளர் நலன், தொழில், கூட்டுறவுத் துறை, இந்த மூன்றும் ஒன்றாக இருந்ததை, தொழிலாளர் நலனுக்காக தனித் துறை, தனி அமைச்சகம் கண்டவர் நீங்கள். 1970–71 ஆம் ஆண்டிலே தொழிலாளர்கள் தினமான மே தினத்தை ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாள் என்று அறிவித்தீர்கள்.

கழக ஆட்சியில்தான் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை வழங்கினீர்கள். தொழிலாளர் கல்வி நிலையம் அமைத்தீர்கள். ஒப்பந்தத் தொழிலாளர் நலன் காக்க தனிச் சட்டம் கொண்டு வந்தீர்கள். குழந்தைத் தொழிலாளர் மறு வாழ்வு நல நிதி ஏற்படுத்தி, குழந்தைகள் பணியில் ஈடுபடுவதைத் தடுக்க, தீவிர நடவடிக்கை கழக ஆட்சியில் எடுத்தீர்கள். இவையெல்லாம் நல்ல உள்ளங்களுக்கு மட்டுந்தான் புரியும். 1990 ஆம் ஆண்டு நேப்பியர் பூங்கா, மே தினப் பூங்காவானது, தலைவர் கலைஞர் அவர்களே, உங்களுடைய ஆட்சியில்தான்.

தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் தொழிலாளர் வர்க்கத்திற்காக நிகழ்த்திய சாதனைகளையெல்லாம் சொல்ல நேரம் போதாது. கடந்த 5 ஆண்டுக்கால அ.தி.மு.க. ஆட்சியிலே எஸ்மா, டெஸ்மா சட்டங்கள், தொழிலாளர்களையும், அரசு ஊழியர்களையும் முடக்கக் கட்டவிழ்த்து விடப்பட்டன. தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட சலுகைகள், உரிமைகள் அ.தி.மு.க. ஆட்சியில், பழிவாங்கும் எண்ணத்தில், பறிக்கப்பட்டன. அரசு ஊழியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களைக் கண்ணியமற்ற முறையிலே கைதுசெய்து, சிறையில் அடைத்தது மட்டுமல்ல. இல்லத்தில் உறங்கிக் கொண்டிருந்த பெண் ஊழியர்களை நடு இரவில் கைது செய்து, பயமுறுத்தி போராட்டத்தை ஒடுக்க நினைத்தது அ.தி.மு.க. அரசு. 1,75,000 அரசு ஊழியர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டதால்,

வேதனையும், அதிர்ச்சியும், தாங்கொணாத் துயரமும் அடைந்து, 39 பேர் மாண்டு போகக் காரணம் அ.தி.மு.க. அரசு. சுமார் 10,000 சாலைப் பணியாளர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்களே, அவர்களின் குடும்பங்களிலே ஏற்பட்ட வறுமை, வறுமையின் கொடுமையாலும், பணக் கஷ்டம், வேறு வேலை கிடைக்காமை, ஊராரின் கேலிப் பேச்சுக்களால் தற்கொலை, மாரடைப்பு என என்பதுக்கும் மேற்பட்டோர்கள் மாண்டு போகக் காரணமாக இருந்ததும் அ.தி.மு.க. ஆட்சிதான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

பிற்பகல் 1–20

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் பேரவை உறுப்பினர்களே, இங்கே கடந்தகால ஆட்சியிலே தொழிலாளர்கள் எல்லாம் எப்படி பழி வாங்கப்பட்டார்கள் என்பதற்கு நம்முடைய பொது உடைமை இயக்கத் தலைவர் ஜீவா அவர்கள் பாடிய பாடல்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

*"பாலின்றிப் பிள்ளை அழும்,*
*பட்டினியால் தாய் அழுவாள்*
*வேலையின்றி நாம் அழுவோம்,*
*வீடு முச்சூடும் அழும்"*

என்று பாடியது அ.தி.மு.க. ஆட்சியிலே எவ்வளவு பொருத்தமாக இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தொழிலாளர் சட்டங்களும், தொழிற் சட்டங்களும் முழுமையாக நடைமுறைப்படுத்தாத காரணத்தால் தொழிலாளர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், முடியுங்கள். நன்றி சொல்லுங்கள். அடுத்து இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், சிற்றுண்டிச் சாலை வசதி கிடைக்காமலே போய்விட்டது அ.தி.மு.க. ஆட்சியில்தான். ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரப்படுத்தும் முறை என்பது பகல் கனவாகியது அ.தி.முக. ஆட்சியில்தான். காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல், வேலைப் பளு திணிக்கப்பட்டதும் அ.தி.மு.க. ஆட்சியில்தான். எந்த ஒரு துறையிலும் புதிய நிரந்தரத் தொழிலாளர்கள் நியமிக்கப்படாமல், நிரந்தரத் தொழிலாளர்கள் அருகிப் போய், தொழிற்சங்க இயக்கங்கள் முடக்கப்பட்டதும் அ.தி.மு.க. ஆட்சியில்தான். மொத்தத்தில் தொழிற்சங்க இயக்கம் கொச்சைப்படுத்தப்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள்



அவமானப்படுத்தப்பட்டனர். கூட்டுப் பேர சக்தி சிதைக்கப்பட்டது. சலுகைகள் மறுக்கப்பட்டன. உரிமைகள் மறுக்கப்பட்டன. தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக மாற்றப்பட்டதும் அ.தி.மு.க. ஆட்சியில்தான். சட்டத்திற்குப் புறம்பாக நிலையாணைகளைத் தங்கள் விருப்பத்திற்கேற்ப மாற்றிக்கொண்டு பல்வேறு தொழிலாளர் விரோதப் போக்குகளைக் கடைப்பிடித்து வந்தது அ.தி.மு.க. ஆட்சிதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) சொல்லுங்கள், நன்றி சொல்லுங்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** கடந்த அ.தி.மு.க. அரசு தொழிலாளர்களை நசுக்கியது என்பது நாடறிந்த உண்மை. இன்னும் பல்வேறு கோரிக்கைகள் இருந்தாலும், அ.தி.மு.க.வினர் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டதால், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் விரைவாக முடிக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியைப் பொறுத்தவரையில் பல்வேறு கோரிக்கைகள் இருந்தாலும், என்னுடைய தொகுதியிலே, நன்றாக இயங்கிக் கொண்டிருந்த நூற்பாலை கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மூடப்பட்டது. அந்த மூடப்பட்ட கூட்டுறவு நூற்பாலையை நம்முடைய தாயுள்ளம் கொண்ட முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டு, மற்ற கோரிக்கைகளை எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்களின் பார்வைக்கு நேரடியாகக் கொண்டுவருகிறேன் என்று தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். இராமன் சார், ஒரு five minutes.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணி நூல் துறை மீதான விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பளித்த தங்களுக்கும், எங்களுடைய கட்சித் தலைவர் மாண்புமிகு சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

*"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு*
*அரும்பொருள் யாதொன்றும் இல்"*

தெரிந்து தேர்ந்த நண்பர்களுடன் சேர்ந்து செய்ய வேண்டிய செயலை, ஆராய்ந்து, தாமும் நன்கு செய்தால் ஆகாதது ஒன்றுமில்லை

என்ற வள்ளுவருடைய வாக்கிற்கிணங்க, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அரும்பெரும் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்துப் பாராட்ட மனமில்லாதவர்கள், தினமும் அவைக்கு வந்து வெளிநடப்புச் செய்து, செய்தியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வெளிநடப்பைப் பற்றி அவருடைய ஆட்சிக் காலத்திலே, அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். 2005 மார்ச் மாதம் 30 ஆம் தேதி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் அன்பழகன் என்பவர், கைத்தறி மானியத்தின்மீது பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார். "மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தச் செயல் திட்டங்களை அறிவிக்கும் சமயத்தில், தமிழகத்தின் மக்களைத் திசை திருப்பும் வகையிலே, எதிர்க்கட்சியினர் அவையில் பங்கு பெறாமல் வெளிநடப்புச் செய்வதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளார்கள். இது அவர்கள் தமிழ்நாட்டிற்கும், அவர்களுக்கு வாக்களித்த பெருமக்களுக்கும் செய்கின்ற மிகப் பெரிய துரோகமாகும்" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த துரோகத்தை யார் இப்போது செய்கிறார்கள் என்று தங்கள்மூலமாக நான் அறிய விரும்புகின்றேன்.

வெளிநடப்புச் செய்வது என்பது மட்டுமல்ல, 'பகைவருக்கும் அருள்வாய் நெஞ்சே' என்ற வகையிலே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கனிவோடு இன்றைக்குத் தங்களால் வெளியேற்றப்பட்ட எதிர்க் கட்சி உறுப்பினர்களை மீண்டும் அவைக்கு அழைத்தபோது, அதை ஏற்கும் தரத்தில் அவர்கள் இல்லை என்பதை நான் வேதனையோடு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நேற்றைய தினம் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மிகப் பெரிய நெடிய உரையினை, தெள்ளத் தெளிவாக பல திட்டங்களை அறிவித்தார்கள். அதைக் கேட்பதற்கு மனதில்லாதவர்கள்தான் இப்படி வெளிநடப்புச் செய்து, தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். அவர்களுக்கு சங்கப் பலகைக்கும், தோசைப் பலகைக்கும் வித்தியாசம் தெரியாது என்றுதான் நினைக்கின்றேன். அந்த வகையில்தான் அவர்கள் இருக்கிறார்கள் என்பதிலே இதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்கமுடியாது என்று நான் இங்கே கூறவிரும்புகின்றேன்.



*பிற்பகல் 1–25*

நான் ஆளுநர் அவர்கள் உரைமீது விவாதம் செய்கிற நேரத்திலே, ஆளுநர் உரையிலே நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் பற்றி குறிப்பிடவில்லை. சிட்டா நூலுக்காக விதிக்கப்படும் விற்பனை வரியைப் பற்றி அறிவிப்பு இல்லையென்று நான் சுட்டிக்காட்டிப் பேசினேன். ஆனால், ஜூலை மாதம் 22 ஆம் தேதி மாண்புமிகு நிதியமைச்சர், பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபோது, நெசவாளர்கள் மகிழும்வண்ணம் பல சலுகைகளை அறிவித்தார்கள். நான் ஆளுநர் அவர்கள் உரைமீது குறிப்பிட்ட அந்த இரண்டு முக்கிய அம்சங்களை அவர்கள் பதிலாகத் தந்தார்கள். சிட்டா நூலுக்கு விதித்திருந்த 2 சதவிகித வரியை நாங்கள் அறவே நீக்குவோம் என்ற மகிழ்ச்சியான செய்தியினை, பல இலட்சக்கணக்கான நெசவாளர்களுடைய மனம் குளிரும் வண்ணம் அறிவித்தார்கள்.

அதேபோல, நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற, இலவச மின்சாரத்தைப் பற்றியும் அவர்கள் அறிவித்தார்கள். இதை நான் எண்ணிப் பார்க்கின்றபோது, நான் சில வரிகளைக் கூற விரும்புகின்றேன்.

'என்ன கொடுப்பார், எவைக் கொடுப்பார் என்று
எண்ணும் முன்னே, எதையும் கொடுப்பார்,
போதாது, போதாது என்றால், இன்னும் கொடுப்பார்
இவையும் குறைவென்றால் தன்னைக் கொடுப்பார்'

என்ற பாடல் வரிகளுக்கு வாழும் இலக்கியமாக, இலக்கணமாக கலைஞர் அவர்கள் இருக்கின்றார் என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லவேண்டிய, நெசவாளர்கள் சார்பாக சொல்லக்கூடிய ஒரு பதிவாக இருக்க முடியும். அந்தவகையிலே, ஒரு திறந்த மனத்தோடு, தெளிந்த மனத்தோடு கலைஞர் அவர்கள் இன்றைக்கு நெசவாளப் பெருமக்களுக்குச் சலுகைகள் அளித்திருக்கின்றார்கள். அதற்காக நான் நன்றி கூறுகின்றேன்.

எங்கள் அன்புத் தலைவர், மூப்பனார் ஐயா அவர்கள் பேசுகின்றபோது சொல்வார்கள், நான் பிறப்பால் விவசாயி, ஆனால் உணர்வால் நெசவாளி என்று சொல்லுவார்கள். தான் பிறந்த ஊரான சுந்தரபெருமாள் கோவிலிலே நெசவாளப் பெருமக்கள்தான் அதிகம் என்று அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டு, நெசவாளப் பெருமக்களுடைய

பிரச்சினைகளைப்பற்றி மிகச் சிறப்பாகக் கூறுவார்கள். கலைஞர் அவர்களுக்கும், அவருக்கும் இருந்த நெருக்கம், நட்புதான் இன்றைக்குக் கனிந்து, இத்தகைய அறிவிப்புக்குக் காரணமாக இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அன்றைய அண்ணா தி.மு.க. ஆட்சியிலே, நெசவாளர்கள் பட்ட துயரங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 2002 ஆம் ஆண்டு, நெசவாளர் பெருமக்கள் எல்லாம், வேலையிழந்து, பட்டினி கிடக்கின்ற நிலைமையிலே, ஏறக்குறைய பத்து இலட்சம் நெசவாளர்கள் பட்டினி கிடந்தார்கள். இரண்டு இலட்சம் தறிகள் கிடப்பிலே போடப்பட்டன. இந்தத் துறையின் மூலமாக, கைத்தறித் துறையின் மூலமாக, அன்றைய அரசு கொள்முதல் செய்யாமல் இருந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் மூடப்படுகின்ற நிலையில் இருந்தன. என்னுடைய கிராமத்திலே இருக்கின்ற, அம்மையார்குப்பத்தைச் சேர்ந்த, அன்றைய அண்ணா தி.மு.க. பிரமுகர், அந்த அம்மையார்குப்பம் கிராமத்தினுடைய ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த, தருமன் என்பவர் 'இந்து' பத்திரிகை எடுத்த பேட்டியிலே அவர் சொல்லியிருக்கின்றார். என்ன சொல்லுகிறார் என்றால், 'அரசாங்கம் திட்டத்தைச் செயல்படுத்தவில்லையென்றால், நெசவாளப் பெருமக்கள் பட்டினிச் சாவிற்கு உள்ளாவார்கள்' என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊராட்சி மன்றத்தின் தலைவராக இருந்த நண்பரே, அந்தப் பேட்டியில் சொல்லியிருக்கின்றார்.

2002 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் கலைஞர் அவர்கள் தன்னுடைய கட்சித் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள். கஞ்சித் தொட்டி திறந்து, நெசவாளர் பெருமக்களைக் காப்பாற்றுங்கள் என்று அவர்கள் ஆணையிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே கலைஞர் அவர்கள் பள்ளிப்பட்டு தொகுதியிலே இருக்கின்ற அம்மையார்குப்பம்–பெயர்கூட அம்மையார்குப்பம்—அந்த ஊரிலே வந்து, கஞ்சித் தொட்டி திறப்பதாக நாள் குறித்து வரத் தயாரானார்கள். பட்டினி கிடந்த நெசவாளர்களைக் கொச்சைப்படுத்தும் வகையிலே, அவருடைய பயணத்தைத் தடை செய்யும் வகையிலே, பிரியாணி சாப்பிட்டு, நெசவாளப் பெருமக்களைக் கொச்சைப்படுத்தியவர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை இங்கே நான் மிக வேதனையோடு பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கலைஞர் அவர்கள் சொன்னார்கள், பெருந்தன்மையோடு சொன்னார்கள். ஏற்கெனவே, நெசவாளர்கள் பிரச்சினையிலே நிறைய



பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கின்றன. நான் அதற்குமேலும் வலுவூட்ட விரும்பவில்லையென்று அவர்கள், தன்னுடைய பயணத்தை இரத்து செய்தார்கள் என்பதனை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து, நம்முடைய கைத்தறித் துறை அமைச்சராக அன்றைக்கு அன்புக்கினிய பெரியவர், மாண்புமிகு என்.கே.கே. பெரியசாமி அவர்கள், இந்தத் துறைக்குப் பொறுப்பு வகித்தார்கள். அன்றைய தினம், காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக, அன்றைக்கு இருந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக, நான் உயர்மட்டக் குழு உறுப்பினராகப் பணி செய்தேன். அப்படிப் பணி செய்த காலத்திலே, நெசவாளர் பெருமக்களுடைய பல குறைகளை நாங்கள் போக்கினோம். நெசவாளர் பெருமக்களுடைய பிரதிநிதிகளை பல்வேறு மாவட்டங்களில் சந்தித்தோம். அத்தனை குறைகளையும் களைகின்றவண்ணம் எங்களுடைய குழு செயல்பட்டது என்பதை நான் கூற விரும்புகின்றேன். இன்றைக்கு நான் சொல்ல விரும்புவது கைத்தறியும், விசைத்தறியும் வெவ்வேறு அல்ல. விசைத்தறி சேய் என்று நாம் சொல்லவேண்டும். கைத்தறியை தாய் என்று கொண்டால் விசைத்தறி இன்றைக்கு சேயாகத்தான் இருக்கிறது. அந்த வகையிலே, இன்றைக்குச் சமமான எண்ணிக்கையிலே கைத்தறியும், விசைத்தறியும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, வருகின்ற காலங்களிலே, உலகச் சந்தை திறந்து விடப்பட்டிருக்கின்ற நிலையிலே, விசைத்தறியை மேம்படுத்தி, நம்முடைய கைத்தறியிலே இருக்கின்ற நெசவாளர் பெருமக்களை...

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அவர்களை ஈர்த்து, மிக நவீனமான யுக்திகளுக்கு இட்டுச் செல்லவேண்டியது நம்முடைய கடமை, நம்முடைய அரசினுடைய கடமை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். அதற்காக, விசைத்தறி வாரியம், Powerloom Board என்பதனை அமைக்க வேண்டுமென்று நான் மிக அழுத்தமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு இருக்கின்ற technology, தொழில்நுட்பம் மாறிக் கொண்டே வருகிறது. இன்றைக்கு இருக்கின்ற விருப்பு, வெறுப்புகள் எல்லாம்,

சாதாரணமாக, தினம்தினம், அன்றாடம் use and throw என்ற வகையிலே மாறிக் கொண்டிருக்கிறது. சர்வதேச சந்தையிலே நம்முடைய இந்தியாவினுடைய நெசவுப் பொருட்கள் அதிகமாக விற்பனையாகின்ற நிலையிலே, ஏற்றுமதியாகின்ற நிலையிலே, நம்முடைய நெசவுத் தொழிலை மிகவும் நவீனப்படுத்த வேண்டியது நம்முடைய அரசாங்கத்தினுடைய கடமை. ஆகவே, Powerloom Board என்பதை உடனடியாக அமைக்க வேண்டுமென்று நான் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அமைக்கின்றபோது, வல்லுநர்களைக் கொண்டு, அதாவது, இந்தத் தொழிலிலே மிகவும் விற்பன்னர்களாக இருக்கின்ற பல முதலாளிகளைக் கொண்டுகூட, நீங்கள் அவர்களை உறுப்பினர்களாக்கி, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெறலாம். அப்படிப் பெறுவதன்மூலமாக, நிச்சயமாக ஒரு மிகப் பெரிய எதிர்காலத்தை இந்த நெசவுத் தொழிலுக்கு நீங்கள் ஏற்படுத்தித் தரமுடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நம்முடைய நெசவுத் தொழிலை ஊக்கப்படுத்தும்வண்ணம், பல சலுகைகளை இந்த அரசாங்கம் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தளவிற்கு *(மணியடிக்கப்பெற்றது)* ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், திரு. இராமன் சார்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** Technology Park என்ற வகையிலே, TIDEL Park போன்ற பல மையங்களை அமைத்து சாதனை படைத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதேபோல, Textile Park என்ற வகையிலே, நம்முடைய நெசவுப் பூங்காக்களை உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காஞ்சிபுரத்திலே ஒரு நெசவுப் பூங்கா உருவாகவிருக்கிறது என்று நான் அறிகின்றேன். அதேபோல, திருவள்ளூர் மாவட்டத்திலே, பொதுவாக, நம்முடைய தமிழகத்தினுடைய வடக்கு எல்லையிலே இருக்கின்ற எங்கள் பகுதியிலே ஒரு Technology Park அல்லது இந்த Textile பூங்கா என்ற வகையிலே, இந்த நெசவுப் பூங்காவை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசு அளித்திருக்கின்ற இந்த upgradation fund, அதாவது, நவீனப்படுத்துகின்ற தொகையினைக் கொண்டு, இந்தப் பூங்காக்களை



நீங்கள் அமைக்கலாம். அதற்கு எங்களுடைய பகுதி சிறந்த பகுதி என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன். எங்கள் பகுதி மாத்திரம் அல்ல; எங்கள் பகுதியை ஒட்டியிருக்கின்ற, ஆந்திர எல்லையிலே இருக்கின்ற அத்தனை ஊர்களிலுமே இந்தத் தொழில்தான் இன்றைக்குப் பிரதான தொழிலாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரதான தொழிலாக இருக்கின்ற இந்த நெசவுத் தொழிலை மேம்படுத்தும்வண்ணம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய தமிழக அரசும், அந்தப் பகுதிக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கின்றபோது, புதிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீங்கள் வழிவகுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்கு, 3½ இலட்சம், 4½ இலட்சம் பேர் கைத்தறி நெசவாளர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால், *(குறுக்கீடு)* அதிலே கூட்டுறவுத் துறையிலே கொண்டு வரப்பட்டவர்கள். பெரும்பாலானவர்கள் அந்தத் துறையிலே இருக்கிறார்கள். ஆகவே, அனைத்துக் கைத்தறி நெசவாளர்களையும்—)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் அவர்கள் மிகச் சிறந்த சட்டமன்ற உறுப்பினர். ஒரு மணி நேரம்கூட பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர். நேரமில்லை; இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். Guillotine எடுக்கின்ற அன்றைக்கு அவருக்கு நிறைய நேரம் ஒதுக்கி, எல்லாவற்றையும் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்கலாம். எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு அமைச்சர்கள் இன்னும் பதில் சொல்ல வேண்டும். திரு. இராமன், உடனே முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்குகின்றேன். இலவச மின்சாரத்தைக் கொடுத்த வகையிலே, கைத்தறிக்கு இரண்டு மாதத்திற்கு 100 யூனிட், விசைத்தறிக்கு இரண்டு மாதத்திற்கு 500 யூனிட் என்று அறிவித்திருக்கின்றீர்கள். அதை ஒரு மாதத்திற்கு ஒரு முறை என்று

அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படி அறிவித்தால்தான், அது பலனுள்ளதாக இருக்கமுடியும். ஏனென்றால், limited meal, அதாவது, அளவுச் சாப்பாடு போட்டதைபோல போட்டால், நிச்சயமாக அடுத்த பசி வந்துவிடும். ஆகவே, நீங்கள் தயவுசெய்து அதை ஒரு மாதத்திற்கு ஒரு முறையாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திலுள்ள நம்முடைய பெருமக்களுக்கு வழங்கப்படாமல் இருக்கின்ற அந்த அகவிலைப் படியை நீங்கள் மீண்டும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அந்த அகவிலைப் படி உயர்வு நிறுத்தப்பட்டது. அதை மீண்டும் கலைஞர் அவர்கள் வந்து வழங்க வேண்டுமென்று இருக்கிறது. அந்தளவிலே அவர்களுக்கு நீங்கள் உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நம்முடைய Land Development Bank – நிலவள வங்கியிலே, விவசாயப் பெருமக்களுக்குக் கடன் தள்ளுபடி வழங்குகின்ற சான்றிதழ்களை நானே கொடுத்தேன்; பள்ளிப்பட்டு தொகுதியிலே நானே கொடுத்தேன். அதை வழங்குகின்ற நேரத்திலே, நெசவாளப் பெருமக்கள், சிறிய அளவிலே கடன் பெற்றிருக்கின்ற நெசவாளப் பெருமக்கள், தங்களையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கோரிக்கையினை நம்முடைய தமிழக அரசுக்கு, கருணை மிகுந்த முதலமைச்சர் அவர்களுக்கு நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமன், முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** சென்னிமலை நம்முடைய பத்மஸ்ரீ எம்.பி. நாச்சிமுத்து அவர்கள் பிறந்த ஊர். அவர்கள் வாழ்ந்து, அந்தக் கைத்தறி பெருமக்களுக்கு நல்லதைச் செய்தார்கள். அந்த வகையிலே, மிகப் பெரிய எடுத்துக்காட்டாக அவர்கள் அமைந்தார்கள். அவருக்கு மத்திய அரசு தபால் தலை, அதாவது அஞ்சல் தலை வெளியிடுவதற்கான (மேசையைத் தட்டும் ஒலி) முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியினை நிறைவாகத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன், நன்றி, வணக்கம்.





பிற்பகல் 1–35

## 2. தகவல் கோரல்–தொடர்ச்சி

### (ஈ) திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தியைப் பேரவைப் பணிகளினின்றும் நீக்கி வைத்ததைப் பரிசீலிக்கக் கோருதல்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, வெளியேற்றப்பட்ட அ.தி.மு.க.— எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரும் வர வேண்டுமென்று நாம் வேண்டுகோள் வைத்தோம். அதன்பேரில் இங்கே வந்தார்கள். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அவைக்குத் திரும்பி, அமைச்சர் பொன்முடிமீது குற்றம் சுமத்தக்கூடியவகையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பொன்முடி ** என்று சொன்னார் என சொன்னவுடன், அமைச்சர் பொன்முடி உடனடியாக அதை மறுத்தார். எனவே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அமைச்சர் பொன்முடி ** என்று சொன்னதாகச் சொன்ன வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### (ஆ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல்–தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெருமைமிகு மாமன்றத்தில் பாரம்பரியமிக்க கைத்தறி மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள் இனத் தலைவர், எங்கள் மரியாதைக்குரிய ஐயா கலைஞர் அவர்களுக்கும், எங்களை வழி நடத்துகின்ற எங்கள் அண்ணன் தளபதி அவர்களுக்கும், தலைவர் கலைஞர்மேல் நம்பிக்கை வைத்து வாக்களித்த ஈரோடு மாவட்ட வாக்காளப் பெருமக்களுக்கும், வெற்றிக்குப் பாடுபட்ட எங்கள் தலைவருடைய உயிர் தொண்டர்களுக்கும், ஜனநாயக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தொண்டர்களுக்கும் மற்றும் ஈரோடு சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் தலைவர் கலைஞர் அவர்களின் திருப்பாதத்தைத் தொட்டு வணங்கி, இந்தக் கைத்தறித் துறை மானியத்தின்மீதான பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

நமது நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் ஒரு முக்கியத் தொழிலாகும். நெசவுத் தொழில் கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது. கைத்தறித் தொழில் 6.63 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறது. ஆண்டொன்றுக்கு 1,500 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் இங்கு உற்பத்திச் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் மட்டும் 600 கோடி ரூபாய் மதிப்பிலான கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலத்தில் 1,232 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 2.64 இலட்சம் நெசவாளர்கள் இங்கு உறுப்பினர்களாக உள்ளனர். தலைவர் கலைஞர் தலைமையிலான இந்த அரசு கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக்குவதன்மூலம் அவர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பும், நியாயமான ஊதியமும் கிடைக்க வழிவகை செய்கிறது. கூட்டுறவு நெசவாளர்களுக்கு அனைத்து நெசவாளர்களுடைய நலத் திட்டங்களின் பயன் சென்றடைய வழிவகை செய்கிறது.

விசைத்தறித் தொழில். விசைத்தறி தொழில் தமிழ்நாட்டில் 4.50 இலட்சம் விசைத்தறிகள்மூலம் 9.14 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. இந்தியாவில் விசைத்தறி தொழிலில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக நமது மாநிலம் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கை. சிலரது திட்டங்கள் அவர்களது சிந்தனையிலிருந்து வரும். சிலரது திட்டங்கள் அவர்களுடைய எண்ணத்திலே இருந்து வரும். ஆனால், என் தலைவர் கலைஞர் அவர்கள் போடுகிற திட்டங்கள் அனைத்தும் அவருடைய உதிரத்திலேயிருந்து வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் அடிப்படையில் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என கழகத் தேர்தல் அறிக்கையிலே அறிவித்தபடி கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட் இலவச மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு



மாதங்களுக்கு 500 யூனிட் இலவச மின்சாரமும் வழங்கி, நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றிய என் தலைவருக்கு நெசவாளர்கள் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'சொன்னதைச் செய்வோம்' என்று நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கிய தலைவர், 'சொல்லாததையும் செய்வோம்' என தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையான, கைத்தறி நெசவுக்கு பயன்படுத்தப்படும் சிட்டா நூலுக்கு இதுவரை இருந்த 2 சதவீத வரியை விலக்கு அளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு நெசவாளர்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள். 1996–2001 தலைவர் கலைஞர் ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தி சங்கங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையைப் பெருக்கி, நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தாததால், சங்கங்கள் நிர்வாகச் சீர்கேடு அடைந்து பல சங்கங்கள் செயலிழந்து உள்ளன.

உதாரணத்திற்கு, கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது, அதாவது, 2001–ல் 1,414 நெசவாளர் சங்கங்களும், அதிலே 2,90,000 தறிகளும் இயங்கி வந்தன. கடந்த ஆட்சியின் முடிவில் அதாவது 2006–ல் 1,232 சங்கங்களும், அதிலே 2,17,000 தறிகளுமாக குறைந்துவிட்டன என்பதை இந்த நேரத்திலே தெரிவிப்பது எங்கள் கடமை என்று கருதுகிறோம். அதேபோல், கடந்த ஆட்சியில் புதிதாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தலைவர் ஆட்சி இங்கே பொறுப்பேற்றவுடன் நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கொடுக்க, போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த ஆட்சியில் புதிய நெசவாளர் சங்கங்கள் ஏற்படுத்த இருந்த தடையை நீக்கி, இப்பொழுது புதிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், புதிய சங்கங்கள் உருவாகி, அதிக அளவில் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து பணி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-40

இந்தத் துறையினுடைய நடவடிக்கைகள். கைத்தறி விற்பனையை மேம்படுத்த வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஏற்றுமதிக்கு

நெசவாளர்களை ஊக்கப்படுத்துதல், இரக மாற்றம், ஆயத்த ஆடைப் பூங்கா அமைத்தல், ஜவுளித் தொழில் மையங்களுக்கென அடிப்படை மேம்பாட்டுத் திட்டம், உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

ஏழையெளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலைகள் வழங்கவும், வரும் தைப் பொங்கல் திருநாளில் 164 இலட்சம் சேலைகள், 164 இலட்சம் வேட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், 328 இலட்சம் ஏழையெளிய மக்களுக்கு இந்த இலவச வேட்டி சேலைகள் வழங்கப்படும். இத்திட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் பணி வழங்கப்பட்டு, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கிய பணி போக, எஞ்சிய பணிகள் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவச சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவையான துணி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் எண்ணிக்கையில், 139 இலட்சம் மீட்டர் இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்படும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

கோ–ஆப்டெக்ஸ். தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான ஆட்சி, 2000–2001–ல், கோ–ஆப்டெக்ஸின் சில்லறை விற்பனை 145 கோடி ரூபாயாக இருந்தது. கடந்த ஆட்சியின் இறுதியில், அதாவது 2005–2006–ல் சில்லறை விற்பனை 106 கோடி ரூபாயாகக் குறைந்தது என்பதையும், தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அப்போதைய ஆட்சி இருக்கும்போது, 31–3–2001 ஆம் ஆண்டில் 21 கோடி ரூபாயாக குவிந்த நட்டம், கடந்த ஆட்சியின் இறுதியில், அதாவது 31–3–2006–ல் 83 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எந்தவித ான பயன்களும் கடந்த ஆட்சியில் வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், கோ–ஆப்டெக்ஸ் ஊழியர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, 7 சதவிகித அகவிலைப்படி உயர்வும், அலுவலர்களுக்குப் பதவி உயர்வும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், கோ–ஆப்டெக்ஸ்ஸின் விற்பனையை மேம்படுத்த போர்க்கால



அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சில்லறை விற்பனையை 106 கோடி ரூபாயிலிருந்து 120 கோடி ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது இயங்கி வருகிற கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில், 75 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில் இதை அதிகப்படுத்தி, 120 விற்பனை நிலையங்கள் இலாபத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் இல்லாத 100 இடங்களில், மாநிலத்திற்குள்ளும், வெளி மாநிலங்களிலும் கண்காட்சிகள்மூலம் விற்பனையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விற்பனையை மேம்படுத்த, மாறிவரும் வாடிக்கையாளர்களின் இரசனைக்கு ஏற்ப, அங்கே அனைத்து இரகங்களிலும், பல வண்ணங்களில், நவீன காலத்திற்கு ஏற்ற, சுமார் 500 புதிய வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவில் உள்ள 2,950 பெரிய, நடுத்தர, சிறு துணி நூல் ஆலைகளில் 1,734 ஆலைகள் நம் மாநிலத்திலே உள்ளன. நம் மாநிலத்தில் உள்ள நூற்பு ஆலைகளானது 16.44 மில்லியன் கதிர்களுடன் 2.31 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்டு செயல்படுகின்றன. நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் நம்முடைய மாநிலத்திலே மட்டும், மூன்றில் ஒரு பங்கு நம் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது என்பதையும், நம் மாநிலம் இந்தியாவிலேயே நூல் உற்பத்தியில் முதலிடத்தில் இருந்து வருகிறது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் தலைமையிலான முந்தைய ஆட்சியின்போது, 14 கூட்டுறவு நூற்பாலைகள் சிறப்பாக இயங்கி வந்தன. கடந்த காலத்தில், இதில் 9 கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு, மீதியிருக்கிற 5 கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே இயங்கி வந்தன. இப்பொழுது தலைவர் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்றவுடன், கூட்டுறவு நூற்பாலைகளைச் சீரமைக்க போர்க்கால நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 4 கூட்டுறவு நூற்பாலைகள் இலாபத்தில் இயங்கத் தொடங்கியுள்ளன. செப்டம்பர் மாதத்திற்குள் தற்பொழுது இயங்கும் 5 கூட்டுறவு நூற்பாலைகளும் இலாபத்தில் இயங்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவரிடம், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் தொகுதியில் உள்ள மூடப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளைத் திறக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை

வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று விரைவிலே அவர்கள் அனைவருக்கும் நல்ல முடிவு சொல்லப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–45*

ஜவுளித் தொழிலில், ஆயத்த ஆடைத்தொழில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. தமிழ்நாட்டில் சுமார் 400 ஆயத்த ஆடை உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ளன. அவை இரண்டு இலட்சம் நபர்களுக்கும் இங்கே வேலைவாய்ப்பை வழங்கி 2,500 கோடி ரூபாய் அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டிலுள்ள 8,000 பின்னலாடை உற்பத்தி ஆலைகளில், 4,000 ஆலைகள் நம் மாநிலத்திலே உள்ளன. தமிழ்நாட்டிலே மூன்று இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி 8,000 கோடி ரூபாய் அளவிற்கு அந்நியச் செலாவணியும் ஈட்டித் தருகிறது. இது நம்முடைய நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 44 சதவீதமாகும் என்பதையும் நான் இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

துணித் தொழிலில் பதனிடும் பணி மதிப்புக்கூட்டும் அங்கமாக உள்ளது. இந்தியாவிலுள்ள 10,397 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களில், 2,614 நிறுவனங்களும், 2,510 மின்விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களிலே 985 நிறுவனங்களும், தமிழ்நாட்டிலே உள்ளன.

இவ்வாறு துணித் தொழிலின் அனைத்துப் பிரிவுகளிலும் அதிகளவு எண்ணிக்கையை தன்னகத்தே கொண்டு, தமிழ்நாட்டின் மொத்த வருவாயில் 19 சதவீதம் இந்தத் துணித் தொழிலின்மூலமாகக் கிடைக்கிறது என்பதையும், இந்தத் தொழிலின்மூலமாக ஏறத்தாழ 30 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பும் இங்கே வழங்கப்படுகிறது என்பதையும் நான் இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயல்படுத்தப்படும் திட்டங்கள் – மாறிவரும் இரசனைக்கேற்ற வகையில் வடிவமைப்புகளை கைத்தறியில் புகுத்தி, விற்பனையை அதிகரிக்க, 40 இலட்சம் ரூபாய் செலவில் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தலைவர் கலைஞர் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம்மூலமும், பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலமும், நெசவாளர்களுக்கு புதிய இரகங்களை நெய்தல், சாயம் தோய்த்தல் மற்றும் புதிய வடிவமைப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்மூலம் 10,000 நெசவாளர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்தும் வகையாகவும், கைத்தறி இரகங்களின் பாரம்பரியத்தைக் காக்கும் வகையிலும், போலி இரகங்களிலேயிருந்து பாதுகாக்கவும், நம் மாநிலத்தின் முத்திரையான, காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், பவானி ஜமுக்காளம் மற்றும் மதுரை சுங்குடி சேலைகள் அனைத்தும் புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் (Geographical Indications Act) பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்துக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருங்காலம் ஆயத்த ஆடைகளின் காலம் என்பதால், திருப்பூர் மற்றும் இருங்காட்டுக்கோட்டை ஆகிய இரு இடங்களில் சுமார் 600 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசுடன் இணைந்து, இரு ஆயத்த ஆடைப் பூங்காக்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில், திருப்பூர் ஆயத்த ஆடைப் பூங்காவில் உற்பத்தி துவக்கப்பட்டு, 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், திருப்பெரும்புதூர் அருகிலேயிருக்கிற இருங்காட்டுக்கோட்டையில் விரைவில் உற்பத்தித் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதன்மூலமாக 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நவீன தொழில்நுட்ப விசைத்தறிகளை உள்ளடக்கிய தொகுப்பு அணுகுமுறைக்காக 325 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மூன்று உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள் குமாரபாளையம், பல்லடம் மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களிலே அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 4,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு, 900 கோடி ரூபாய் மதிப்பிற்கு உற்பத்தி மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டு ஜவுளிப் பூங்கா ஒன்றினை UNIDO எனப்படும் ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் சுமார் 66 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் கரூரில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர் நலத் திட்டங்கள் அடிப்படையில், கைத்தறி நெசவாளர்களுக்கென சேமிப்பு பாதுகாப்புத் திட்டததினை இந்தியாவிலேயே முதன்முதலாக 1975 ஆம் ஆண்டு முதல்வராக இருந்த நம் தலைவரின் அரசுதான் இங்கே அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தில் தற்போது 70,316 உறுப்பினர்கள் உள்ளனர். மாநில அரசு பங்காக 525 இலட்சம் ரூபாய் இந்த நடப்பு ஆண்டில் செலுத்தவுள்ளது. மைய அரசு 660 இலட்சம் ரூபாய் இதற்கு ஒதுக்கீடு செய்துள்ளது என்பதையும் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

60 வயதிற்கு முன்பு இறக்க நேரிட்ட நெசவாளர்கள் குடும்பத்திற்கு மாதம் 350/– ரூபாய் என நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

60 வயது பூர்த்தியடைந்த நெசவாளர்களுக்கு மாதம் 200/– ரூபாய் என ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம், தறிக்கூடம் அமைக்கும் திட்டம் நடப்பாண்டில் முனைப்புடன் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்கள் கட்டவேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூபாய் 330/–ல் நெசவாளர் பங்காகச் செலுத்த வேண்டிய 80/– ரூபாயை மாநில அரசே செலுத்துகிறது. என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்திட்டத்தின்கீழ் இயற்கை மரணம், விபத்தால் ஏற்படும் மரணம், விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம், நெசவாளர்களின் குழந்தைகள் கல்வி உதவித்தொகைத் திட்டம் ஆகியவற்றால் நெசவாளர்கள் மிகவும் பயன்பெறுகிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகையாகச் செலுத்தவேண்டிய 1,000/– ரூபாயில் நெசவாளர்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையான ரூ.200/–ஐ மாநில அரசே செலுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு ஆகும் செலவிற்கு நெசவாளர்கள் இதில் உதவித்தொகை பெறுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிற்பகல் 1-50

டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நலவாழ்வு அறக்கட்டளையின்கீழ் நெசவாளர்களின் குழந்தைகளுக்கு, தற்போது



27 பாடப் பிரிவுகளில் பயிலும் நெசவாளர் குழந்தைகளுக்கு, உயர் கல்விக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தமிழக முதல்வராக தலைவர் கலைஞர் பொறுப்பேற்றதும் இந்த நெசவாளர் குழந்தைகள் இதுவரைப் பெற்று வந்த கல்வி ஊக்கத் தொகையுடன் கூடுதலாக 500/– ரூபாய் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் – புதிய இரகங்கள் வடிவமைக்கவும், நெசவாளர்களை ஊக்கப்படுத்தவும் சிறந்த வடிவமைப்புக்கு முதல் பரிசாக 5 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசுக்கு 3 ஆயிரம் ரூபாயும் மற்றும் மூன்றாம் பரிசுக்கு 2 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இனிமேல் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களை இங்கே அறிவிப்புகளாக மாமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்பவும், விற்பனையை மேம்படுத்தவும் அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் துணையுடன் 25 இலட்சம் ரூபாய் செலவில் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு நெசவாளர்களுக்கு அளிக்கப்படும்.

கைத்தறித் துணியின் விற்பனையை மேம்படுத்த ஆயிரம் நெசவாளர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் சாயம் தோய்த்தல் மற்றும் வடிவமைப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பவானி ஜமுக்காளம் மற்றும் மதுரை சுங்குடி சேலை ஆகியவற்றின் பாரம்பரியத்தைக் காக்க ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்போல, நடப்பாண்டில் சேலம் பட்டு, ஆரணிப் பட்டு மற்றும் கோவை கோரா காட்டன் ஆகிய பாரம்பரிய இரகங்களைப் பாதுகாக்க புவிசார் குறியீடு அடையாள சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறி இரகங்களைப் பாதுகாத்திடும் நோக்கில் ஒரு பொதுவான அடையாளம் வழங்கி, அதனை விளம்பரம் செய்து, விற்பனையினை மேம்படுத்திட, மைய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கைத்தறி முத்திரை நம் மாநிலத்திலே செயல்படுத்தப்படும். கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பணியிடச் சூழ்நிலைகளை மேம்படுத்தவும் 5 ஆயிரம் தறிக் கூடங்கள் மற்றும் 100 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டித்தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைப்புசாரா கைத்தறி நெசவாளர்களுக்கும், நல்வாழ்வுத் திட்டத்தின் பயன்கள் சென்றடையும்வகையில் மகாத்மா காந்தி

புங்கர் பீமா யோஜனா திட்டத்தில் 75 ஆயிரம் நெசவாளர்களும், நல்வாழ்வு காப்பீடுத் திட்டத்தின்கீழ் 70 ஆயிரம் நெசவாளர்களும் கூடுதலாக சேர்க்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கைத்தறித் துணிவகைகளின் விற்பனையினை மேம்படுத்தவும், பட்டுத்துணி வகைகளின் சரக்கிருப்பினைக் குறைக்கவும், மத்திய அரசின் நிதி உதவியுடன் 2006–2007 ஆம் ஆண்டில் 30 இடங்களில் மாவட்ட அளவிலான கண்காட்சிகளும், ஒரு சிறப்பு கைத்தறி கண்காட்சியும் மற்றும் ஒரு தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சியும் நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கைத்தறி நெசவாளர்களுக்கு அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் நலத் திட்டங்களின் பயன்கள் போலி நெசவாளர்களுக்குச் சேராமல், உண்மையான நெசவாளர்களுக்குக் கிடைக்கும்வகையில், கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள அனைத்து நெசவாளர்களுக்கும் நடப்பாண்டில் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு தலைவர் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய அறிவுரைகளின்படி, மத்திய அரசோடு இணைந்து ஒருங்கிணைந்த ஜவுளி பூங்காத் திட்டத்தின்கீழ் 300 கோடி ரூபாய் செலவில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று நெசவுப் பூங்காக்களில் ஈரோடு மற்றும் குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் இந்தப் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. மூன்றாவது நெசவுப் பூங்கா மதுரையில் விரைவில் தொடங்கப்படும் என்பதை இங்கே அறிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கைத்தறி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், திருச்சி, திருவண்ணாமலை மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய 3 பகுதிகளில் பகுதி ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

நெசவாளர்கள் அதிகம் உள்ள ஈரோடு மாவட்டத்தில் 13 கைத்தறிப் பகுதிகள் உட்பட மொத்தம் 25 பகுதிகளில் மைய அரசின் நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறோம்.

பட்டு இரகத் துணிகளின் விற்பனை வாய்ப்புகளை அதிகரிப்பது குறித்து, தொழில்ரீதியான ஒரு முகமைமூலம் சந்தை நிலவரங்கள் ஆய்வு செய்யப்படும்.



கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் திறனை மேம்படுத்தவும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் மேலாளர்களின் செயல்திறனை மேம்படுத்தவும், 2006–2007 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டத்தின்கீழ் 1,200 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு ஆலோசனைகள் வழங்கும்வகையில் மாநில அளவில் உயர்நிலைக் குழு ஒன்றும், மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழுக்களும் விரைவில் அமைக்கப்படும்.

டாக்டர் எம்ஜிஆர். கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வு அறக்கட்டளை திட்டத்தின்கீழ் ஏற்கெனவே உதவி பெறும் 27 பாடப் பிரிவுகளுடன் நடப்பாண்டு முதல், முடநீக்கியல் மற்றும் கைத்தறி தொழில் நுட்பவியல் பாடப் பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் 29 பாடப் பிரிவுகளுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணிநூல் தொழிலில் புதிய தொழில்நுட்பங்களைக் கையாள திறமை வாய்ந்த மனிதசக்தி தேவைப்படுவதால், ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்ப நிலையங்களில் தகுந்த குறுகிய கால படிப்புகள் உருவாக்கப்பட்டு, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ளவர்களுக்கு, குறிப்பாக, தென்தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கும், பெண்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் துணித் தொழில வளர்ச்சிக்கு ஏதுவாக, பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் நிறைவுபெறும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தினை 11–வது ஐந்தாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்துமாறு மைய அரசினை தமிழக அரசு வலியுறுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

விற்பனையை அதிகரிக்க, மும்பை, சென்னை, மதுரை, கோவை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள Co-optex–ன் ஐந்து பெரிய விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்படும். எல்லாத்தரப்பு மக்களுக்கும் Co-optex பொருட்கள் சென்றடைய சுய உதவிக் குழுக்களின் சேவையை இங்கே

பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துறையின் மானியத்தின்மீது பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பல்வேறு கருத்துகளைத் தெரிவித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறித் துறையின் மானியத்தின்மீது கொடுக்கப்பட்ட 175 வெட்டுத் தீர்மானங்களுக்கும் எனது பதிலுரையையே விளக்கமாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக் கொண்டு, இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கைத்தறி மானியத்திற்கு ஒப்புதல் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

• **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் மானியத்தின்மீது இத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்று முதன்முறையாக இந்தப் பாரம்பரியமிக்க தமிழக சட்டப்பேரவையில் என்னுடைய பதில் உரையை நிகழ்த்துவதற்கு முன்பாக, நம்மை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரில் சாதாரண நெசவாளர் குடும்பத்தில் பிறந்த என்னை, கழகத்தின் தொண்டன் என்ற தகுதியைத் தவிர வேறு எந்தத் தகுதியும் இல்லாத எனக்கு, முதன்முறையாக ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கி, வெற்றிபெறச் செய்து, என்னை அடையாளம் காட்டி, இன்றைக்குத் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக்கி, எனக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து என்னை வளர்த்து வருகிற எங்கள் குடும்பத் தலைவர், தெற்கில் குடியிருக்கும் இந்தியாவின் வழிகாட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதலில் தலைவணங்கி என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு நிதி அமைச்சர், இனமான பேராசிரியர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணியில் உறுப்பினராக இருந்த என்னை, அரசியலில் படிப்படியாக வளர்த்த எனது அரசியல் முகவரி, என்னை அரசியலில் வழி நடத்திச் செல்லும்



இளைஞர்களின் இதய வேந்தன், நாளைய தமிழ்ச் சமுதாயத்தின் நம்பிக்கைக்குரிய தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், எங்கள் இளைய தலைவர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும், என்னுடைய இதயம் கனிந்த நன்றியை இந்த மாபெரும் அவையில் தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

கழகப் பொருளாளர், மின் துறை அமைச்சர், மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், என்னை ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெறச் செய்வதற்காக அயராது உழைத்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த ஆலந்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'திராவிட இயக்கம் தோன்றியிருக்காவிட்டால், தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் நான் சந்திக்காமல் இருந்திருந்தால், இன்று நான் ஒரு பொதுவுடைமை இயக்கவாதியாகவே இருந்திருப்பேன்' என்று கூறியவர் நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். தொழிலாளர்களின் பாதுகாவலராக அவர் தொடர்ந்து திகழ்ந்து வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தொழிலாளர்களின் நிலைமையை நன்கு உணர்ந்ததால்தான், தமிழகத்தில் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை துறை, மின்சார வாரியம் போன்றவற்றில் பல்லாண்டு காலமாக ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றிய பல்லாயிரக்கணக்கானவர்களைப் பணி நிரந்தரம் செய்துவைத்து அவர்களின் குடும்பங்களில் விளக்கேற்றி வைத்தவர்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கி அதன்மூலம் 1,25,000 தொழிலாளர்களுக்கு வாழ்வு தந்தவர் நமது முதல்வர் கலைஞர் அவர்கள்.

தமிழகத்தில் மே தினத்தை தொழிலாளர் தினம் என்று அறிவித்து அந்த நாளை ஊதியத்துடன்கூடிய அரசு விடுமுறை நாளாக அறிவித்ததோடு மட்டுமல்லாமல், அன்றையதினம் பாரதப் பிரதமராக

திரு. வி.பி. சிங் அவர்கள் இருந்தபோது, மத்தியிலும் மே தினத்தை ஊதியத்துடன்கூடிய அரசு விடுமுறை நாளாக அறிவிக்கச் செய்தவர் நமது முதல்வர் கலைஞர் அவர்கள்.

சென்னையில் நேப்பியர் பூங்காவில் மே தின நினைவுச் சின்னத்தை அமைத்து தொழிலாளர்களுக்குப் பெருமை தேடித்தந்தவர். அப்படிப்பட்ட நம்முடைய முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்த அரசு, தொழிலாளர்களுக்குப் பாடுபடும் அரசாக இன்றைக்குப் பணியாற்றி வருகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, முக்கியத் துறைகளில் ஒன்றாகும். நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கி, தொழிலாளர்கள் வாழ்வு வளம் பெறவும், தொழில் அமைதி ஏற்படுத்திடவும், இத்துறை செயல்பட்டு வருகிறது. மேலும், இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பை உருவாக்கி, அவர்களது எதிர்கால வாழ்வுக்கு வழி காட்டி, அதன்மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரிதும் அடித்தளமாக விளங்கும் துறையாகும்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு ஐந்து அமைச்சர்கள் ஏழு முறை மாற்றப்பட்டார்கள். இதனால் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்களுடைய கோரிக்கைகளை அமைச்சரிடமோ, அன்றைக்கு முதல்வராக இருந்த முதலமைச்சரிடமோ சந்தித்து எடுத்துச்சொல்ல முடியாத காரணத்தினால், தொழிலாளர்களுடைய எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படாமல், தொழிலாளர்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டார்கள்; பாதிக்கப்பட்டார்கள்.

பிற்பகல் 2-00

கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன், நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளெல்லாம் சந்திக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் எடுத்துரைக்கிறார்கள். அவற்றையெல்லாம் கேட்டு, தொழிலாளர் அமைச்சர் என்ற முறையிலே, தலைவர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், கோவைக்கும், சென்னைக்கும் தொழிலாளர் சங்கத்தினுடைய பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் கேட்டறிந்து, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, அந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்ப்பதற்கு தனிக் கவனம் செலுத்துகிறது



என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அளவில் தொழிலாளர் பிரச்சினைகள் குறித்து விவாதித்து ஆலோசனை வழங்கக்கூடிய முக்கியமான 'மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம்', கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்படவில்லை. ஆனால், கழக அரசு பொறுப்பேற்ற மூன்றே மாதத்தில், அந்த வாரியம் அமைய உள்ளது என்பதை, இந்த அவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோலவே, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், 2001 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் திருத்தி அமைக்கப்படவில்லை. இந்த வாரியத்தையும் மீண்டும் திருத்தி அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 91 சதவீதம் தொழிலாளர்கள், அமைப்புசாரா தொழிலாளர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது, அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒன்பது நல வாரியங்களை தனித் தனியாக அமைத்தார்கள். அதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஆதாரம் தந்து, அந்த வாரியங்களைச் செயல்படச் செய்தார். 2001 ஆம் ஆண்டுக்குப்பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற அ.தி.மு.க. அரசு, தனித் தனியாக இருந்த தொழிலாளர் நல வாரியங்களை மீண்டும் ஒன்றாக இணைத்து, அமைப்புசாரா தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்தது; தொழிலாளர்களையெல்லாம் நசுக்கியது. அதற்குப் பிறகு மீண்டும் தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தமிழகத்திலுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்காக தேர்தல் அறிக்கையில் கூறியபடி, ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், சலவைத் தொழிலாளர் நல வாரியம், முடி திருத்துவோர் நல வாரியம், தையல் தொழிலாளர் நல வாரியம், பனை மரத் தொழிலாளர் நல வாரியம், கைவினைத் தொழிலாளர் நல வாரியம், ஓவியர் நல வாரியம், காலணி மற்றும் தோல் பதனிடுதல் தயாரிப்புத் தொழிலாளர்கள் நல வாரியம், கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு

நெய்யும் தொழிலாளர் நல வாரியம் என்று தனித் தனியாக ஒன்பது நல வாரியங்களையும் அமைத்தது மட்டுமல்லாமல், நிதிநிலை அறிக்கையிலே வெளியிட்டுள்ளபடி, பொற்கொல்லர் நலன் காக்க, பொற்கொல்லர் நல வாரியம் அமைத்து, ஆக மொத்தம் பத்து நல வாரியங்களும் இந்த ஆண்டு முதல் செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், வாரியங்களில் பல்வேறு உதவித் தொகைகள் பெறுவதாக இருந்தால், பயனாளிகள் விண்ணப்பித்து, அந்த உதவித் தொகை குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் பல மாதங்களாகக் காத்திருக்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தது. மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சி, தொழிலாளர் நலன் காப்பதற்காக அமைந்துள்ள இந்த அரசு, உரிய காலத்தில் இந்த உதவித் தொகை உரியவர்களுக்குக் கிடைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர் நல வாரியம் தொடங்கப்பட்டபோது, சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களுக்கு மட்டுமே உள்ளடங்கியதாக இருந்தது. 1997–ல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள் தமிழகம் முழுவதும் விரிவாக்கப்பட்டது. 1994–ல் கட்டடத் தொழிலாளர் நல வாரியத்திற்குக் கட்டடம் கட்டுபவர் செலுத்தவேண்டிய நல நிதி, கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.1 சதவீதமாக இருந்தது. கட்டடத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை அமல் செய்யும் வகையில், தி.மு.க. ஆட்சியில் இந்த நிதி 0.1 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதமாக உயர்த்தப்பட்டது.

1994–ல் அ.தி.மு.க. ஆட்சியில் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்ட தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால், நஷ்டயீடாக ரூபாய் 50,000/– மட்டும்தான் வழங்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப்பிறகு, அந்த நிதி ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் பணியின்போது இறந்துவிட்டால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்கலாம் என்ற அரசு ஆணை அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்திவைக்கப்பட்டதால், ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை



கிடைக்காமல் போனது. இதனால், அரசு ஊழியர்களுடைய குடும்பத்தினர் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மீண்டும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கெல்லாம் கருணை அடிப்படையில் வேலை வழங்கலாம் என்ற நிலையை உருவாக்கி, அரசு ஆணையையும் வழங்கி, அரசு ஊழியர்களுடைய வாழ்வில் ஒளி ஏற்றியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் பஞ்சாலைகளில் தொழிலாளர்களை gang கூலிகளாக வைத்திருப்பது, தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, பீடித் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியப் பிரச்சினைகள் ஆகியவை அரசின் கவனத்தை ஈர்த்துள்ளது. பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற தொழிற்சங்கக் கோரிக்கைகளின்மீது தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பிரச்சினைகளையெல்லாம் தீர்ப்பது குறித்து மாண்புமிகு முதல்வரின் அறிவுரை பெற்று, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

இந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்போது உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ள ஆலைகள் குறித்தும், அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் நிலை குறித்தும், மூடப்பட்ட ஆலைகள் மீண்டும் திறக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் பேசினார்கள். இவர்களது பிரச்சினைகள் குறித்து இந்த அரசு ஆய்வு செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மூன்று மாதங்களில், கேளம்பாக்கத்தில் உள்ள ஆர்.கே. இண்டஸ்ட்ரீஸ், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சரஸ்வதி நூற்பாலை, திருமழிசையில் உள்ள இண்டோ–டெக் டிரான்ஸ் பார்ம்ஸ் லிமிடெட், குன்றத்தூரில் உள்ள நமஸ்தே தோல் தொழிற்சாலை, சென்னையில் உள்ள இண்டியன் டிசைன்–டீம் லிமிடெட், நீலாங்கரையில் உள்ள வோலெக்ஸ் இண்டர் கனெக்ஷன் இந்தியா லிமிடெட், சென்னையில் உள்ள பியூச்சர் குளோதிங் கம்பெனி, வேலூரில் உள்ள பாரிவேர் கிளாமர் மில்ஸ், பொள்ளாச்சியில் உள்ள பாப்புலர் ஸ்பின்னிங் மில், உடுமலைப்பேட்டையில் உள்ள ஆர்.ஜி. பேப்ரிக்ஸ்,

கொழப்பலூரில் உள்ள யூனிட்டி மில்ஸ், குரோம்பேட்டை இந்திரா காட்டன் மில்ஸ் ஆகிய தொழிற்சாலைகளில் நடைபெற்று வந்த கதவடைப்பு மற்றும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் எல்லாம் இந்த அரசின் கவனத்திற்கு வந்து, அரசின் தீவிர முயற்சியால் தொழிலாளர் பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, அந்த ஆலைகள் மீண்டும் இயங்குகின்றன என்ற நல்ல செய்தியை இந்த மன்றத்திலே தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பது என்பது நாட்டின் வறுமையைப் போக்கி, கல்லாமையை அகற்றுவதன் மூலம்தான் முழுமையாக நிறைவேற்ற முடியும். எனவே, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கிலோ அரிசி 2 ரூபாய் என்று அறிவித்து வறுமையைப் போக்கவும், கல்விக்காக ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்பி, கிராமங்கள்தோறும் கல்லாமையைப் போக்கி, இதன்மூலம் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்களாக மாறிடும் நிலையை அகற்றிய பெருமை நமது மாண்புமிகு கலைஞர் அவர்களையேச் சாரும்.

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு சத்தான உணவு, வாரம் இரண்டு முட்டை என்று குழந்தைகளின் வயிற்றுப் பசியைப் போக்கி, கல்வியில் ஆர்வம் கொள்ளச் செய்தவர் கலைஞர். குழந்தைத் தொழிலாளர்கள் முறைகளை அறவே களைந்திட, அதற்கான சட்டங்களை அமல்படுத்திட, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது.

நாட்டின் தூண்களாக விளங்கும் இலட்சக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருந்தும்கூட, எந்தவித வேலைவாய்ப்பும் பெற்றிடாத இளைஞர்களின் பொருளாதாரத் தேவையை ஓரளவாவது நிறைவு செய்ய வேண்டுமென்று எண்ணி, நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தாய் உள்ளத்தோடு, 10 ஆம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றிருந்தால் ரூ.150/–ம், மேல்நிலை மற்றும் புதுமுக வகுப்பில தேர்ச்சி பெற்றிருந்தால் ரூ.200/–ம், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் ரூ.300/–ம் மாதந்தோறும் வழங்க வேண்டுமென்று தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியபடி 'வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ்' கல்வித் தகுதிகள் மற்றும் காத்திருப்புக் காலம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த உதவித் தொகை வழங்க இந்த



அரசு ஆண்டுக்கு 110 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைவாய்ப்புத் துறையைப் பொறுத்தமட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வேலைவாய்ப்புத் துறையை சரியாகப் பயன்படுத்தவில்லை. தமிழகத்தில் அ.தி.மு.க. கொண்டு வந்த பணி நியமனத் தடைச் சட்டத்தால் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றித் தவித்தார்கள். இதனால் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருந்த இலட்சக்கணக்கான இளைஞர்கள், வயது உச்சவரம்பைக் கடந்து பாதிக்கப்பட்டனர். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐந்தாண்டு உச்ச வயது வரம்பைத் தளர்த்தி, பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு மீண்டும் வாய்ப்பளித்து, வாழ்வளித்தவர் நமது முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு தமிழகத்திலுள்ள இளைஞர்கள் எல்லாம் தி.மு.க. ஆட்சிமீது நம்பிக்கை வைத்து, எப்படியும் கலைஞர் வேலை தருவார் என்ற நம்பிக்கையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்ய இளைஞர்கள் கூட்டம் அலைமோதுகிறது.

தமிழகத்தில் 56 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 605 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. கிராமப்புறத்தில் உள்ள 8 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் ஏழையெளிய, ஆதரவற்ற மாணவ மாணவியர்களுக்கு 633 தொழிற்பள்ளிகள் மூலம் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடி காரணமாக உயர்கல்வி பெற வாய்ப்பில்லாத ஏழையெளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள், தொழிற்பயிற்சி பெற்று வேலைவாய்ப்பினைப் பெறுவதே இந்த அரசின் நோக்கமாகும். மேலும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தொழிற்சாலை ஆய்வகத் துறை, அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் ஆகிய துறைகள் எல்லாம் இந்த அரசில் வேகமாக முடுக்கிவிடப்பட்டு, இன்றைக்கு மிகச் சிறப்பான முறையில் மக்களுக்காகப் பணியாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன். தொழிலாளர் மற்றும்

வேலைவாய்ப்புத் துறையின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு இங்கே சில அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

பகுதி 2–திட்டத்தின்கீழ் புதிய திட்டங்கள். சுமார் ரூபாய் 37 இலட்சம் செலவில், திருச்சி, தருமபுரி மற்றும் வட சென்னையில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்னலாடை, இயந்திரங்கள் இயக்குபவர், பிட்டர், பெயிண்டர் ஆகிய புதிய தொழிற் பிரிவுகள் தொடங்கப்படும்.

பிற்பகல் 2-10

ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் 35 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற் பிரிவுகளுக்குக் கூடுதல் கருவிகள் மற்றும் தளவாடங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ரூபாய் 25 இலட்சம் செலவில், தொழிலாளர் துறையின் முத்திரை ஆய்வாளர்களுக்கு தராசுகளுக்குப் பதிலாக முதல்கட்டமாக 10 மின்னணு தராசுகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் துறைக்கு ரூபாய் 14 இலட்சம் செலவில் 5 கேஸ் டிடக்டர்ஸ் கருவிகள், 5 எர்த் ரெசிஸ்டென்ட் மீட்டர்கள், 28 ஹைட்ராலிக் பம்ப்கள், 14 நுண்ணொலி மீட்டர்கள் மற்றும் 4 ஒலி அளவுகளைக் கண்டறியும் கருவிகள் வழங்கப்படும்.

ரூபாய் 20 இலட்சம் செலவில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகம் மற்றும் 17 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குப் புதிய கணினிகள் வழங்கப்படும்.

அடுத்து, புதிய அறிவிப்புகள்.

மட்பாண்டத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று, நம்முடைய தளபதி அவர்களுடைய கோரிக்கையும் இதிலே இருக்கிறது; இந்த அரசு மட்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் என்ற தனி வாரியம் உருவாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் 100 ரூபாய் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வசூலிக்கப்பட்டு வரும் புதுப்பித்தல் கட்டணம் 10 ரூபாய் அறவே இரத்து செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பதிவுக் கட்டணம் 25 ரூபாய் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வசூலிக்கப்படும் புதுப்பித்தல் கட்டணம் 10 ரூபாய் ஆகியவையும் அறவே இரத்து செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தொழிலாளர் நல வாரியத்தின்கீழ் இயங்கும் தையல் பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 80 ரூபாயில் இருந்து 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு 10 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியம் 300 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, அதைப்போன்று கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் 200 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தி, வருகின்ற 1–9–2006 முதல் வழங்கப்படும். இதனால் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு நடப்பாண்டில் 48 இலட்சத்து 23 ஆயிரத்து 280 ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு உதவித் தொகை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு 43 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு உதவித் தொகை 4,000 ரூபாயிலிருந்து அதுவும் 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவை, தருமபுரி, விருதுநகர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மட்டும் தற்போது இலவசப் பேருந்து பயணச் சலுகை வழங்கப்பட்டு

வருகிறது. இனிமேல் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் 'இண்டஸ்' திட்டத்தின்கீழ் செயல்படும் 17 மாவட்டங்களிலும் உள்ள சிறப்புப் பள்ளிகளில் பயிலும் தேவையுள்ள குழந்தைகளுக்கு இலவசப் பேருந்துச் சலுகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, கிண்டியில் உள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம், வேலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பயிற்சி மையங்கள், மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் திறன்மிகு தொழிற்பயிற்சி மையங்களாக இந்த ஆண்டில் மேம்படுத்தப்படும். இம்மையங்களில் உலகத்தரம் வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கும் வகையில் பன்முக தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படும்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, குழாய்ப் பொருத்துநர், கட்டடம் கட்டுபவர், உணவு தயாரிப்பவர் ஆகிய துறைகளில் வேலை செய்பவர்களின் அனுபவத் திறனை கணித்து, அவர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படும். இதனால் ஏறக்குறைய 10,000 பேர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பயனடைவர்.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகளைத் தடுக்கும் வகையில் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முகாம்கள் நடத்தப்படும்.

சேலம், வேலூர், மற்றும் மதுரையில் இயங்கி வரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக உதவியுடன் சித்த மருத்துவப் பிரிவு நடப்பாண்டில் தொடங்கப்படும்.

சென்னை அயனாவரத்தில் உள்ள அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் புதுடெல்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக உதவியுடன் யோகா பிரிவு இந்த ஆண்டே தொடங்கப்படும்.

வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படும். 2004 ஆம் ஆண்டு புதுப்பிக்கத் தவறியவர்கள், இதற்கான ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் விண்ணப்பிக்கவும், 2005 ஆம் ஆண்டு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு விண்ணப்பிக்க ஏற்கெனவே 1-9-2006 வரை அளிக்கப்பட்டுள்ள கால அவகாசத்தை 3-10-2006 வரை நீட்டித்தும் ஆணை வெளியிடப்படும்.



பிற்பகல் 2-15

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும், — 162 வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன; அவை அனைத்தையும் படித்துப் பார்த்திருக்கிறேன். இங்கே உரையாற்றிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சொன்ன கருத்துகளையும் கேட்டு அறிந்திருக்கிறோம். இந்தக் குறைகளை எல்லாம் இந்த அரசு நிச்சயமாகப் போக்கித் தரும் என்ற உறுதியைத் தந்து உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய அறிவிப்புகள் ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் அறிவிக்கப்படுகின்றன. நேற்றையதினம் உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் வருகின்றபோது, இரண்டு புத்தகங்களாக எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல, ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் அறிவிப்புகள் வருகின்றபோது அவற்றை எங்களுக்கு புத்தகங்களாகக் கொடுக்கப்படுவதற்கு அவை முன்னவர் அவர்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அரசு ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதற்கு இந்த அரசாங்கம் முன் வந்திருக்கிறது. அதேபோல, தனியார் துறைகளிலே இருக்கின்ற ஒப்பந்தத் தொழிலாளர்களையும் நிரந்தரமாக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணியில் நிரந்தரம் செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை. இதுசம்பந்தமாக முதல்வரிடம் கலந்து பேசி ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணங்களுக்குப் பட்டுப் புடவை எடுக்க வேண்டுமென்றால் காஞ்சிபுரத்திற்குத்தான் செல்கின்றார்கள். பல்வேறு ஊர்களிலிருந்து, அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனியார் விற்பனை நிலையங்களுக்கும் செல்கின்றார்கள். அங்கே duplicate பட்டுப் புடவைகள் நிறைய நடமாட்டம் இருப்பதாக புகார்கள் வந்திருக்கின்றன. இதுகுறித்து அரசினுடைய நடவடிக்கை என்ன என்பதனை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே காஞ்சிபுரம் பகுதியிலே ஜரிகையின் தரம் பார்க்கிற அந்தக் கருவிகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், நானும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. அன்பரசன் அவர்களும் காஞ்சிபுரம் மாவட்டத்திலே அந்தக் கூட்டத்திற்குச் செல்கின்றபோது, நாங்களும் அங்கே அந்தப் போலி ஜரிகைகளைப் பிடித்து, அங்கேயே அது சரிபார்க்கப்பட்டு அந்தக் கடை மூடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அன்பரசன் அவர்கள் பதில் சொல்லும்போது, திருமதி யசோதா அவர்கள் கேள்வி கேட்ட நேரத்திலே பதில் சொன்னபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் இரண்டு கேள்விகளைக் கேட்டார்கள். அரசாங்க ஊழியர்களை நிரந்தரம் செய்ய சட்டத்திலே இடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். தனியார் துறையிலே பணியாற்றக்கூடியவர்களை நிரந்தரம் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டார்கள். அரசுத் தொழிலாளர்கள் 240 நாட்கள் தொடர்ந்து பணியாற்றுவார்களேயானால், அவர்களை நிரந்தரமாக்குவதற்குச் சட்டத்திலே இடமிருக்கிறது. ஆனால், தனியார் துறையிலே பணியாற்றுகின்றவர்களை நாம் கட்டாயப்படுத்த முடியாது. மத்திய



அரசாங்கம் அதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்துதான் அதை நிறைவேற்ற வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். என்ன இது? இப்போது Time என்ன ஆகிறது? 2 மணி 17 நிமிடங்கள் ஆகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். வரவேற்கின்றோம். I.T.I. போன்ற தொழிற் பயிற்சி நிலையங்களிலே இன்னும் பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களிலே பயிற்சி பெற்று பணிகளுக்குச் செல்கின்றபோது தனியார் நிறுவனங்களில் அவர்கள் பணியில் அமர்த்தப்படுகின்றபோது மிகக் குறைந்த ஊதியத்திற்குப் பணியில் அமர்த்தப்படுகின்றார்கள். அவர்கள் படிக்கின்றபோது மிகவும் சிரமப்பட்டுப் படிக்கின்றார்கள். அதேபோன்று, அதற்கான செலவினங்களும் சிரமப்பட்டு செய்கின்றார்கள். ஆனால், பணியில் அமர்த்தப்படுகின்றபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மாத்திரம் சொல்லுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** மிகக் குறைந்த ஊதியத்திற்கு செல்வதனால், (குறுக்கீடு) நான் ஒன்றே ஒன்று, please ஒன்று. செல்வதால் ஒரு நிர்ணயமான ஊதியத்துடன் அவர்கள் செல்ல வேண்டும் என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரிடம் இருக்கிற தொழிற்சாலைகளில் ஏற்கெனவே அவர்கள் ஒவ்வொரு துறையும் ஒவ்வொருவருக்கும் ஓர் ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறது. குறைந்தபட்சமாக சம்பளம் வழங்கப்படுகிறது என்று இந்த அரசுக்குப் புகார்கள் வந்தால், அவர்கள்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) போதும் உட்காருங்கள். இப்போது வாக்கெடுப்பு.

## (மு) கோரிக்கை எண் 32 - தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 32 – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன். திரு. கோவை தங்கம்.*

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.



**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு, இருக்கையில் இல்லை.

திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.



திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அருள் அன்பரசு, இருக்கையில இல்லை.

திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப், இருக்கையில் இல்லை.

திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வீர. இளவரசன், இருக்கையில் இல்லை.

திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மா. குணசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. மா. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா, இருக்கையில் இல்லை.

திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.243,69,96,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.178,99,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"



என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

*பிற்பகல் 2–20*

## (ஆ) கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணி நூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை –கைத்தறி மற்றும் துணி நூல் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.



**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.



திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

திரு. எஸ். ராஜகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல்— கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.501,67,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.12,16,16,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 17–8–2006, வியாழக்கிழமை, காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

14. 2004–2005 ஆம் ஆண்டிற்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

15. 2004–2005 ஆம் ஆண்டிற்கான நீலகிரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

16. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

17. 2004–2005 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

18. 2004–2005 ஆம் ஆண்டிற்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

19. 2004–2005 ஆம் ஆண்டிற்கான விருதுநகர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

20. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

56. மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

57. மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு–செலவுத் திட்டச் செயலாக்கம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

58. மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை–கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

59. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006–2007. (தமிழ்)

60. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006–2007. (தமிழ்)



# இணைப்பு 1

(447 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 32 - தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

### முன்னுரை

தொழில் அமைதியைக் காத்து, தொழிலாளர் நலனுக்காக சுமுக உறவினை நம்பிக்கையளிக்கும் வகையில் நிலைநாட்டுதல், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தினை அமல்படுத்துதல் மற்றும் மாநிலம் முழுவதும் அமைந்துள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக வேலைநாடுபவர்களுக்கு வேலையளிப்பதுடன், வேலை நிலவரம் குறித்த செய்திகளை தெரிவிப்பதன்மூலம் இளைஞர்களைப் பணியாளர்களாக்கி தொழிற்சாலைகளின் அவசரத் தேவைக்கு தகுந்தாற்போல் நவீன செயல்திறனில் முறையான தொழிற்பயிற்சி அளித்தல் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் விரிவான கொள்கையாகும்.

தொழிலாளர் நலனையும், உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் அநேக தொழிலாளர் சட்டங்களைத் தொழிலாளர் ஆணையரகம் செயல்படுத்தி வருகிறது. தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் செழுமையையும் முன்னேற்றத்தையும் வளர்ப்பதற்குகந்த இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி அவர்களுக்கிடையே நல்லுறவை நிலை நிறுத்த உதவுவதே அரசின் கடமையாகும். ஒரு காலகட்டத்தில் தலையிடுவதன்மூலம் சமரசம் செய்து தொழிற்தாவாக்களுக்குத் தீர்வு காண்பது அரசின் கடமையை நிறைவேற்றுவதாக அமைகிறது.

தொழிலாளர் நலன்மீது சிறப்புக் கவனம் கொள்வது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசின் கொள்கையாகும். தொழிலாளர் சக்தியின் மிகப் பெரிய அங்கம் அமைப்புசாரா தொழிலாளர்களாவர். அவர்களின் நலனை உறுதி

[2006 ஆகஸ்ட் 12

செய்ய சில தொழில்களுக்கென தனி நல வாரியங்களை உருவாக்க அரசு தீர்மானித்துள்ளது.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை ஆலைகளைப் பதிவு செய்கிறது. அத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் ஏனைய நலன்களை உறுதிசெய்யும் பொருட்டு இத்துறை ஆய்வுகளை மேற்கொள்வதோடு, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினையும், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பையும் இத்துறை அமல்படுத்துகிறது.

தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தத் தேவையான பயிற்சி அளிப்பது, தொழில் நெறிப் பயிற்சி முறையின் நோக்கமாகும். தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தொழில் நிறுவனங்களிலும் இதற்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கைவினைஞர் பயிற்சித் திட்டம் தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாக திறன்மிக்க கைவினைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் குறிப்பிட்ட துறைகளில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களின் செயல்திறனை வெளிக்கொணர்வதற்காக 1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுநர் சட்டத்தின்கீழ் தொழில் நிறுவனங்களில் அப்பயிற்சியாளர்களுக்குப் பழகுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையங்களைத் திறன்மிகு தொழிற்பயிற்சி மையங்களாகத் தரம் உயர்த்துவதற்கான திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில் பிரிவுகளுக்கு மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் சரியான அடிப்படை உபகரணங்களை அளிப்பதுதான் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். நவீன முறையில் பல்வேறு திறன் பற்றிய படிப்புகள்மூலம் தொழிற்சாலைகளின் செயல்திறன் தேவைகளை இத்திட்டம் பூர்த்தி செய்யும்.

வேலை நாடுபவர்களின் தேவைகளை நிறைவேற்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் உள்ளது. இதைத் தவிர, தொழில் வல்லுநர்கள், நிர்வாக வல்லுநர்கள், திறனற்றவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக மாநிலத்தில் பல்வேறு சிறப்பு வேலைவாய்ப்பகங்கள் உள்ளன. வேலை நாடுநர்களுக்கு வெளிநாடுகளில் பொருத்தமான வேலைகளைப் பெற்றுத் தருவதற்கு



2006 ஆகஸ்ட் 12]

உதவுவதற்கென்றே அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏராளமான படித்த வேலையில்லாத இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு வேலைக்காக காத்திருக்கின்றனர். இவர்களது இன்னலை குறைப்பதற்கு அரசு வேலையில்லாதோருக்கான நிதி உதவித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும்.

## அத்தியாயம்-1

### தொழிலாளர் துறை

### தொழில் உறவுகள்

1.1. தமிழக அரசு தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்குமிடையே தொழில் அமைதி மற்றும் இணக்கமான நல்லுறவுடன்கூடிய சூழ்நிலையையும், பொருளாதார மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கு உகந்த தொழிலுறவினைப் பேணிக்காக்கவும் உறுதி பூண்டுள்ளது. உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கலினால் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு தொழில் துவங்குவதற்கான சிறந்த வழியை ஏற்படுத்துவது முதன்மையான பணியாகும். இந்தச் சுமுகமான சூழ்நிலை தொழில் துவங்குவதற்கும், இளம் தொழில் முனைவோரை ஊக்குவித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஏதுவாக இருக்கும்.

### தொழிலாளர் நீதிமன்றங்கள்

1.2. தொழிலாளர் நீதிமன்றங்கள், 1947 ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் அட்டவணை II-ல் விவரிக்கப்பட்டுள்ள இனங்கள்மீது தீர்ப்பு வழங்குகின்றன. மாநிலம் முழுவதும் இத்தகைய 10 நீதிமன்றங்கள் உள்ளன.

1.3. சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தொழில் தீர்ப்பாயம் இயங்கி வருகின்றது. 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் அட்டவணை-II அல்லது III-ல் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள்மீது தொழிற் தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்க முடியும்.

### மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்)

1.4. தொழிலாளர் துறை, தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையத்துடன் இணைந்து 1923 ஆம் ஆண்டு வேலையாள்

இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் எழுப்பப்பட்டு, நிலுவையிலுள்ள வழக்குகளில் மிக விரைவாக நீதி கிடைக்க "லோக் அதாலத்" என்ற மக்கள் நீதிமன்றத்தை அமைத்துள்ளது.

## அத்தியாயம்–2

### அமலாக்கம்

2.1. எந்தவொரு சட்டத்தின் குறிக்கோளும், அச்சட்டம் முழுமையாக அமலாக்கம் செய்யப்பட்டால்தான் நிறைவேறும். சம்பந்தப்பட்ட சட்டங்களின் நோக்கங்களை அடைய தொடர்புடைய தரப்பினர்களைச் சட்டத்திற்கு இணங்கச் செய்தல் அல்லது அமலாக்கம் செய்யாமைக்காக வழக்கு தொடர்வது தொழிலாளர் துறை அமலாக்க அலுவலர்களின் தலையாய கடமையாகும். இக்குறிக்கோளினை மனதிற்கொண்டு, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள சலுகைகளைத் தொழிலாளர்கள் அடைவதை உறுதி செய்ய இத்துறை சட்டப்பூர்வமாக செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் துறையினால் அமல்படுத்தப்பட்டு வரும் சில தொழிலாளர் நலச் சட்டங்கள் கீழ்வருமாறு :–

1. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்.
2. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம்.
3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம்.
4. 1936 ஆம் ஆண்டு சம்பளப் பட்டுவாடா சட்டம்.
5. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம்.
6. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம்.
7. 1985 ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம்.
8. 1977 ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தரம் (பொட்டலப் பொருட்கள்) விதிகள்.





9. 1976 ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம்.
10. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.
11. 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணிநிபந்தனை மற்றும் இதர பிரிவுகள்) சட்டம்.
12. 1946 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (நிலையாணைகள்) சட்டம்.
13. 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டம்.
14. 1961 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம்.

## அத்தியாயம்–3

### குறைந்தபட்ச ஊதியங்கள்

3.1. குறைந்தபட்ச ஊதியத்தை நிலைநிறுத்தும் முக்கியமான பாதுகாப்பு வளையமாக 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டமியற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் அட்டவணையில், 90 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

3.2. குறைந்தபட்ச ஊதியச் சட்டப்பிரிவு 20 (1)-ன்படி, கேட்பு மனுக்களில் முடிவு செய்ய 9 வட்டார தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரம் பெற்றவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## அத்தியாயம்–4

### சமூகப் பாதுகாப்பு

4.1. தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு தொழிலாளர் நலக் கொள்கையின் முக்கியமானதொரு அம்சமாகும். இப்பாதுகாப்பை வழங்கும் பொருட்டு, கீழ்க்கண்ட சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

1. 1923 ஆம் ஆண்டு வேலையாள் இழப்பீட்டுச் சட்டம்
2. 1972 ஆம் ஆண்டு பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம்

[2006 ஆகஸ்ட் 12

3. 1965 ஆம் ஆண்டு போனஸ் வழங்குதல் சட்டம்
4. 1961 ஆம் ஆண்டு மகப்பேறு நலச் சட்டம்
5. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம்
6. 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம்

## அத்தியாயம்–5

## தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்

5.1. மத்திய அரசின் "ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்" தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி மத்திய அரசு வீடு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.40,000/– அல்லது வீடு ஒன்றின் கட்டுமானச் செலவில் 50 விழுக்காடு தொகை, இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்குகிறது. இது தவிர, மாநில அரசும் ஒரு வீட்டிற்கு ரூ.5,000/– வீதம் மாநில அரசின் மானியமாக வழங்குகிறது.

5.2. மத்திய அரசு தற்போது இத்திட்டத்தை திருத்தியமைத்து "திருத்தப்பட்ட ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம், 2005" எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது. இப்புதிய திட்டத்தின்படி 2,339 பயனாளிகள் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கண்டறியப்பட்டுள்ளனர்.

## அத்தியாயம்–6

## தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

6.1. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதல் அரசின் முதன்மைக் கொள்கைகளில் ஒன்றாகும். இக்குறிக்கோளை அடைய 1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் (தடை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தினை நடைமுறைப்படுத்தத் தேவையான ஒருங்கிணைந்த நடவடிக்கை, குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களுக்குக் கல்வி அளிப்பது, குழந்தைத் தொழிலாளர் முறையை எதிர்க்கும் வகையிலான சமுதாய உணர்வினை வளர்ப்பது ஆகியவை தேவைப்படுகின்றன.



2006 ஆகஸ்ட் 12]

6.2. அபாயகரமான மற்றும் அபாயகரமற்ற தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்ற மாநிலச் செயல் திட்டம் வழிவகுத்துள்ளது.

### குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்பு

6.3. அனைவருக்கும் கல்வி (சர்வ சிக்ஷா அபியான்) திட்டத்தின்கீழ் நடைபெற்ற கணக்கெடுப்பில், 2003 ஆம் ஆண்டில் 70,344 குழந்தைத் தொழிலாளர்களும், 2004 ஆம் ஆண்டில் 46,153 குழந்தைத் தொழிலாளர்களும் இருந்த நிலையில், 2005 ஆம் ஆண்டில் 25,679 குழந்தைத் தொழிலாளர்கள் மட்டுமே உள்ளதாக கண்டறியப்பட்டது.

### தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

6.4. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் இந்திய அரசின் நிதி உதவியுடன் தூத்துக்குடி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், தருமபுரி, திருநெல்வேலி, சென்னை, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மாவட்ட ஆட்சியாளரால் செயல்படுத்தப்படுகிறது.

### சிறப்புப் பள்ளிகளின் செயல்பாடு

6.5. தற்போது 17,472 குழந்தை தொழிலாளர்கள் 454 சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயில்கின்றனர். அரசு சாரா நிறுவனங்களால் இப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. சிறப்பு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இலவச புத்தகம், நோட்டு புத்தகம், எழுதுபொருட்கள், சீருடை மற்றும் மதிய உணவு வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு குழந்தைக்கும் மாதந்தோறும் ரூ.100/– உதவித் தொகை வழங்கப்படுகிறது. சுகாதாரத் துறையின் ஒத்துழைப்புடன் முறையான மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயிலும் மாணவ, மாணவிகள் சிறப்புப் பள்ளிகளில் படிப்பை முடித்தவுடன் ஒவ்வோராண்டும் முறையான பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

### மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம்

6.6. மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான செயல் திட்டத்தினை

அமல்படுத்துகிறது. மாநிலக் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கம், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆணையாளர் இதன் தலைவராகவும், கூடுதல் தொழிலாளர் ஆணையாளர் இதன் உறுப்பினர்-செயலாளராகவும் உள்ளனர்.

### சட்ட அமலாக்கம்

6.7. மாநிலத்தில் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வகத் துறை அலுவலர்கள் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துதலைத் தடுக்க பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்துவருகிறார்கள்.

### மாவட்ட அளவிலான குழு

6.8. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அக்குழுக்கள் அடிக்கடி கூட்டாய்வுகள் மேற்கொள்கின்றன. இதைத்தவிர, அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியாளரை தலைவராகக் கொண்டு அபாயகரமான தொழில்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களை முற்றிலும் அகற்றிட இதற்கான செயல்திட்டத்தின் செயலாக்கத்தை முடுக்கிவிட மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை இம்மாவட்டக் குழுக்களின் முயற்சிகளால் 1,664 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். 1,108 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 861 குழந்தைத் தொழிலாளர்கள் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### விழிப்புணர்வு உருவாக்குதல்

6.9. குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு சம்பந்தமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்த துண்டு பிரசுர வெளியீடு, சிறு நூல்கள், சுவரொட்டிகள் மற்றும் குறு சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன. பேருந்துகளிலும் பொது இடங்களிலும் விளம்பரத்தட்டிகள் வைத்தும் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு முறைக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 ஆம் தேதி குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மற்றும் குழந்தைகள் உரிமைகள் குறித்த செய்திகளைத் தாங்கி, "குருத்து" என்ற தமிழ் இருமாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. குழந்தை தொழிலாளர் முறை குறித்த விவரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் புதிய இணைய தளம் (www.tn.childlabour.tn.gov.in) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.





### சிறந்த மாவட்ட ஆட்சியாளருக்கான விருது

6.10. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாக செயலாற்றும் மாவட்ட ஆட்சியாளர்களை ஊக்குவிக்க மாநில அளவில் விருது வழங்கப்படுகிறது.

## குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான வழிகாட்டும் வரைபடம்

6.11. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான மாநில பொறுப்பாண்மைக் குழுக் கூட்டத்தில் "குழந்தைத் தொழிலாளர்கள் அற்ற" மாவட்டமாக அறிவிக்க மாவட்டங்களுக்குக் காலக்கெடு நிர்ணயிக்க ஒரு வழிகாட்டும் வரைபடம் (Road Map) தயாரிக்கப்பட்டுள்ளது. இது வரை 10 மாவட்ட ஆட்சியர்கள், "குழந்தைத் தொழிலாளர் அற்ற" மாவட்டங்களாக அறிவிக்க முன்மொழிவுகள் அனுப்பியுள்ளனர்.

### 'இண்டஸ்' திட்டம்

6.12. இந்திய அரசு மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டு தொழிலாளர் துறையும் இணைந்து குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் "இண்டஸ்" என்ற திட்டத்திற்கு நிதி அளித்திட கூட்டாக கையொப்பமிட்டுள்ளன.

அபாயகரமான தொழில்களில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு முறையான மற்றும் சிறப்புப் பள்ளிகளில் தொழிற்கல்வி அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். காஞ்சிபுரம், நாமக்கல், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆய்வின்போது கண்டறியப்பட்ட 8,595 குழந்தைத் தொழிலாளர்கள், இத்திட்டத்தின்கீழ் நடைபெறும் 216 இடைமாற்று கல்வி மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். 71 தொழில் பயிற்சி மையங்களில் 13 முதல் 17 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

## அத்தியாயம்–7

## நல வாரியங்கள்

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

7.1. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்படி 1975 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. வேலையாட்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் நலனுக்காக இவ்வாரியம் பல்வேறு தொழிலாளர் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி

7.2. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களை நடத்தும் வேலையளிப்போரிடமிருந்து சந்தாத் தொகை பெறுகிறது. மேற்படி நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் ஆண்டொன்றிற்கு ரூ.5/– வீதம் அளிக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளிக்காகவும் ஆண்டொன்றிற்கு ரூ.10/– வீதம் வேலையளிப்பவர்கள் தம் பங்காக அளிக்கிறார்கள். தொழிலாளர்களின் பங்குக்கு ஈடாக தமிழ்நாடு அரசு தனது பங்கை இந்நிதிக்கு அளிக்கிறது.

7.3. தொழிலாளர் நலச் சட்டங்களின் சட்டவிதி மீறல்களுக்காக நீதிமன்றங்களால் விதிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் தொழிலாளர் துறையால் விதிக்கப்படும் இசைவுக் கட்டணத் தொகையில் 90 விழுக்காடு தொகையை இவ்வாரியம் பெற்று வருகிறது.

7.4. பின்வரும் திட்டங்களை வாரியம் அமல்படுத்தி வருகிறது.

#### தையற் பயிற்சி மையங்கள்

7.5. அனைத்து தொழிலாளர் நல மையங்களில், தொழிலாளர்களைச் சார்ந்துள்ள பெண்களின் நலனுக்காக தையற் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.80/–ம், மேல்நிலைத் தேர்வுக்கு தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் ஏற்கப்படுகிறது.





#### குழந்தைகள் காப்பகம்

7.6. பணிபுரியும் தாய்மார்களின் குழந்தைகளுக்காக, குழந்தைகள் காப்பகங்கள் வாரியத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை, 2 முதல் 5 வயது வரை உள்ள 2,197 குழந்தைகள் இத்திட்டத்தின்மூலம் பயனடைந்துள்ளார்கள். மேலும், குழந்தைகளுக்குச் சத்துணவு மற்றும் பால் ஆகியன தினமும் வழங்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, வாரம் இருமுறை முட்டை மற்றும் பழம் வழங்கப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கு ஆண்டிற்கு 2 ஜோடி டெரி-காட்டன் சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், மருத்துவர்களால் மாதம் இருமுறை குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. அக்குழந்தைகளுக்கு பயிற்சி பெற்ற குழந்தை நல அமைப்பாளர்களால் அடிப்படை கல்வி கற்பிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.6,48,073/– செலவு செய்யப்பட்டுள்ளது.

#### படிப்பகங்கள்

7.7. ஒவ்வொரு தொழிலாளர் நல மையத்திலும், படிப்பகத்திற்கென தமிழ் தினசரி இரண்டும், வாரத் தமிழ் இதழ்கள் இரண்டும் வழங்கப்படுகின்றன.

#### கல்வி உதவித்தொகை

7.8. வாரிய நலநிதிக்கு சந்தா செலுத்தி வரும் தொழிலாளர்களின் பிள்ளைகள் மேல்நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி பயில கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

#### கல்வி ஊக்கத் தொகை

7.9. ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ரூ.1,000/–மும், இரண்டாம் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ரூ.500/–ம் ரொக்கப் பரிசாக வழங்கப்படுகிறது.

#### புத்தக உதவித்தொகை

7.10. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வாரியம் புத்தக உதவித் தொகை வழங்குகிறது. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி பெற கட்டணத் தொகை வழங்கப்படுகிறது.

### மூக்குகண்ணாடி உதவித்தொகை

*7.11.* மூக்கு கண்ணாடி வாங்கியதற்கான செலவுத் தொகை ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.400/– வரை திரும்ப வழங்கப்படுகிறது.

### காதுகேட்கும் கருவி, மூன்று சக்கர வண்டி மற்றும் செயற்கை உறுப்பு

*7.12.* காது கேளாத தொழிலாளர்களுக்கு காது கேட்கும் கருவி வாங்கிட ரூ.1,000/– வழங்கப்படுகிறது.

### ஈமச்சடங்கு செலவுத் தொகை

*7.13.* தொழிலாளர்களின் ஈமச்சடங்கு செலவுகளுக்காக ரூ.1,500/– வழங்கப்படுகிறது.

### காசநோய் பிரிவு

*7.14.* தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தாம்பரம், ஆசாரிப்பள்ளம், திருப்பூர், ஆஸ்டின்பட்டி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனைகளில் தொழிலாளர்களுக்காகப் படுக்கை வசதியுடன் தனிப் பிரிவுகளைக் கட்டியுள்ளது.

### ஓய்வு இல்லங்கள்

*7.15.* தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் மாமல்லபுரம், குற்றாலம், வால்பாறை ஆகிய இடங்களில் மிகக் குறைந்த வாடகையில் தொழிலாளர்கள் குடும்பத்தாருடன் தங்குவதற்கு வசதியாக ஓய்வில்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

தொழிற்தகராறுகள் சமரச பேச்சுவார்த்தைக்கு வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறைந்த வாடகையில் தங்குவதற்காக சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்தில் ஜீவா இல்லம் என்ற ஓய்வில்லம் கட்டப்பட்டுள்ளது.

### தொழிலாளர்களுக்கான பத்திரிகை

*7.16.* தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் "உழைப்பவர் உலகம்" என்ற மாத இதழ் தொழிலாளர்கள், வேலையளிப்போர் மற்றும் பொது மக்கள் படித்து பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் நீதிமன்ற தீர்ப்புகள், தொழிலாளர் சட்டம், வினா விடை, விலைவாசி குறியீடுகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. தற்போது 3,968 சந்தாதாரர்கள் உள்ளனர்.





### தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்

*7.17.* தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தொழிலாளர் ஆணையாளரை தலைவராகக் கொண்டு 1994 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

*7.18.* பதிவு செய்துகொண்ட அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. மொத்தம் 11,08,675 தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ளனர்.

### வாரியத்தினால் அமலாக்கப்பட்டு வரும் திட்டங்கள்

### தனி நபர் குழு விபத்து காப்பீட்டு திட்டம்

*7.19.* இவ்வாரியத்தில் பதிவு செய்துகொண்ட அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களும் தனி நபர் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காப்பீட்டினை மீண்டும் புதுப்பிப்பதற்கான கட்டணம் வாரியத்தால் செலுத்தப்படுகிறது.

பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர் ஒருவர் விபத்து காரணமாக இறந்தால், அவருடைய நியமனதாரருக்கு ரூபாய் ஒரு இலட்சம் அளிக்கப்படுகிறது. உடல் உறுப்புகள் இழப்பு மற்றும் பார்வை இழப்பு மற்றும் இதர இழப்புகளுக்கு இழப்பின் சதவிகிதத்தின் அடிப்படையில் ஒரு இலட்சம் ரூபாய் வரை ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

### கல்வி உதவித் தொகை திட்டம்

*7.20.* 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகளுக்குக் கல்வி உதவித் தொகையாக ரூ.1,000/–மும், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன்/மகளுக்கு முறையே ரூ.1,000/– மற்றும் ரூ.1,500/– வழங்கப்பட்டு வருகிறது.

*7.21.* தொழிற்கல்வி, பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு ஆகியவற்றை வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு ரூ.1,000/–த்திலிருந்து ரூ.4,000/– வரையிலும், விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு ரூ.1,200/–லிருந்து ரூ.6,000/– வரையிலும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 12

### திருமண உதவித் திட்டம்

7.22. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் திருமணத்திற்கும் மற்றும் அவரது மகன்/மகள் திருமணத்திற்கும் உதவித் தொகையாக ரூ.2,000/– வழங்கப்படுகிறது.

### மகப்பேறு உதவித் திட்டம்

7.23. பதிவு பெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு/ கருச்சிதைவு/கருக்கலைப்புக்கு ரூ.4,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### இயற்கை மரணமுற்ற தொழிலாளர்களின் குடும்பத்திற்கான உதவித் திட்டம்

7.24. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கை மரணமடைந்தால், அன்னாரது நியமனதாரருக்கு ரூ.15,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### ஈமச்சடங்கு உதவித் திட்டம்

7.25. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கையாகவோ, விபத்தினாலோ மரணமடைந்தால், அவரது நியமனதாரருக்கு ஈமச்சடங்கிற்காக உதவித் தொகை ரூ.2,000/– அளிக்கப்படுகிறது.

### மூக்குக் கண்ணாடி வாங்கிய தொகையினை திரும்ப வழங்கும் உதவித் திட்டம்

7.26. மூக்குக் கண்ணாடி வாங்கிய செலவுத் தொகையை வழங்குவதற்காக ஒரு தொழிலாளிக்கு ரூ.500/– வீதம் ஒவ்வொரு ஆண்டும் 2,000 தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

### ஓய்வூதியம்

7.27. 60 வயது பூர்த்தியடைந்த, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளருக்கு மாதம் ரூ.200/– வீதம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

7.28. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்)



2006 ஆகஸ்ட் 12]

சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 67 வகையான தொழில்களில், 60 தொழில்களில் ஈடுபட்டுவரும் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் பொருந்தும்.

### வாரியத்தினால் அமலாக்கப்பட்டு வரும் திட்டங்கள்

### தனி நபர் குழு விபத்து காப்பீட்டு திட்டம்

7.29. இவ்வாரியத்தில் பதிவு செய்துகொண்ட அனைத்து உடலுழைப்புத் தொழிலாளர்களும் தனி நபர் குழு விபத்துக் காப்பீடுத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காப்பீட்டினை மீண்டும் புதுப்பிப்பதற்கான கட்டணம் வாரியத்தால் செலுத்தப்பட்டு வருகிறது.

பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளர் ஒருவர் விபத்து காரணமாக இறந்தால், அவருடைய நியமனதாரருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அளிக்கப்படுகிறது. உடல் உறுப்புகள் இழப்பு மற்றும் பார்வை இழப்பு மற்றும் இதர இழப்புகளுக்கு இழப்பின் சதவிகிதத்தின் அடிப்படையில் ஒரு இலட்சம் ரூபாய் வரை ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

### கல்வி உதவித் தொகை திட்டம்

7.30. 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளியின் மகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.1,000/–, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன்/மகளுக்கு முறையே ரூ.1,000/– மற்றும் ரூ.1,500/– வழங்கப்பட்டு வருகிறது.

தொழிற்கல்வி, பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு ஆகியவற்றை வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு ரூ.1,000/–த்திலிருந்து ரூ.4,000/– வரையிலும், விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு ரூ.1,200/–லிருந்து ரூ.6,000/– வரையிலும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### திருமண உதவித் திட்டம்

7.31. பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளியின் திருமணத்திற்கும் மற்றும் அவரது மகன்/மகள் திருமணத்திற்கும் உதவித் தொகையாக ரூ.2,000/– வழங்கப்படுகிறது.

**மகப்பேறு உதவித் திட்டம்**

7.32. பதிவு பெற்ற பெண் உடலுழைப்புத் தொழிலாளிக்கு மகப்பேறு/கருச்சிதைவு/கருக்கலைப்புக்கு ரூ.4,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**இயற்கை மரணமுற்ற தொழிலாளர்களின் குடும்பத்திற்கான உதவித் திட்டம்**

7.33. பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளி இயற்கை மரணமடைந்தால், அன்னாரது நியமனதாரருக்கு ரூ.15,000/– உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**ஈமச்சடங்கு உதவித் திட்டம்**

7.34. பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளி இயற்கையாகவோ, விபத்தினாலோ மரணமடைந்தால், அவரது நியமனதாரருக்கு ஈமச்சடங்கிற்காக உதவித் தொகை ரூ.2,000/– அளிக்கப்படுகிறது.

**மூக்குக் கண்ணாடி வாங்கிய தொகையினை திரும்ப வழங்கும் உதவித் திட்டம்**

7.35. மூக்குக் கண்ணாடி வாங்கிய செலவுத் தொகையை திரும்ப வழங்குவதற்காக ஒரு தொழிலாளிக்கு ரூ.500/– வீதம் ஒவ்வொரு ஆண்டும் 2,000 தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**சில தொழில்களுக்கு தனித்தனி தொழிலாளர் நல வாரியங்கள் அமைத்தல்**

7.36. தமிழ்நாட்டில் தற்போது கட்டுமானத் தொழிலாளர்களுக்கென தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியமும், அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கென தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியமும் ஆகிய இரண்டு வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன.

7.37. தமிழ்நாட்டில் உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பல்வேறு தொழில்களைச் சார்ந்த உடலுழைப்புத் தொழிலாளர்கள் உள்ளனர். சில தொழில்களுக்கு தனித்தனி நல வாரியங்கள் அமைப்பதென அரசு முடிவு எடுத்துள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு தனித்தனியாக நல வாரியங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது:–

(1) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்





(2) தமிழ்நாடு தையற்கலை தொழிலாளர்கள் நல வாரியம்

(3) தமிழ்நாடு சிகை அலங்கார தொழிலாளர்கள் நல வாரியம்

(4) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம்

(5) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்

(6) தமிழ்நாடு கைவினை தொழிலாளர்கள் நல வாரியம்

(7) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம்

(8) தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் மற்றும் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்

(9) தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்

(10) தமிழ்நாடு தங்க நகைத் தொழிலாளர் நல வாரியம்

**அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்**

7.38. வாரியங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.300/– வீதம் ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி, வாரியத்தில் பதிவு செய்து குறைந்தது 5 ஆண்டுகளாகி, 60 வயதை பூர்த்தி செய்த தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகிறார்கள்.

## அத்தியாயம்–8

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

8.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973–ல் தமிழ்நாடு அரசால் தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார்.

8.2. இந்த நிலையம் தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள மேற்பார்வை மற்றும் மேலாண்மை பணியாளர்கள், தொழிற்சங்கவாதிகள், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களுக்குப் பொருந்தும் வகையில் பயிற்சித் திட்டங்கள்,

கருத்தரங்குகள், புத்தாக்கப் பயிற்சிகள், புத்தறிவுப் பயிற்சிகள் போன்றவற்றை நடத்துகிறது.

8.3. காலப்போக்கில் கல்வி நிலையம் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தி, தொழிலாளர் மேலாண்மையில் படிப்புகளை நடத்துகிறது. இதைத் தவிர, பணியாளர் மேலாண்மையில் ஆராய்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

8.4. இக்கல்வி நிலையம், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாவட்டங்களாக அறிவிக்கக்கோரும் முன்மொழிவு குறித்து மதிப்பீட்டாய்வு செய்து தொழிலாளர் ஆணையருக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது.

8.5. மேலும், இக்கல்வி நிலையம் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஓராண்டு பகுதிநேர தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப்படிப்பும் (பி.ஜி.டி.எல்.ஏ), முழுநேரமாக இளங்கலை பட்டப்படிப்பும் அதாவது பி.ஏ (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் முதுநிலை பட்டப்படிப்பும், எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) நடத்தி வருகிறது. இந்தக் கல்வி நிலையம், முழுநேரம் மற்றும் பகுதி நேர முனைவர் ஆராய்ச்சி (பிஎச்.டி) நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தால் ஒரு ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

8.6. மலேசியாவில் பணிபுரிய விரும்பும் இந்திய தொழிலாளர்களுக்கான அறிமுகப் பயிற்சியை நடத்திட இக்கல்வி நிலையம் மலேசியா அரசால் பயிற்சி மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்–9

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

### நிர்வாகம்

9.1. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் நிர்வாகமும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கமும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரின் முழுப்பொறுப்பில் உள்ளன.





தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் இரு முக்கிய செயல்பாடுகள் வருமாறு:—

1. உடல் நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்.
2. முறைப்படுத்தும் செயல்பாடுகள் (பல்வேறு சட்டங்களின் அமலாக்கம்).

தமிழ்நாட்டில் உள்ள பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல் நலன் பாதுகாத்தல், தொழிலாளர்களுக்கு முறையான நல வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை முக்கிய பங்கினை வகிக்கிறது. மேற்கண்ட கோட்பாடுகளை எய்துவதற்காக, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களை இத்துறை செயல்படுத்துகிறது.

### முறைப்படுத்தும் செயல்பாடுகள்

### ஆய்வுகள்

9.2. தொழில் நுட்பம் நிறைந்த 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் தொழிலகங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலம், நல வசதிகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களையும் முழுமையாகச் சென்றடையும் வண்ணம், அனைத்து முயற்சிகளும் துறை ஆய்வுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

### சிறப்புக் குழு ஆய்வுகள்

9.3. பட்டாசுத் தொழிற்சாலைகளில், தீபாவளிப் பண்டிகை காலத்தில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக வெடிவிபத்துகள் நிகழ்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, வழக்கமான ஆய்வுகள் தவிர, இக்காலக் கட்டங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பான பணிநிலைமையையும், வேலை முறையையும் கண்காணித்து சீர்படுத்துவதற்காக சிறப்புக்குழுக்களின் (Special Squads) ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**விபத்துக்கள்**

9.4. 2003, 2004, 2005 மற்றும் 31–03–2006 வரையில் நிகழ்ந்த விபத்துக்கள் விவரம்:–

| வருடம் | தொழிற்சாலைகள் எண்ணிக்கை | தொழிலாளர்கள் எண்ணிக்கை | மரண விபத்து | மரணமற்ற விபத்து |
|---|---|---|---|---|
| 2003 | 34,071 | 12,56,120 | 35 | 1,908 |
| 2004 | 34,520 | 12,70,599 | 40 | 1,838 |
| 2005 | 36,867 | 13,20,613 | 50 | 1,545 |
| 31-03-2006 வரை | 37,439 | 13,31,717 | 11 | 345 |

**புகார் விசாரணை**

9.5. தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்கு தீர்வு காண உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளரால் சென்னையிலும், தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் மாவட்டங்களிலும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் எழுப்பப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்கள்**

9.6. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் அட்டவணை 1–ன்படி, 29 செயல்முறைத் தொழில்கள் ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழில்களாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய தொழிற்சாலைகளின் செயல்பாட்டில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் அதிக முனைப்புடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் “பெரும் விபத்து மற்றும் பேரபாய தடுப்புக் குழு” ஒன்று, தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளரின் தலைமையில் 1988 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அபாயம் விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பேரபாயத்தை தடுக்கக்கூடிய





செயல்முறைகளை உருவாக்குவதற்கு இந்தக் குழு வழிகாட்டுகிறது. அவை நிறைவேற்றப்படுவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்ட அளவிலான அவசர கால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசர கால ஆயதத நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 23–04–1998 தேதியிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசாணை (நிலை) எண் 109–ல் மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய பெரும் விபத்துக்கள் மற்றும் அபாயநிலை அழிவுகளைத் தடுத்து, அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன.

அபாய நிலை அவசரக் காலகட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் குறித்து ஆவன செய்வதற்கு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் அவ்வப்போது நடத்தப்பட்டு, ஆயத்த நிலைத் திட்டங்கள் சீர்படுத்தப்படுகின்றன. மேலும், பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த, மேம்பட்ட கண்காணிப்பு கருதி, ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளிலிருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**மனை மதிப்பீட்டுக் குழு**

9.7. தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41–அ–வில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட்டுள்ள மனைமதிப்பீட்டுக் குழு, “பெரும் விபத்து மற்றும் பேரபாயம்” விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை, இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. இந்தவகை ஒப்புதலில், அரசு விதிக்கும் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு, துவக்க நிலையிலிருந்தே ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

[2006 ஆகஸ்ட் 12

## சம்பந்தப்பட்ட சட்டங்கள்

9.8. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கீழ்க்காணும் தொழிலாளர் நலச் சட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன:–

(i) 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம்.

(ii) 1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம்.

(iii) 1936 ஆம் ஆண்டு சம்பளப் பட்டுவாடாச் சட்டம்.

(iv) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.

(v) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம்.

(vi) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதிய பட்டுவாடாச் சட்டம்.

(vii) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம்.

(viii) 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம்.

## உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாடு

## உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

### மருத்துவப் பிரிவு

9.9. இரசாயனத் தொழிற்சாலைகளில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் நச்சுத் தன்மையால் தொழிலாளர்களின் உடல் நலத்திற்கு ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்தவும், உடல் நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள், தொழிற்சாலைகளில் குறித்த கால இடைவெளிகளில் சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு, அதன்வழி தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க சிகிச்சை முறைகளையும் தடுப்பிற்கான மேம்பாட்டு வழிமுறைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.



2006 ஆகஸ்ட் 12]

### தொழில் நலவியலகம்

9.10. இத்துறையில் இயங்கிவரும் தொழில் நலவியலகம், சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள இரசாயனப் பொருட்களால் தொழிலாளர்களின் உடல் நலம் பாதிக்கப்படுவதைக் கண்காணிக்கிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளை கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் இந்த ஆய்வகத்தால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி மற்றும் காற்றோட்டம் போன்ற பௌதீக காரணிகளால் உண்டாகக் கூடிய விளைவுகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியலகம் ஆய்வு மேற்கொள்கிறது.

### இரைச்சலால் ஏற்படும் பாதிப்பு

9.11. தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்களது காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன், அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. அதிக இரைச்சலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் இத்துறை ஆய்வாளர்கள் அந்த ஒலியினை அளவீட்டு கருவி மூலம் கண்காணித்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க வழிமுறைகள் தெரிவித்து வருகின்றனர்.

## சோதனை மற்றும் பாதுகாப்புப் பணிகள்

### அழுத்தக் கலன் சோதனை

9.12. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர சட்டங்களை அமல்படுத்துவதோடு, தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்புடன் செயல்படும் விதத்தில் அவற்றின் செயல்பாட்டு வழிமுறைகளை உறுதி செய்வதும், இத்துறையின் முதன்மை பணிகளில் ஒன்றாகும்.

### மாநில பாதுகாப்பு விருதுகள்

9.13. தொழிற்சாலைகளில் விபத்துக்களைக் குறைத்து சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினருக்கு, ஆண்டுதோறும் பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனிதநேரங்கள் அடிப்படையில், அவை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில் விருது

வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட, பணிபுரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ்வு எண்ணிக்கை விகிதம் குறைவு, நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ்வு எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், முதல் பரிசாக ரூ.2,500/- மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.1,500/- மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

மேலும், விபத்து தடுப்பு நடவடிக்கையில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும்வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

9.14. தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் முதலியவை இழப்பு அல்லது இறப்பு நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டுமின்றி, 24 மணிநேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், இறப்பு நேரிட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- வழங்கப்படும்.

## பயிற்சி மற்றும் கருத்தரங்கு

### பாதுகாப்புப் பயிற்சி பணிகள்

9.15. தொழிலகங்களில் விபத்துக்களின் நிகழ்வுகளைத் தடுத்திட, சட்டச் செயலாக்க பணிகளுடன் பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும் இன்றியமையாததாகிறது. விபத்துக்களைத் தடுத்திட, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பாதுகாப்புப் பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, அதிக அளவு விபத்துக்கள் ஏற்படும் தொழிற்சாலைகளில் இத்தகைய பயிற்சிகளை இத்துறை ஏற்று செயல்படுத்தி வருகின்றது.





### கருத்தரங்குகள்

9.16. தொழிலக பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெற இத்துறை நடவடிக்கை மேற்கொள்கிறது. எதிர்காலத்தில், தேசிய பாதுகாப்புக் குழுமம் மற்றும் இந்திய இழப்புத் தடுப்பு நிறுவனம் போன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்துறை தீர்மானித்துள்ளது.

## பாதுகாப்புத் துணைக் குழுக்கள்

### மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு

9.17. பெருவிபத்து மற்றும் இடர்மிகுந்த தொழிற்சாலைகளில் இருந்து ஆண்டுதோறும் பெறப்படும் பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளை கூர்ந்தாய்வு செய்யும் நோக்குடன் பாதுகாப்பு துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழு, மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

இதுவரை, இக்குழு 48 கூட்டங்களை நடத்தியுள்ளது. 55 பெரும் விபத்து மற்றும் இடர்மிகு தொழிற்சாலைகளில் இருந்து பெறப்பட்ட பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளை கூர்ந்தாய்வு செய்து பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அப்பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### மாநில அளவிலான உற்பத்தித்திறன் குழு

9.18. கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகளை சிறப்பான முறையில் ஆற்றுவதற்கு, மாநில அளவிலான உற்பத்தித்திறன் குழு 1985 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது:–

[2006 ஆகஸ்ட் 12

(1) வேலை அளிப்பவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குத் தக்க பயிற்சியும், ஆலோசனையும் தந்து இவர்களுக்கிடையே சுமுகமான, இயல்பான சூழ்நிலையை உருவாக்கி, அதன் அடிப்படையில் உற்பத்தித்திறன் பற்றிய இவர்களுடைய மாறுபட்ட சிந்தனைகளுக்கு இடையே ஏற்படும் பெரிய இடைவெளியைக் குறைத்தல்.

(2) வேறுபட்ட சிந்தனை தாக்கங்களைக் கொண்ட உற்பத்தியின் இரண்டு முக்கிய கோட்பாடுகளான பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்பதையும், மாறாக அவை ஒன்றையொன்று சார்ந்திருப்பவை என்பதையும் வலியுறுத்தி ஒருங்கிணைத்தல்.

(3) அரசு, நிர்வாகங்கள், தொழிலாளர்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து இயங்கும் இயக்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கையை ஒவ்வொரு ஆண்டும் விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

**மின்னணு ஆளுமை**

*9.19.* இத்துறையில் மின்னணு ஆளுமை (e-Governance) சிறப்பான முறையில் செயல்படுத்தும் பொருட்டு, இத்துறையின் பணிகளை ஆய்ந்தறிந்து தேசிய தகவல் மையம் அறிக்கை கொடுத்துள்ளது. அவ்வறிக்கையின்படி, இத்துறையின் சார்நிலை அலுவலகங்களைத் தலைமை அலுவலகத்துடன் கணினி இணைப்பு (Network) மூலம் இணைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இத்துறையின் செயல்பாடுகள் துரிதமாக அமைய தேசிய தகவல் மையத்தின் ஆலோசனையோடு, ஒரு புதிய மென்பொருள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி எண் 100(1)-ன்கீழ் நிர்வாகத்தினர் பயன்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் ஆறு தொழிலாளர் சட்டங்களில் கோரும் ஆண்டறிக்கைகளுக்கு பதிலாக ஒரே ஆண்டறிக்கையாக எளிதாகவும், துரிதமாகவும் சமர்ப்பிக்க ஏதுவாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 12]

## அத்தியாயம்–10

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (வேலைவாய்ப்புப் பிரிவு)

**வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு**

*10.1.* வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அவர்கள் துறையின் தலைவர் ஆவார். ஆணையருக்கு உதவியாக இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்) மற்றும் இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) ஆகிய மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மண்டலத் துணை இயக்குநர்களைத் தலைவர்களாகக் கொண்டு நான்கு மண்டல அலுவலகங்கள் உள்ளன. மண்டலத் துணை இயக்குநர்கள், அவரவர் கட்டுப்பாட்டின்கீழ் ஏழு அல்லது எட்டு மாவட்டங்களிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் / சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிக்கின்றனர். தமிழ்நாட்டில் 30 வருவாய் மாவட்டங்களிலும் தலா ஒன்று வீதம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்படுகின்றன. மாவட்ட அளவில், உதவி இயக்குநர்கள் அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் தலைமையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

**வேலைவாய்ப்பகங்கள்**

*10.2.* ஊதியமுள்ள பணிகளில் வேலைவாய்ப்பைத் தேடித் தருவதில் இளைஞர்களுக்கு உதவுவதில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தொழில் நெறி வழிகாட்டல் மூலம் சுய வேலை வாய்ப்பைத் துவங்குவதில் அவர்களுக்கு இவ்வலுவலகங்கள் உதவுகின்றன. வேலை நாடும் மனுதாரர்களைப் பதிவு செய்து அறிவிக்கை செய்யப்பட்ட பணிக் காலியிடங்களுக்கு அவர்களைப் பரிந்துரைத்தல், வேலை நிலவரத் தகவல் தொடர்பான புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றைத் தொகுத்து வெளியிடுதல், இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் தொழில்நெறி வழிகாட்டல் ஆகியவை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ஆற்றி வரும் முக்கியப் பணிகளாகும்.

## சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்கள்

10.3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன், கீழ்க்கண்ட சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களும் உள்ளன:–

1. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சாந்தோம், சென்னை.

   தொழில் கல்வி மற்றும் முதுநிலைப் பட்டக் கல்வித் தகுதிகள் பெற்றவர்கள் இங்கு பதிவு செய்கின்றனர்.

2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்) அடையாறு, சென்னை.

3. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

4. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பப் பணியாளர்கள்) சென்னை மற்றும் கோயம்புத்தூர்.

5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையம், கடலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்.

6. பழங்குடியினருக்கான சிறப்புத் தொழில்நெறி வழிகாட்டும் நிலையம், உதகமண்டலம்.

## வேலைவாய்ப்புப் பணிகள்

10.4 வேலைவாய்ப்பு அலுவலகங்களின் அனைத்துச் செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களின் அடையாள அட்டைகள் வழங்குதல் மற்றும் அவர்களின் பட்டியல்களை வேலையளிப்பவர்களுக்கு அனுப்புதல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் கணினி வழி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31-3-2006 நிலவரப்படி உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை 37,67,375 ஆகும்.

## 1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவிக்கை) சட்டம்

10.5. 1959 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிட அறிவிக்கை) சட்டத்தின்படி வேலையளிப்போர்களிடமிருந்து பணிக்காலியிடங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.



## தொழில்நெறி வழிகாட்டல் சேவைகள்

10.6. இளைஞர்களை வழிகாட்டுவதற்கு 17 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தொழில் நெறி வழிகாட்டல் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பதிவு செய்ய வழிகாட்டுதல், தனிப்பட்ட செய்திகள், பழைய பதிவுகளை மறு ஆய்வு செய்தல், கலந்தாலோசனை, வாழ்க்கைத் தொழில்கள் பற்றிய செய்தி, தொழில் பழகுநர்களைப் பணியமர்த்துதல், பயிற்சி பெற்றவர்களைப் பணியமர்த்துதல், பள்ளி மற்றும் கல்லூரிகளில் வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கான சொற்பொழிவு நிகழ்த்துதல், வேலைவாய்ப்பளிப்போர்களைத் தொடர்பு கொள்வதை நிலை நிறுத்தி வளர்த்துக் கொள்ளுதல், வாழ்க்கைத் தொழில் பற்றிய கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல், தொழிற் கல்விகளுக்கான நுழைவுத் தேர்வில் கலந்து கொள்ளும் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மனுதாரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல் ஆகிய சேவைகளை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

### தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

10.7. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு தமிழ்நாடு தொழிற் கல்விகளுக்கான நுழைவுத் தேர்வில் கலந்து கொள்வதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

### சுய வேலைவாய்ப்பு

10.8. சுய வேலைவாய்ப்பு பெறுவதற்காக பல்வேறு வங்கிகள் மற்றும் நிறுவனங்களிலிருந்து மனுதாரர்களுக்கு கடனுதவி பெற்றுத்தர வேலைவாய்ப்பு அலுவலகங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டன.

### உடல் ஊனமுற்றோருக்கான பணியமர்த்தல் மற்றும் மறுவாழ்வு

10.9. கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உதகமண்டலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள 13 உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகளும், சென்னை சாந்தோமில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும் உடல் ஊனமுற்றோருக்கு ஊனத்தின் தன்மைக்கேற்ப பணியிடங்களைக் கண்டறிந்து, அவர்களைப் பணியமர்த்தல் மற்றும்

அவர்களது மறுவாழ்வுக்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

**வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்டம்**

*10.10.* படித்து வேலை வேண்டி தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போர்களின் துயரினைத் துடைக்கும் வகையில் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-ம், மேல்நிலை பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-ம் மற்றும் பட்டதாரிகளுக்கும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கும் மாதம் ரூ.300/-ம் வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகையாக வழங்க இவ்வரசு முடிவெடுத்துள்ளது.

**பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தின்கீழ் சிறப்பு தொழில்முறை வழிகாட்டும் மையங்கள்**

*10.11.* பழங்குடியினரின், குறிப்பாக பழங்குடி இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. இவர்களுக்கென உதகமண்டலத்தில் சிறப்பு வழிகாட்டி மையம் இயங்கி வருகிறது.

**சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்**

*10.12.* தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 5 இடங்களில் தாழ்த்தப்பட்ட/ பழங்குடி இன மனுதாரர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டுவதற்காக பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அவ்வப்போது பல்வேறு ஆள்சேர்ப்பு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியின இளைஞருக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தும் பணிகளையும் இம்மையங்கள் ஆற்றி வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் தாழ்த்தப்பட்ட/பழங்குடியின இளைஞரின் அதிக வெற்றிவாய்ப்பிற்கு வழிவகுக்கின்றன.

**தன்னார்வப் பயிலும் வட்டங்கள்**

*10.13.* தருமபுரி மாவட்டம் நீங்கலாக, இதர 29 மாவட்ட தலைநகரங்கள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களில் வேலையில்லாத இளைஞர்களின் திறமையை வளர்க்கும் நோக்கில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு வேலையளிப்போர் நிறுவனங்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதுடன், போட்டித் தேர்வுகளுக்குப் போதுமான பாடப்புத்தகங்கள், மாத வார இதழ்கள், நாளிதழ்கள், பாடக் குறிப்புகள் ஆகியவற்றைத் தன்னார்வப் பயிலும் வட்டங்களில் படித்த வேலையில்லாத இளைஞர்களின் பயன்பாட்டிற்காக அளித்து வருகின்றன.





**தனியார்த் துறையில் பணியமர்த்தல்**

*10.14.* அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தனியார்த் துறையில் பணியமர்த்துதல் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மாதத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமை அன்று தனியார் துறை பணி நியமன நாளாக அனுசரிக்கப்படுகிறது. தனியார்த் துறை வேலையளிப்பவர்களும், வேலை நாடும் விண்ணப்பதாரர்களும் வேலைவாய்ப்பு அலுவலக வளாகங்களிலேயே சந்திக்கின்றனர். தனியார்த் துறை வேலையளிப்பவர்கள் தங்களுக்குத் தேவையான விண்ணப்பதார்ரர்களை அதே நாளில் பணி நியமனம் செய்கின்றனர். ஆளெடுப்பிற்கான நேரமும் செலவும் மிச்சமாவதால், தனியார்த் துறை நிறுவனங்கள் இத்திட்டத்தைப் பரவலாக வரவேற்கின்றன. இச்சேவை தனியார்த் துறை வேலையளிப்போர்களுக்கும், வேலை பெறுபவர்களுக்கும் இலவசமாகச் செய்யப்படுகிறது.

**இணையதளம் மூலமாக பணியமர்த்தல்**

*10.15.* இணையதளம் (http://www.employment.tn.gov.in) மூலமாக இருந்த இடத்திலிருந்தே வேலைவாய்ப்பிற்கான பதிவினைப் புதுப்பித்தல் சென்னையில் உள்ள தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலவலகத்தில் பதிவு செய்துள்ள 3,06,000 பேர்களின் பதிவு விவரங்கள் அடங்கியதொரு விவர வங்கி இணைய தளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்விணையதளம் உடனடி வெற்றியை அளித்துள்ளது. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள் அவர்கள் இருந்த இடத்திலிருந்தே தத்தம் பதிவுகளைப் புதுப்பிக்க முடியும் என்பது இவ்விணையதளத்தின் ஒரு சிறப்பு அம்சமாகும். இதுவரை 97,573 பேர்கள் மேற்சொன்ன வசதியைப் பயன்படுத்தி வேலைவாய்ப்புகளுக்கான பதிவுகளைச் செய்துள்ளார்கள்.

*10.16.* போட்டித் தேர்வுகள், உயர் கல்வி மற்றும் இது போன்ற ஏனைய தகவல்கள் இணையதளம் மூலமாக கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேலையை எதிர்நோக்கியுள்ளவர்களுக்கு தொழில் முறைத் தகவல்களை இத்தளத்தில் கிடைக்கச் செய்திருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும். இத்தளத்தில் உள்ள தகவல்கள் யாவும் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்றன.

## அத்தியாயம்–11

### தொழில்நுட்பப் பயிற்சிப் பிரிவு

### கைவினைஞர் பயிற்சித் திட்டம்

*11.1.* தொடர்ச்சியான பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுக்கு உறுதுணையாக கல்வி முறை முக்கிய பங்கு வகிக்கிறது. இன்றுள்ள நிலையில் மாணவர்கள் செயல்முறை சாரா கல்வி பயிலுவதைக் காட்டிலும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆகியவற்றை கற்பதில் அதிக நாட்டம் கொண்டுள்ளார்கள். பொருளாதார நெருக்கடி காரணமாக உயர் கல்வி பெற வாய்ப்பற்ற நலிவுற்ற மக்களின் குழந்தைகட்கு கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் உள்ள தொழில் நெறி கல்வி பயிற்சி முறை போதுமான வாய்ப்பினை அளிக்கிறது. தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப, முறையான தொழிற் பயிற்சியின் மூலம் பல்வேறு தொழிற் பிரிவுகளில் செயல்திறன் மிக்க பயிற்சியாளர்களை உருவாக்க கைவினைஞர் பயிற்சித் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படுகிறது.

### அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்

*11.2.* கைவினைஞர் பயிற்சித் திட்டம், தமிழ்நாடு முழுவதும் *18,664* இருக்கைகளுடன் பரவலாக உள்ள *56* தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் *2* அடிப்படை பயிற்சி மையங்கள் மூலம் தொழில்நுட்ப மனிதத்திறனை உயர்த்துவதற்கு, சுயவேலைவாய்ப்பு மற்றும் எளிதில் வேலைவாய்ப்புகள் கிடைக்கக் கூடிய *37* பொறியியல் மற்றும் *16* பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் கைவினைஞர்களை உருவாக்குகிறது. பரவலாக உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மகளிர் நலனுக்கென்று *12* தொழிற் பயிற்சி நிலையங்களும், ஆதிதிராவிடருக்கென சிதம்பரத்தில் ஒரு நிலையமும், பழங்குடியினருக்காக சங்கராபுரத்தில் ஒரு நிலையமும் இயங்குகின்றன. இதைத் தவிர, ஏற்கெனவே உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களாகிய ஓசூர், இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூரில் மகளிர் பிரிவுகள் இயங்கி வருகின்றன. தொழிற் பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் அகில இந்திய அளவில் ஒரே சீராக இருக்கும் வகையில், தேசிய தொழில் நெறி கல்விப் பயிற்சித் திட்டக் குழுவால் வடிவமைக்கப்பட்டு, பயிற்சியாளர்கள் தேசிய அளவில் நடத்தப்படும் அகில இந்திய தொழிற் தேர்வு மற்றும் அகில இந்திய திறனாய்வு போட்டியில் பங்குகொள்ளும் வகையிலும், நாட்டின் எப்பகுதியிலும் வேலைவாய்ப்பு பெறும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.





*11.3.* அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இட ஒதுக்கீட்டு முறைக்குட்பட்டு, மதிப்பெண் தகுதி அடிப்படையில் ஆண்டுதோறும் மாணவர்கள் பயிற்சிக்கு சேர்க்கப்படுகின்றனர். தொழிற் பயிற்சி நிலையத்தில் சேருவதற்கு குறைந்தபட்சக் கல்வித் தகுதி தொழிற் பிரிவுக்கு ஏற்ப, எட்டாம் வகுப்பு தேர்ச்சி முதல் மேல்நிலைக் கல்வி (அதாவது +2) வரை ஆகும். அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் பயிற்சி துவங்கும். அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி காலத்தில் பயிற்சியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது :—

| | | |
|---|---|---|
| (அ) | ஆதிதிராவிடர்களுக்கு | : ரூ.150/- மாதந்தோறும் |
| (ஆ) | பழங்குடியினத்தவருக்கு | : ரூ.175/- மாதந்தோறும் |
| (இ) | சீர்மரபினருக்கு | : ரூ.140/- மாதந்தோறும் |
| (ஈ) | இலங்கை அகதிகளுக்கு | : ரூ.175/- மாதந்தோறும் |
| (உ) | பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.16,100/-க்கு மிகாமல் இருக்கும் மொத்த பயிற்சியாளர்களில் 1/3 பகுதியினருக்கு | : ரூ.50/– மாதந்தோறும் |

பயிற்சியின் முடிவில், அகில இந்திய அளவில் ஜூலை மாதம் தொழிற் தேர்வுகள் நடத்தப்பட்டு அதில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தேசிய தொழிற் சான்றுகள் வழங்கப்படுகின்றன. தேர்ச்சி பெறாத பயிற்சியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் துணைத்

தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன.

11.4. தொழிற்சாலைகளின் தேவைகள், பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள், வளர்ந்துவரும் தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, புதிய தொழிற் பிரிவுகளான தொழில் மின்னணுவியல் (கம்மியர்), இயந்திர மின்னணுவியல் (கம்மியர்), தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் கருவிகள் பராமரிப்பு, கணினி வன்பொருள், கைவினைஞர் உணவு உற்பத்தி (பொது), லித்தோ ஆப்செட் மெஷின் மைண்டர், எண்ணியல் நிழற்பட கலைஞர், ஓட்டுநர் மற்றும் கம்மியர் போன்ற நவீன தொழிற் பிரிவுகள் பல்வேறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் தொழிற் பயிற்சி நிலையங்களின் கூட்டு நடவடிக்கையை முன்னேற்றவும், பயிற்சி மற்றும் மனித ஆற்றலை மேம்படுத்தவும் இந்திய தொழிற் கூட்டமைப்புடன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை "புரிந்துணர்வு உடன்படிக்கை" ஒன்றை செய்துள்ளது. மற்றொன்று, தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் தொழில் நிறுவனங்களுக்கும இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை நீங்கலாக, தொழிற் பயிற்சி நிலையங்கள் சிறந்த முறையில் இயங்குவதற்கும், தொழிலாளர் சந்தைக்கும், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குமிடையே நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ளவும் நிறுவன மேலாண்மைக் குழு (Institute Managing Committee) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தொழிற் பயிற்சி மையங்கள்

11.5. தமிழ்நாட்டில் 56,732 பயிற்சியாளர் இருக்கை வசதிகள் கொண்ட 605 தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் தேசிய தொழில் நெறி கல்வி பயிற்சித் திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இத்தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைப் போலவே தொழிற் பயிற்சி அளிக்கின்றன. தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் 50 விழுக்காடு இருக்கைகள் கல்வித் தகுதி மற்றும் நடைமுறையிலுள்ள இடஒதுக்கீட்டு முறையின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படுகின்றன.

## தொழிற் பள்ளிகள்

11.6. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் தவிர,



தமிழ்நாட்டில் 55,725 இருக்கைகள் கொண்ட 633 தொழிற் பள்ளிகள் இயங்குகின்றன. இத்தொழிற் பள்ளிகளில் 60 நீண்டகால தொழிற் பிரிவுகளும், 53 குறுகியகால தொழிற் பிரிவுகளும் உள்ளடக்கிய 113 தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. தொழிற் பள்ளிகள் துவங்குவதன் முக்கிய நோக்கம் ஊரக மற்றும் கிராமங்களில் ஏழ்மை நிலையில் உள்ள மாணவ/மாணவியர், ஆதரவற்ற மகளிர் மற்றும் எட்டாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த குழந்தைகளுக்கு தொழிற் பயிற்சி அளிப்பதாகும். இத்தொழிற் பள்ளிகளில், உணவு தயாரித்தல், தையற் கலை, கணினி மென்பொருள்/வன்பொருள், அழகுக்கலை மற்றும் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 45 நாட்கள் முதல் 3 ஆண்டுகள் வரை ஆகும். எட்டாம் வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்பு வரையில் கல்வி பயின்றோர் (தேர்ச்சி பெற்றோர் மற்றும் தோல்வியுற்றோர்) இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இப்பயிற்சியாளர்களுக்கு மாநில அளவில் தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 633 தொழிற் பள்ளிகளுள் 46 பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன.

## தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்

11.7. 1961 ஆம் ஆண்டு தொழிற் பழகுநர் சட்டத்தின்கீழ் வருகின்ற தொழிற் பழகுநர் பயிற்சி 1963–லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, மாநில தொழிற் பழகுநர் ஆலோசகரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிற். பழகுநர்களை தேர்வு செய்யப்பட்ட தொழிற் பிரிவுகளில் தொழில் நிறுவனங்களால் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். இவர்களுக்கு அத்தொழில் நிறுவனங்களில் செய்முறை பயிற்சியும், தொடர் அறிவுரை மையங்களில் கருத்தியல் தொடர் அறிவுரை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இத்தொழிற் பழகுநர் பயிற்சி காலம் 6 மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை தொழில் பிரிவுகளைப் பொறுத்து அமைகிறது.

11.8 இத்தொழிற் பழகுநர் சட்டத்தை அமலாக்கம் செய்ய இத்துறையின்கீழ் 11 தொடர் அறிவுரை மையங்கள் செயல்படுகின்றன, பயிற்சியின் முடிவில், அகில இந்திய அளவில் தொழிற் தேர்வு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற தொழிற் பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்கள்

வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 12,950 பேர்கள் அகில இந்திய தொழிற் பழகுநர்கள் தொழிற் தேர்வில் கலந்து கொள்கின்றனர்.

11.9. தொழில் நிறுவனங்களால் புதிதாக அமர்த்தப்படும் தொழிற் பழகுநர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளித்தல் அவசியமாகிறது. மேலும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறாத தொழிற் பிரிவுகளுக்கான அடிப்படைப் பயிற்சி, தொழிற் பழகுநர் திட்டத்தின்கீழ் உள்ள அடிப்படை பயிற்சி மையங்களாகிய அம்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டையில் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடியினர் நலத் திட்டம்

11.10. இத்திட்டத்தின் கீழ்வரும் பழங்குடியினர் துணைத் திட்டம் மற்றும் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் ஆகியவற்றில் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் பழங்குடியினருக்கென்று சிறுதொழிற் பயிற்சி நிலையம் ஒன்றும், மற்றொன்று ஆதிதிராவிடர்களுக்கென்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்திலும் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய பல்வேறு தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில் ஒவ்வொன்றிலும் மூன்று தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

11.11. இதைத்தவிர, மற்ற அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 18 சதவிகித இருக்கைகள் ஆதிதிராவிடர் வகுப்பினருக்காகவும், 1 சதவிகித இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## அகில இந்திய திறனாய்வுத் தேர்வு

11.12. பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களின் போட்டியிடும் திறமையை வளர்க்கும் வகையில், அகில இந்திய திறனாய்வுப் போட்டி 1964 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள் 14 தொழிற் பிரிவுகளில் நடத்தப்பட்டு, ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன.



11.13. இதுவரை நடைபெற்றுள்ள 41 அகில இந்திய திறனாய்வுப் போட்டிகளில், தமிழ்நாடு இணையற்ற சாதனை புரிந்து, சிறந்த மாநிலம் என்ற பரிசினை 20 முறை வென்று குடியரசு தலைவர் கேடயத்தை பெற்றுள்ளது. இச்சாதனைகள் தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் உயர்தரமான பயிற்சிக்கும், பயிற்சியாளர்களின் திறமைக்கும் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

## டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

11.14. பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளித்து தனித்து விளங்கும் பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10 பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்–2, உதவி பயிற்சி அலுவலர்–4, இளநிலை பயிற்சி அலுவலர்–4) மற்றும் இரு முதல்வர்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் ரூ.500/-க்கான கிசான் விகாஸ் பத்திரமும் நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

## பயிற்றுநர்களுக்கு பயிற்சி

11.15. பயிற்றுநர்கள் மிக விரைவாக முன்னேறி வரும் தொழில் நுட்ப வளர்ச்சியினை அறிந்து கொள்ள மத்திய அரசால் நடத்தப்படும் மத்திய பயிற்சி நிலையங்கள்/மேம்பட்ட பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையங்கள்/மேம்பட்ட பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டு வருகின்றனர். இப்பயிற்சிக் காலம் ஓர் ஆண்டு ஆகும். இப்பயிற்சி பயிற்றுநர்கள் தங்களது செயல்திறன் மற்றும் நவீன தொழில் நுட்பத்தை மேம்படுத்த இப்பயிற்சி உதவுகின்றது.

11.16. இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர்களுக்கு ஒலி, ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, கல்வி கற்பிக்கும் நுணுக்கம் போன்றவற்றில் இருவாரகாலப் பயிற்சி அம்பத்தூர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இந்த மறு பயிற்சி அவர்களின் கல்வி கற்பிக்கும் திறனை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

## மின்கம்பி உதவியாளர் தகுதித் தேர்வு

11.17. 21 வயதை அடைந்தவர்கள், மின்சார ஒப்பந்தகாரர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் குறைந்தது 5 ஆண்டுகள்

பணியாற்றிய முன்அனுபவம் பெற்றிருந்தால் இத்தேர்விற்கு தகுதியுடையவர்கள் ஆவர். இத்தேர்வு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்

### திறன்மிகு மையங்கள்

*11.18* இந்தியா முழுவதும் 5 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 100 தொழிற் பயிற்சி நிலையங்கள் வீதம் தற்போதுள்ள 500 தொழிற் பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்தி திறன்மிகு தொழிற் பயிற்சி நிலையங்களாக உருவாக்க, மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தி, அதற்குத் தேவையான வசதிகளையும், கருவிகள் மற்றும் பாடத் திட்டங்களையும் அளிப்பதாகும். இதற்கான செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் பங்களித்து செலவை மேற்கொள்கின்றன. தமிழ்நாட்டில் 2005–06 ஆம் ஆண்டு அம்பத்தூர், கோயம்புத்தூர், ஒசூர் மற்றும் திருச்சி ஆகிய நான்கு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள், திறன்மிகு தொழிற் பயிற்சி மையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.1.6 கோடி வீதம், இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.6.4 கோடி ஆகும். இத்திட்டத்தின்கீழ் 2006–07 ஆம் ஆண்டில் 456 பயிற்சியாளர்கள் பயன் பெறுகின்றனர்.

## அத்தியாயம்–12

### அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

*12.1* அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது 30–11–1978 அன்று பதிவு செய்யப்பட்டது. இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும். இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம் வேலைதேடும் இந்திய தொழிலாளர்கள் அயல்நாடுகளில் தகுந்த பணியமர்த்தங்களைப் பெற உதவி புரிவதாகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும். வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சம் ஆகும்.

*12.2.* இலாபம் ஈட்டும் நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். இந்நிறுவனம் 6,000 பதிவுதாரர்களுக்கு அயல்நாடுகளில் வேலைவாய்ப்பினை பெற்றுத் தந்துள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் பயன்பெற்றோர்களில் பெரும்பாலானோர் முழுத் திறன்படைத்த அல்லது ஓரளவு திறன்படைத்த பணியாளர்களும் மற்றும் மருத்துவத் துறையைச் சார்ந்தோர்களும் ஆவர். சவூதி அரேபியாவின் சுகாதார அமைச்சகம் தமது துறைக்குத் தேவையான மருத்துவர்களையும், மருத்துவத் தொழில்நுட்ப பணியாளர்களையும் தேர்வு செய்வதற்கு சார்ந்திருக்கும் நிறுவனங்களில் இந்நிறுவனமும் ஒன்றாகும்.





*12.3.* தன் செயல்பாடுகளைப் பலமுனைப்படுத்தும் நோக்கில், இந்நிறுவனம் பின்வரும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது:–

(1) சென்னை மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் மனுதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பாஸ்போர்ட் தொடர்பான சேவைகளை அளித்து வருகிறது.

(2) வெளிநாடுகளில் உள்ள வேலையளிப்போரால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட மனுதாரர்களுக்கும் தம் சொந்த முயற்சியால் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெறும் மனுதாரர்களுக்கும் விசா முத்திரையிடுவது தொடர்பான சேவைகளை அளித்து வருகிறது.

(3) விமானப் பயணச்சீட்டுகளை விற்பனை செய்து வருகிறது. பன்னாட்டு விமான போக்குவரத்துக் கழகம் (IATA) என்ற அமைப்பின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்நிறுவனம் விமானப் பயணச் சீட்டுகளைக் கையிருப்பு வைத்துள்ளது. மேலும், அயல்நாட்டு விமான பயணச் சீட்டுக்களைக் கணினி மூலம் முன்பதிவு செய்யும் வசதிகளைப் பெற்றுள்ளது.

(4) இந்நிறுவனம், அயல்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு விபத்துக்கான மற்றும் மருத்துவமனை வசதிக்கான செலவுகளையளிக்கும் பொருட்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே எளிய பிரிமியத் தொகை செலுத்த வேண்டியுள்ளது.

(5) இந்நிறுவனம், இந்திய செவிலியர் அமெரிக்கா மற்றும் மேலைநாடுகளில் வேலைவாய்ப்புப் பெறுவதற்காக அயல்நாட்டு செவிலியர் பட்டதாரிகளுக்கான ஆணையம் (Commission of Graduates of Foreign Nursing School) மற்றும்

[2006 ஆகஸ்ட் 12

பன்னாட்டு ஆங்கில மொழித் தேர்வு அமைப்பு (International English Language Testing System) நடத்தும் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகளை அண்ணா மேலாண்மை நிலையத்தினருடன் இணைந்து நடத்தி வருகிறது.

## அத்தியாயம்–13

### தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம்

13.1. உழைக்கும் வர்க்கத்திற்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் மத்திய அரசு 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை முன்னேற்பாடுகள் சட்டத்தினை இயற்றியுள்ளது. கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் இச்சட்டத்தின்படி வகுக்கப்பட்டு, மத்திய அரசின்கீழ் செயல்படும் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனத்தினால் அமல்படுத்தப்படுகின்றன:–

1. 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம்.
2. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்.
3. 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம்.

## அத்தியாயம்–14

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

14.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்க்கு சமூகப்பாதுகாப்பு அளிக்கும் ஒருங்கிணைந்த திட்டமாகும். இத்திட்டம் 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் என்னும் கூட்டாண்மை அமைப்பினால் நிர்வகிக்கப்படுகிறது.

14.2. இத்திட்டத்தின்கீழ் கொணரப்பட்டுள்ள நிருவாகங்கள் மற்றும் அமைப்புகளில் பணிபுரியும் ரூ.7,500/- மாத ஊதியம் பெறும் பணியாளர்கள் அனைவரும் பயன் பெறுகின்றனர். தொழிலாளர்களின் ஊதியத்தில் 1.75 சதவீதம் தொழிலாளர்கள் பங்காகும்; 4.75 சதவீதத் தொகை வேலையளிப்பவரின் பங்காகும்.



2006 ஆகஸ்ட் 12]

14.3. தமிழ்நாட்டில் 180 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 5 நடமாடும் மருந்தகங்கள், 2 பயனீட்டு மருந்தகங்கள் மற்றும் 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மூலம் 2,363 படுக்கைகளுடன் மருத்துவ சேவை அளிக்கப்பட்டு வருகிறது.

14.4. காப்பீட்டாளர்களுக்கான மருத்துவ செலவினத்தை 1:7 என்ற விகிதத்தில் மாநில அரசும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் பகிர்ந்துகொள்கின்றன. மருத்துவ வசதிகளுக்காகும் செலவினை முதலில் மாநில அரசு ஏற்றுக்கொள்கின்றது. பின்னர், செலவினத்தில் 7/8 பங்கினை காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ.900/- என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மாநில அரசுக்கு திரும்பச் செலுத்துகின்றது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் கீழ்க்கண்ட உதவிகள் காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கு வழங்கப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| 1 | மருத்துவ உதவி | மருத்துவ வசதிகள் காப்பீட்டளார் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு திட்டத்தில் சேர்ந்த நாள் முதல் அளிக்கப்படுகின்றன. ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் அளிக்கப்படுகின்றன. |
| 2 | உடல்நலமின்மை உதவி | உடல் நலமின்மை உதவி, காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, அரசினால் நியமிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில், பணமாக வழங்கப்படுகிறது. |
| 3 | பேறுகால உதவி | மகளிர் காப்பீட்டாளருக்கு, பேறுகாலத்தில் அல்லது கருக்கலைப்பு காலத்தில் பேறுகால தொடர்பான நோய்களுக்கான சிகிச்சைக்கு உதவி அளிக்கப்படுகிறது (அதிகபட்சம் 85 நாட்கள்) |
| 4 | இயலாமையுற்றோருக்கான உதவி (பணமாக) | இயலாமையுற்றோருக்கான உதவி, காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்தினால் விளையும் உடல் குறைகளுக்கும், தொழில் வழி நோய்களுக்கும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர, காப்பீட்டாளருக்கு வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின் பயனும் கிடைக்கும். |
| 5 | சார்ந்துள்ளோர்களுக்கான நல உதவி (பணமாக) | வேலை செய்யும் போது ஏற்படும் விபத்தினால் அல்லது தொழில் வழி நோயினால் காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரைச் சார்ந்துள்ளவர்க்கு இந்த உதவி வழங்கப்படுகிறது. |

[2006 ஆகஸ்ட் 12

### திட்டம் விரிவுப்படுத்தப்படவுள்ள புதிய பகுதிகள்

14.5. தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட இடங்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி, அதன் அருகேயுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடன் இணைப்பது குறித்து தீவிரமாக பரிசீலித்து வருகிறது:–

| வரிசை எண் | விரிவுப்படுத்தும் இடங்கள் | இணைக்கப்படும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் |
|---|---|---|
| 1. | நாகர்கோவில் புறநகர் | நாகர்கோவில் |
| 2. | தூத்துக்குடி புறநகர் | ஆத்தூர் |
| 3. | தைலாகுளம் மற்றும் திருவில்லிபுத்தூர் புறநகர் | திருவில்லிபுத்தூர் |
| 4. | சர்கார்பாளையம் | திருப்பூர்–1 |
| 5. | பேகம்பூர் புறநகர் | பேகம்பூர் |
| 6. | முனிச்சாலை புறநகர் | முனிச்சாலை |
| 7. | கோவில்பட்டி புறநகர் | கோவில்பட்டி |
| 8. | தென்காசி புறநகர் | தென்காசி மற்றும் சங்கரன்கோவில் |

14.6. காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரத்தில் 01–08–2006 முதல் இரு மருத்துவர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

### புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்

14.7. காஞ்சிபுரம் மாவட்டம், கேளம்பாக்கம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கருங்கல் பகுதிகளில் புதிய இரு மருத்துவர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்க உள்ளன. கருங்கல்லில் மருத்துவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கேளம்பாக்கம் மருந்தகம் தொடர்பான வரைவு அறிவிக்கை புதுதில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தினரிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது.

14.8. மணலி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடன் மணலியின் புறநகர் பகுதிகளை இணைத்து இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புதுதில்லி, தொழிலாளர்



2006 ஆகஸ்ட் 12]

அரசு ஈட்டுறுதிக் கழகத்தினரிடமிருந்து வரைவு அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### பயனீட்டு மருந்தகங்கள்

14.9. தமிழ்நாட்டில் தற்போது இரண்டு பயனீட்டாளர் மருந்தகங்கள் உள்ளன. அவையாவன:–

1. பயனீட்டாளர் மருந்தகம், டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், டால்மியாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
2. பயனீட்டாளர் மருந்தகம், ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) லிமிடெட், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம்.

பயனீட்டு மருந்தகங்கள், வேலையளிக்கும் நிறுவனத்தினரால் நடத்தப்படுகின்றன. நிறுவனத்திற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் நிர்ணயித்துள்ளபடி, தலைவீதக் கட்டணம் செலுத்தப்படுகின்றது. தற்போது தலைவீதக் கட்டணம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.100/– ஆகும்.

### சித்த மருத்துவம்

14.10. சித்த மருத்துவப் பிரிவு தற்போது அயனாவரம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகின்றது.

### மேம்படுத்தப்பட்ட சிறப்பு சிகிச்சை: சிறுநீரகவியல் துறை

14.11. கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் சிறுநீரகவியல் பிரிவு செயல்பட்டு வருகிறது. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் விரைவில் மேற்படி பிரிவு தொடங்கப்படும்.

### சுழற்சி நிதி

14.12. காப்பீட்டாளரும் அவர்தம் குடும்பத்தினரும் சிறப்பு மற்றும் உயர் சிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக செலவிட்ட தொகையைத் திரும்ப பெறுவதற்காக சென்னை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிறுவன இயக்குநர்மூலம் சுழற்சி நிதி கையாளப்பட்டு வருகிறது.

14.13. இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மாற்று அறுவை சிகிச்சை, முதுகுத் தண்டு தொடர்பான

சிகிச்சை, புற்றுநோய் ஆகிய பல்வேறு சிகிச்சைகளுக்காக காப்பீட்டாளர்கள் செலவழித்த தொகை திரும்ப வழங்கப்படுகிறது.

## பேக்கேஜ் திட்டம்

14.11. காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவம் பார்ப்பதற்கு வசதியாக 43 தனியார் மருத்துவமனைகளில் சிறப்பு மற்றும் உயர்சிறப்பு மருத்துவத்திற்காக பேக்கேஜ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்குக் காசோலைகள் வழங்கப்படுகின்றன.

## அத்தியாயம்–15

### 2006–2007 ஆம் ஆண்டு பகுதி – II திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட புதிய திட்டங்கள்

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| | **தலைமைச் செயலகம்** | |
| 1. | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் பயன்பாட்டிற்கென பிரிண்டர்கள் வாங்குதல் | 1.50 |
| | **தொழிலாளர்** | |
| 2. | தற்போதுள்ள கையால் இயங்கும் நிலைத் தராசுகளுக்கு பதிலாக இலக்கமிடும் முறை தராசுகள் வழங்குதல் (10 எண்ணிக்கைகள்) | 25.00 |
| 3. | தலைமை அலுவலகத்தில் ஒளி நகலி சாதனம் மற்றும் நகல் எடுக்கும் பிரிண்டர் ஆகியவற்றை வழங்குதல் | 1.94 |
| 4. | 3 மண்டல தொழிலாளர் நலத் துறை இணை ஆணையர் மற்றும் 9 மண்டல தொழிலாளர் நலத் துறை துணை ஆணையர் அலுவலகங்களுக்கு ஒளி நகலி சாதனங்கள் வழங்குதல் | 3.60 |
| | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி** | |
| 5. | 17 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களின்/ மையங்களின் அலுவலகங்களுக்கு கணினிகள் வாங்குதல். | 13.60 |
| 6 | திருச்சிராப்பள்ளி அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பின்னலாடை இயந்திரத்தை இயக்குவோருக்கான தொழிற் பயிற்சியையும், தருமபுரி அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில் பொருத்துநர் தொழிற் பயிற்சிக்கான கூடுதல் பிரிவுகளையும், சென்னை (வடக்கு) அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில் வண்ணம் பூசுபவர் (பொது) தொழிற் பயிற்சியையும் அறிமுகப்படுத்துதல். | 36.68 |



| | | |
|---|---|---|
| 7. | அரசு தொழிற் பயிற்சி மையங்களில் பல்வேறு தொழில்களுக்காக கூடுதல் கருவிகள் மற்றும் சாதனங்களை வாங்குதல். | 305.00 |
| 8. | தீயணைப்புச் சாதனங்களை வாங்குதல். | 2.27 |
| 9. | நான்கு வட்டார துணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்களுக்காக கணினி வாங்குதல். | 2.00 |
| 10. | நான்கு வட்டார துணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்களுக்காக ஒளி நகலி வாங்குதல் | 2.40 |
| | **தொழிற்சாலைகள் ஆய்வகம்** | |
| 11. | மின் ஆளுமை தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகத்திற்கு 10 கணினிகளும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்திற்கு 3 கணினிகளும் வாங்குதல். | 6.71 |
| 12. | இடர் அளவு ஆய்வு மற்றும் விபத்துக் குறித்த ஆய்வு ஆகியவற்றை நடத்துவதற்காக, ஆய்வகத்திற்கு 2 கணினி மென்பொருளை வாங்குதல். | 2.00 |
| 13. | தொழிற்சாலைகள் தலைமை ஆணை ஆய்வாளரின் கோட்டங்களுக்கு ஆய்வுக்குச் செல்லும் அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக கையடக்க வாயு கண்டுபிடிக்கும் சாதனங்கள் 5 வாங்குதல். | 5.85 |
| 14. | தொழிற்சாலைகள் தலைமை துணை ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள ஆய்வு செய்கிற அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக எர்த் ரெசிஸ்டன்ட் மீட்டர் சாதனங்கள் 5 வாங்குதல். | 2.90 |
| 15. | தொழிற்சாலைகள் தலைமை துணை ஆய்வாளர் அலுவலகத்திற்கு 28 ஹைட்ரோஸ்டேடிக் அழுத்தச் சோதனை செய்யும் பம்புகளையும், அல்ட்ரா சோனிக் சோதனை செய்யும் 14 இயந்திரங்களையும் வாங்குதல். | 4.82 |
| 16. | 10 தொழிற்சாலைகள் தலைமை துணை ஆய்வாளர் அலுவலகங்களுக்கு 10 ஒளி நகலிகளை வாங்குதல். | 6.00 |
| 17. | தொழிற்சாலைகள் தலைமை துணை ஆய்வாளர் அலுவலகங்களுக்கு 4 ஒலி அளவிலான மானிகளை வாங்குதல். | 0.52 |
| | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் | |
| 18. | மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட மருந்தகங்களுக்கு 100 கணிணிகளை வாங்குதல். | 50.00 |
| 19. | இயக்குநரகத்திற்கு ஸ்டெபிலைசருடன் கூடிய டிஜிட்டல் காப்பியர் ஒன்றை வாங்குதல். | 1.25 |
| 20. | இயக்குநரகத்திற்கு தடையற்ற மின் வழங்கல் சாதனத்துடன் கூடிய சர்வர் ஒன்றை வாங்குதல். | 2.00 |
| 21. | 4 நிகரிச் சாதனங்களை வாங்குதல் (ஒவ்வொன்றும் ரூ.6,000 வரை உள்ளவை) | 0.24 |

| | | |
|---|---|---|
| 22. | சிவகாசி, மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட மருத்துவமனைக்கு இ.பி.ஏ.பி.எக்ஸ். ஏற்பாட்டு முறை மற்றும் 3 தொலைபேசி இணைப்புகள் வழங்குதல். | 3.15 |
| 23. | வேலூர், மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட மருத்துவமனைக்கு இ.பி.ஏ.பி.எக்ஸ். ஏற்பாட்டு முறை மற்றும் 3 தொலைபேசி இணைப்புகள் வழங்குதல். | 3.15 |
| 24. | ஒசூர், மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட மருத்துவமனைக்கு இ.பி.ஏ.பி.எக்ஸ். ஏற்பாட்டு முறை மற்றும் 3 தொலைபேசி இணைப்புகள் வழங்குதல். | 3.15 |
| 25. | மதுரை, மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட மருத்துவமனைக்கு இ.பி.ஏ.பி.எக்ஸ். ஏற்பாட்டு முறைக்கு வகை செய்தல். | 2.00 |
| 26. | சேலம், மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்ட மருத்துவமனைக்கு இ.பி.ஏ.பி.எக்ஸ். ஏற்பாட்டு முறைக்கு வகை செய்தல். | 2.00 |
| 27. | இயக்ககம் மற்றும் 4 மண்டல மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்திற்கு மல்டிமீடியா புரொஜெக்டர்ஸ், மடி கணினியுடன் கூடிய திரை ஆகியவற்றை வழங்குதல். | 10.00 |
| | மொத்தம் | 499.73 |



# இணைப்பு II

*(447 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 17

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை– கைத்தறி மற்றும் துணி நூல்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### 1. முன்னுரை

தமிழ்நாட்டின் துணித் தொழில் தேசிய மற்றும் மாநில பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இத்தொழில் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்வதுடன், பெருமளவு வேலைவாய்ப்பும் வழங்குகிறது. தமிழ்நாட்டில் கைத்தறி, விசைத்தறி, நூற்புத் தொழில், பதனிடுதல், ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழில் ஆகியவை துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகளாகும். நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இத்தொழில் விளங்குகிறது.

நாட்டின் மரபு மற்றும் பண்பாடு ஆகியவற்றினைப் பாதுகாப்பதிலும், பொருளாதார வளர்ச்சியிலும் கைத்தறித் தொழில் பெருமை வாய்ந்த பங்கினை வகிக்கிறது. நம்முடைய கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் நீண்ட பாரம்பரிய கலையாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது. மக்களின் துணித் தேவையைப் பூர்த்தி செய்வதில் விசைத்தறித் தொழிலும் தமிழ்நாட்டில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக அதிக அளவிலான விசைத்தறிகளைக் கொண்டுள்ள மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகள் பெருமளவு நூற்பை மையமாகக் கொண்டும், அதிக அளவிலான தொழிலாளர்களை உள்ளடக்கியும் செயல்படுகிற காரணத்தால் தமிழ்நாட்டில் துணித் தொழில் பெருமளவில் தனியார் பிரிவின் வசமே உள்ளது. வேலை வாய்ப்பு அளித்தல் மற்றும் வணிக நடவடிக்கைகளில் துணித் தொழில் முக்கியப் பங்கு வகித்து வருகின்றது. இத்தொழில் மத்திய மற்றும் மாநில அரசுகள் கணிசமான வருவாய் ஈட்டுவதற்கு உதவுவதுடன்

[2006 ஆகஸ்ட் 12

ஏற்றுமதியின்மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டவும் உறுதுணையாக உள்ளது.

## 2. துறையின் நடவடிக்கைகள்

கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காகவும், அனைத்துப் பிரிவுகளின் நலனுக்காக குறிப்பாக, நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபடுவதும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முக்கிய நோக்கமாகும்.

மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இத்தொழிலுக்குத் தொடர்புடைய இதர கூட்டுறவு அமைப்புகளுக்கும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் செயற்பதிவாளராகச் செயல்படுகிறார். இதற்காக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் இவருக்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் "மாநில துணிநூல் அதிகார ஆணைக் குழு"வாகச் செயல்படுவதன் வாயிலாக நூற்பாலைகள், துணிநூல் ஆலைகள், பின்னலாடைப் பிரிவு, கைத்தறி மற்றும் விசைத்தறிப் பிரிவுகள் நன்முறையில் செயல்படத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுவான பொறுப்பும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு உள்ளது. அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதும், நூல் மற்றும் துணியினை நியாயமான விலையில் உற்பத்தி செய்வதுடன், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளின் விற்பனையினை மேற்கொள்வதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதும் இத்துறையின் பொறுப்புகளாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்களை விநியோகிப்பதும், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளைக் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின்மூலமும், லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள், சங்கத்தின் சொந்தக் காட்சியறைகள் மற்றும் இதர விற்பனை நிலையங்கள்மூலமும் விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தும் தனிப்பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது.

நெசவாளர்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களின் நலனுக்கென உருவாக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் 18 சரக



2006 ஆகஸ்ட் 12]

கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் மூலமாகச் செயல்படுத்தும் பணியினையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மேற்கொண்டு வருகிறது.

இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:

- 1,232 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
- 133 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
- 18 கூட்டுறவு நூற்பாலைகள் (தற்போது 5 கூட்டுறவு நூற்பாலைகள், அதாவது அண்ணா, பாரதி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தர்மபுரி ஆகிய கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன)
- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ—ஆப்டெக்ஸ்), சென்னை
- தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு
- தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்
- தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், (டான்ஸ்பின்) சென்னை

## 3. கைத்தறித் தொழில்

1987ஆம் வருடத்திய கைத்தறி கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 4.29 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. அவற்றில் 2.17 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் உள்ளன. தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் 6.63 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. அவற்றில் 31-03-2006-ல் 2.64 இலட்சம் கூட்டுறவு அமைப்பில் உள்ளனர். 31-03-2006-ல் தமிழ்நாட்டில் 1,232 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. மேற்படி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 12

தமிழ்நாட்டில் சராசரியாக ஆண்டொன்றுக்கு 2,500 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு 1,200 இலட்சம் மீட்டர்களாகும். தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி கைத்தறித் துணி விற்பனை ரூ. 1,500 கோடியாகும். இதில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ரூ.700 கோடி மதிப்பிலான கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ.600 கோடி மதிப்பிலான கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றில் கூட்டுறவு அமைப்பின்கீழ் ரூ.200 கோடி அளவிற்கு ஏற்றுமதியாளர்கள்மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சந்தைப் பொருளாதாரம் உலகளாவிய அளவில் விரிவுபடுத்தப்பட்ட நிலையில், கைத்தறித் தொழிலைக் காப்பதிலும், அதனைச் சார்ந்துள்ள இலட்சக்கணக்கான நெசவாளர்களுக்கு வாழ்வளிப்பதிலும் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது. இதற்கு நெசவாளர்களின் திறமையை மேம்படுத்துவதன்மூலம் சந்தையில் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்வதும், தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதன்மூலம் உற்பத்தியைப் பெருக்குவதும், உலகச் சந்தையில் போட்டியிட ஏதுவாகத் தரமான துணிவகைகளைத் தயாரித்தல் மற்றும் சந்தை நிலவரத்திற்கேற்ப புதிய வடிவமைப்புகளை உருவாக்குதலும் அவசியமாகும். மேற்காணும் நடவடிக்கைகளினால், கைத்தறித் தொழில் நிலைத்திருக்கும் சூழ்நிலை உருவாகும்.

## 4. விசைத்தறித் தொழில்

தமிழ்நாட்டில் 4.50 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. அவற்றின் மூலம் 9.14 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விசைத்தறிகளில் 32,087 விசைத்தறிகள் கூட்டுறவின் கீழ் செயல்பட்டுவருகிறது.

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலும் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம் மற்றும் இலவசச் சீருடை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் துணிவகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் ஆண்டொன்றிற்குச் சராசரியாக ரூ.160 கோடி மதிப்புள்ள 1,000 இலட்சம் மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 12]

தற்பொழுது விசைத்தறித் தொழில் இரண்டு வகையான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. அவற்றில் ஒன்று குறைந்த அளவு உற்பத்தி, மற்றொன்று விசைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் "குறைந்த அளவு செயல்திறன்" ஆகும். எனவே, உற்பத்தி மற்றும் திறனை அதிகரிக்கத் தேவையான உள்கட்டமைப்புகளை அமைப்பதற்கு அரசு உதவிடும். அதிதொழில்நுட்பம் வாய்ந்த விசைத்தறிகளை நிறுவுவதன்மூலமும், உயர்தொழில் நுட்பப் பூங்காக்களை அதிகம் அமைப்பதன் மூலமும் இது உறுதி செய்யப்படுகிறது. வளர்ந்து வரும் விசைத்தறித் தொழிலின் தேவையை ஈடுகட்டுவதற்காக விசைத்தறித் தொழிலாளர்களின் திறமையை மேம்படுத்துவதற்கு ஏதுவான பயிற்சிகள் அளிக்கப்படும். மேற்கூறப்பட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் வேலைவாய்ப்பு உருவாக்கப்படுவதுடன், உற்பத்தி அதிகரிக்கப்படுவதை உறுதி செய்யும்.

## 5. துணித் தொழில்

### i) துணிநூல் ஆலைகள்

தமிழ்நாட்டில் துணிநூல் ஆலைகள் தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு பெருமளவு வேலைவாய்ப்பும் அளித்து வருகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை நூற்புத் தொழிலைச் சார்ந்ததாக, குறிப்பாக, பருத்தி நூற்பாலைகளாக உள்ளன. இந்தியாவில் உள்ள 2,950 பெரிய, நடுத்தர மற்றும் சிறு துணிநூல் ஆலைகளில் 1,734 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இதில், 18 கூட்டுறவு நூற்பாலைகள், 8 தேசிய ஜவுளிக் கழக ஆலைகள் மற்றும் 26 கூட்டு ஆலைகளும் அடங்கும். தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளானது 16.44 மில்லியன் கதிர்களுடன் 2.31 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் சுமார் மூன்றில் ஒரு பங்கானது தமிழ்நாட்டில் மட்டும் உற்பத்தியாகிறது.

கடந்த 2004-2005 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த நூல் உற்பத்தி அளவான 3,223.52 மில்லியன் கிலோவில் 1,261.98 மில்லியன் கிலோ அளவிற்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு வகையான நூலிழைகளை உற்பத்தி செய்வதில் தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.

தமிழ்நாட்டின் துணித் தொழிலானது ஆண்டொன்றுக்கு 18% என்ற அளவில் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக தகுந்த நடவடிக்கைகளை அரசு

[2006 ஆகஸ்ட் 12

மேற்கொள்ளும். இந்த வளர்ச்சி இலக்கை எய்த ஏதுவாக தொழிலாளர் சட்ட விதிகளில் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்கும். புதிய கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன்மூலமாகவும், தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலமாகவும் தேவைப்படும் திறமையான தொழிலாளர்கள் உருவாக்கப்படுவர்.

### ii) கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான தரமான சிட்டா நூலினையும், விசைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான கூம்பு நூலினையும் நியாயமான விலையில் தங்குதடையின்றி வழங்கும் நோக்கத்திற்காகவும் 1958 முதல் 1985 வரை 18 கூட்டுறவு நூற்பாலைகள் 4.70 இலட்சம் கதிர் திறனுடன் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் கீழ்க்கண்ட 5 கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது இயங்கி வருகின்றன:

1. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம்
2. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி
3. தர்மபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை
4. புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி
5. கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி
6. ஆடைகள் மற்றும் பின்னலாடைத் தொழில்

ஜவுளித் தொழிலில், ஆயத்த ஆடைத் தொழில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. தமிழ்நாட்டில் சுமார் 400 ஆயத்த ஆடை உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ளன. இவை சுமார் 2 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருவதுடன் ரூ.2,500 கோடி அளவில் அந்நியச் செலாவணியையும் ஈட்டித் தருகின்றன.

பின்னலாடைத் தொழிலைப் பொறுத்தவரையில், இம்மாநிலத்தில் பெருவாரியான ஆலைகள் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளன. நாட்டிலுள்ள 8,000 பின்னலாடை உற்பத்தி ஆலைகளில் 4,000 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இவை சுமார் 3 இலட்சம் நபர்களுக்கு



2006 ஆகஸ்ட் 12]

வேலைவாய்ப்பு வழங்கி வருவதுடன், ரூ.8,000 கோடி அளவிற்கு அந்நியச் செலாவணியும் ஈட்டித் தருகின்றது. இது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 44 சதவீதமாகும்.

## 7. பதனிடும் தொழில்

துணித்தொழிலில் பதனிடும் பணி மதிப்புக்கூட்டும் அங்கமாக உள்ளது. இந்தியாவில் 10,397 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் 2,510 மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் உள்ளன. அவற்றில் 2,614 கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் 985 மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. இதில் 713 நிறுவனங்கள் திருப்பூர் பகுதியில் அமைந்துள்ளன.

துணி பதனிடுவதற்குப் பெரும்பாலும் கையால் இயக்கப்படும் நிறுவனங்களே உள்ளதால், அவை தமிழ்நாட்டின் பதனிடும் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

மத்திய அரசின் ஒருங்கிணைந்த துணிநூல் பூங்கா அமைக்கும் திட்டத்தின்கீழ் தமிழக அரசு கடலூரில் துணிநூல் பதனிடும் பூங்கா ஒன்றினை அமைக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்திற்கென தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) 300 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது. இது தொடர்பான பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

### சுற்றுப்புறச் சூழல் மற்றும் மனிதவள மேம்பாடு தொடர்பான பிரச்சினைகள்

தேசிய ஜவுளிக் கொள்கை 2000-ல் வகுத்துள்ளவாறு ஜவுளித் தொழிலில் 18 விழுக்காடு வளர்ச்சியடைய (i) சிறந்த சுற்றுப்புறச் சூழல் மற்றும் (ii) வளரும் தொழிலின் தேவையைப் பூர்த்தி செய்ய போதிய திறமை மிக்க மனிதசக்தி ஆகியவை தேவை.

கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் மற்றும் பல பகுதிகளில் அமைந்துள்ள பதனிடும் ஆலைகளின் தண்ணீர் தேவை அதிகமாக உள்ளதால், அதற்குத் தகுந்த தொழில்நுட்பத்தினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, சுற்றுப்புறச் சூழல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, பல்வேறு தொழில் முனைவோர்களின் ஆலோசனைகளுடன், மிகவும் தகுந்த

[2006 ஆகஸ்ட் 12

தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

**பயிற்சி**

உலக தாராளமயமாக்கல் கொள்கையினால், இந்திய ஜவுளிகளின் தேவை பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஜவுளி உற்பத்தி நிலையங்கள் தமது உற்பத்தியைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தவும், உற்பத்தியினை அதிகரிக்கவும் உயர்தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை நிறுவ துவங்கியுள்ளன. இதனால் தனித்திறம் வாய்ந்த வேலையாட்களின் தேவை அதிகமாக உள்ளது.

துணித்தொழிலில் பஞ்சு அரவை நிலையிலிருந்து துணியாக உருவாக்குதல் வரையிலான பல்வேறு பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்துத் தேவையான பயிற்சி வகுப்புகளை மாநிலத்தில் உள்ள தொழிற் பயிற்சி மையங்களிலும் (ITIs), பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் (Polytechnics) துவக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும். இதன்மூலம் துணித்தொழிலில் அதிகரித்து வரும் மனிதசக்தி தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன், குறிப்பாக, தென்மாவட்டங்கள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள கிராமப்புற இளைஞர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் உள்ள நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற ஏதுவாக அமையும்.

## 8. துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

### 8.01 வடிவமைப்பு மேம்பாடு

மாறிவரும் நாகரிகப் போக்கிற்கேற்ப இப்பிரிவு அதன் அணுகுமுறையை மாற்ற வேண்டியது அவசியமாகிறது. எனவே, நுகர்வோரின் தேவைக்கேற்ப துணிவகைகளை உற்பத்தி செய்வது உடன்டித் தேவை என்பதால், துறை வடிவமைப்பு மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஒரு வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ரூ.40.00 இலட்சம் செலவில் அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் 750 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு வருவதோடு, அவை விளந்தை, குடியாத்தம், திருபுவனம், குறிஞ்சிப்பாடி, மஞ்சமேடு, உறையூர் போன்ற பகுதிகளில் செயல்படுத்த பிரபலப்படுத்தப்படும்.



2006 ஆகஸ்ட் 12]

முதல்முறையாக, கோடைக்காலம், வசந்த காலம், குளிர்காலம், இலையுதிர்காலம் ஆகிய பருவங்களுக்கேற்ற வடிவமைப்புகளை உருவாக்க துறை தீர்மானித்துள்ளது. அதன்படி முதல்கட்டமாக புதியதாக வடிவமைக்கப்பட்டுள்ள கோடைக்காலத்திற்கேற்ற சட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு கோடைக்காலம் 2006–ல் விற்பனைக்காக வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் எஞ்சிய பருவங்களுக்கான புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு வெளியிடப்படும்.

### 8.02 ஏற்றுமதி நடவடிக்கைகளில் நெசவாளர்களை ஊக்குவித்தல்

கைத்தறித் துறையானது ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளித்து, நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தியுள்ளது. 340 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 26,900-க்கும் மேற்பட்ட தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இது தவிர, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் நேரடி ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. ஏற்றுமதியில் ஈடுபடுவதன்மூலம் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுவதுடன், அதிக கூலியும் கிடைக்கின்றது. 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.264.36 கோடி மதிப்பிற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் கைத்தறித் துணிகளின் மொத்த ஏற்றுமதி மதிப்பு ரூ.600 கோடியாகும்.

### 8.03 இரக மாற்றம்

சந்தையில் விற்பனையாகக்கூடிய துணி வகைகள் மற்றும் விலைமதிப்பு கூட்டப்பட்ட இரகங்களான வீட்டு உபயோகத் துணிகள், மிதியடி விரிப்புகள், ஆயத்த ஆடைகள், சமையலறை துணி, இதர உபயோகப் பொருட்கள் போன்ற துணி வகைகள் உற்பத்தி செய்யவும் நெசவாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். சந்தையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களையும்/ஏற்றுமதி இரகங்களையும் உற்பத்தி செய்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை இத்துறை ஊக்குவித்து வருவதோடு, தகுந்த செயல்திட்டத்தினையும் வழங்கி வருகிறது.

### 8.04 கைத்தறி உற்பத்தி இரகங்களை புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்தல்

இந்தியாவின் பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் "காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்", "பவானி ஜமுக்காளம்" மற்றும் "மதுரை சுங்குடி" புடவைகளுக்குக் காப்புரிமை பெறும் வகையில் புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் (Geographical Indications Act) பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 8.05 ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைத்தல்

சர்வதேச தரத்துடன்கூடிய ஆயத்த ஆடை உற்பத்திக் கூடங்கள் நிறுவவும், ஆயத்த ஆடை ஏற்றுமதியினை அதிகரிக்கவும், திருப்பூர் மற்றும் சென்னைக்கருகே இருங்காட்டுக்கோட்டையில் ரூ.600 கோடி திட்ட மதிப்பீட்டில், ரூ.29.43 கோடி மைய அரசின் உதவியுடன் இரு ஆயத்த ஆடை பூங்காக்கள் நிறுவப்பட்டுள்ளன. இதில் திருப்பூர் ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்கும் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளதுடன், உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருங்காட்டுக்கோட்டை ஆயத்த ஆடைப் பூங்காவிலும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பூங்கா நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் உற்பத்தியை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருப்பூர் ஆயத்த ஆடைப் பூங்கா ஆண்டிற்கு ரூ.1,500 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதி செய்து வருவதோடு, சுமார் 7,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. சென்னைக்கு அருகிலுள்ள ஆயத்த ஆடைப் பூங்கா அமைவதன் மூலம், 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி, சுமார் ரூ.2,000 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 8.06 ஜவுளித் தொழில் மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டம்

ஏற்கெனவே செயல்பட்டு வரும் துணிநூல் ஆலைகளின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியினை அதிகரிக்கும் நோக்கத்துடன், ஜவுளித் தொழில் மையங்களான காஞ்சிபுரம் மற்றும் திருப்பூர் பகுதிகளில் சாலைகள், மின்சாரம், குடிநீர் வசதி மற்றும் பயிற்சி மையம் போன்ற அடிப்படை





உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஏதுவாக, ஜவுளித் தொழில் மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அனைத்து வசதிகளும் உள்ளடக்கிய 2 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் பகுதியில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.21.81 கோடியாகும். இத்திட்டத்தினை விரைந்து முடிக்க ஏதுவாக மாநில அரசு தனது பங்கான ரூ.2.71 கோடியுடன் சேர்த்து, ரூ.5.00 கோடி முன்பணமாக விடுவித்துள்ளது. இதுகாறும் 43% பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய பணிகள் நடப்பாண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

திருப்பூர் பகுதியிலுள்ள ஏற்றுமதி நிறுவனங்களுக்குக் குறைந்த செலவில் தடையின்றி மின்சாரம் வழங்கும் நோக்குடன் ரூ.2.5 கோடி திட்ட மதிப்பீட்டில் காற்றாலைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 50% பங்கு மைய அரசின் மானியமாகும்.

### 8.07 உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைத்தல்

சர்வதேசச் சந்தையில் போட்டியிடும் வகையிலும் பொருளாதார அளவீடுகளை அடையவும் அதிக விசைத்தறிகளை உள்ளடக்கிய தொகுப்பு அணுகுமுறை சரியானதாக கண்டறியப்பட்டது. எனவே, அரசு கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று இடங்களில் உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது:

(1) காவேரி உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, குமாரபாளையம்;

(2) வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, ஆண்டிப்பட்டி; மற்றும்

(3) பல்லடம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம்.

பூங்காக்களின் திட்ட மதிப்பீடு, மாநில அரசு விடுவித்துள்ள தொகை, வேலைவாய்ப்பு மற்றும் எதிர்பார்க்கும் உற்பத்தி போன்ற விவரங்கள் பின்வருமாறு :-

[2006 ஆகஸ்ட் 12

(ரூ. கோடியில்)

| வ. எண் | உயர் தொழில் நெசவுப் பூங்காவின் பெயர் | திட்ட மதிப்பீடு | தமிழக அரசு விடுவித்துள்ள தொகை ரூ. | வேலை வாய்ப்பு (வேலை யாட்களின் எண் ணிக்கை.) | எதிர் பார்க்கும் உற்பத்தி ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | காவேரி உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, குமாரபாளையம் | 109.98 | 3.98 | 1,200 | 300.00 |
| 2 | வைகை உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, ஆண்டிப்பட்டி | 96.21 | 4.37 | 1,500 | 300.00 |
| 3 | பல்லடம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம் | 118.34 | 4.87 | 2,000 | 300.00 |
| | மொத்தம் | 324.53 | 13.22 | 4,700 | 900.00 |

தறிக் கூடங்கள் கட்டும் பணி மற்றும் இதரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

### 8.08 கரூரில் கூட்டு ஜவுளிப் பூங்கா அமைத்தல்

ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (UNIDO) நிதியுதவியுடன் கரூரில் ரூ.66 கோடி திட்ட மதிப்பீட்டில் கூட்டு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கென திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மைய அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

### 8.09 ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டம்

மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டம் 2003-2004 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் திறனை மேம்படுத்த ஏதுவாக அவர்களுக்கு நெசவு நெய்தல், சாயம் தோய்த்தல் மற்றும் வடிவமைப்பு ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் மேலாளர்களுக்கு மேலாண்மை பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியானது பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் சேவை மையங்கள் மற்றும் கைத்தறி தொழிலில்



2006 ஆகஸ்ட் 12]

ஈடுபட்டுள்ள அரசு சாரா அமைப்புகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 3,120 பயனாளிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 8.10 பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கான சிறப்புத் திட்டம்

19,500 கைத்தறி நெசவாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்து வாழும் 4,500 பிள்ளைகளுக்கும் குறைந்த மதிப்புள்ள வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்யும் நெசவுப் பணியிலிருந்து சந்தையில் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களையும், விலை மதிப்புள்ள இரக துணிகளையும் உற்பத்தி செய்யும் வகையில் பயிற்சி அளிக்கும் வண்ணம் ஸ்வர்ணஜெயந்தி கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு சிறப்பு திட்டம் ரூ.25.30 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டு, துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வடிவமைப்பினை மேம்படுத்துதல், திறனை மேம்படுத்துதல், தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் விற்பனையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் பயிற்சி மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்கு ரூ.8.69 கோடியும், மாநில அரசின் பங்கு ரூ.2.89 கோடியும், ஆக மொத்தம் ரூ.11.58 கோடி வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, 6,358 நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு, மீதமுள்ள நெசவாளர்களுக்குப் படிப்படியாக பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதுவரையில், 10,000 வடிவமைப்புகள் வடிவமைக்கப்பட்டு, அவற்றை உபயோகித்து சேலைகள், துணிவகைகள் மற்றும் சட்டைகள், படுக்கை விரிப்புகள், திரைச் சீலைகள், சமையலறையில் பயன்படுத்தும் துணிவகைகள், தரைவிரிப்புகள் போன்ற இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தறிகளைச் சொந்தமாகக் கொண்டுள்ள ஒவ்வொரு நெசவாளருக்கும் தறி உபகரணங்கள் புதிதாக வழங்கப்பட்டு உயர்ரகத் தறிகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை, 5,019 தறிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

### 8.11 மாநிலத்தின் ஜவுளித் தொழில் வளர்ச்சி

கோட்டா முறை இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டின் ஜவுளித் தொழிலுக்கு, குறிப்பாக தமிழகத்தின் ஜவுளித் தொழிலுக்கு

அபரிமிதமான வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நாட்டின் மொத்தத் துணி உற்பத்தியில் மாநிலத்தின் பங்கு 12,000 மில்லியன் சதுர மீட்டர் (சுமார் 27%) ஆகும். இது 27,000 மில்லியன் சதுர மீட்டராக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் 6.20 இலட்சம் கதிர் அளவு திறன் கொண்ட 16 புதிய நூற்பாலைகள் துவங்கப்பட்டுள்ளன. இத்தொழிலில் மட்டும் ரூ.5,000 கோடி அளவிற்கு கூடுதலாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல், 50 புதிய ஆயத்த ஆடை நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளதோடு, சுமார் 300 பின்னலாடை ஏற்றுமதி நிலையங்கள் தமது உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளன. சுமார் ரூ.700 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளதன் விளைவாகக் கூடுதலாக சுமார் 15,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித்திட்டத்தின்கீழ் ரூ.33,568 கோடி மதிப்பீட்டில் 4,383 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தால் பெறப்பட்டுள்ள உதவித் தொகையின் பங்கு 22 விழுக்காடாகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் காரணமாக ஜவுளித் தொழில் அதிக மேம்பாடு அடைந்துள்ளது. 31-3-2007-ல் இத்திட்டம் முடிவடைந்தாலும், துணித் தொழிலின் ஒட்டுமொத்த வளர்ச்சியினைக் கருதி, இத்திட்டத்தினை 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதும் தொடர்ந்து செயல்படுத்துமாறு மைய அரசை மாநில அரசு கோரியுள்ளது.

## 9. கைத்தறி நெசவாளர்களுக்கான நலத் திட்டங்கள்

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடன் தமிழக அரசு கீழ்க்கண்ட நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

### 9.01 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

நெசவாளர்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு கூட்டுறவு, கைத்தறி நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினை 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்குச் சந்தாவாகச் செலுத்துவார்கள். நெசவாளர் ஈட்டும் கூலியில் மாநில அரசு தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசாவும், மைய அரசும் நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசாவும் வழங்கி வருகின்றது. மொத்த சந்தா



16 பைசாவும் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு, இதற்கு மாநில அரசு 9.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இவ்வாறு பெறப்படும் 9.5 விழுக்காடு வட்டியில், 6.5 விழுக்காடு நேரடியாக நெசவாளர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுவதோடு, எஞ்சிய 3 விழுக்காடு வட்டித் தொகை நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 31-03-2006ஆம் தேதியில் 70,316 நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக் கணக்கில் 2006-2007ஆம் ஆண்டில் செலுத்தப்படும் ரூ.1,300.00 இலட்சத்தில், மாநில அரசின் பங்கு சுமார் ரூ.325.00 இலட்சமாகும். 2006-2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.525.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.02 மைய சிக்கன நிதித் திட்டம்

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையாக மைய சிக்கன நிதித் திட்டத்தினை 1985-1986ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் செலுத்தும் ரூபாய்க்கு 8 பைசா சந்தாவுடன் மாநில அரசுக்கு இணையாக மத்திய அரசும் தனது பங்காக 4 பைசா சந்தாத் தொகை வழங்குகின்றது. கூட்டுறவின்கீழ் உள்ள நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர்.

2006-2007ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மைய சிக்கன நிதித் திட்டத்திற்காக ரூ. 660.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.03 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

நெசவாளர்களுக்கென "தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்" என்ற புதிய நலத் திட்டத்தினை 1-01-1992 முதல் அறிமுகப்படுத்திய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் உள்ள உறுப்பினர் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால், அவரது வாரிசுக்கு நெசவாளர் இறந்த தேதியிலிருந்து மாதம் ரூ.350/- வீதம் பத்து ஆண்டுகளுக்கு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. குடும்ப ஓய்வூதியத் தொகையானது சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டித்

தொகையிலிருந்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 787 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றன.

### 9.04 கூட்டுறவு, கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, 1-04-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக இருந்து 60 வயது பூர்த்தியான நெசவாளர்கள் மாதந்தோறும் ரூ. 200/-வீதம் முதியோர் ஓய்வூதியமாகப் பெறத் தகுதி பெறுகின்றனர். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டித் தொகையிலிருந்து முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 11,925 கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

### 9.05 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் அமைக்கும் திட்டம்

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம் 1979-1980 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985-1986 ஆம் ஆண்டு முதல் மைய அரசும் இத்திட்டத்தின்கீழ் பங்கு பெற்று வருகிறது.

தறிக்கூடத்துடன் கூடிய வீடு ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

(ரூபாயில்)

| விவரம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மைய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| பயனாளியின் பங்கு | 3,000 | 5,000 |
| மொத்தம் | 68,000 | 72,000 |

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென 2006-2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





### 9.06 தறிக்கூடம் அமைக்கும் திட்டம்

நெசவாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் மைய அரசு நெசவாளர்களின் வீடுகளுக்குத் தறிக்கூடம் கட்ட நிதியுதவி வழங்குகிறது. தறிக்கூடம் அமைக்கும் திட்டமானது 1997-1998 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு தறிக்கூடம் அமைப்பதற்குத் தற்போது வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

(ரூபாயில்)

| விவரம் | கிராமப்புற தறிக்கூடம் | நகர்ப்புற தறிக்கூடம் |
|---|---|---|
| மைய அரசின் மானியம் | 7,000 | 10,000 |
| பயனாளியின் பங்கு | 2,000 | 4,000 |
| மொத்தம் | 9,000 | 14,000 |

இத்திட்டத்தினைச் செயல்படுத்த 2006-2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 660.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.07 மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனாத் திட்டம் (கைத்தறி நெசவாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம்)

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" திட்டம் என்ற புதிய காப்பீட்டுத் திட்டம் 2004-2005 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புங்கர் பீமா யோஜனாத் திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளருக்கு ஒரு வருடத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய மொத்த காப்பீட்டுக் கட்டணம் ரூ. 330/-ல், ரூ. 150/-ஐ மைய அரசும், ரூ. 100/-ஐ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகமும் மற்றும் ரூ. 80/-ஐ நெசவாளர் சார்பாக மாநில அரசும் செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள நெசவாளர்கள் சார்பில் காப்பீட்டுக் கட்டணத்தைச் செலுத்தும் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை விவரங்கள் பின்வருமாறு:

(அ) இயற்கை மரணம் ரூ. 50,000/-

[2006 ஆகஸ்ட் 12

(அ) விபத்தினால் ஏற்படும் மரணம் ரூ. 80,000/-

(இ) விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் ரூ. 50,000/-

(ஈ) விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் ரூ. 25,000/-

"மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா" திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்களின் குடும்பத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம வகுப்பு வரை அதிகபட்சமாக 4 ஆண்டுகளுக்கு அல்லது 12 ஆம் வகுப்பு முடிக்கும் வரை இதில் எது குறைவோ, அக்காலம் முடிய வருடத்திற்கு ரூ. 1,200/- வீதம் (இரண்டு குழந்தைகளுக்கு மட்டும்) கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள 1,17,220 கைத்தறி நெசவாளர்கள் மட்டும் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, மேற்படி நெசவாளர்கள் சார்பில் காப்பீட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு அமைப்பில் இல்லாத இதர கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், அனைத்துக் கைத்தறி நெசவாளர்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த தற்போது முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டமாக, காரைக்குடி பகுதியில் உள்ள 1,916 கைத்தறி நெசவாளர்கள் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா என்ற காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளதுடன், 24-6-2006 அன்று அவர்களுக்கு அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்கென 2006-07 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் மதிப்பீட்டில் ரூ. 163.93 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.08 நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வுச் செறிவுத் திட்டத்திற்குப் பதிலாக மைய அரசு நெசவாளர்களுக்கான புதிய நல்வாழ்வுக் காப்பீட்டுத் திட்டத்தினை 2005-2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணத் தொகையாக ஐசிஐசிஐ லோம்பார்டு (ICICI Lombard) நிறுவனத்திற்கு ஒரு நெசவாளருக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 1,000/- செலுத்த வேண்டும். அதில், மத்திய அரசுப் பங்காக ரூ. 800/-ம், நெசவாளர்கள் பங்காக ரூ. 200/-ம் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டில் நெசவாளர்கள்



2006 ஆகஸ்ட் 12]

பங்காகச் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணத் தொகை ரூ. 200/-ஐ மாநில அரசே நெசவாளர்கள் சார்பாக செலுத்தும்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நெசவாளர் குடும்பமும் ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ. 15,000/- வரை மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய பயன்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | அதிகபட்ச தொகை |
|---|---|---|
| குடும்பத்தின் ஆண்டு வரையறை ( 1+3 ) | | ரூ.15,000/– |
| ஒரு குடும்பத்திற்கு பல்வேறு இனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் விவரம் | | |
| 1. | ஏற்கெனவே உள்ள அனைத்து நோய் மற்றும் புதிய நோய்களுக்கு | ரூ.15,000/– |
| 2. | மகப்பேறு உதவித் தொகை (முதல் இரு குழந்தைகளுக்கு மட்டும்) | ரூ. 2,500/– |
| 3. | பல் சிகிச்சை | ரூ. 250/– |
| 4. | கண் சிகிச்சை | ரூ. 75/– |
| 5. | மூக்குக் கண்ணாடி | ரூ. 250/– |
| 6. | உள்ளிருப்பு நோயாளி | ரூ. 4,000/– |
| 7. | ஆயுர்வேதம் / யுனானி / ஹோமியோபதி / சித்தா | ரூ. 4,000/– |
| 8. | மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் முன்பும் / அனுமதிக்கப்பட்ட பின்பும் | ரூ. 15,000/– |
| 9. | குழந்தை காப்பீடு | ரூ. 500/– |
| 10. | புறநோயாளிகள் | ரூ. 7,500/– |

இத்திட்டத்தின்கீழ் நெசவாளர் அல்லது அவரது குடும்பத்தினர் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பணம் ஏதும் செலுத்தாமல் தேவையான மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக கூட்டுறவு அமைப்பிலுள்ள 1,26,966 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டு, அவர்கள் சார்பில் காப்பீட்டுக் கட்டணமும் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கூட்டுறவு அமைப்பில் இல்லாத இதர கைத்தறி நெசவாளர்களும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், கூட்டுறவு அமைப்பில் இல்லாத கைத்தறி நெசவாளர்கள் உட்பட அனைத்துக் கைத்தறி நெசவாளர்களுக்கும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக காரைக்குடிப் பகுதியில் உள்ள 2,364 கைத்தறி நெசவாளர்கள் புதிய நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு அடையாள அட்டையும் 24-6-2006 அன்று வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்கென 2006-2007 ஆம் ஆண்டில் திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 420.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.09 டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நலவாழ்வு அறக்கட்டளையின்கீழ் உதவித் தொகை வழங்குதல்

நெசவாளர்களின் குழந்தைகளை மேற்படிப்பு பயில ஊக்குவிப்பதற்காக, அவர்களின் மேற்படிப்புக்காக உதவித் தொகை வழங்கும்பொருட்டு "டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளை" 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றின் பொது நிதி மற்றும் பொது நல நிதியிலிருந்து பெறப்பட்ட நன்கொடைகளைக்கொண்டு இந்த அறக்கட்டளை உருவாக்கப்பட்டது.

மேற்படி நன்கொடைத் தொகை, நிலையான வைப்பு நிதியில் இட்டு வைக்கப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் வட்டியிலிருந்து உதவித் தொகைக்கான செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. தற்போது, 27 பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும், இந்திய ஆட்சிப் பணி / இந்தியக் காவல்பணித் தேர்விற்காகத் தனிப் பயிற்சி செல்பவர்களில் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் வாங்கிய இருவருக்கும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நலவாழ்வு அறக்கட்டளைமூலம் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையினை அனைத்துப் பாடப் பிரிவுகளுக்கும் ஏற்கெனவே வழங்கப்படும்





தொகையுடன் ரூ. 500/- உயர்த்தி வழங்கவும் அரசு தற்போது ஆணையிட்டுள்ளது.

### 9.10 சேலம், இந்தியக் கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகை

சேலத்திலுள்ள இந்தியக் கைத்தறித் தொழில்நுட்பப் பயிலகத்தினால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறித் தொழில்நுட்ப பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியர்களை தேர்வு செய்யும்போது நெசவாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது:

| | |
|---|---|
| முதலாம் ஆண்டு | ரூ. 400/- மாதமொன்றுக்கு |
| இரண்டாம் ஆண்டு | ரூ. 450/- மாதமொன்றுக்கு |
| மூன்றாம் ஆண்டு | ரூ. 500/- மாதமொன்றுக்கு |

இதனைத் தவிர, அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் புத்தகம் வாங்குவதற்கென மாதமொன்றுக்கு ரூ. 60/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்குச் சுற்றுலா செல்வதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 200/- அளிக்கப்படுகிறது. தற்போது, இந்தக் கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

கடாக் மற்றும் வெங்கடகிரி ஆகிய இடங்களிலுள்ள பயிலகங்களில் மூன்று வருட கைத்தறித் தொழில்நுட்பப் பட்டய வகுப்பில் படித்து வரும் தமிழக மாணவ, மாணவியர்க்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## 10. கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்

### 10.01 தள்ளுபடி மானியத் திட்டம் / விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்

கைத்தறிப் பிரிவின் சிறப்பு நிலையினைக் கருத்தில்கொண்டும் மற்றும் கைத்தறித் துணிகளின் விலையில் உள்ள ஏற்றத்தைச் சரிக்கட்டவும் அரசு கைத்தறித் துணிகளின் விற்பனைக்குத் தள்ளுபடி மானிய உதவி வழங்கி வருகின்றது. இது கைத்தறித் தொழிலைக் கடுமையான போட்டியிலிருந்து காப்பாற்றவும் மற்றும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்குச் சந்தையில் ஏற்படக்கூடிய மந்த நிலையினைப் போக்கவும் வழிவகுக்கின்றது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ. 200/- அல்லது 20 விழுக்காடு, இதில் எது குறைவோ அத்தொகை, அதேபோன்று பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ. 100/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, என்ற வரையறைக்குட்பட்டுத் தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. மாநில அரசின் கொள்கையின்படி, தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டத்தின் விற்பனை ஊக்குவிப்பு இனத்தின்கீழ் (தள்ளுபடி மானியம்) மத்திய அரசினால் வழங்கப்படும் தொகையினைவிடக் கூடுதலாக ஏற்படும் செலவினத்தினை மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

2006-2007ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ. 102 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.02 தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம்

நெசவாளர்களின் வளர்ச்சியையும், நலனையும் கருத்தில்கொண்டு ஒருங்கிணைந்த விரிவான தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டத்தினை மத்திய அரசு 1-4-2000 முதல் அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்குகின்றன.

இத்திட்டத்தின்கீழ் பல்வேறு இனங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி விவரம் பின்வருமாறு:

### (அ) அடிப்படை வசதிகள்

விளிம்புத் தொகையாக ஒரு நெசவாளருக்கு ரூ. 4,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படும். அதுமட்டுமல்லாமல், புதிய தறிகள் கொள்முதல் செய்ய ரூ. 2,000/-மும், டாபிக்கு ரூ. 1,500/-ம், ஜக்கார்டுக்கு ரூ. 2,000/-மும், மற்ற தறி உபகரணங்களுக்கு ரூ. 1,000/- மும் மானியமாக வழங்கப்படும்.



- 2006-2007ஆம் ஆண்டில் 1,000 நெசவாளர்களுக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் சாயம் தோய்த்தல் மற்றும் வடிவமைப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் மூலம் 2006-2007ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவ்வடிவமைப்புகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அறிமுகப்படுத்தப்படும்.
- பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியுள்ள பட்டுத் துணிகளின் சரக்கிருப்பினைக் குறைக்கும் வகையில் பெரிய அளவிலான கண்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதோடு, சிறப்புக் கழிவு வழங்கி விற்பனை மேற்கொள்ளவும் துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்களின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த தகுந்த பயிற்சி வழங்கப்படும்.
- விற்பனையினை அதிகரிக்கும் வகையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு விற்பனையாளர் மேம்பாட்டு/ விற்பனைத் திறன் பயிற்சி வழங்கப்படும்.
- புதிய தொழில்நுட்பங்களைக் கையாளுவதற்கு ஏதுவான திறனை மேம்படுத்த பல்வேறு துணிநூல் தொழிலில் ஈடுபட்டுள்ள 10,000 நபர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி வழங்கப்படும். இதற்குத் தேவைப்படும் குறுகிய காலப் படிப்புகள் உருவாக்கப்பட்டு, ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பாலிடெக்னிக்குகள்மூலம் மேற்படி பயிற்சி வழங்கப்படும்.
- நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை இலாபகரமாக இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, 2005-2006 ஆம் ஆண்டில் 760 ஆக உள்ள இலாபம் ஈட்டும் சங்கங்களின் எண்ணிக்கையினை 2006-2007 ஆம் ஆண்டில் 850 ஆக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ஏற்றுமதியாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியினை 2006-2007ஆம் ஆண்டில்

ரூ.300 கோடியாக அதிகரிக்கும் வகையில் அதிக அளவு நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், பெரிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்/தறி முதலாளிகள் மூலம் நேரடி ஏற்றுமதியினை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- கைத்தறித் துணிவகைகளின் விற்பனையினை மேம்படுத்தும் பொருட்டு, மைய அரசின் நிதியுதவியுடன் 2006-2007ஆம் ஆண்டில் 30 இடங்களில் மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுதவிர, ஒரு சிறப்புக் கைத்தறிக் கண்காட்சி மற்றும் ஒரு தேசிய கைத்தறிக் கண்காட்சியும் நடத்தப்படும்.

- ஈரோடு, மதுரை ஆகிய பகுதிகளில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, குமாரபாளையத்தில் கூடுதலாக ஒரு நெசவுப் பூங்கா அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பூங்காக்கள் அமைக்கத் தேவையான நிதியினை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்கீழ் பெற மைய அரசினை அணுக உள்ளோம்.

- விசைத்தறி அதிகமுள்ள பகுதிகளில், கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தைப் பற்றிய தீவிர விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளவும், 50,000 விசைத்தறிகளை 2006-2007ஆம் ஆண்டில் ஆய்வு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- பட்டு இரகத் துணிகளின் விற்பனை வாய்ப்புகள் குறித்து ஆராய, தொழில்ரீதியான ஒரு முகமை மூலமாக சந்தை நிலவர ஆய்வு மேற்கொள்ளப்படும்.

- கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் திறனை மேம்படுத்தவும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் மேலாளர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும் 2006-2007 ஆம் ஆண்டில் 1,200 பயனாளிகளுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- துணிநூல் ஆலைகளின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் தரத்தினை மேம்படுத்த நவீனப்படுத்தப்பட்ட பதனிடும் பூங்காக்களைப் பெருமளவில் அமைக்க ஊக்குவிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





- உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளின் பெருமளவு தேவையினைக் கருத்திற்கொண்டு உற்பத்தியினை ஊக்குவிக்க ஏதுவாக "தொழில்நுட்பத் துணிநூல்" ஆலைகளை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 12. துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### (அ) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிட் (கோ-ஆப்டெக்ஸ்)

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), கூட்டுறவு அமைப்பிலுள்ள கைத்தறித் தொழிலின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைக்கு உறுதுணையாக இருப்பதோடு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்வதும் இதன் முக்கியப் பணியாகும். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தமிழ்நாட்டில் 134 விற்பனை நிலையங்களும், வெளிமாநிலங்களில் 66 விற்பனை நிலையங்களும் உள்ளன.

மேலும், இலவச வேட்டி, சேலை திட்டம், பள்ளிச் சிறார்களுக்கான இலவசச் சீருடை வழங்கும் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தேவைப்படும் துணிவகைகளைக் கொள்முதல் செய்து, விநியோகிக்கும் ஒருங்கிணைப்பு முகவராக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பல்வேறு நாடுகளுக்குக் கைத்தறி இரகங்களைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்து வருகிறது. தற்சமயம் கோ-ஆப்டெக்ஸ் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி மேற்கொண்டு வருகிறது. வீட்டு உபயோகத் துணிகளான டெர்ரி டவல்கள், திரைச் சீலைகள், படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், லுங்கி, சட்டைத் துணிகள் மற்றும் சமையலறை துணிகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய இரகங்களாகும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.315.11 கோடி மதிப்பிற்கு கைத்தறி மற்றும் விசைத்தறித் துணிகளை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து ரூ.420.70 கோடி

மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. இதில் ஏற்றுமதியின் மதிப்பு ரூ.3.27 கோடியாகும்.

## நிர்வாகச் சீரமைப்பு மற்றும் விற்பனை செயல்பாடு குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

அ. பணியாளர்களின் நிர்வாகச் செலவினங்களைக் குறைக்கும்பொருட்டு, சிறப்பு விருப்பப் பணி ஓய்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, 640 பணியாளர்கள் நான்கு கட்டங்களாக விருப்ப ஓய்வு பெற்றனர். அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ.14.95 கோடி கடன் உதவியுடன் இந்தப் பணியாளர்கள் அனைவரது கணக்குகளும் பணப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

ஆ. இலாபகரம் அல்லாத விற்பனை நிலையங்களால் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு பெரும் நட்டம் ஏற்பட்டு வந்ததால், இதுபோன்ற விற்பனை நிலையங்கள் செயல்படுவது குறித்து அவ்வப்போது ஆய்வு செய்யப்படுவதோடு, அவற்றைத் தொடர்ந்து நடத்துவது குறித்து முடிவு செய்யப்பட்டு வருகிறது. ஏழு விற்பனை நிலையங்கள் 2005-2006 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டு, அவற்றை மூடிவிட முடிவு செய்யப்பட்டது.

இ. அதிகப்படியான பணியாளர்களைத் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்ல அனுமதித்து, பணியாளர் எண்ணிக்கையைக் குறைக்கும் நடவடிக்கையும், நட்டத்தில் இயங்கி வரும் விற்பனை நிலையங்களை மூடும் நடவடிக்கையும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட இரண்டு நடவடிக்கைகள் மூலமாக 2005-2006 ஆம் ஆண்டில் சுமார் ரூ.10 கோடி அளவிற்குச் சேமிப்பு ஏற்பட்டுள்ளது.

ஈ. மேற்கண்ட நடவடிக்கைகளினாலும், இன்னபிற விற்பனை யுக்திகளைக் கோ-ஆப்டெக்ஸ் பின்பற்றிய காரணத்தினாலும் ரூ.96 கோடியாக இருந்த விற்பனை முந்தைய ஆண்டில் ரூ.106 கோடியாக உயர்ந்துள்ளது.

உ. உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சில்லறை விற்பனை நீங்கலாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதியிலும் ரூ.327.61 இலட்சம் மதிப்புள்ள துணிகளை 2005-2006ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. குறிப்பாக வீட்டு உபயோகத் துணிப் பொருட்களான மேல்துண்டு, மேஜை



விரிப்பு, கைதுடைப்பான், சமையல் அறை துணி வகைகள், படுக்கை விரிப்புகள் போன்றவைகள் ஐரோப்பாவின் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

ஊ. மக்களின் இரசனைக்கேற்ப கோ-ஆப்டெக்ஸ் கவர்ச்சியான புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தவும் புதிய வண்ணங்களை உருவாக்கவும் புதிய பொருட்களைத் தயாரிக்கவும் ஏதுவாக கீழ்க்கண்ட வடிவமைப்பாளர்களை 2005-2006ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டது.

அ. கலாஷேத்திரா வடிவமைப்புகள், கலாஷேத்திரா நிறுவனம், சென்னை

ஆ. திருநாள் தொகுப்பு, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, சென்னை

இ. கதம்பம்-ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, சென்னை

ஈ. கைரவி மற்றும் காதம்பரி தொகுப்புகள், தேசிய வடிவமைப்பு மையம்

எ. தன்னிச்சை வடிவமைப்பாளர்களிடமிருந்தும் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கணினி வடிவமைப்பு மையத்திடமிருந்தும் புதிய வடிவமைப்புகள் பெறப்படுகின்றன.

ஏ. நிர்வாகம் மேற்கொண்ட திறமையான சரக்கு மேலாண்மையினாலும் விற்பனை யுக்திகளாலும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய சரக்குகளின் மதிப்பு ரூ.31.89 கோடியில் இருந்து ரூ.11.67 கோடியாகக் குறைந்துள்ளது.

## கோ–ஆப்டெக்ஸின் 2006–2007 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள்

- கோ-ஆப்டெக்ஸ் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.120 கோடி சில்லறை விற்பனை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதோடு, ரூ.5.00 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதியும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. மேலும், இலாபம் ஈட்டும் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையினை 75-லிருந்து 125 ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

- நவீன காலத்திற்கேற்றவாறு வடிவமைப்புகளுடனும், தற்போதைய ரசனையுடனும் கூடிய இரகங்களை நுகர்வோருக்கு வழங்க ஏதுவாக, 500 புதிய வடிவமைப்புகளைப் பல வண்ணங்களில் அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளின் விற்பனையைப் பெருக்க ஏதுவாக, பட்டுச் சேலைகளை ஒப்படைப்பு (Consignment) விற்பனை அடிப்படையில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்று, கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணயிக்கும் விலையிலேயே விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
- கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இல்லாத பகுதிகளில் உள்ள நுகர்வோரின் தேவையினைப் பூர்த்தி செய்ய ஏதுவாக கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இல்லாத 100 இடங்களில் மாநிலத்திற்குள்ளும், வெளிமாநிலங்களிலும் கண்காட்சிகள் மூலம் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்கு விரைந்த சேவைகள் செய்ய ஏதுவாக, 2006-2007 ஆம் ஆண்டில் கூடுதலாக 25 விற்பனை நிலையங்களைக் கணினிமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- சந்தையின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், விற்பனையை அதிகரிக்கவும் கோ-ஆப்டெக்ஸ் 5 பெரிய விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நெசவுத் தொழில் மற்றும் துணிவடிவமைப்பு தொடர்பான பாடத் திட்டங்கள் உள்ள கல்விக்கூடங்களை அணுகி, இளைய தலைமுறையினரின் வடிவமைப்புத் திறமையைப் பயன்படுத்தி, திட்டங்களைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- எல்லாத் தரப்பு மக்களிடமும் கோ-ஆப்டெக்ஸ் பொருட்கள் சென்றடைய ஏதுவாக, சுய உதவிக் குழுக்களின் சேவையைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- மேற்கண்ட நடவடிக்கைகளின் விளைவாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 2006-2007ஆம் ஆண்டில் ரூ.3.00 கோடி அளவிற்கு இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.





## (ஆ) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தனது செயல்பாட்டினை 1964 ஆம் ஆண்டு துவக்கி, கூட்டுறவு அமைப்பின்கீழ் இல்லாத நெசவாளர்களுக்குக் கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் துணிகளின் உற்பத்தி மற்றும் விற்பனைக்காகக் கடனுதவி வழங்கும் நோக்குடன் செயல்பட்டு வருகிறது.

இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.429.23 இலட்சமாகும். இதில் தமிழக அரசின் பங்கு ரூ.267.00 இலட்சம் ஆகும். மீதி மூலதனமான ரூ.162.23 இலட்சம் அங்கத்தினர்களால செலுத்தப்பட்டதாகும். இக்கழகம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளான பாரத ஸ்டேட் வங்கிமூலம் ரூ.330 இலட்சமும், பாரத பாட்டியாலா வங்கிமூலம் ரூ.220 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.550 இலட்சம் அளவிற்குக் காசுக்கடன் வசதி பெற்றுள்ளது.

தற்போது கழகத்தில் 11,811 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 2005-2006 ஆம் ஆண்டில் 681 உறுப்பினர்களுக்கு ரூ.252.14 இலட்சம் அளவிற்குக் கடனுதவி வழங்கியுள்ளது.

இக்கழகம் 2006-2007-ல் கடன் அளவினை ரூ.400 இலட்சம் அளவிற்கு உயர்த்தவும், ரூ.330 இலட்சம் அளவிற்கு கடன் வசூல் செய்யவும் திட்டமிட்டுள்ளது.

## (இ) தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் ஓர் அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகையை உற்பத்தி செய்து, விநியோகம் செய்து வருகின்றது. இதனைத் தவிர, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யும் சூரத் சரிகை, உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பெறப்படும் சரிகை மாதிரிகளைத் தரப் பரிசோதனை செய்யும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்மூலம் சரிகை மற்றும் பட்டு இரகத் துணிகளில் உள்ள சரிகையை எவ்வித சேதாரமுமின்றி தரப் பரிசோதனை மேற்கொண்டு வருகின்றது. தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் ISO 9001 சர்வதேசத் தரச் சான்று பெற்ற ஒரு நிறுவனமாகும்.

கும்பகோணம் பகுதியின் சரிகைத் தேவையினைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு சரிகை நிறுவனம் 1999ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் சரிகை நிறுவனத்தின் கிளையினை நிறுவியது. அது தற்சமயம் இலாபத்துடனும் ஆண்டொன்றிற்கு 18,000 மார்க் சரிகை உற்பத்தி செய்யும் திறனுடனும் செயல்பட்டு வருகின்றது.

இந்நிறுவனம் 2005-2006ஆம் ஆண்டில் 61,513 சரிகை மார்க்குகள் உற்பத்தி செய்து, 59,554 சரிகை மார்க்கினை விற்பனை செய்து, ரூ.35.69 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. சூரத் சரிகை உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து பெற்ற 2,574 சரிகை மாதிரிகளை இந்நிறுவனம் தரப் பரிசோதனை செய்துள்ளது. மேலும் இந்நிறுவனம் 18,226 சரிகை மற்றும் பட்டுத் துணிகளின் மாதிரிகளை "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" மூலம் பரிசோதனை செய்து, பரிசோதனைக் கட்டணமாக ரூ.5.50 இலட்சம் வசூலித்துள்ளது.

## தமிழ்நாடு சரிகை ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்

- 2006-2007 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் பல்வேறு வகையான 90,000 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யத் திட்டமிட்டுள்ளது.
- இந்நிறுவனம் காஞ்சிபுரம் மற்றும் கும்பகோணம் கிளையில் மின்னாற்பகுப்பு முறையில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. இதனால் சரிகையின் வண்ணம் மற்றும் பளபளப்பு அதிகரிக்கும்.
- புதுடில்லியில் உள்ள ட்டி.ஐ.எப்.ஏ.சி. என்ற நிறுவனத்தின் உதவியுடன், வெள்ளி இழை உற்பத்தி செய்யும் பிரிவில் பொறியியல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- காதி மற்றும் கதர்த் தொழில் ஆணையகத்தின்கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு சரிகையை விற்பனை செய்ய ஏதுவாக, மும்பையிலுள்ள காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையகத்திடமிருந்து தகுதிச் சான்றிதழ் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

## (ஈ) தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை, வெளுத்தல், சாயமிடல், மெர்சிரைசிங், அச்சிடல் மற்றும் பருத்தி மற்றும் செயற்கை



இழை நூலினைப் பதனிடுதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை ஒரு மாதத்தில் சுமார் 18.00 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது. இவ்வாலை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சர்வோதயா சங்கம், மத்தியச் சிறைச்சாலை, கேரளா மற்றும் கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகங்களிடமிருந்து வழங்கப்படும் துணிகளைப் பதனிட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 2005-2006 ஆம் ஆண்டில் ரூ. 1,330.39 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை மேற்கொண்டு, ரூ.282.73 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## பதனிடும் ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்

- ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், துணிகளின் பதனிடும் தரத்தினை உயர்த்தவும் ஆலையிலுள்ள இயந்திரங்களை ரூ. 1.72 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆலையில் கழிவு நீரை அகற்ற நிறுவப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில், சவ்வூடு பரவல் முறையினை ரூ.2.88 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- பெருந்துறையிலுள்ள சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்தில் 9.62 ஏக்கர் நிலத்தினை இவ்வாலை கொள்முதல் செய்துள்ளது. இவ்வாலையை ஏற்கெனவே உள்ள இடத்திலிருந்து சிப்காட் தொழிற்பேட்டை வளாகத்திற்குப் படிப்படியாக மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ஆலையில் ஒருங்கிணைந்த தகவல் பரிமாற்ற மேலாண்மைத் திட்டத்தின்மூலம் ஆலையின் அனைத்துப் பிரிவுகளையும் ஒருங்கிணைத்து, ஆலையின் நிர்வாகத் தரத்தினை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- தனியார் ஏற்றுமதி நிறுவனங்களிலிருந்து ஆண்டு முழுவதும் ஆர்டர் பெற்று, ஆலையின் முழுமையான திறனைப் பயன்படுத்தும் வகையில் தொடர்ந்து உற்பத்தி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## (உ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோவை

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமானது 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. நலிவுற்று மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி, அதன் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல், துணித் தொழிலுக்குப் புத்துயிரூட்ட சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட குறிக்கோள்களுடன் இக்கழகம் உருவாக்கப்பட்டது. தற்சமயம் இக்கழகத்தின்கீழ் மூன்று விசைத்தறிக் கூடங்கள் உள்ளன. இவை முறையே தலா 96 விசைத்தறிகளைக் கொண்டுள்ள அருப்புக்கோட்டை மற்றும் சிவகிரி கூடங்கள் மற்றும் 24 விசைத்தறிகளைக் கொண்டுள்ள ஜெயங்கொண்டம் கூடம் ஆகும். இவை தவிர, கோவை, குறிச்சி பகுதியில் 12 தானியங்கித் தறிகளைக் கொண்ட தறிக் கூடம் ஒன்றும் இக்கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. பாலியஸ்டர் துணிவகைகளை இந்தக் கூடங்களில் உற்பத்தி செய்து, பல்வேறு அரசு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகமானது வழங்கி வருகிறது. மேலும் அரசின் இலவசச் சீருடைத் துணி வழங்கும் திட்டத்திற்காக வெள்ளை நிற சட்டைத் துணி, நீல நிற தாவணி மற்றும் காக்கி டிரில் இரகத் துணி போன்றவைகளையும் இக்கழகம் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

இக்கழகமானது 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.1,718.36 இலட்சம் அளவிற்கு வியாபாரம் செய்து, ரூ.56.75 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

### தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்:

- 22.08 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி/ வேட்டிகளை அரசின் நலத் திட்டங்களுக்காக உற்பத்தி செய்து வழங்கவும், ரூ.705.20 இலட்சம் அளவிற்கு அரசு நிறுவனங்களின் துணித் தேவையை நிறைவு செய்யவும் இக்கழகம் திட்டமிட்டுள்ளது.
- 2006-2007 ஆம் ஆண்டில் அரசு நலத் திட்டங்களுக்காக ரூ.981.73 இலட்சம் மதிப்புள்ள 59.49 இலட்சம் மீட்டர் வெள்ளை நிறச் சட்டைத் துணியை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து வழங்கவும் இக்கழகம் உத்தேசித்துள்ளது.
- இக்கழகம் 2006-2007 ஆம் ஆண்டில் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையாக ரூ.29.85 இலட்சம் அரசுக் கணக்கில் செலுத்தியுள்ளது. அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையில் ரூ.1.20 கோடி தொகையினை நடப்பாண்டில் அரசுக் கணக்கில் செலுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.



## (ஊ) தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்)

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சுக் கொள்முதல் நடைமுறையினைச் சீராக்கும் பொருட்டு 1991 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான, தரமான பஞ்சினை நியாயமான விலையில் பல கூட்டுறவு நிறுவனங்கள்மூலமாகக் கொள்முதல் செய்து, விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக தமிழக அரசு பங்கு மூலதனமாக ரூ.2.5 கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.2.07 கோடியும் ரொக்கத்திற்குப் பஞ்சு வாங்கும் பொருட்டு இணையத்திற்கு வழங்கியுள்ளது. மேற்படி மூலதனத்தின்மூலம் 1997-1998 ஆம் ஆண்டு வரை இணையம் ரூ.79.07 கோடி மதிப்பிற்குப் பஞ்சினைக் கொள்முதல் செய்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக, ஆலைகள் இணையத்திற்கு வழங்க வேண்டிய பஞ்சு நிலுவைத் தொகையினைத் திரும்பச் செலுத்த இயலவில்லை. எனவே, தமிழக அரசு இணையத்தின் பஞ்சு நிலுவைத் தொகை ரூ.19.48 கோடியினைக் கூட்டுறவு நூற்பாலைக்ள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நூற்பாலைகளுக்குப் பங்கு மூலதனமாக மாற்றி வழங்கி ஆணை பிறப்பித்தது.

2005-2006 ஆம் ஆண்டில் டான்ஸ்பின் நிறுவனம் ரூ.10.35 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

### 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்:

கீழ்க்கண்ட செயல்பாடுகள்மூலம் டான்ஸ்பின் நிறுவனத்தை மீண்டும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:

- டான்ஸ்பின் நிறுவனத்தில் உறுப்பினராக உள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பஞ்சு கொள்முதல் செய்து விநியோகம் செய்தல்.

- நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் சாயம் மற்றும் இரசாயனப் பொருட்களை விநியோகம் செய்தல்.
- உறுப்பினராகவுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவைப்படும் உதிரிப் பாகங்கள் மற்றும் சிப்பப் பொருட்களை மத்தியக் கொள்முதல் குழுமூலம் கொள்முதல் செய்து விநியோகித்தல்.

## 13. 2006–2007ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

"கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எண் 17-ன்கீழ், பல்வேறு நல மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த 2006-2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.51,383.17 இலட்சம் பின்வரும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் / இனத்தின் பெயர் | திருத்த வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீடு 2006–2007 |
|---|---|---|
| 1. | இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் | 27,300.00 |
| 2. | கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 1,120.00 |
| 3. | விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல் | 6,684.00 |
| 4. | வடிவமைப்பு மேம்பாட்டுக்கான உதவி | 25.00 |
| 5. | நெசவாளர்களுக்குப் பயிற்சி | 25.00 |
| 6. | பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ்–க்கு வட்டி மானியம் | 0.01 |
| 7. | கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடி | 3,400.00 |
| 8. | தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டத்தின்கீழ் விற்பனை ஊக்குவிப்பு / தள்ளுபடி | 6,800.00 |
| 9. | புங்கர் பீமா யோஜனாத் திட்டத்தின்கீழ் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 163.93 |
| 10. | கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 525.00 |
| 11. | கைத்தறி நெசவாளர்களுக்கான புதிய நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 420.00 |



### (ஆ) உள்கட்டமைப்பு வசதிகள்

உள்கட்டமைப்பு வசதிகளின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும், பாவு ஓடுதல் மற்றும் நெசவு நெய்வதற்கு முந்தைய மற்றும் பிந்தைய செயல்முறைக்கான பொது வசதி மையம் அமைப்பதற்கும் நிதியுதவி வழங்கப்படும்.

### (இ) வடிவமைப்பு உள்ளீடு

முந்தைய ஆண்டில் ரூ.5.00 கோடிக்கும் அதிகமாக விற்பனை செய்துள்ள மாநில அளவிலான கைத்தறி நிறுவனங்கள்/தலைமைச் சங்கங்கள் மற்றும் ரூ.25.00 இலட்சத்திற்கு அதிகமாக விற்பனை செய்துள்ள பிரதமச் சங்கங்களுக்கு வடிவமைப்பு மற்றும் கணினி மூலம் வடிவமைப்பு மையம் அமைத்து, இரகங்களின் தரத்தை உயர்த்துவதற்காக ஒரே தவணை நிதியுதவியாக ரூ.5.00 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தேசிய வடிவமைப்பு மையம், தேசிய ஆடை அலங்காரத் தொழில்நுட்ப மையம், நெசவாளர் சேவை மையம் போன்ற நிறுவனங்களின் சேவையினைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் ரூ.1.00 இலட்சம் ஒரே தடவை மானியமாக வழங்கப்படும்.

### (ஈ) விளம்பரம்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு விளம்பரம், விளம்பரச் சிற்றேடு அச்சிடுதல், அட்டவணைப்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் சந்தை ஆய்வு போன்றவைகளுக்கு மட்டுமல்லாமல், கைத்தறி விற்பனையினை மேம்படுத்தும் வகையில் படச்சுருள் தயாரித்தல் போன்ற இனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

### (உ) கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்துதல்

மாநில கைத்தறி நிறுவனங்கள் மற்றும் தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் / இணையங்கள் போன்றவைகளின் காசுக்கடன் பெறும் தகுதியை அதிகரிப்பதன்மூலம் நடைமுறை மூலதனத்தை அதிகரித்து, அவற்றை இலாபகரமாக இயங்க வைக்கும் நோக்குடன் நிதி அடிப்படையிலான மறு சீரமைப்பு செய்ய நிதியுதவி வழங்கப்படும்.

[2006 ஆகஸ்ட் 12

2006-2007ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத் திருத்த மதிப்பீட்டில் இதற்கென ரூ.1,190.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.03 இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்**

ஏழை, எளிய மக்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 11,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 23,000 விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்குவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் உள்ள 3.28 கோடி ஏழை மக்களின் துணித் தேவையினைப் பூர்த்தி செய்தும் வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான வேட்டி, சேலைகள் மாநிலத்திலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

பொங்கல் 2007 ஆம் ஆண்டு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 2006-2007 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.273 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.04 இலவசச் சீருடை வழங்கும் திட்டம்**

சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் 1985-1986ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான துணி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

2006-2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கென ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.05 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம் வழங்குதல்**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு மாநில



2006 ஆகஸ்ட் 12]

தலைமை கூட்டுறவு வங்கி ஆகியவை மூலமாக பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழக்கமான வங்கி வட்டி விகிதங்களிலேயே நடைமுறை மூலதனம் வழங்கப்படுகிறது.

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, 2006-2007ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் ரூ.315.51 கோடி அளவிற்குக் காசுக்கடன் அனுமதித்துள்ளது.

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தறி ஒன்றுக்கு 2006-2007ஆம் ஆண்டுக்கு அனுமதித்துள்ள நடைமுறை மூலதனத்தின் அளவு பின்வருமாறு:-

| வ. எண் | தறிகளின் வகை | 2006–2007ஆம் ஆண்டிற்கு நபார்டு நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள நிதியுதவி |
|---|---|---|
| 1 | கைத்தறி பருத்தி இரகம் | ரூ.22,000.00 |
| 2 | கைத்தறி சிறப்பு பருத்தி இரகம் | ரூ.40,000.00 |
| 3 | கைத்தறி பட்டு | ரூ.60,000.00 |
| 4 | கைத்தறி பாலியஸ்டர் | ரூ.40,000.00 |
| 5 | விசைத்தறி | ரூ.40,000.00 |

**10.06 சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கான பரிசு வழங்கும் திட்டம்**

கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல் நாட்டுச் சந்தையில் கைத்தறித் துணி விற்பனையை விரிவுப்படுத்தவும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிப்பதற்கென சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும், ஏற்றுமதி உற்பத்தியில் ஈடுபடும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வெற்றிச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டச் செலவினத்திற்காக அரசு ஓர் ஆண்டிற்கு ரூ.50,000/- வழங்கி வருகிறது.

[2006 ஆகஸ்ட் 12

### 10.07 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

புதிய புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் புதிய வடிவமைப்பினை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறந்த வடிவமைப்புக்குக் கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.5,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ.3,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ.2,000/- |

சந்தையில் எளிதாக விற்பனையாவதற்கும், ஏற்றுமதியாவதற்கும் ஏதுவாகப் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு இத்திட்டம் உதவிடும். இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் "கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி"யிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

### 10.08 ஒருங்கிணைந்த கைத்தறி பகுதி மேம்பாட்டுத் திட்டம்

கைத்தறித் தொகுதிகளின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கென "ஒருங்கிணைந்த கைத்தறி பகுதி மேம்பாட்டுத் திட்டம்" என்ற திட்டம் மைய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் தறி மேம்பாடு, தறியில் மாறுதல்கள் செய்தல், தறி மற்றும் தறி உபகரணங்கள் கொள்முதல் செய்தல், சாயமிடும் அலகு உருவாக்குதல், பொது வசதி மையம் நிறுவுதல், காட்சியறை நிறுவுதல், பொருட்காட்சி நடத்துதல், விளம்பரம் மற்றும் வடிவமைப்பு ஆகிய பல்வேறு இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் அதிகபட்ச உதவித் தொகையாக ரூ.200.00 இலட்சம் அளிக்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் இப்பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் ஒட்டுமொத்த சமுதாய, பொருளாதார நிலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக திருவண்ணாமலை, திருச்சி, குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளைத் தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இதனை மைய அரசும் அங்கீகரித்துள்ளது. மைய அரசின் ஒப்புதலின் அடிப்படையில் திருவண்ணாமலை, திருச்சி மற்றும்



2006 ஆகஸ்ட் 12]

குறிஞ்சிப்பாடி பகுதிகளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 10.09 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும் விசைத்தறியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985-ல் மத்திய அரசினால் இயற்றப்பட்டு, அனைத்து மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய 11 இரகங்களை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்த பிரத்தியேகமாக அமலாக்கப் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர்/ அமலாக்க அலுவலர் அலுவலகமும், சரக அளவிலான 5 அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

## 11. 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள்

- ➢ அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக வருவாய் கிடைப்பதை உறுதி செய்யவும், நலத் திட்டங்களை அவர்களுக்கு விரிவுபடுத்திடவும், அமைப்பு சாரா கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் பெருமளவு கொண்டுவர 2006-2007 ஆம் ஆண்டில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- ➢ சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் 2006-2007 ஆம் ஆண்டில் 7,000 புதிய நெசவாளர்களைச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ➢ மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் கூடுதலாக 75,000 கைத்தறி நெசவாளர்களையும், புதிய நல்வாழ்வுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 70,000 நெசவாளர்களையும் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ➢ கைத்தறி நெசவாளர்களுக்கென 5,000 தொழிற்கூடங்களும், 100 தொழிற்கூடத்துடன்கூடிய வீடுகளும் கட்டுவதற்கு மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ➢ மைய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கைத்தறித் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினைத் தமிழக அரசு திருவண்ணாமலை, குறிஞ்சிப்பாடி, திருச்சி ஆகிய 3 பகுதிகளில்

[2006 ஆகஸ்ட் 12

பகுதி ஒன்றுக்கு ரூ.2 கோடி செலவில் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின்கீழ் நெசவுத் தொழிலுக்கான அடிப்படை வசதிகளை உருவாக்குவதன்மூலம் நெசவாளர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைப் பெரும்பான்மையான இதர பகுதிகளிலும் செயல்படுத்துவதற்கான ஒப்புதலை மைய அரசிடமிருந்து பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

➤ 2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டம் 2007 பொங்கல் பண்டிகைக்கும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 164 இலட்சம் சேலைகள் மற்றும் 164 இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 2007 பொங்கல் பண்டிகையின்போது விநியோகம் செய்யப்படவுள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு, இத்திட்டத்திற்குத் தேவைப்படும் வேட்டி, சேலைகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முழு உற்பத்தித் திறன் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுவதோடு, மீதமுள்ள தேவை, விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் உற்பத்தி செய்யப்படும்.

➤ 2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டம் 2006-2007ஆம் கல்வியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படுவதோடு, இத்திட்டத்திற்குத் தேவைப்படும் 138.85 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

➤ 2006-2007 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்கூடம் வைத்துள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதத்திற்கு ஒரு முறை 100 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும். அதேபோன்று, சொந்தமாக விசைத்தறிகள் வைத்திருக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதத்திற்கு ஒரு முறை 500 யூனிட்டுகள் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும்.



2006 ஆகஸ்ட் 12]

| | | |
|---|---|---|
| 12. | மைய சிக்கன நிதித் திட்டம் | 660.00 |
| 13. | நல்வாழ்வு செறிவுத் திட்டம் | 0.01 |
| 14. | அமலாக்கப் பிரிவின் நிர்வாகச் செலவு | 94.67 |
| 15. | தறிக்கூடம் அமைக்கும் திட்டம் | 660.00 |
| 16. | புங்கர் பீமா யோஜனா திட்டம் – விளம்பர இனம் | 40.00 |
| 17. | நெசவாளர் தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம் | 50.00 |
| 18. | கைத்தறிக் கண்காட்சி விற்பனைக்குத் தள்ளுபடி | 0.01 |
| 19. | தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சஹான் யோஜனா திட்டம் (இதர இனங்கள்) | 1,190.01 |
| 20. | ஜவுளித் தொழில் மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துதல் | 0.01 |
| 21. | உயர்தொழில்நுட்ப விசைத்தறி நெசவுப் பூங்காக்கள் அமைக்கும் திட்டம் | 0.01 |
| 22. | விசைத்தறிக் கணக்கெடுப்பு (ஈரோடு விசைத்தறி சேவை மையத்திற்கான வாடகை) | 0.25 |
| 23. | கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகைக் கடன் | 1,216.16 |
| 24. | தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் உட்பட) | 105.15 |
| 25. | நிர்வாகச் செலவுகள் (பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள் உட்பட) | 903.95 |
| | மொத்தம் | 51,383.17 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22742
சென்னை-600 008